# வாழும் தமிழ்

மறைமலையடிகள் நூல் நிலையம்
சென்னை-1

கி. வா. ஜகந்நாதன்

உரிமை பதிவு]

கலைமகள் காரியாலயம்
மயிலாப்பூர் :: சென்னை

[விலை ரூ. 2/8

முதல் பதிப்பு, செப்டம்பர்—1950.

15191

PRINTED AT
THE MADRAS LAW JOURNAL PRESS,
MYLPORE, MADRAS.

# முன்னுரை

இப்போது நமக்குக் கிடைக்கும் தமிழ் நூல்களுள் மிகப் பழமையானது தொல்காப்பியம். அதன் காலத்தைப் பற்றிப் பலவேறு வகையான கருத்துக்கள் இருந்தாலும், பத்துப் பாட்டு, எட்டுத்தொகை என்னும் கடைச்சங்க நூல்களுக்குச் சில நூற்றாண்டுகளேனும் முற்பட்டிருக்க வேண்டுமென்பதில் கருத்து வேற்றுமை இல்லை. தொல்காப்பியத்தில் கண்ட சில விதிகள் மிக மிகப் பழமையானவை. அவற்றுக்கு இலக்கியம் இப்போது கிடைக்கவில்லை.

இந்தப் பழைய நூலை இலக்கணமாகப் படிப்பது ஒருவகை. தமிழ் மக்களின் வாழ்வைத் தெளிவுறுத்தும் கருவிகளில் ஒன்றாக எண்ணி ஆராய்வது ஒருவகை. எந்த நூலானாலும், அதில் கூறப்பெற்ற செய்திகளுக்கும் அது பிறந்த கால வாழ்க்கைக்கும் தொடர்பு இருப்பது இயல்பு. அந்த வாழ்க்கைப் போக்கை விரிவாகத் தெரிந்துகொள்ளச் சில நூல்கள் உதவும்; சில நூல்கள், நுணுகி ஆராய்ந்தால் சில செய்திகளைத் தெரிந்துகொள்ள உதவும். தொல்காப்பியத்திற் கூறப்பெற்ற இலக்கணச் செய்திகளினூடே அக்காலத்துத் தமிழர் வாழ்க்கைச் செய்திகளைக் காணும் வகை உண்டு. இந்த எண்ணத்தோடு, தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரத்தை ஆராய்ந்து, "பயப்படாதீர்கள்" என்ற புத்தகத்தை எழுதினேன், இப்போது அதே முறையில் சொல்லதிகாரத்தை ஆராய்ந்து இதனை எழுதினேன். 'பயப்படாதீர்கள்' என்ற புத்தகத்தின் முகவுரையில் குறித்துள்ளபடி, இந்த முயற்சி இந்திய இளைஞர் சங்கத்தில் நான் தொடர்ந்து பேசிய பேச்சுகளிலிருந்து வளர்ந்தது. 'தினமணி'யில் இக் கட்டுரைகள் தொடர்ந்து வந்தன. இவற்றை வெளியிட்ட 'தினமணி' ஆசிரியர்பால் நன்றி பாராட்டுகிறேன்.

தொல்காப்பியர் காலத்துக்கும் நம் காலத்துக்கும் இடையில் பல ஆண்டுகள் சென்றாலும் அன்றிருந்த சில அடிப்படையான பண்புகள் நம் உள்ளக் கருத்திலும் உரையிலும் வாழ்க்கையிலும் இருக்கின்றன. தமிழ்மொழி நூலளவில் நிற்பதல்ல. வாழும் மக்கள் வழங்கும் மொழி அது. ஆகவே வாழ்க்கையின் சாரம் அதன்கண் ஏறியிருக்கும். காலக் காற்றிலே தளிர்த்து முற்றி அசைந்து வாடிச் சருகாகி உதிர்ந்த இலைகள் பல இருந்தாலும், வரவர உரம்பெற்ற அடிமரமும், இத்தனை மாற்றங்களுக்கும் இடங்கொடுத்து ஊன்றி நிற்கும் ஆணி வேரும் போல முற்கூறிய பண்புகள் தமிழர் வாழ்க்கையிலே இருக்கின்றன.

வாழ்க்கையின் நிலையை மொழி காட்டுகிறது; அதன் சிறந்த பகுதிகளை இலக்கியம் காட்டுகிறது. இந்த இரண்டின் இயல்புகளையும் இலக்கணம் வகுத்துக் காட்டுகிறது; ஆகவே தொல்காப்பியம் என்னும் இலக்கணம், அன்றும் இன்றும் வாழும் தமிழைப்பற்றிச் சொல்கிறது; இலக்கியத்திலும் உலகியலிலும் வாழும் தமிழைப்பற்றிப் பேசுகிறது. இந்தக் கருத்துடனே, "வாழும் தமிழ்" என்ற பெயரை இந்தப் புத்தகத்துக்கு வைத்தேன்.

தொல்காப்பியத்தின் விளக்கம் அன்று இது; அதில் கூறப் பெறும் இலக்கணச் செய்திகளை முறையாகத் தொகுத்துத் தருவதும் அன்று; தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் உள்ள செய்திகளாகிய சிறு புழைகளினூடே பரந்து விரிந்த பண்டைத் தமிழர் வாழ்க்கையைப் பார்க்க முயலும் முயற்சி இது. தொல்காப்பியத்தில் உள்ள இலக்கணச் செய்தி விளங்கினால்தான் அதனால் புலப்படும் வாழ்க்கைத் தொடர்பு புலனாகும். ஆகவே பல இடங்களில் இலக்கணச் செய்திகளை விளக்கியிருக்கிறேன். பெரும்பாலும் சேனாவரையர் உரையையும், சிறுபான்மை நச்சினார்க்கினியர் உரையையும் தழுவி இந்த விளக்கங்கள் அமைந்திருக்கும். சில இடங்களில் உரையாசிரியர்கள் கூறியுள்ளவற்றையும், பிற்காலத்தில் நன்னூலிற் காணுபவற்றையும் விரிவாக எடுத்துக் காட்டியுள்ளேன்.

சொல்வதைச் சுவைபடச் சொல்ல வேண்டும் என்ற ஆசை இப் புத்தகத்தை எழுதும்போதெல்லாம் என் முயற்சிக்குச் சுருதி போட்டுக்கொண்டிருந்தது. தெளிவாக இருக்க வேண்டும்; சுவையாகவும் இருக்க வேண்டும். இந்த நினைவு எந்த அளவில் வெற்றிபெற்றிருக்கிறதென்பதை வாசகர்களே உணர்ந்து சொல்லக் கூடியவர்கள்.

சொல் இலக்கணந்தான் ஒரு பாஷையின் ஜீவன். ஆதலின் சொல் இலக்கண ஆராய்ச்சிக்கு முடிவே இல்லை. தொல்காப்பியத்தில் உள்ள மற்றப் பகுதிகளுக்கு இருக்கும் உரைகளை விடச் சொல்லதிகாரத்துக்குத்தான் அதிகமான உரைகள் இருக்கின்றன. எனவே, எழுத்ததிகாரத்தைப்பற்றி நான் எழுதிய புத்தகத்தைவிட இது பெரிதாக இருக்கிறது. இனி, தொல்காப்பியத்தின் மூன்றாவது பகுதியாகிய பொருளதிகாரத்தைப்பற்றி இதே முறையில் எழுதலாம் என்றிருக்கிறேன். இந்த இரண்டு புத்தகங்களையும் எழுதி முடிக்கத் துணையாக இருந்த திருவருளும் என் ஆசிரியப்பிரான் ஆசியும் எஞ்சியவற்றையும் நடைக்கூட்டுமென்றே நம்புகிறேன்.

7-9-1950 கி. வா. ஜகந்நாதன்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சொல்உலகம் | 1 |
| 2. | ஆண்பெண் பிரிவு | 8 |
| 3. | கேள்விகள் | 15 |
| 4. | விடைகள் | 20 |
| 5. | சொல்லிலும் லாபம் | 26 |
| 6. | பேச்சில் அழகு | 31 |
| 7. | தெளிவான பேச்சு | 37 |
| 8. | சந்தேகமும் தெளிவும் | 45 |
| 9. | மரியாதைப் பேச்சு | 51 |
| 10. | சுட்டும் இலக்கியச் சுவையும் | 57 |
| 11. | பட்டப் பெயர்கள் | 63 |
| 12. | வகை வகையான பொருள்கள் | 70 |
| 13. | பெரும்பான்மையும் சிறுபான்மையும் | 75 |
| 14. | 'மயங்காதே!' | 80 |
| 15. | ஆண்மையும் பெண்மையும் | 86 |
| 16. | உயர்ந்த பொருள்கள் | 90 |
| 17. | எட்டுவித வேறுபாடுகள் | 97 |

18. தொழில்களின் வகை . . . . . . . . . 103
19. பார்க்காத பார்வை . . . . . . . . . 110
20. அகராதிக்கும அப்பால் . . . . . . . 115
21. அழைப்பின் சரித்திரம் . . . . . . . 121
22. சொல்லும் பொருளும் . . . . . . . 127
23. சமுதாயப் பிரிவுகள . . . . . . . 132
24. வழக்கு விசித்திரங்கள் . . . . . . . 137
25. தவறு அல்ல . . . . . . . . . 143
26. பேச்சிலே பொடி . . . . . . . 149
27. சிந்தனை உலகத்து வார்த்தைகள் . . . 155
28. சொல்வளம் . . . . . . . . . . 162
29. தமிழில் வடசொல் . . . . . . . 167
30. குறிப்பின் அழகு . . . . . . . . 173
31. பழையதும் புதியதும் . . . . . . . 179
உள்ளுறை . . . . . . . . . . 185

# வாழும் தமிழ்

## 1

## சொல்உலகம்

"பாவம்! வாயில்லாப் பிராணி; அதைப் போட்டுக் கொல்கிறான். கடவுள் இவனுக்குத் தண்டனை கொடுப்பார்" என்று பிராணிஹிம்சை பண்ணும் ஒருவனைப் பார்த்துச் சாதுவான ஒருவர் சொல்கிறார். வாயில்லாப் பிராணி என்று அவர் குறிக்கிறாரே, அந்த மாட்டுக்கு வாய் இல்லையா? இருக்கிறது. புல் தின்னவும் தவிடு தின்னவும் தண்ணீர் உறிஞ்சவும் வாய் இருக்கிறது. ஆனால், "ஐயோ கொல்கிறானே!" என்று சொல்ல வாய் இல்லை; தன் உள்ளக் கருத்தை வெளியிட அதற்கு வாய் இல்லை.

உலகத்தில் உள்ள எல்லாப் பிராணிகளையும் உயிர் உள்ளவை, உயிர் இல்லாதவை என்று பிரிக்கலாம். அந்த உயிர் உள்ள பிராணிகளையும் வாயுள்ள பிராணி என்றும் இல்லாத பிராணியென்றும் பிரிக்கலாம். வாயுள்ள பிராணி என்று பிரித்தாலும் அந்த வகையில் பல சாதி இல்லை; மனிதனைத்தான் வாயுள்ள பிராணி என்று சொல்லவேண்டும். மற்ற உயிர்களை வாயில்லாப் பிராணி என்கிறோம். அவற்றில் பல வகைகள் உள்ளன. வாயில்லாப் பிராணிகளில் ஐந்து பிரிவுகள் உண்டு. ஐந்து புலன்களால் உணரும் உணர்ச்சி, மனிதனுக்குப் பூரணமாக இருக்கிறது. அதற்குமேல் பகுத்தறிவு ஒன்று தனியாக இருக்கிறது. ஆகையால் ஆறு அறிவு படைத்தவன் மனிதன் என்று தமிழர் வகுத்திருக்கின்றனர்.

வாயில்லாப் பிராணிகள் எல்லாவற்றுக்கும் ஐந்து புலன் அறிவும் ஒருங்கே அமைவதில்லை. வளர்ச்சியடையும் சக்தியுடைமையால் மரத்தையும் உயிருள்ள பிராணியாகவே தமிழர் கருதினர். அதற்குப் பரிச உணர்ச்சி என்ற ஓர் அறிவு இருக்கிறது. இப்படியே இரண்டறிவு படைத்தவை முதல் ஐந்தறிவு படைத்தவைவரை பிராணிகள் வேறு வேருக உள்ளன. இப்படிப் பார்த்தால், அறிவு வகைப்படி பிரித்து வாயில்லாப் பிராணிகளை ஐந்து பிரிவு ஆக்கலாம். தமிழர் அத்தகைய முறையில் உயிரைப் பிரித்துப் பேசினுர்கள். தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் அதைப்பற்றி விரிவாகச் சொல்கிருர்.

சொல்லதிகாரத்தில் சொற்கள் பொருளைத் தெரிவிக்க எப்படி உதவுகின்றன என்றும், அந்தச் சொற்கள் எத்தனை வகைப்படும் என்றும், பல சொல் தொடர்ந்து வாக்கியமாகி நினைத்த கருத்தைத் தெரிவிக்கும் இயல்பு இன்னது என்றும் விரிவாகச் சொல்கிருர். சொல் அதிகாரம் முழுதும் பொருளைக் குறிக்கும் சொல்லைப் பற்றிய ஆராய்ச்சி நிரம்பியது.

உலகத்துப்பொருள்களில் உயிர் உள்ளது உயிர் இல்லாதது என்றும், உயிர் உள்ளவற்றில் ஒன்றுமுதல் ஆறு வகை அறிவுவரையில் உள்ளன என்றும் பிரிவு அமைந்திருக்கிறது. சொல்லுலகத்திலோ வேறு வகைப் பிரிவுகள் இருக்கின்றன. வாயுள்ள பிராணி, வாயில்லாப் பிராணி என்று நாம் சொல்கிருேமே அந்தப் பிரிவையே, தம் கருத்தைப் புலப்படுத்தும் பிராணி, அது முடியாத பிராணி என்று பிரிக்கலாம். அதையே இன்னும் வேறுவிதமாகச் சொன்னுல் பகுத்தறிவுள்ள பிராணி, பகுத்தறிவில்லாத பிராணி என்று பிரிக்கலாம். பகுத்தறிவு இருப்பதற்கு அடையாளம்போலப் பேச்சு உதவுகிறது. அதனுல்தான் மனிதன் பெற்ற பெருவரம் பேசும் ஆற்றல் என்று பெரியோர் தெரிவிக்கின்றனர்.

சொல் என்றதைப்பற்றிய ஆராய்ச்சி வருகையில் பொருளை உணர்த்தும் வார்த்தை அல்லது மொழிதான் தலைமை இடத்தைப் பெறுகிறது. அதை உடையவன்

மனிதன். மற்ற அனைத்தும்-உயிர் உள்ளவையும் இல்லாதவையும்-ஊமைச்சாதி; பேசத் தெரியாதவை; சொற் பிரபஞ்சத்தில் தாமே இயங்க முடியாதவை.

ஆகவே, சொல் அதிகாரத்தில் முதலில் பிரிக்கும் பிரிவு இரண்டாக அமைந்தது. உணர்ச்சியைச் சொல்லும் ஆற்றல் பெற்ற மனிதன், அது பெறாத பிற என்ற இரண்டு வகைகள் அமைந்தன. இந்தப் பிரிவைத் தமிழரிடந்தான் காணலாம் என்று ஆராய்ச்சியாளர் எழுதியிருக்கின்றனர்.

இந்தப் பிரிவை யார் முதலில் அமைத்தார்கள் என்று காலக் கணக்குப் போட்டுச் சொல்ல முடியாது. மிகப் பழைய காலந் தொடங்கியே அடிப்பட்ட வழக்காக இந்தப் பிரிவு வந்துகொண் டிருக்கிறது. இந்தப் பிரிவுக்குத் திணை என்று பெயர். சொற்பிரபஞ்சத்தில் சொல்லைச் சொல்லும் அதிகாரம் உடையவன்தானே உயர்ந்தவன்? எனவே, மனிதரை உயர்திணை என்று சொன்னார்கள். உயர்திணை என்று சொன்ன மாத்திரத்திலே இழிதிணை என்று மற்றொன்றுக்குப் பேர் என்று சொல்லத் தோன்றும். தமிழர் அப்படிச் சொல்லவில்லை. மனிதன் உயர்ந்தவன்; ஆனால் மற்றவை இழிந்தவையா? அல்ல. அவற்றையும் கடவுள் அருளுள்ளங் கொண்டு படைத்திருக்கிறார். அப்படியானால் அவற்றை என்ன திணையென்று பகுப்பது?

உயர் திணை என்று ஒன்றைச் சொல்லிவிட்டோம். மற்றதைத் தாழ்ந்த திணை என்று சொல்லக் கூடாது. ஆனாலும் ஒரு பேர் இட வேண்டுமே!

சரி; கொஞ்சம் இந்தக் காலத்துக்கு வருவோம். அரசாங்கத்தில் உத்தியோக சம்பந்தமான பேச்சு வரும்போது தமிழ் நாட்டில் சாதியைப்பற்றி ஆராய்கிறார்கள். பிராமணர் என்று ஒரு பிரிவை வகுத்து மற்றப் பிரிவைப் பிராமணர் அல்லாதார் என்று குறிக்கிறார்கள். வடநாட்டிலே முஸ்லிம் என்று ஒரு பிரிவு வகுத்து முஸ்லிம் அல்லாதார் என்று எஞ்சியதற்குப் பேரிடுகிறார்கள். இப்படியே இந்த அல்லாதார் என்ற சொல் பல பல துறைகளில் பிரிவு வகுக்கிறது. உயர்ந்த

வர் தாழ்ந்தவர் என்ற வேறுபாட்டுக்கே இடமின்றி, "பொன் இது, மணி இது" என்று வெவ்வேறு இயல்பைக் குறித்துப் பிரிக்கும் கொள்கைப்படி இந்தப் பிரிவு முறை இருக்கிறது. உத்தியோகஸ்தர் - உத்தியோகஸ்தர் அல்லாதார், கெஜட்டில் வருவோர் - அல்லாதார் என்று வழங்குகிறார்கள்.

இந்த அன்மைச் சொல்லையே திணைப் பிரிவில் தமிழர் பயன்படுத்திக்கொண்டனர். மனித சாதியை உயர் திணையென்று பிரித்த பிறகு, மற்றவற்றை இழிந்த திணையென்று சொல்லாமல் அல்லாத திணை என்று பிரித்தனர்; அதில் ஒரு சாதுரியம் இருக்கிறது. அல்லாத திணை என்றாலும் அல்திணை என்றாலும் ஒன்றுதான். இல்லாத பொருள் என்பதும் இல் பொருள் என்பதும் ஒன்றையே குறிப்பது போன்றது இது. அல் என்ற சொல்லும் திணை என்ற சொல்லும் சேர்ந்தால் அஃறிணை என்று வரும்.

உயர்திணை, அஃறிணை என்று உலகத்துப் பொருள்கள் அனைத்தையும் பிரித்திருக்கிறார்கள். பொருளைச் சுட்டும் சொற்களையும் உயர்திணைச்சொல், அஃறிணைச் சொல் என்று பிரித்தார்கள்.

சொல்லதிகாரத்தின் முதல் சூத்திரம் இந்தத் திணை யென்னும் பிரிவைப்பற்றித்தான் சொல்கிறது.

**உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே;**
**அஃறிணை என்மனார் அவர்அல பிறவே;**
**ஆயிரு திணையின் இசைக்குமன் சொல்லே.**

[என்மனார் - என்று புலவர் கூறுவர். மக்கட்சுட்டு - மக்களென்று குறிக்கப்படும் பொருள். ஆயிரு - அந்த இரண்டு. இசைக்குமன் - சொல்லும்.]

'உலகத்தில் மக்கள் என்று சுட்டப்படும் பொருள்களை உயர்திணை என்று வகுத்துரைப்பர் புலவர்; மக்கள் அல்லாத பிற பொருள்களை அஃறிணை என்று சொல்லுவார்கள். (பொருளைக் குறிப்பதே சொல்லின் வேலை ஆகையால்) சொற்களும் அந்த இரண்டு திணைகளாக வழங்கும்' என்பது இதன் பொருள்.

பொருள்களின் பிரிவு எத்தனை வகை உண்டோ அத்தனை வகையையும் சொல்லிலே காட்ட முடியாது. அது அவசியம் இல்லை என்று கருதினர் தமிழர். பெயரைக் கொண்டு ஒரு பொருளின் வேறுபாட்டை எந்தப் பாஷையிலும் உணரலாம். ஆனால் அது செய்யும் தொழிலைப் புலப்படுத்தும் வார்த்தையைக் கொண்டு அதன் இயல்பை உணர்வது எல்லா மொழிகளிலும் முடியாது. "இளைஞன் ஓடுகிறான்" என்று சொல்கிறோம். இளைஞன் என்பது ஒரு பொருளின் பெயர். அந்தப் பெயரைச் சொன்ன மாத்திரத்திலே அவன் அறிவுடைய மனித சாதியைச் சேர்ந்த ஆடவன் என்று தெரிகிறது; இளமையை உடையவன் என்பதுகூடத் தெரிகிறது. ஆனால் ஓடுகிறான் என்று மட்டும் சொன்னால் பெயரால் தெரிகின்ற அத்தனை அடையாளங்களையும் தெரிந்துகொள்ள முடியாது; சிலவற்றை மாத்திரம் தெரிந்துகொள்ளலாம். ஓடுகிறான் என்ற சொல் அந்தச் செயலைச் செய்பவன் மனித சாதியைச் சேர்ந்த ஓர் ஆடவன் என்பதைப் புலப்படுத்தும். மனிதசாதி, ஒருபொருள், ஆடவன் என்ற மூன்று இயல்புகளை அந்தச் சொல் தெளிவிக்கிறது. (இளமை என்ற இயல்புமாத்திரம் இதில் தெளிவாகவில்லை.) இந்த மூன்று இயல்புகளைத் தெரிவிப்பது தமிழின் சிறப்புகளுள் ஒன்று. மற்றப் பாஷைகள் பலவற்றில் தொழிலைச் சொல்லும் சொல்லைக்கொண்டு இந்த அடையாளங்களை உணரமுடியாது. ஆங்கிலத்தில் தொழிலைக் குறிக்கும் வினைச்சொல்லைச் சொன்னால் அதைச் செய்யும் பொருள் ஒன்றா அல்லது பலவா என்று மாத்திரம் தெரிந்துகொள்ளலாம். மலையாளத்தில் அந்தப் பிரிவும் காண முடியாது. ஸம்ஸ்கிருதம், ஹிந்தி முதலியவற்றில் மனிதனா மிருகமா என்ற திணைப்பிரிவை உணரமுடியாது. தமிழில் சிறப்பாக முதலில் இதை உணர்ந்து கொள்ளலாம். அதனால்தான் தொல்காப்பியர் முதலில் இந்தப் பிரிவைப்பற்றிச் சூத்திரஞ் செய்தார்.

சொல்லதிகாரத்தில் ஒன்பது பகுதிகள் இருக்கின்றன. முதலில் உள்ளது கிளவியாக்கம் என்பது. கிளவி என்பது சொல். சொல்லானது பொருளைப் புலப்படுத்த என்ன என்ன வகையான உருவத்தைக் கொள்கிறது என்பதைச் சொல்லும் பகுதி அது. பிறகு சொற்

களின் வகைகளாகிய பெயர், வினை, இடை, உரி என்பவற்றோடு சம்பந்தமுள்ள இலக்கணங்களைச் சொல்லும் இயல்கள் இருக்கின்றன. வாக்கியங்கள், பொருள்தரும் விசித்திரங்களைப்பற்றிச் சொல்லும் எச்ச இயல் என்பது ஒன்பதாவது பிரிவு.

இலக்கணத்தில் மிகவும் முக்கியமான பகுதி சொல். ஆகையினால் தொல்காப்பியச் சொல்லதிகாரத்துக்குப் பலர் உரை எழுதியிருக்கிறார்கள். இப்போது கிடைப்பவற்றுள் பழமையானது இளம்பூரணர் என்பவருடைய உரை. புலவர்கள் சிறப்பாகப் படித்து இன்புறுவது சேனாவரையர் என்பவருடைய உரை. அவர் வடமொழி அறிவும் வாய்ந்தவர். இடையிடையே வடமொழி இலக்கணச் செய்திகளையும் ஒப்புமை காட்டி விஷயத்தை விளக்குவார்.

உலகத்தில் உள்ளவற்றைப் பொருள் என்று சொல்கிறோம், அதற்கு ஆற்றல் உண்டு. முன்னதை மாட்டர் (matter) என்றும், பின்னதை எனர்ஜி (energy) என்றும் ஆங்கிலத்தில் உரைப்பார்கள். சிவம் என்றும் சக்தி யென்றும் பிரித்தவர்கள் இந்தப் பிரிவை ஒட்டியே பிரித்திருக்கிறார்கள். பொருளை உணரலாம். ஆற்றலை உணர முடியாது. ஆனாலும் இயங்கும்போது ஆற்றலை உணருகிறோம். ஓடும் சக்தியையுடைய குதிரை இருக்கிறது. நிற்கும்போது குதிரையைக் காண்கிறோம். அதன்பால் ஓடும் ஆற்றல் இருக்கிறது. அந்த ஆற்றல் அது ஓடும் செயலால் தெளிவாகிறது. பொருளின் செய்கையே ஆற்றலைக் காட்டுகிறது. பொருளுக்கு உருவம் உண்டு. அதுபோலவே ஆற்றலுக்கும் செயலாகிய உருவம் உண்டு. குதிரை இருப்பதை அதன் உருவத்தைக் கண்டபோது தெளிந்து கொள்கிறோம். அதன் ஆற்றலை ஆற்றலின் உருவமாகிய ஓட்டத்திலிருந்து உணர்கிறோம்.

ஆகவே, உலகம் பொருளும் அதன் ஆற்றலும் சேர்ந்த ஒன்று. உலக நிகழ்ச்சி இந்த இரண்டின் இணைப்பினால் உண்டாகிறது. பொருட் பிரபஞ்சத்தில்

இந்தப் பிரிவு இருப்பது போலவே சொல்உலகத்திலும் இந்தப் பிரிவு உண்டு. அங்கே பொருளைக் குறிக்கும் சொல்லுக்குப் பெயர் என்றும், ஆற்றலின் உருவத்தைக் குறிக்கும் சொல்லுக்கு வினை என்றும் அடையாளமிட்டுச் சொல்வார்கள். இந்த இரண்டும் தலைமையாக இருந்து சொல்உலகத்தை நடத்துகின்றன. அவற்றின் தத்துவத்தைச் சொல்லதிகாரம் சொல்கிறது.

# 2

# ஆண் பெண் பிரிவு

"தாயும் பிள்ளையும் ஒன்றானாலும் வாயும் வயிறும் வேறேதான்" என்ற பழமொழியை நாம் பல முறை கேட்டிருக்கிறோம். மனிதன் சமுதாய உணர்ச்சியோடு ஒன்றுபட்டு வாழ்ந்தாலும் இயற்கையில் உடம்பும் உயிரும் உள்ளமும் தனித்தனி மனிதனை ஆக்குகின்றன. தனிமனிதன் தோன்றுகிறான். அவன் தன் முயற்சியினால் மற்றவர்களோடு ஒன்றுபட்டுச் சமுதாய உணர்ச்சி பெறுகிறான். சமுதாய உணர்ச்சி இருப்பினும் தனி மனிதன் தன்னைத் தனியனாக உணர்ந்து பேசிச் செய்யவேண்டிய காரியங்கள் பல உண்டு. இதைத்தான் முன்னே சொன்ன பழமொழி குறிக்கிறது.

ஒன்று ஒன்றாகப் பல பொருள்கள் சேர்ந்தது உலகம். மனிதன் ஒன்றையும் பார்க்கிறான்; பலவற்றையும் பார்க்கிறான். ஒரு மரத்தைப் பார்க்கிறான்; பல மரங்களைப் பார்க்கிறான். ஒருவனைப்பற்றிய பேச்சும் பலரைப்பற்றிய பேச்சும் வாழ்க்கையோடு ஒட்டி வருகின்றன.

மனித இனத்தை உயர்திணையென்றும் பிறவற்றை அஃறிணையென்றும் வகுத்துக்கொண்ட தமிழர்கள், அந்த இரண்டு சாதியிலும் ஒன்று, பல என்ற பிரிவைக் கண்டார்கள். அப்படிக் காணும்போது அடிக்கடி பேசிப் பழகி ஒட்டி வாழ்ந்து வரும் தங்கள் இனத்தைப்பற்றிய செய்திகள் விரிவாக அவர்களுக்குத் தெரிய வந்தன. ஓரினத்தைச் சார்ந்தவர்களுக்கு அவ்வினத்தைப்பற்றிய அறிவு மிகுதியாகவும் மற்ற இனங்களைப்பற்றிய அறிவு அதனினும் குறைவாகவும் இருப்பது இயற்கையே.

தமிழன் உயர்திணையை ஒருவர், பலர் என்று பிரித்துப் பார்த்தான். அந்த இரண்டில் ஒருவரைப் பின்னும் கூர்ந்து நோக்கினான். ஆண் பெண் என்ற வேறுபாட்

டிலே அவன் உள்ளம் சென்றது. வாழ்க்கையில் இந்த உணர்ச்சி இல்லாமல் இருக்குமா? பிறகு உலகமே வளர்ச்சி அடையாதே!

தனி மனிதரில் ஆணென்றும் பெண்ணென்றும் இயற்கையிலே அமைந்த இரண்டையும் வேறு வேருக வழங்கத் தமிழில் இடம் உண்டு. ஆண்பால் பெண்பால் என்று இந்தப் பிரிவுக்கு இலக்கணக்காரர் பெயர் இட்டிருக்கிறார்கள். பால் என்ருல் பகுதி அல்லது பிரிவு என்று பொருள்.

ஒருவருக்கு மேற்பட்ட பலரை ஆண்கள், பெண்கள், ஆணும் பெண்ணும் கலந்த கூட்டம் என்று பிரிக்கலாம். வாழ்க்கையில் அப்படித் தனித்தனியே பிரிந்து கோஷா வாழ்க்கை நடத்தும் வழக்கம் தமிழருக்கு இல்லை. ஆகவே, பொதுவாகக் கூட்டமான மனிதரை ஒரே பிரிவாக்கி அதைப் பலர்பால் என்று குறித்தார்கள்.

மனிதர்களின் செயலைக் குறிக்கும் ஒரு வாக்கியத்தைச் சொன்னுல் அந்த வாக்கியத்திலே குறிப்பிக்கப் பெறும் காரியம் ஒன்று இருக்கும். செய்தவர் இன்னர் என்பதையும் தெரிந்துகொள்ளலாம். காரியத்தைக் குறிக்கும் வினைச் சொல்லை மாத்திரம் எடுத்துக்கொண்டு பார்த்தால், அந்தக் காரியத்தைச் செய்தவர் ஆணு பெண்ணு பலரா என்று தெரிந்துகொள்ளலாம். "வந்தாள்" என்று ஒரு வினைச் சொல் இருக்கிறது. இது மனித சாதியின் செயல்; வருவதாகிய செயலைக் குறிக்கும் சொல்; அந்தச் செயலைச் செய்த பேர்வழி ஒரு பெண் என்பதை அந்தச் சொல் தெரிவிக்கிறது. செய்த ஆசாமி ஆணென்றும் குறிப்பிடலாம். வந்தான் என்று சொல்லலாம். அப்படியே வந்தார் என்று சொல்லி அந்தக் காரியத்தைச் செய்தவர் தனிமனிதர் அல்ல, பலர் என்பதைத் தெரிவிக்கலாம். இதற்கு உதவியாக இருப்பவை அந்த வார்த்தைகளில் இருக்கும் கடைசி எழுத்துக்கள்.

உயர்திணையில் இந்த மூன்று பிரிவைச் சொல்லில் வகுத்த தமிழர் அஃறிணையில் எப்படி வகுத்தார்கள்? ஒன்று, பல என்ற பிரிவோடு நிறுத்திவிட்டார்கள். 'ஏன்

ஐயா இந்தப் பட்சபாதம்?' என்று கேட்கத் தோன்று கிறதல்லவா?

அஃறிணைப் பொருள்களில் ஆண் பெண் வேற்றுமை இல்லையா? உண்டு. விலங்குகளில் இருக்கிறது; மரங்களில் இருக்கிறது. உயிருள்ள பொருள்களிலெல்லாம் இருக் கிறது. அப்படி இருக்க அவற்றை ஏன் வேறு பிரித்துச் சொல்லக் கூடாது?

அஃறிணையில் ஆண் பெண் பிரிவே இல்லை என்பது தமிழர் கொள்கை அல்ல. இயற்கையின் அமைதியை நன்கு உணர்ந்தவர்கள் அவர்கள். ஆனால் பேசும் மொழி யிலே இந்தப் பிரிவைச் சுட்டவேண்டிய அவசியம் அதிக மாக இல்லை. வாழ்க்கையில் வேறு பிரித்துப் பார்க்க வேண்டிய அவசியம் பெரும்பாலும் இல்லாததுதான் அதற்குக் காரணம். குதிரை ஒன்று இருக்கிறது. அது ஆணானாலும் பெண்ணானாலும் மனிதனுக்கு ஒரே வகையில் உபயோகப்படுகிறது. ஆண் நாய், பெண் நாய் இரண்டும் ஒருங்கே வளர்ந்து ஒரே மாதிரியாக உபயோகப்படு கின்றன. விலங்கினத்திலும், மரம் முதலியவற்றிலும் எளிதிலே ஆண் பெண் பிரிவு கண்டுபிடிக்க இயலாது. உயிரற்ற அஃறிணைப் பொருள்களிலோ இந்தப் பிரிவே இல்லை. ஆதலின் வாழ்க்கையை ஒட்டிய மொழியிலும் அவற்றை வேறு பிரித்து வைக்கவில்லை. மனிதர்களில் அப் படியில்லையே! பெண் என்றால் உடல், உடை, அணி, பேச்சு எல்லாவற்றிலும் வித்தியாசம் தெளிவாக இருக் கிறதே.

அஃறிணையில் ஒரு பொருளை ஒன்றன்பால் என்றும் பல பொருள்களைப் பலவின்பால் என்றும் சொன்னார் கள். இப்படி உலகப் பொருள்களை ஐந்து பால் களாகப் பிரித்துச் சொற்களிலும் இந்தப் பிரிவைக் குறித் தனர் தமிழர்.

தொல்காப்பியர் இந்தப் பிரிவை இரண்டு சூத்திரங் களில் சொல்லியிருக்கிறார். ஆணை ஆடூஉ என்றும் பெண்ணை மகடூஉ என்றும் புலவர்கள் சொல்வார்கள். ஆடூஉவை அறியும் சொல், மகடூஉவை அறியும் சொல், பல்லோரை

அறியும் சொல் ஆகிய மூன்று பாலைக் குறிக்கும் சொற்களும் உயர்திணையைச் சார்ந்தவை. ஒன்றை அறியும் சொல், பலவற்றை அறியும் சொல் என்ற அந்த இரண்டு பாலைக் குறிக்கும் சொற்களும் அஃறிணையைச் சார்ந்தவை என்று சூத்திரம் செய்திருக்கிறார் தொல்காப்பியர்.

> **ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல்**
> **பல்லோர் அறியும் சொல்லொடு சிவணி**
> **அம்முப் பாற்சொல் உயர்திணை யவ்வே**
> **ஒன்றுஅறி சொல்லே, பலஅறி சொல் என்று**
> **ஆயிரு பாற்சொல் அஃறிணை யவ்வே.**

[சிவணி - சேர்ந்து. உயர்திணையவ்வே உயர்திணையைச் சார்ந்தன.]

ஆணை ஆணென்றும் பெண்ணைப் பெண்ணென்றும் சொல்வது வாழ்க்கையை ஒட்டி அமைந்த வழக்கம். ஆனால் சில மொழிகளில் ஒரு விசித்திரம் உண்டு. அவற்றில் எல்லா வார்த்தைகளையும் ஆண்பால் என்றும் பெண்பால் என்றும் பிரித்திருக்கிறார்கள். பொருள் ஆண்பாலாக இருக்கும்; அதைக் குறிக்கும் வார்த்தையோ பெண்பாலாக இருக்கும்!

ஆண் தன்மை உடையவனை ஆண் என்று சொல்லலாம்; பெண் தன்மை உடையவளைப் பெண் என்று சொல்லலாம். இரண்டுங் கெட்ட மனிதர் இருக்கிறார்களே, அவர்களை எப்படிச் சொல்வது? ஆணைச் சுட்டும் சொல் ஆண்பாற் சொல்; பெண்ணைச் சுட்டும் சொல் பெண்பாற் சொல் என்றால் இரண்டும் அற்ற அலியைச் சுட்ட அலிப்பால் என்று ஒன்று இருக்க வேண்டாமா?

தமிழ் உயிரோடு வளர்ந்த பாஷை. வாழ்க்கையை ஒட்டி வந்த மொழி. அதன் இலக்கணமும் வாழ்க்கையை ஒட்டியதே ஒழியத் தனியாக இருந்து நெட்டுருப் போட்டுத் தலைவலியை உண்டாக்கிக்கொள்ள வந்ததன்று. ஆகவே வாழ்க்கையில் அலியின் நிலை எவ்வாறு அமைந்திருக்கிறது என்று பார்க்கலாம். யாராவது தம்மை அலி என்று சொல்லிக்கொள்ள விரும்புவது உண்டா? அது

கிடக்கட்டும். அலிக்கென்று தனியிடம், தனி உடை, தனிப் பேர் இருக்கின்றனவா? இல்லை. பின்னே அவர்கள் எப்படி வாழ்கிறார்கள்? சில பேர் பெண்களைப்போல் சேலை கட்டிக் கொண்டு பெண்கள் கூட்டத்திலே கலந்துகொள்ளு கிறார்கள். தங்கள் பெயர்களையும் காமாட்சி, மீனாட்சி என்று வைத்துக்கொள்ளுகிறார்கள். அப்படியே வேறு சிலர் வேட்டி கட்டிக்கொண்டு ஆடவர் கூட்டத்தோடு சேர்ந்து பழகுகிறார்கள். ஆடவர் பெயரையே வைத்துக் கொள்கிறார்கள். அவர்கள் அப்படிப் பழகுவதனால், அவர் களைப்பற்றிய பேச்சு வரும்போது ஆடவரைப் போலவே வழங்குகிறோம். இதுதான் வாழ்க்கையில் நடைபெறுவது.

இலக்கணக்காரர் பார்த்தார். சிருஷ்டியிலே ஆண், பெண் என்ற பிரிவிலே சேராவிட்டாலும் செயற்கையினால், தாமே விரும்பி எந்தக் கூட்டத்திலே அவர்கள் சேருகிறார் களோ அந்தக் கூட்டத்துக்குரிய பாலில் சேர்த்து வழங்கு வதே சரி என்று சொன்னார். ஆகவே, பேடி வந்தாள், பேடி வந்தான் என்று சொல்லும்போது அந்தப் பேடியின் வாழ்க்கைகூட நமக்குத் தெரிந்துபோகிறது. மகளிரோடு சேர்ந்து வசிக்கிறதும் ஆடவரோடு சேர்ந்து பழகுகிறதும் வார்த்தையிலேயே தொனிக்கின்றன.

உயர்திணையிலே பிறந்தும் ஆண் பெண் பிரிவுக்கு உட் படாத அலிகளைப் பேச்சில் வழங்கும் முறையைத் தொல் காப்பியர் அறிந்து அதைச் சொல்கிறார். அதற்குமேல் தெய்வத்தைப்பற்றிய விஷயம் ஒன்றைச் சொல்கிறார்.

மனிதர்களில்தான் ஆண் பெண் என்ற வேறுபாடு இருக்கிறது. தெய்வத்துக்கு இந்த வேறுபாடு இல்லை. உயர்திணை அஃறிணையென்றுகூடப் பிரிக்க முடியாதே. அப்படியானால் தெய்வங்களைச் சொற்பிரபஞ்சத்தில் எப் படிப் பிரிப்பது? தெய்வத்திற்கென்று தனியே ஒரு பிரிவு வகுப்பதா?

தமிழர் தம் வாழ்க்கையில் அப்படிப் பிரிவு வகுத்திருந் தால் இலக்கணத்திலும் வகுத்திருப்பார்கள். தெய்வத் துக்குச் சாதி, திணை, பால் என்ற பிரிவு இல்லாவிட் டாலும் மனிதன் தன் மனத்துள் தியானிப்பதற்கும், உரு அமைத்து வழிபடுவதற்கும் சில சம்பிரதாயம் வேண்டும்.

தனக்குத் தெரிந்த உருவத்தை எண்ணுவதுதான் மனிதன் இயல்பு. ஆகவே தெய்வத்தைச் சிந்தனைக்குக் கொண்டு வந்து உரு அமைக்கும்போதும் பேச்சுக்குக் கொண்டு வந்து வியவகரிக்கும் போதும் தான் அறிந்த திணையுள்ளும் பாலுள்ளும் வைத்து வழங்கினான்; தேவன் வந்தான், தேவி வந்தாள் என்று பேசினான்.

இப்படிப் பேசின மாத்திரத்தில் தெய்வங்களுக்கும் இத்தகைய பிரிவு உண்டு என்று நிர்த்தாரணம் செய்வார் சிலர். தமிழன் அப்படிச் செய்யவில்லை. உருவமும் திணையும் பாலும் வகுப்பது வழக்கு நிலையில்; அவற்றைச் சொல்லுலகத்தில் வழங்கும்போதுதான். தெய்வம் அவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டது என்ற உண்மையைத் தமிழன் அறிந்திருந்தான்.

> **ஒருநாமம் ஓருருவம்**
> **ஒன்றுமிலாற்கு ஆயிரம்**
> **திருநாமம் பாடிநாம்**
> **தெள்ளேணங் கொட்டாமோ**

என்று மாணிக்கவாசகர் பாடுகிறார். ஆயிரம் திருநாமம் சொல்லிக் கொட்டும்போதே, இறைவன் ஒரு நாமமும் இல்லாதவன் என்ற உண்மை உள்ளத்தின் அடித்தட்டிலே ஒலித்துக்கொண்டே இருக்கிறது. அதுபோலத்தான் தெய்வத்தை ஆணாகவும் பெண்ணாகவும் பால் வகுத்துத் தமிழில் பேசும்போதே, அத்தெய்வம் இப்பிரிவுகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது என்ற உணர்ச்சி தமிழரிடம் இருந்தது. அப்படி இருந்ததென்பதைத் தொல்காப்பியர் ஒரு சூத்திரத்தால் புலப்படுத்துகிறார்.

"ஆணும் பெண்ணும் அல்லாத அலியும் ஆண் பெண், உயர்திணை அஃறிணை என்ற பிரிவில் அடங்காத தெய்வமும் இன்னபடிதான் பிரித்துச் சொல்லவேண்டும் என்று வகுத்துத் திட்டமிடும் பாற்பிரிவை உடையன அல்ல. ஆகையால் பாலைக் குறிக்கும் ஈற்றெழுத்துக்களை உடையன அல்ல. ஆனாலும் சொல்லளவில் அவை ஏதேனும் ஒரு பாலிலே பிரிந்து நின்று வழங்கப்பெறும்" என்ற அர்த்தம் வரும்படி ஒரு சூத்திரம் செய்திருக்கிறார்.

"அவிகளையும் தெய்வத்தையும் வந்தான் போனான், வந்தான் போனான் என்று சொல்வதைக்கொண்டு 'இப்படிப் பேசும் தமிழனுக்கு அவியின் லட்சணம் தெரியவில்லை' என்று நினைக்காதே. பைத்தியக்காரத் தமிழன் தெய்வத்தையும் தன்னைப் போல வேட்டியும் புடைவையும் கட்டுவது என்று நினைத்துவிட்டானென்று பரிகாசம் செய்யாதே. அந்தப் பாற்பிரிவைக் குறிக்கும் குறியீடுகள் அவர்களுக்கு உரியவை அல்ல; கடன் வாங்கிக்கொண்டவை" என்று அவர் இதன் மூலம் சொல்லாமற் சொல்லவில்லையா? "கடவுள் இந்த அவதாரம் எடுத்ததனால் இதுதான் அவர் திருவுருவம் என்று மயங்காதே. நம்மைப் போலப் பெண்டு பிள்ளைகளுடன் வாழ்பவரென்று ஏமாந்து போகாதே. எல்லாம் வேஷம்; நமக்காக, நாம் உய்வதற்காக, கடன் வாங்கிக்கொண்டவை" என்று சமய குரவர்கள் சொல்வதுபோல இருக்கிறதல்லவா இது? ஆம், ஒன்று சொல்லைப் பற்றிய தத்துவம்; மற்றொன்று பொருளைப்பற்றிய தத்துவம். சொல்லின்றிப் பொருள் இல்லை; பொருளின்றிச் சொல் இல்லை.

## 3

# கேள்விகள்

"பட்டுக் கோட்டைக்கு வழி எது என்ருல் கொட்டைப் பாக்குப் பத்துப் பலம் என்கிருன்" என்பது ஒரு பழமொழி. கேட்கிற கேள்வியை வாங்கிக்கொள்ளாமல் எதையோ விடைபோலச் சொல்வதைப் பரிகாசம் செய்ய எழுந்தது, அந்தப் பழமொழி. கேட்ட கேள்விக்குத் தக்க விடை சொன்ஞல் கேட்பவனுக்கும் திருப்தி உண்டாகும்; விடை சொன்னவனுக்கும் நல்ல பெயர் கிடைக்கும். இல்லாவிட்டால் "செவிட்டுப் பிணம்!" என்ற பட்டமோ, "அட இழவே! பைத்தியத்தை அல்லவா கேள்வி கேட்கிருேம்?" என்ற மதிப்புரையோ விடை கூறினவனைப்பற்றி எழும்.

கேள்வி கேட்பவனும் அறிவுடையவனுக இருக்க வேண்டும்; பதில் சொல்கிறவனும் சரியாகச் சொல்ல வேண்டும். பட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் கொட்டைப் பாக்கின் விலையைச் சொல்வது குற்றம். இந்தக் குற்றத்தை விடை வழு அல்லது செப்பு வழு என்று இலக்கணக்காரர்கள் சொல்வார்கள். செப்பு என்பதற்கு விடை என்பது பொருள். இலக்கணத்துக்கு உரை வகுத்த வியாக்கியானக்காரர்கள் பைத்தியக்காரத்தனமான பதில்களுக்கு சில உதாரணம் காட்டியிருக்கிருர்கள்.

ஒரு வேளாளன் நிலத்தை உழுதுகொண்டிருக்கிருன். அந்த நிலம் ஒரு பெருவழியின் அருகில் இருக்கிறது. யாரோ பிரயாணி கடம்பூர் என்ற ஊருக்குப் போய்க்கொண்டிருக்கிருன். தான் போகிற ஊருக்கு அதுதான் சரியான வழியா என்று உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அவன் உழவனைப் பார்த்து, "ஐயா, கடம்பூருக்கு வழி எது?" என்று கேட்கிருன். உழவன் இரண்டு மாடுகளை ஏரில் பூட்டி உழுகிருன். இடத்து மாடு, வலத்து மாடு என்று அந்த மாடுகளைச் சொல்வது

வழக்கு. அந்தக் காலத்தில் இடம் பூணி, வலம் பூணி என்று சொல்லி வந்தார்கள். வலப் பக்கத்தில் பூட்டப்பட்டது, இடப்பக்கத்தில் பூட்டப்பட்டது என்பது அவற்றின் பொருள். "இடத்திலே இருக்கிற மாடு எங்கள் வீட்டில் உள்ள பசுவின் கன்று" என்று அந்த உழவன் சொல்கிறான். 'கடம்பூருக்கு வழி யாதோ?' என்று கேட்ட வழிப்போக்கனுக்கு அந்தக் காலத்துப் பாஷையில், "இடம் பூணி என் ஆவின் கன்று" என்று அந்த உழவன் சொல்கிறான். பட்டுக் கோட்டைக்கு வழி கேட்டவனிடம் கொட்டைப் பாக்கின் விலை சொன்ன புத்திசாலிக்கு இந்த உழவன் அண்ணனாகத்தான் இருக்க வேண்டும். இந்த வினாவுக்கும் விடைக்கும் பட்டுக்கோட்டை, கொட்டைப்பாக்கு, கடம்பூர் இடம்பூணி என்று எதுகையினால் தொடர்பு இருக்கிறதேயொழியப் பொருளால் ஒரு தொடர்பும் இல்லை.

பைத்தியக்காரக் கேள்விக்கு, "ஒரு விரல் காட்டி, நெடிதோ? குறிதோ? என்பது வினாவழு" என்று உதாரணம் காட்டுகிறார்கள் உரையாசிரியர்கள். இரண்டு இருந்தால்தானே நீண்டது, குட்டையானது என்று ஒப்புநோக்கி உணர முடியும்?

தொல்காப்பியத்தில், **"வினா விடை என்னும் இரண்டி லும் குற்றம் இல்லாமல் இருக்க வேண்டும்" என்று ஒரு சூத்திரம் சொல்லுகிறது. பிறகு "வினாவுக்கு நேர்முகமான விடையாக இல்லாவிட்டாலும் மறைமுகமானதாக இருந்தா லும் விடை என்றே கொள்ளலாம்"** என்று ஒரு சூத்திரம் வருகிறது. இப் பகுதியில் உரையாசிரியர்கள், கேள்வி எத்தனை வகைப்படும், விடைகள் எத்தனை வகைப்படும் என்று ஆராய்ந்திருக்கிறார்கள். ஒவ்வோர் உரையாசிரியரும் தக்க உதாரணங்களோடு அவற்றை விளக்கியிருக்கிறார்கள்.

அவர்களிற் சிலர் உரைகளை ஆராய்ந்து பிற் காலத்தில் பவணந்தி முனிவர் என்ற சைனப் பெரியார் நன்னூல் என்ற இலக்கண நூலைச் செய்தார். தொல்காப்பி யத்துக்குப் பிறகு அந்த இலக்கணத்துக்கு உண்டான புகழ் வேறு எதற்கும் இல்லை. இன்றும் தமிழ்ப் புலவ

னென்றால் அவனுக்கு நன்னூலில் நல்ல பயிற்சி இருக்க வேண்டும் என்று அறிஞர்கள் சொல்வார்கள். இடையிலே சில காலங்களில் தொல்காப்பியத்தைப் படிப்பவர்கள் குறைந்து போனார்கள். அதற்கு உள்ள உரைகளைப் பாடம் சொல்பவர்களும் அங்கொருவரும் இங்கொருவருமாகவே இருந்தார்கள். அக்காலத்தில் நன்னூலே தமிழ் நாடு முழுவதும் பரவி, சிறந்த இலக்கண நூலென்ற சிறப்பை அடைந்தது. நன்னூலை ஒரு வகையில் தொல்காப்பியத்துக்கு உரை நூல் என்று சொல்லலாம். தொல்காப்பியர் சுருக்கமாகச் சொன்ன சில விஷயங்களை நன்னூலார் விரித்து விளங்கும்படி சொல்லியிருக்கிறார். வினு விடை வகைகளையும் அவர் விரிவாகச் சொல்லுகிறார்.

* * * *

கேட்பவனுடைய கருத்தும் அறிவுநிலையும் காரணமாகக் கேள்விகள் பல வகைப்படுகின்றன. பள்ளிக்கூடத்தில் படிக்கும் பையன் வாத்தியாரை, "அமெரிக்காவின் தலைநகரம் எது?" என்று கேட்கிறான். வாத்தியார் பையனிடம், "அமெரிக்காவின் தலைநகரம் எது?" என்று அதே கேள்வியைக் கேட்கிறார். இரண்டு கேள்விகளும் சொல்லுருவத்தில் ஒன்றுதான். ஆனால் பையன், விஷயம் தெரியாமல், தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசையோடு கேட்கிறான். வாத்தியாரோ விஷயம் தெரிந்தவர். இவனுக்குத் தெரிந்திருக்கிறதா, இல்லையா என்று பரீட்சிக்கும் பொருட்டுக் கேட்கிறார். ஆகவே கேட்பவருடைய கருத்தை உத்தேசித்தால் அந்தக் கேள்வியை இரண்டு வகையாகத்தான் கொள்ளவேண்டும். இப்படி வகைப்படுத்திப் பார்த்து ஆறு பிரிவாக நன்னூலார் வினுவைப் பிரித்தார்.

வாத்தியார் விடையைத் தெரிந்துகொண்டே பரீட்சிக்கும் பொருட்டுக் கேட்கிறார். அது அறிந்தவன் கேள்வி; அதை அறிவினு என்றார்கள். அறியாதவனுகிய மாணுக்கன் கேட்கும் கேள்வி அறியா வினு என்று சொல்லப்படும்.

சந்தேகப் பேர்வழி கேட்கும் கேள்வி ஒரு விதம். ராமசாமிக்குக் குழந்தை பிறந்தது என்ற விஷயம் தெரிந்த ஒருவனுக்கு, அது இன்ன குழந்தை என்று தெரியாது.

"ராமசாமிக்குப் பிறந்தது ஆண் குழந்தையா? பெண் குழந்தையா?" என்று கேட்கிறான். இந்தக் கேள்வியும் தெரியாத ஒன்றைக் கேட்பதாக இருந்தாலும், விஷயம் முழுவதும் தெரியாமல் போகவில்லை. ஓரளவு தெரியும்; அதற்குமேல் சந்தேகம். ஆகவே, கேள்வி இரண்டாக வருகிறது. இது ஐய வினா என்ற வகையில் அடங்கும்.

இந்த மூன்றும் ஒரு விடையை எதிர்நோக்கி நிற்கும் கேள்விகள். கேள்விக்குத் தக்க விடை வந்தால் அதோடு கேள்வி கேட்பவன் திருப்தி அடைந்துவிடுகிறான். விடை தெரிந்துகொள்வதோடு நில்லாமல் அதற்குமேலும் சில காரியங்கள் நடக்க வேண்டுமென்று விரும்பிக் கேள்வி கேட்கும் சந்தர்ப்பம் உண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில் வரும் கேள்விகளை மூன்றாக வகுத்துக்கொண்டார்கள்.

தீபாவளிக்கு ஒரு பணக்காரர் வீட்டில் ஜவுளி வாங்குகிறார்கள். ஜவுளி வியாபாரி, வேட்டி, புடைவை முதலிய வைகளையெல்லாம் மூட்டையாகக் கட்டிச் சுமந்து கொண்டு வந்திருக்கிறான். கீழே இறக்கி வைத்து மூட்டையை அவிழ்த்து எல்லாவற்றையும் பரப்புகிறான். பிரபு தம்முடைய குடும்பத்துக்கு வேண்டிய ஆடைகளை வாங்குகிறார். அப்போது அவர் வீட்டுச் சமையற்கார ராமன் அங்கே வருகிறான். அவன் ஏழை. அவன் பணம் கொடுத்து இந்தக் கஷ்ட காலத்தில் எங்கே வேஷ்டி வாங்கப் போகிறான்? அவனைக் கண்டவுடன் இரக்கத்துடன் அந்தப் பிரபு, "ராமா, நீ வேட்டி வாங்கிவிட்டாயோ?" என்று கேட்கிறார். ராமன், "இல்லை" என்று சொல்கிறான். பிரபு தாம் கேட்ட கேள்விக்கு விடை வந்து விட்டதென்ற திருப்தியோடு சும்மா இருந்துவிடுகிறாரா? உடனே, "இந்தா, ராமனுக்கும் ஒரு வேட்டி, சுமாரான விலையில் எடு" என்று சொல்லி ஒரு வேட்டியை வாங்கித் தருகிறார். அதைக் கொடுத்த பிறகுதான் அவர் கேட்ட கேள்வியின் கருத்து முற்றுப்பெறுகிறது. கேட்ட பிரபுவின் மனம் அமைதி அடைகிறது. ஆகவே, அவர் கேட்ட கேள்வி, அறியா வினா என்று சொல்லக் கூடாது. அவனுக்குக் கொடுக்க வேண்டும் என்று நினைத்துக் கேட்ட கேள்வி அது. அதைக் கொடைவினா என்று சொல்லுவார்கள்.

நம் நண்பன் நம்மிடம் வந்து, "கையில் ஏதாவது பணம் இருக்குமா, அப்பா?" என்று கேட்கிறான். அதற்கு நாம், "இருக்கிறது" என்று சொல்கிறோம். அவன் கேள்வி கேட்டது இந்த விடையைத் தெரிந்துகொள்வதோடு நிற்பதற்கல்ல. நம்மிடமிருந்து பணம் கடனாக வாங்கிக் கொள்வதற்காகவே அந்தக் கேள்வியைக் கேட்கிறான். நம்மிடம் பணம் இருக்கிறதா இல்லையா என்பதை அறிவதற்காக மாத்திரம் அவன் கேட்கவில்லை. நம்மிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்ட பிறகே அவன் கேட்ட கேள்வியின் கருத்து நிறைவேறுகிறது. முன்னே பிரபு கேட்ட கேள்வி கொடுப்பதற்காக; கொடுக்கிறவர் கேள்வி அது. இங்கே நண்பன் கேட்ட கேள்வி கொள்வதற்காக; இதைக் கொளல்வினா என்பார்கள்.

வேலைக்காரனைப் பார்த்து எஜமான், "ஏண்டா, தோட்டத்துக்குத் தண்ணீர் இறைத்தாயோ?" என்று கேட்கிறார். அவன் இறைக்கவில்லை. "இல்லை" என்று சொல்வதையா அவர் எதிர்பார்க்கிறார்? இறைக்க வேண்டும் என்று சொல்லாமல் சொல்கிறார். அவனை மறைமுகமாக ஏவுவதற்காக இப்படிக் கேட்கிறார். இதை ஏவல் வினா என்பார்கள். பள்ளிக்கூடம் போகாத பையனை, "ஏண்டா, பள்ளிக்கூடம் போகவில்லையா?" என்று அதட்டிக் கேட்கும் தகப்பனுடைய கேள்விக்குப் பையன் எப்படி விடை அளிக்கிறான்? வார்த்தைகளால் அல்ல; புத்தகங்களையும் சிலேட்டையும் எடுத்துக்கொண்டு முனகியபடியே பள்ளிக்கூடம் போகப் புறப்படுகிறான். அதுதான் அவன் விடை. அப்பா, "பள்ளிக்கூடம் போடா" என்று உத்தரவிட்டதாகத்தான் அவன் நினைக்கிறான்.

இவ்வாறு கேள்விகளைத் தனித்தனியே எடுத்துக் கொண்டு வகுத்தால் பல வகையாகப் பிரியும். எல்லாவற்றுக்கும் ஒரே கேள்விக் குறியைத்தான் போட்டு எழுதுகிறோம். பேச்சில் அந்தக் கேள்விக் குறிப்பு எத்தனையோ விதமாக இருக்கிறது. அவற்றை ஒருவாறு ஆராய்ந்து ஆறு விதமாகப் பிரித்த இலக்கண நூலாசிரியர் வெறும் வார்த்தைகளை ஆராய்பவராகத் தோன்றவில்லை. வார்த்தைகளுக்குப் பின்னே உள்ள வாழ்வையே அவர் ஆராய்கிறார்.

# 4
# விடைகள்

வினாக்களைப்பற்றி ஆராய்ச்சி பண்ணிய இலக்கணக்காரர் விடைகளையும் ஆராய்ந்திருக்கிறார். மக்கள் பேசும் பேச்சில் எத்தனையோ விசித்திரங்கள் இருக்கின்றன. அவற்றைச் சற்றுக் கூர்ந்து கவனித்தால் மனிதன் அறிவு என்ற அதிசயப் பொருளைப் படைத்திருப்பதால் தன் சம்பந்தமான காரியங்களில் எப்படி ரசத்தைப் புகுத்துகிறான் என்பது தெரியவரும். பேச்சிலே வெட்டொன்று துண்டு இரண்டாகப் பேசுவதும், வழவழவென்று பேசுவதும் இனிமையைத் தருவதில்லை. சொல்பவனுடைய வார்த்தைகளுக்கு இயற்கையாக என்ன பொருள் உண்டோ, அந்தப் பொருளுக்குப் புறம்பே குறிப்பாக உணரும்படி ஒரு கருத்து இருந்தால், அதனைத் தெரிந்துகொள்ளும்போது ஒருவித இன்பம் உண்டாகிறது. இத்தகைய இன்பம் இலக்கியத்தில் மிகுதியாக இருக்கும். பேச்சிலும் ஓரளவு இருக்கிறது.

மலரில் தேன் இருப்பது இயற்கையே. ஒவ்வொரு மலரிலும் ஓரளவு தேன் உண்டு. ஆனால் தேனடையில் ஓரே தேனாக இருக்கிறது. இப்படியே மனிதனுடைய பேச்சில் ரசம் ஓரளவு ததும்புகிறது. இலக்கியத்திலோ ரசங்களையெல்லாம் புலவர்களாகிய வண்டுகள் தொகுத்து வைத்திருக்கிறார்கள். மலரினூடே தேன் இருப்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். மனிதன் பேச்சினூடே ரசம் இருப்பதும் கவனித்தால் தெரியவரும். இலக்கணம் இயற்றியவர்கள் உலக வழக்காகிய பேச்சு மொழியைக் கவனித்திருக்கிறார்கள். கேள்வியும் விடையும் இலக்கியங்களைக்காட்டிலும் பேச்சிலேதான் அதிகமாகப் பயில்கின்றன. ஆகவே, அவற்றைப்பற்றிய இலக்கணம் வரும்போதெல்லாம் உரையாசிரியர்கள் தினசரி வாழ்விலே

நாம் பேசுகிற பேச்சிலிருந்து உதாரணம் எடுத்துக் காட்டுகிறார்கள்.

கேள்விகளை ஆறு வகையாக இலக்கணக்காரர் பிரித்தது இந்தப் பேச்சின் ஆராய்ச்சியைக் கொண்டுதான். அப்படியே விடைகளையும் ஆராய்ந்து இலக்கணக்காரர் வகுத்திருக்கிறார்.

'வினா விடைகள் எப்படி அமைய வேண்டுமோ அப்படி இருக்க வேண்டுமே ஒழிய, மனம் போனபடி இருக்கக்கூடாது. மேற்பார்வையில் வினாவைப் போலவும் விடையைப் போலவும் இல்லாவிடினும் கருத்தினால் வினாவாகவும் விடையாகவும் இருக்கும்' என்ற செய்தியைச் சொல்லதிகாரத்தின் முதல் பிரிவில் தொல்காப்பியர் சொல்கிறார்.

விடையைச் செப்பு என்று கூறுவர் புலவர். ஒரு கேள்வியைக் கேட்கும்போது, உண்டு, இல்லையென்று கோர்ட்டில் வாக்கு மூலம் கொடுப்பதுபோலச் சொல்வது நேர்முகமான விடை. அதைச் செவ்வன் இறை என்பர். இறை என்பது விடைக்கு ஒரு பெயர். செவ்வன் என்பது நேர் என்பதைக் குறிக்கும் சொல். நேரான விடை என்பதே செவ்வன் இறை என்பதற்கு அர்த்தம்.

நேரான விடை இன்றிக் கோணலான விடை ஒன்று உண்டா? ஆம், உண்டு. கேள்வியை ஒருவன் கேட்டால் அதற்கு விடையாக மற்றொரு கேள்வியைக் கேட்பவர் உண்டு. "அண்ணா, இதை வாங்கித் தரமாட்டாயா?" என்று தம்பி கேட்டால், "வாங்கித் தந்ததில்லையா?" என்று அண்ணா திருப்பிக் கேட்கிறான். அந்தக் கேள்வி, உருவத்தில் கேள்வியே ஆனாலும் அர்த்தத்தில் முன்னாலே கேட்ட கேள்விக்குப் பதிலாக இருக்கிறது; "முன்பு வாங்கித் தந்ததுபோல இப்போதும் வாங்கித் தருவேன்" என்ற பொருளை உடையது. ஆகவே, அந்த இரண்டாவது கேள்வியும் விடைதான். "இதென்ன, இந்த வாக்கியத்தில் கேள்விக் குறி போட்டு எழுதியிருக்கிறான்? இதை எப்படி விடை என்று சொல்ல முடியும்?" என்று யாருக்காவது சந்தேகம் வந்தால் என்ன செய்வது? அதற்காகத் தொல்காப்பியர்,

**வினாவும் செப்பே வினாஎதிர் வரினே**

என்று சூத்திரம் செய்திருக்கிறார். "ஒரு கேள்விக்கு எதிரே விடை தரும் கருத்தோடு வந்தால் அது வினாவாக இருந்தாலும் விடைதான்" என்பது இதன் பொருள்.

இப்படி நேர்முகமாகவும் மறைமுகமாகவும் வரும் விடைகளுக்கு உரையாசிரியர்கள் உதாரணம் கூறி வகைப்படுத்தி யிருக்கிறார்கள். பிற்காலத்தில் இலக்கணம் செய்த நன்னூல் ஆசிரியர் எல்லாவற்றையும் கவனித்து ஒருவாறு வகைப்படுத்தி விடை எட்டு வகைப்படும் என்று சொல்கிறார். அவற்றில் நேர்முகமான விடை மூன்று; மறைமுகமானவை ஐந்து.

"கோவிலுக்குப் போகிற வழி எது?" என்று ஊருக்குப் புதிதாக வந்தவர் கேட்கிறார். அவர் கேள்விக்குப் பதில் வெறும் வார்த்தையாக மாத்திரம் வரவில்லை. "இதோ பாருங்கள்; இப்படியே போங்கள்" என்று ஒருவர் பதில் சொல்கிறார். இது நேரான விடைதான். ஆனாலும் வாய் விடை கூறும்போதே கை ஒன்றைச் சுட்டுகிறது. இப்படிச் சுட்டிச் சொல்வதனால் இந்த விடைக்குச் சுட்டு என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள்.

"இங்கே சாப்பிடுகிறீர்களா?" என்று உறவினரைக் கேட்கிறோம். அவர், "ஆகட்டும்" என்று உடம்பட்டுச் சொல்கிறார். அது நேர் விடை என்று சொல்லப்படும்.

"சாப்பிடவில்லை" என்று சொல்லிக் காரணத்தை விவரிக்கிறார். இது உடம்படாததைக் குறிக்கும் விடை. அதாவது மறுத்துச் சொல்லும் விடை; இதை மறை என்று சொல்வார்கள்.

சுட்டு, நேர், மறை என்ற மூன்றும் செவ்வன் இறையின் வகைகள்.

குறிப்பினால் விடையைப் புலப்படுத்தும் மறைமுகமான விடைகளைக் கவனிப்போம்.

அண்ணன் தம்பியைப் பார்த்து, "காலையில் கடைக்குப் போய்ச் சாமான் வாங்கி வருகிறாயா?" என்று கேட்கிறான்.

தம்பிக்கோ விருப்பம் இல்லை. அதை நேர்முகமாகத் தெரிவிப்பதாக இருந்தால், "மாட்டேன்" என்று ஒரு வார்த்தையில் சொல்லிவிடலாம். அப்போது அது மறைவிடை என்ற வகையில் அடங்கும்; அவன் மறுக்கிறான் அல்லவா?

தெளிவாக அப்படிச் சொல்லாமல் அவன் வேறு விதமாகத் தன் கருத்தைத் தெரிவிக்கிறான். "நீதான் போய்விட்டு வாயேன்!" என்று சொல்கிறான். இந்தப் பதிலில், "நான் போகமாட்டேன்" என்ற விடை மறைந்திருக்கிறது. ஆனாலும் விடையின் உருவம், "நீ இதைச் செய்" என்று ஏவுவதுபோல் இருக்கிறது. ஆகையால் இந்த மாதிரி விடைகளுக்கு ஏவல் விடை என்று பெயர் அமைத்திருக்கிறார்கள்.

"ஐந்நூறு ரூபாய் பணம் கொடுப்பாயா?"

"பணம் இல்லை என்பது தெரிந்தும் கேட்பது நியாயமா?"

கேட்ட கேள்விக்கு, இல்லையென்று நேர்முகமான பதில் வராவிட்டாலும் சுற்றி வளைத்துச் சொல்வதில் அந்தப் பதில்தான் புலப்படுகிறது. ஆனால் அந்தப் பதில் மற்றொரு கேள்வி உருவத்தில் இருக்கிறது. இது வினுவெதிர் வினுதல்.

"உனக்கு எத்தனை பிள்ளைகள்?"

"அதற்கெல்லாம் நான் புண்ணியம் பண்ணியிருக்கிறேனா என்ன?"

இதுவும் வினுவெதிர் வினுதல்.

"நூறு ரூபாய் கடன் தருவாயா?"

"நேற்றுத்தான் புடைவை வாங்கினேன்."

விடை கூறுபவன், "ரூபாய் தர முடியாத நிலையில் இருக்கிறேன்" என்பதைப் புலப்படுத்துகிறான். ஆனால், உண்டு இல்லை என்று சொல்லாமல், முன்பு நிகழ்ந்த ஒன்றைச் சொல்கிறான்.

"கொஞ்சம் பொங்கல் சாப்பிடுகிறாயா?"

"வயிறு வலிக்கிறது."

பொங்கல் சாப்பிட மாட்டேன் என்ற எதிர்மறை விடையைத் தன்பால் நிகழும் ஒன்றைச் சொல்லிப் புலப்படுத்துகிறான்.

இத்தகைய விடைகளை உற்றது உரைத்தல் என்பார்கள்.

இதுபோலவே இனிமேல் வரும் காரியத்தைச் சொல்லி விடையைப் புலப்படுத்துவதும் உண்டு.

"அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்கிறாயா?"

"ஜவுளிக் கடைக்கு மாதம் இருநூறு ரூபாய் தயாராக வைத்திருக்க வேண்டுமே!"

டாம்பிகமான குணமுடையவள் ஆகையால் கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன் என்பதை அவன் சொல்லாமல் சொல்கிறான்.

"இன்னும் இரண்டு நாள் இருந்து போகக் கூடாதா?"

"சரியாய்ப் போச்சு! வேலைக்காரர்களெல்லாம் வேலை செய்யாமல் ஏமாற்றிவிடுவார்கள்."

இருக்க முடியாது என்பதுதான் இதன் கருத்து. இந்த வகை விடைகளுக்கு உறுவது கூறல் என்று பெயர். இனி நடக்கப் போகும் ஒன்றைச் சொல்லும் முகத்தால், தன் கருத்தைப் புலப்படுத்துவதனால் இந்தப் பெயரை வைத்திருக்கிறார்கள்.

"அவசரமாக வேண்டியிருக்கிறது; ஐந்நூறு ரூபாய் தருவாயா?"

"யாரிடமாவது வாங்கிக் கொள்; நான் பிணை கொடுக்கிறேன்."

இந்த விடை கேட்ட கேள்விக்கு நேரான விடை அல்ல; உண்டு, இல்லை என்ற இரண்டிலும் படாமல் இருக்கிறது. கேட்கிறவனுக்குப் பணம் வேண்டும். அதை இவன் கொடுக்க முடியாது என்று புலப்படுத்தினாலும் அவன் பணம் அடைய வழி சொல்கிறான். இந்தப் பதிலினால் கேள்வி கேட்டவன் திருப்தியை அடைகிறான்;

ஆனால் அது அவன் எதிர்பார்த்த முறையில் ஏற்பட்ட திருப்தி அன்று; அதற்கு இனமானது.

"வைரத் தோடு வாங்க வேண்டும்; பணம் கடனாகத் தருகிறாயா?"

கேட்ட கேள்விக்கு நேர்முகமான விடை வருவதாக இருந்தால், "தருகிறேன்" என்று வரும். அல்லது, "மாட்டேன்" என்று வரும்.

நண்பர், "என்னிடம் ஒரு வைரத்தோடு நல்லதாக இருக்கிறது; தருகிறேன்" என்கிறார். கேட்ட கேள்விக்கு அவர் எதிர்பார்த்த விடை அல்ல இது. ஆனாலும் அவருடைய கருத்து ஒரு வகையில் நிறைவேறுவதற்கு ஏற்ற விடைதான்.

இந்த மாதிரி வருவனவற்றை இனமொழி என்பர்.

கேட்ட கேள்விக்குப் பள்ளிக்கூடப் பிள்ளையைப் போலவும், சாட்சிக்காரனைப் போலவும் விடை சொல்வதில் ரசம் இல்லை. சட்டப்படி அவைகளே சொல்லாலும் பொருளாலும் விடைகள் என்பதற்கு உரியவை. ஆனால் அவற்றிற்குப் புறம்பே வாழ்க்கையில் இன்பப் பகுதிகள் பல இருக்கின்றன. காதலன் காதலரிடையே நிகழும் வினா விடைகளும், புலவர்களிடையே நிகழும் கேள்வி பதில்களும், நண்பர்களிடையே நடைபெறும் சம்பாஷணைகளும் வெறும் சொல்லளவிலே நிற்பன அல்ல; பெயருக்கு நாக்குப் பேசுகிறது; அதனூடே உண்மையில் இருதயந் தான் பேசுகிறது. நாக்கினாலே பேசும் பேச்சுத்தான் சொல். ஆனால் இருதயம் பேசும் பாஷை குறிப்பு. அதை உணர்வது காது அல்ல; அறிவு.

# 5

# சொல்லிலும் லாபம்

"செட்டியாரே, உப்பு இருக்கிறதா?" என்று கேட்டால், "பருப்பு இருக்கிறது" என்று அவர் சொல்வதை நாம் எத்தனையோ தடவை எடுத்துச் சொல்லிப் பரிகாசம் செய்கிறோம். அந்தப் பரிகாசம் நியாயமானதென்று நாம் நினைக்கிறோம். 'நாம் ஒன்று கேட்க, செட்டியார் வேறு ஒன்று சொல்கிறாரே; இது நேரான பதில் அல்ல' என்று அப் பரிகாசத்துக்குக் காரணமும் சொல்ல வருகிறோம். இலக்கணத்துக்கு உரிய பரிபாஷையின்படி, செட்டியாருடைய விடை தவறாக இருப்பதால், விடைவழு என்று சொல்லலாம் என்றுகூடத் தோன்றுகிறது.

ஆனால் இலக்கணம் என்ன சொல்கிறது? செட்டியார் அப்படிச் சொல்வதுதான் சரி என்று சொல்கிறது.

நியாய மன்றத்தில் சாட்சியை விசாரிக்கும்போது வக்கீல் கேள்வி கேட்கிறார். அந்தக் கேள்விகளுக்கு நேர் முகமான விடைகளையே அவர் எதிர்பார்க்கிறார். உண்டு, இல்லை என்பனபோன்ற விடைகளைச் சொன்னால் போதும். அதற்கு மேல் சாட்சிக்காரன் ஏதாவது சொல்லத்தொடங்கினால், "கேட்டதற்கு மாத்திரம் பதில் சொல்" என்று வக்கீல் மிரட்டுகிறார். இந்த வினா விடை, விவகாரத்திலும் சண்டையிலும் வழக்கிலுமே பயன்படும்; உலக வாழ்க்கையில் அமைதியாக வாழும் மக்களிடத்தில் பயன்படாது. கேட்பவனுடைய கேள்வியில் உள்ள சொற்களைக் காட்டிலும் உட்கருத்துத்தான் முக்கியமானது. சொல்லாலே கேட்காவிட்டாலும் பதில் சொல்லலாம்; அது தவறு அன்று.

கடையில் உள்ள செட்டியாரைக் கேள்வி கேட்கும் போது நாம் குறுக்கு விசாரணை செய்யும் வக்கீலாக நிற்கவில்லை. வீட்டுக்கு வேண்டிய பண்டங்களை வாங்கும்

வாடிக்கைக்காரர் என்ற நிலையில் செட்டியாரைக் கேள்வி கேட்கிறோம். அவரும் சாட்சிக்காரனுகக் கடையில் உட்கார்ந்திருக்கவில்லை. எந்தக் கட்சிக்கும் பாதகமாகச் சாட்சி சொல்வது செட்டியார் இனத்துக்கு வழக்கம் இல்லை. அவர் அங்கே வியாபாரம் செய்ய, வியாபாரம் செய்து லாபம் சம்பாதிக்கவே உட்கார்ந்திருக்கிருர்.

அவருக்கு லாபந்தான் நோக்கம். தானியத்தை அளக்கும்போது ஒன்று என்று அளப்பது அங்காடி உலகத்தின் வழக்கம் அன்று. "லாபம்" என்று சொல்லித்தான் அளப்பார்கள். "ஆதாயம் இல்லாத செட்டியார் ஆற்ருேடே போவாரா?" என்ற பழமொழியைக் கேட்டிருக்கிருேமே. ஆற்றில் விழுந்து உயிருக்குக் கேடு உண்டாகும் நிலையில் இருக்கிருரென்று நாம் அஞ்சினுலும், அந்தச் செயலிலும் ஒரு லாபம் இருக்கும் என்று நினைக்கும்படி இருக்கிறது செட்டியாரின் வாழ்க்கை.

ஆற்றிலே போவதில்கூட லாபம் சம்பாதிக்கும் செட்டியார் பேச்சில் நஷ்டம் அடைவாரா? நாம் கேட்கும் கேள்விக்குக் கூறும் பதிலிலும் அவர் லாபத்தையே அடைகிருர்.

'அவர் சொல்லும் பதில் தகுந்த பதில்தானு?' என்பதை யோசித்துப் பார்ப்போம். நாம் உப்புக் கேட்கிருேம். அவர் பருப்பு இருக்கிறது என்கிருர். 'உப்பு இருக்கிறது' அல்லது 'உப்பு இல்லை' என்று சொன்னுலே போதும் என்று நாம் நினைக்கிருேம். "பருப்பு இருக்கிறது" என்ற அவர் விடையிலே, "உப்பு இல்லை" என்பதும் அடங்கியிருக்கவில்லையா? பரம்பரையாக வியாபாரம் செய்துவரும் குடும்பத்திலே பிறந்த அவர் தம் வாயால் இல்லை என்று சொல்லவே மாட்டார். ஒரு வழியும் இல்லாவிட்டால், "அடுத்த கடையில் கேட்டுப் பாருங்கள்" என்றுதான் சொல்வார்.

சரி; பருப்பு இருக்கிறது என்று ஏன் சொல்ல வேண்டும்? நாம் வீட்டுக்கு வேண்டிய சாமான் வாங்கப் போனுல் ஒவ்வொன்ருகவா வாங்குகிருேம்? சம்பளம் வந்தவுடனே வேண்டிய சாமான்களுக்கு ஒரு பட்டியல் தயாரித்துக்கொண்டு, பணத்துடன் கடைக்குப் போகிருேம். உப்பு

மாத்திரம் வாங்கப் போவதில்லை. 'உப்பு வாங்குகிறவன் பருப்பு முதலியவற்றையும் வாங்குவான்' என்று ஊகித்த செட்டியார் நாம் கேட்ட பொருளுக்கு இனமான பொருளைச் சொல்கிறார். அவர் அப்படிச் சொல்லாமல், 'உப்பு இல்லை' என்றே சொல்கிறாரென்று வைத்துக்கொள்வோம். நமக்குப் பருப்பு வேண்டியிருக்கும். ஆகவே, நாம் அடுத்தபடி, 'பருப்பு இருக்கிறதா?' என்று கேட்போம். செட்டியார், 'இருக்கிறது' என்பார். 'ரூபாய்க்கு எத்தனை படி?', 'மூன்று படி' என்று மேலே வினா விடைகள் எழும். இவ்வளவு தூரம் சம்பாஷணையை வளர்த்தினால் அநாவசியமாகக் கேள்விகளும் விடைகளும் இறைபடுமே. அதிலே என்ன லாபம்? ஆகையால் வாடிக்கைக்காரர்களின் உள்ளத்தை நன்கு உணர்ந்த செட்டியார் நாம் கேளாததற்கு முன்பே விடையைச் சொல்லிவிடுகிறார். 'பருப்பு இருக்கிறது' என்று அவர் கூறும் விடை, நாம் வாய்விட்டுக் கேட்ட கேள்விக்குக் குறிப்பாக விடை தருவதோடு, வாய்விட்டுக் கேளாத அடுத்த கேள்விக்கும் விடை ஆகி விடுகிறது! வார்த்தைகளை அவசியமின்றிச் செலவு செய்யாமல், சொற் செட்டை உடையவராகி விளங்கும் செட்டியாரின் இயல்பு அவர் கூறும் விடையில் தெரிகிறது.

உப்பு, செட்டியாரிடம் இருந்ததானால், 'படி ஒன்றரை அணா' என்று விடை சொல்வார். "உப்பு இருக்கிறது" என்று ஒரு தடவை சொல்லி, மறுபடியும், 'என்ன விலை?' என்று நம்மைக் கேட்க வைத்து அதன் விலையைச் சொல்லும் வழக்கம் அவர்பால் இல்லை.

'பச்சைப் பயறு இருக்கிறதா, செட்டியாரே?"

"ரூபாய்க்கு இரண்டு படி; துவரம் பருப்பு இரண்டரைப் படி."

இவ்வாறு கூறும் விடையில் செட்டியார், சொல்லிலே கூட லாபம் அடைபவர் என்பதை நமக்குத் தெரியப்படுத்துகிறார்.

இத்தகைய 'சொற் செட்டு' தொல்காப்பியத்தில் இரண்டு சூத்திரங்களில் வருகிறது. அதைச் சற்று விரித்து நன்னூலார் ஒரு சூத்திரத்தில் சொன்னார்.

*தம்பால் இல்லது*
*இல்எனின், இனனாய்*
*உள்ளது கூறி*
*மாற்றியும், உள்ளது*
*சுட்டியும் உரைப்பர்*
*சொல்சுருங் குதற்கே.*

—நன்னூல்.

[ஒருவன் கேட்கும் பொருள் தம்மிடம் இல்லையானால் அதனை இல்லை யென்று சொல்லாமல் அவன் கேட்டதற்கு இனமாகிய பொருள் இருந்தால் அதனைக் கூறி, இல்லையென்பதைப் புலப்படுத்தியும், அப்பொருள் இருக்குமானால், இவ்வளவு இருக்கிறது என்று வரையறுத்தும் புலவர்கள் சொல்வார்கள்; கேட்போர் விடை கூறுவோர் என்னும் இருவர்பாலும் அவசியம் அல்லாத வார்த்தைகள் பெருகாமல், சுருங்குவதற்காகவே இங்ஙனம் சொல்வர்.]

இலக்கணச் சூத்திரங்களில் இந்தச் சம்பாஷணையைப் பொதுவாக எல்லோருக்கும் உரியதாகச் சொல்லியிருந்தாலும், அவற்றுக்கு உரை வகுத்த ஆசிரியர்கள் அங்காடியில் நடக்கும் சம்பாஷணையையே உதாரணமாகக் காட்டியிருக்கிறார்கள்.

'பயறுளவோ வணிகீர்? - என்றால் - உழுந்து அல்லது இல்லை என்க, தன்னுழை அவை உளவாயின்; (அவன் வினவிய அப்பொருளையே சொல்லலுறுமே யெனின்) இவை அல்லது பயறில்லை, இப்பயறு அல்லது இல்லை என்று சுட்டிக் கூறுக'—என்பன இளம்பூரணர் என்னும் உரையாசிரியர் எழுதும் உதாரணங்கள்.

'நூறு விற்கும் பட்டாடை உளவோ என்று வினவினார்க்கு, ஐம்பது விற்கும் கோசிகம் அல்லது இல்லை - என்றும் கூறுக' என்பார் நச்சினார்க்கினியர்.

இந்த இலக்கணத்தையும் உரைகளையும் பார்த்தார் பரஞ்சோதி முனிவர் என்னும் புலவர். நன்னூற் சூத்திரத்தை அப்படியே மாற்றித் திருவிளையாடற்

புராணத்தில் பாட்டாகப் பாடிவிட்டார். மதுரையில் உள்ள வணிகர், 'சொல்லினும் லாபம் கொள்வார்' என்று சொல்ல வந்தவர், சொல் சுருங்குவதற்காக இலக்கணக்காரர் விதித்த இலக்கணத்தை அப்படியே எடுத்து அமைத்துக்கொண்டார்.

> புல்லிஓர் பண்டம் கொள்வார்
> வினவின், அப் பொருள் தம் பக்கல்
> இல்எனின் இனமாய் உள்ள
> பொருள் உரைத்து எதிர்மறுத்தும்;
> அல்லது அப் பொருள் உண்டு என்னின்,
> விலைசுட்டி அறுத்து நேர்ந்தும்,
> சொல்லினும் லாபம் கொள்வார்
> தொன்மரபு இருக்கை சொல்வாம்.

இலக்கணத்தையே இலக்கியமாக்கிவிட்டார் புலவர். இலக்கணத்தை விதியாகப் பார்க்கும்போது அது இலக்கணமாக நிற்கிறது; அதையே பிரயோக ரூபத்தில் கொண்டுவந்தால் அதுவே இலக்கியமாகிவிடுகிறது. இதுதான் வித்தியாசம்.

6

# பேச்சில் அழகு

"பேசப் போனாயா, சாகப் போனாயா?" என்று ஒரு பழமொழி வழங்குகிறது. பிரசங்கம் செய்வது மிகவும் அரிய காரியம் என்பது அதன் கருத்து. ஆனால், சாதாரணமாகப் பேசுவதில்கூடப் பல சங்கடங்கள் இருக்கின்றன. சில சமயங்களில் சில வார்த்தைகளைப் பேசுவதைவிடப் பேசாமல் இருப்பது நல்லதாக இருக்கும்.

பேச்சு விஷயத்தில் எத்தனையோ மரியாதை உண்டு. மரியாதை தெரியாமல் பேசுவதை நாகரிகமென்று கருத மாட்டார்கள். நெடுங்காலமாக நாகரிக வாழ்க்கை வாழ்ந்தவர்களுடைய பேச்சு மரியாதையுடையதாய், குறிப்பு நிரம்பியதாய் இருக்கும். தமிழர் வாழ்க்கையில் தமிழ் மொழி முக்கியமான கருவியாக இருப்பது. ஆகவே அவர்களுடைய வாழ்க்கையில் கருத்தும் பேச்சும் செயலும் வர வரத் திருத்தமுடையனவாக அமைந்தன.

நாலு பேருக்கு நடுவே பேசும் பேச்சையே நாற்பது பேருக்கு நடுவில் பேசக்கூடாது. தனி மனிதனோடு பேசும்போது சிலவற்றைத் தாராளமாகப் பேசலாம். அதே கருத்தை ஒரு சபையிலே சொல்லும்போது அதற்கென்று ஒரு மரியாதையும் நாகரிகமும் உண்டு. வீட்டிலே நாம் இருக்கும்போது எப்படி எப்படியோ இருக்கிறோம். நம்மோடு நெருங்கிப் பழகுகிறவர் வந்தால் முகத்தைத் துடைக்காமல் மேல்துண்டுகூட இல்லாமல் போய்ப் பார்க்கிறோம். அவ்வளவு அதிகமாகப் பழகாதவராக இருந்தால் முகத்தைக் கழுவிக்கொண்டு அங்க வஸ்திரத்தையும் போட்டுக்கொண்டு போய்ப் பார்க்கிறோம். ஒரு சபைக்குப் போக வேண்டுமானால் கூடியவரைக்கும் நன்றாக ஆடை அணிந்து செல்கிறோம்.

நாம் எதிர்ப்படும் மனிதர்களின் தகுதிக்கு ஏற்றபடி நாம் தோற்றம் அளிக்கிறோம். அதுதான் மரியாதையென்று உலகம் சொல்கிறது. நம்முடைய தோற்றத்தில் இப்படி உடை வகையினால் மரியாதை புலப்படுவது போல, நம் பேச்சிலும் மரியாதை புலப்படும். அத்தகைய பேச்சை, 'தகுதி வழக்கு' என்று இலக்கணக்காரர் சொல்லுவார்.

வார்த்தைக்கு இயல்பான அர்த்தம் ஒன்று இருக்க, அதற்குப் புறம்பே ஒரு கருத்து வைத்துப் பேசுவது இந்தத் தகுதி வழக்கில் முக்கியமானது.

ஒரு பெண்மணியின் கணவர் இறந்து போனார். அவள் விதவையாகிவிட்டாள். இதைப் பச்சையாக, "அவள் விதவையாகி விட்டாள்" என்று நாலு பேருக்கு நடுவில் சொல்வது உசிதம் அன்று. அது தகுதி ஆகமாட்டாது. "பழைய கோலம் மாறினாள்" என்று குறிப்பாகச் சொல்வதே உசிதமாகும்.

ஒரு மனிதர் இறந்து போனார். அதை, "அவர் செத்துப் போனார்" என்று சொல்வதனால் வார்த்தை அளவிலே பிழை ஒன்றும் இல்லை. ஆனால் அப்படிப் பச்சையாகச் சொல்வது, நாலு பேருக்கு நடுவில் மனிதன் தன் சுய ரூபத்தோடு நிற்பதற்கு ஒப்பாகத் தோன்றுகிறது. "அவர் காலமாகி விட்டார்", "அவர் இறைவன் திருவடி நீழலை அடைந்தார்", "புகழுடம்பு பெற்றார்" என்பன போலக் குறிப்பாகச் சொல்வதுதான் நாகரிகத்துக்கு அடையாளம். "செத்துப்போனார்" என்பது அமங்கலமாகத் தொனிக்கிறது. நிகழ்ச்சி அமங்கலமாக இருந்தாலும் கூடிய வரையில் அந்த அமங்கலத்தைக் குறைக்கப் பேச்சிலாவது முயல வேண்டும் என்று தமிழர் கருதினர். அமங்கலம் மக்கள் விரும்பாதது. ஆனாலும் நிகழ்ந்துவிடுகிறது. அதை நடவாமல் தடுக்க நம்மால் ஆகாது. ஆகவே, நம் எல்லைக்குள் அடங்கிய பேச்சில் அந்த அமங்கலத்தின் ஆற்றலை ஓரளவு குறைத்துக்கொள்ளலாம் என்பது அவர்கள் எண்ணம் போலும்!

"தலையைச் சிரைத்துக் கொள்" என்று சொல்வதைக் காட்டிலும், "தலை பண்ணிக் கொள்" என்று சொல்வதை மரியாதையாகக் கருதுகிறோம்.

இவ்வாறு அமங்கலச் செய்தியை அமங்கலச் சொற்களால் சொல்லாமல் மங்கலம் போலத் தோன்றும்படி சொல்வதை மங்கல வழக்கு என்று இலக்கண ஆசிரியர் குறிப்பர். தகுதி என்னும் மரியாதைப் பேச்சில் இது ஒரு வகை.

சபைக்கு முன்னே பேசவே தகாத சில வார்த்தைகள் உண்டு. அசப்யம் என்று வடமொழியிலே சொல்வார்கள்; அவையல் கிளவி என்று தமிழில் கூறுவர். அவற்றை மறைத்தே சொல்ல வேண்டும்.

"அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்" என்று தொல்காப்பியர் சூத்திரம் செய்திருக்கிறார். சபையிலே பேசுவதற்கு உரியன அல்லாதவற்றை மறைத்து உசிதமான வார்த்தைகளால் சொல்ல வேண்டுமென்பது அதன் பொருள். அவையல் கிளவியை இடக்கர்ச் சொல் என்றும் கூறுவது உண்டு. சொல்லத் தகாததை இடக்கர் என்று குறிப்பர். அதை மறைத்துச் சொல்லும் மரியாதை வார்த்தைக்கு இடக்கர் அடக்கல் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இடக்கரை அடக்கிப் பேசும் பேச்சு என்பது அதன் பொருள்.

குழந்தை நடுக்கூடத்தில் வெளிக்குப் போகிறது. அந்தச் சமயத்தில் யாரோ வந்துவிடுகிறார். தாய் உடனே எதையாவது போட்டு அதை மறைத்துவிடுகிறாள். அவர் கண்ணில் படக்கூடாதென்று கருதியே அப்படிச் செய்கிறாள். அதுபோலவே அந்தக் குழந்தை செய்த காரியத்தையும் காதிலே படாதவாறு மறைத்துச் சொல்வது வழக்கம். இல்லாவிட்டால் அந்தப் பேச்சு அருவருப்பை உண்டாக்கும். 'குழந்தைக்குக் கால் கழுவிவிடு' என்று சொல்வது இடக்கரை அடக்கித் தக்கபடி சொல்லும் பேச்சு.

வண்டியில் பிரயாணம் செய்யும் பாட்டி தன் அருகே உள்ள பெண்மணியின் குழந்தை அழுவதைக் காண்கிறாள். 'குழந்தையை எடுத்துவிடு' என்று சொல்கிறாள். அந்தப் பேச்சு எவ்வளவு உசிதமாக இடக்கரை அடக்கிப் பேசும் பேச்சாக இருக்கிறது!

இந்த இரண்டு வகையான பேச்சுக்களையும் சபைக்கு நடுவே பேசும்போது கருத்தை யாவரும் உணர்ந்துகொள்வார்கள். ஆனால், சில அவசியமான காரணங்களை உத்தேசித்துப் பலர் கூடும் ஓர் இடத்தில் ஒரு சிறு கூட்டத்தினர் தங்களுக்குள் குறிப்பாகப் பேசிக்கொள்வது உண்டு. வியாபார ரகசியம், அரசியல் ரகசியம் ஆகியவற்றைப் பாதுகாக்கும் பொருட்டு இத்தகைய குறிப்பை மக்கள் மேற்கொள்வார்கள். அதைப் பேசும்போது அந்த இனத்தைச் சேர்ந்த குழுவினருக்கே அது புலப்படும். ஆகையினால் அதைக் குழூவின் வந்த குறிநிலை வழக்கு என்று கூறுவர். பின்னும் சுருக்கிக் குழூஉக்குறி என்றும் சொல்வதுண்டு.

எனக்குப் பழக்கமான நண்பர் ஒருவர் இருக்கிறார். அவர் தம் நண்பர்களோடும் உறவினரோடும் பேசும்போது அடிக்கடி, 'பஞ்சாட்சரம்' என்று சொல்வது வழக்கம். 'அவர் ஒரு பஞ்சாட்சரம்' என்று சிலரைப்பற்றிக் குறிப்பிடுவார். அதன் பொருள் எனக்கு விளங்கவில்லை. அவரோடு பழகினவர்களுக்கு அந்தச் சொல் நன்றாக விளங்கியது. அதை அவர் சொல்லும்போதே கேட்பவர்கள் நகைத்தார்கள். 'பஞ்சாட்சரம் என்ற சொல் நகைப்புக்கு இடம் தருவதல்லவே! அதில் ஏதோ சூக்ஷமம் இருக்கிறது' என்று கருதி ஒரு நாள் அவரை விசாரித்தேன். அவர் அதன் பொருளைத் தெளிய வைத்தார். பஞ்சாட்சரம் என்பதற்கு ஐந்தெழுத்து என்று அர்த்தம் அல்லவா? 'பைத்தியம்' என்ற வார்த்தையில் ஐந்தெழுத்துக்கள் இருக்கின்றன. அந்தச் சொல்லைத்தான் அவர் 'பஞ்சாட்சரம்' என்று குறிப்பிட்டு வந்தார். இது சிறிய குழூவிலே அடிபடும் ஒரு சொல். இதுபோல ஒரு தொழில் செய்வாரிடையோ ஒரு சாதியினரிடையோ அடிப்பட்ட வழக்காக வந்துவிட்டால் அதுவே குழூஉக்குறியாகிவிடும்.

பொற்கொல்லர் பொன்னைப் பறியென்று சொல்வார்களாம். யானைப் பாகர் ஆடையைக் காரை என்பார்களாம். வேடர் கள்ளைச் சொல்விளம்பி என்று குறிப்பாகச் சொல்வார்களாம். உரையாசிரியர்கள் குழூஉக் குறிக்கு இவற்றை உதாரணமாகக் காட்டியிருக்கிறார்கள்.

சொல்லிலே உள்ள விசித்திரங்கள் அந்தச் சொல்லுக்கு உள்ள பொருளைக்கொண்டு மாத்திரம் ஆராய்ந்தால் புலப்படா. வாழ்க்கையில் அது எவ்வெப்போது, யார் யாரால் வழங்கப்படுகிறது என்று ஆராய்ச்சி செய்து, அதன் பின்பே அந்தச் சொல்லுக்குப் பொருள் கண்டுபிடிக்க வேண்டும். 'கால் கழுவிவந்தார்' என்ற வாக்கியத்தில் உள்ள வார்த்தைக்கு மாத்திரம் பொருள் பார்ப்பதானால் நாம் தமிழுலக வாழ்க்கையை உணர்ந்தவர்களாக மாட்டோம்.

மேலே சொன்ன தகுதி வழக்குகளுக்கு ஏதேனும் ஒரு காரணம் இருக்கும். அப்படியின்றி, இயற்கையாகச் சொல்லவேண்டிய முறையினின்றும் யாதொரு காரணமும் இன்றி வேறுபட்டு வரும் பேச்சு வகை உண்டு. பேச்சு வழக்கிலே அவை அப்படி வந்துவிட்டன. அவற்றை வழக்கு என்று வகுத்திருக்கின்றனர். வெள்ளாடு என்று ஒருவகை ஆட்டைச் சொல்கிறோம். தமிழ் நாட்டில் வாழ்ந்து, வெள்ளாட்டைப் பார்க்காத அயல் நாட்டார் ஒருவர் புதிதாகத் தமிழ் படிக்கிறார். அவர் வெள்ளாடு என்ற சொல்லைக் கண்டவுடன், 'வெள்ளை நிறமுடைய ஆடு' என்றுதான் அர்த்தம் செய்துகொள்வார். இங்கே வாழ்ந்து பேச்சு வழக்கை அறிந்தவருக்குக் கறுப்பு ஆடானாலும் அது வெள்ளாடுதான் என்று தெரியும். அப்படிச் சொல்லக் காரணம் என்ன? தெரியாது. நெடுங்காலமாக அப்படித்தான் வழங்குகிறார்கள் என்பதுவே காரணம். இதனை வழக்கு என்று கூறுவர். பாத்திரத்தில் இருக்கும் சிறிதளவு நீரை, சில நீர் என்று முற்காலத்தில் சொன்னார்களாம். அதனால் உரையாசிரியர்கள் அதனை வழக்குக்கு உதாரணமாகக் காட்டியிருக்கிறார்கள். 'குடத்துள்ளும் பிற கலத்துள்ளும் இருந்த நீரைச் சிறிது என்னாது சில என்றலும், அடுப்பின் கீழ்ப்புடையை மீயடுப்பு என்றலும் போல்வன வழக்காம்' என்று நச்சினார்க்கினியர் எழுதுகிறார்.

காரணம் பற்றிய தகுதியிலும், காரணம் இல்லாமல் வரும் வழக்கிலும் பிற இடங்களில் வரும் சொற்களே வருகின்றன. ஆனாலும் அவற்றின் பொருளைக் கண்டு

பிடிக்க, சபை மரியாதையையும் உலக வழக்கையும் பற்றிய அறிவிருந்தாலன்றி இயலாது. சொல்லுக்குச் சொல் வைத்து இதற்கு இது பொருள் என்று காண வேண்டிய மொழியில் இது ஒரு விந்தை. சொல்லுக்குப் புறம்பே அமைந்து பொருளை உடையனவாகையால் இவை தவறு என்று தள்ளக் கூடாது. தள்ளினால் வாழ்க்கையைப் புறக்கணித்தவர்கள் ஆவோம். 'இவற்றைத் தள்ளாமல் கொள்ள வேண்டும்' என்று தொல்காப்பியர் சொல்கிறார்.

*தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்*
*பகுதிக் கிளவி வரைநிலை இலவே.*

'தகுதியையும் உலக வழக்கையும் தழுவிப் பேசப்படும் பகுதியிலே வரும் சொற்கள் நீக்கப்படுவன அல்ல. அவற்றைக் கொள்ளவேண்டும்' என்பது இதன் பொருள்.

இது வெறும் சொல்லுக்கு இலக்கணமா? அன்று. அதனூடே தோன்றும் தமிழர் வாழ்க்கைக்கும் இலக்கணம். 'அவர்கள் உசிதமாகப் பேசத் தெரிந்தவர்கள், அப்படிப் பேசும் பேச்சில் அவர்கள் கருத்தைப் புலப்படுத்தும் சொல் தனக்குரிய இயல்பான பொருளைப் புலப்படுத்தாமல் இருப்பினும், இலக்கணக்காரரால் போற்றற்குரியது' என்ற செய்திகளை யல்லவா இந்தச் சூத்திரத்தினால் அறிகிறோம்?

# 7

# தெளிவான பேச்சு

உலக வழக்கில் ஒரு மொழியின் தலைமையான நோக்கம் பேசுபவனுடைய கருத்து, கேட்பவனுக்கு விளங்க வேண்டும் என்பதுதான். ஒருவன் தன் மனத்தில் உள்ள கருத்தை வெளிப்படுத்தாமல் மற்றொருவன் அறிந்துகொள்ளும் ஆற்றல் மனித சாதிக்கு இல்லை. அக் கருத்தை ஒருவன் வெளிப்படுத்தினால் அருகில் இருப்பவன் உணர்ந்து கொள்கிறான். கருத்தை முகக்குறிப்பினாலும் உடலில் உள்ள அங்கங்களின் குறிப்பினாலும் உணர்த்தலாம். அப்படி உணர்த்தும்போது நம் கருத்து முழுவதையும் தெளிவாக உணர்த்த முடியாது; மிகவும் உயர்ந்த ஆற்றலைப் பெற்று ஒருவன் உணர்த்தினாலும், அந்தக் குறிப்புக்களைக்கொண்டு, அவன் என்ன கருத்தைக் கொண்டிருக்கிறானோ அதனை அப்படியே மற்றொருவன் உணர்ந்துகொள்வதும் இயலாத காரியம்.

இந்தச் சங்கடத்துக்கு இடம் இல்லாமல் கடவுள் மனிதனுக்குப் பேச்சாகிய பெரு வரத்தைக் கொடுத்தார். மனிதனும் தன்னுடைய முயற்சியினால் அந்தக் கருவியை வரவரச் செவ்வைப் படுத்திக்கொண்டு வந்தான். ஒரு மொழியானது செம்மையான மொழி, சிறந்த மொழி என்று சொல்ல வேண்டுமானால் மனிதன் தன் கருத்தைத் தெளிவாகப் புலப்படுத்துவதற்குரிய வழிகள் அதில் இருக்க வேண்டும். கருத்து முழுவதையும் புலப்படுத்துவது என்பது எந்தக் காலத்திலும் முடியாத செயல். ஆனாலும் கருத்தின் பெரும்பகுதியை வெளிப்படுத்த ஒரு மொழி உதவுமானால் அந்த மொழியை உயர்வானதென்றே சொல்ல வேண்டும்.

கருத்தை வெளிப்படுத்துவதில் ஒரு மொழி சிறந்து நிற்பதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றில் இரண்டை முக்கியமாக எடுத்துச் சொல்லலாம். பல

மக்களால் பேசப்படுவது, பல காலம் வழக்கில் இருப்பது என்பவை அவை. இந்த இரண்டும் ஒரு மொழியின் சொல் வளப்பத்துக்குக் காரணம்.

கருத்தைத் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்ருல், பேசும்போது இதுவோ அதுவோ என்று மயங்கும்படியாகப் பேசலாகாது. ஆகவே, மயக்கம் இல்லாமல் பேச்சு வழக்கு அமைவது மிகவும் முக்கியம். குறிப்பாகப் பேசுவது மயக்கமாகாதோ என்று கேட்கலாம். குறிப்பிலும் தெளிவான குறிப்பு உண்டு. மங்கலமும், இடக்கர் அடக்கலும் குறிப்புப் பேச்சே ஆனாலும் சொல்பவனுடைய கருத்தைக் கேட்பவன் தெளிவாக உணர்ந்துகொள்கிருன்.

தமிழர் தெளிவாகப் பேசத் தெரிந்தவர்கள். அவர்கள் மொழியில் சொல்லுக்குப் பஞ்சம் இல்லை. 'இப்போது எத்தனையோ வார்த்தைகளுக்குத் தமிழ் தெரியாமல் இடர்ப்படுகிருேமே!' என்று சில நண்பர்கள் கேட்கலாம். இந்த நாட்டிலே தோற்றிய பொருள்களுக்கும், இந்த நாட்டிலே எண்ணும் எண்ணத்துக்கும் சொல் இல்லையென்ருல் அதுதான் குறைபாடே ஒழிய, இறக்குமதியான சரக்குக்குப் பேர் இல்லையே யென்ருல் பொருள் இறக்குமதியாகும்போது பெயரும் இறக்குமதியாக வேண்டியதுதான். அந்தப் பெயர் இங்கே வந்து உரு மாறியோ சொல்லே மாறியோ வழங்குவதும் உண்டு. தமிழ் நாட்டு இட்டிலிக்கு இங்கிலீஷில் வார்த்தை இல்லை யென்ருல், அது இங்கிலீஷின் குறை அல்ல. அவர்கள் ஊரில் இட்டிலியாகிய பொருள் இல்லை. அதனுல் அதற்குரிய சொல்லும் இல்லை.

உலக வழக்காகிய பேச்சிலே மயக்கமில்லாமல் இருக்க வேண்டும். ஆனுல் அது இருக்கத்தான் இருக்கிறது. ஏன் அப்படி? அதற்குரிய காரணங்களை இலக்கணக்காரர் ஆராய்ச்சி செய்திருக்கிருர்.

உளுத்தம்பருப்பு வாங்கி வா என்று சொல்லிக் கடைக்குப் பையனை அனுப்புகிருேம். வேறு பருப்புகளும் இருப்பதனுல் உளுத்தம்பருப்பு என்று சொல்லித் தெளிவாக்குகிருேம். 'சம்பா நெல் நாலு கலம் வந்தது' என்னும்போது சம்பா நெல் அல்லாத வேறுவகை இருப்ப

நால், சம்பா என்ற சொல் தெளிவுக்குக் காரணமாகிறது. 'செந்தாமரையில் திருமகள் எழுந்தருளி யிருக்கிருள்' என்பதில் தாமரை என்று சொல்வதைக்காட்டிலும் செந்தாமரை என்று சொல்வது விஷயத்தைத் தெளி வாக்குகிறது. வெண்டாமரை ஒன்று இருப்பதால் அப் படி வேறு பிரித்துச் சொல்லவேண்டி யிருக்கிறது. செம்மை, வெண்மை என்று சேர்த்துச் சொல்லும் சொற் களை அடை என்று சொல்வார்கள். விசேஷணம் என்பது வடமொழி வழக்கு.

'சிவப்புச் சூரியன் உதித்துவிட்டான்' என்று யாரா வது பேசக் கேட்கிருேமா? சிவப்புச் சூரியன் என்று சொன்னாலும் சொல்லாவிட்டாலும் அவன் சிவப்புத் தான். 'சூரியன் உதித்துவிட்டான்' என்று சொன் னாலே போதும். வெள்ளைச் சூரியன் ஒன்று இருந்தால் சிவப்புச் சூரியன் என்று இனம் பிரித்துச் சொல்ல வேண்டும்.

நம் வீட்டு வேலைக்காரர்களில் இரண்டு பேருக்கு ராமன் என்ற பெயர் இருக்கிறது. அந்த இரண்டு பேரை யும் வேறு பிரிக்க, 'நெட்டை ராமன்', 'குட்டை ராமன்' என்று அடைகொடுத்துப் பேசுவதுதான் தெளிவாக இருக்கும். அப்படி இல்லாமல் ஒரே ராமன் இருக்கை யில், 'நெட்டை ராமனைக் கூப்பிடு' என்றால் புதிதாக யாராவது அதைக் கேட்கும்போது அவர் நெஞ்சில் குழப்பம் உண்டாகிவிடும். 'குட்டை ராமன் வேறு இருக்கிறான் போலும்!' என்று அவர் எண்ணுவார். ஆகவே, 'ராமனைக் கூப்பிடு' என்று சொன்னாலே போதும்.

உலக வழக்காகிய பேச்சில் தெளிவுக்காக இந்த வழக்கம் இருக்கிறது. ஆனால் செய்யுளில் அழகுக்காக இதற்கு நேர்மாறாக வரலாம். 'செங்கதிரவன், தண் மதியம், அலை கடல்' என்றெல்லாம் செய்யுளில் வரும் போது உலக வழக்கை நினைந்து வெண்கதிரவன், வெய்ய மதியம், அலையாத கடல் ஆகியவை உண்டு என்று நிச்சயித் துக் கொள்ளக் கூடாது.

அடை, உலக வழக்கில் வரும்போது இனம் பிரித்துக் காட்டும்; செய்யுளில் அப்படி வரவேண்டுமென்கிற அவசியம் இல்லை. அடையாக வரும் பெயர்கள் ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சுட்டித் தெளிவை உண்டாக்க உபயோகப்படுமானால் அதற்கு இனச் சுட்டுள்ள பண்பு என்று பெயர். அதனை உடையது 'இனச் சுட்டுள்ள பண்புகொள் பெயர்.' செந்தாமரை என்பதில் செம்மை இனத்தைச் சுட்டும் பண்பு; செந்தாமரை என்பது அப்பண்போடு கூடிய பெயர்.

செங்கதிரவன் என்பதோ இனச் சுட்டில்லாத அடையை உடையது; வெண்கதிரவன் ஒன்று இல்லை அல்லவா? இது இனச் சுட்டில்லாப் பண்புகொள் பெயர்.

"ஆழிசூழ் உலக மெல்லாம் பரதனே ஆள" என்று கம்பர் பாடுகிறார். பேசும்போது, 'ஆழிசூழ் உலகத்தில் மனிதன் நடமாடுகிறான்' என்பது அநாவசியம். ஆழி சூழாத உலகம் இருந்தாலன்றி அப்படிச் சொல்வது சில சமயங்களில் மயக்கத்தைக்கூட உண்டுபண்ணும். 'கம்பர் பாடலாமா?' என்றால் அது கவிதைக்குரிய உரிமை. அலங்காரம்பற்றி அப்படிச் சொல்லக் கவிஞருக்கு அதிகாரம் உண்டு.

உசிதமான பேச்சைப்பற்றிச் சொன்ன பிறகு தெளிவான பேச்சைப்பற்றிச் சொல்ல ஆரம்பிக்கும் தொல்காப்பியர் இந்தச் செய்தியை ஒரு சூத்திரத்திலே சொல்லியிருக்கிறார்.

> இனச்சுட்டு இல்லாப் பண்புகொள்
> பெயர்க்கொடை
> வழக்காறு அல்ல செய்யுள் ஆறே.

'இனத்தைச் சுட்டுதல் இல்லாத பண்பைக் கொண்ட பெயர்களைத் தருதல் பேச்சு வழக்குக்கு உரிய சம்பிரதாயம் அன்று; கவிதைக்கு உரிய நெறி அது' என்பது இதன் பொருள்.

செய்யுளில் இது வருவது அழகு என்பதைச் சேனாவரையர் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்:

"பல பொருட்குப் பொதுவாகிய சொல்லன்றே ஒரு பொருட்குச் சிறந்த பண்பான் விசேடிக்கப் படுவது? ஞாயிறு, திங்கள் என்பன பொதுச்சொல் அன்மையின் செஞ்ஞாயிறென்றும், வெண்திங்களென்றும் விசேடிக்கப் படா வாயினும், செய்யுட்கண் அணியாய் நிற்றலின் அமைக்க" என்றார்.

"அநாவசியமாக வார்த்தைகளைச் செலவழிக்காதே. பேசுகிற பேச்சிலே தெளிவு வேண்டும். அதற்கு வேண்டு மானால் வார்த்தைகளைச் சேர்த்துச் சொல். இல்லையென் றால் சுருக்கமாகப் பேசு. மற்ற அலங்காரப் பேச்சை எல்லாம் கவிஞர்களிடம் விட்டுவிடு" என்று நம்முடைய சொந்த நடையிலே இந்தச் சூத்திரத்துக்கு உரை சொல்ல லாம் அல்லவா?

இயற்கைப் பொருள், செயற்கைப் பொருள் என்ற இரண்டு பிரிவு நமக்குத் தெரியும். இயற் கையைச் செயற்கையாகவும், செயற்கையை இயற்கை யாகவும் குழப்பம் செய்து பேசவோ, உணரவோ கூடாது. செயற்கைப் பொருளுக்கு ஒரு தன்மை உண்டென்றால் அது ஒரு காரணத்தால் வந்திருக்க வேண்டும். முன்பு இல்லாமல் ஆக்கப்பட்டிருக்க வேண்டும். இயற்கையோ யாராலும் ஆக்கப்படாதது. செயற்கை, மனிதன் முயற்சி யால் ஆக்கப்பட்டது. சற்று மாற்றிச் சொன்னால், ஆக் கப்பட்டது செயற்கை; ஆக்கப்படாதது இயற்கை என்று சொல்லலாம்.

இயற்கைப் பொருளைப்பற்றிய பேச்சு வந்தால், அது இத்தகையது என்று சொல்லவேண்டும். 'இத்தகையது ஆயிற்று' என்று சொன்னால், 'அத்தகையது ஆகாமல் இருந்த காலம் ஒன்று உண்டு' என்ற மயக்கத்தை உண்டாக்கும். அன்றியும் எப்போது ஒன்று புதிதாக வேறொன்று ஆயிற்றோ அப்போது அது செயற்கை என்று சிந்திக்கவும் இடம் ஏற்படும். நிலம் கடினமானது, நீர் குளிர்ந்தது என்று சொல்வது இயற்கை. நிலத்துக்குக் கடுமையும், நீருக்குக் குளிர்ச்சியும் இயற்கையிலே அமைந்தவை. ஒருவர் ஆக்கி உண்டானவை அல்ல. நெருப்புச் சிவப்பாயிற்றென்றால் சிவப்பாகாமல் வேறு

விதமாக இருப்பது அதன் இயற்கை என்று நினைக்கும் படி ஆகும்.

இயற்கைப் பொருளின் இயல்பைக் கூறும்போது இப்படி ஆயிற்று என்று சொல்லாமல், இது இத்தன்மை உடையது என்று சொல்ல வேண்டும் என்பது தொல்காப்பியர் கண்டு அமைத்த இலக்கணம்.

"நிலம் வலிதாயிற்று" என்று சொல்லும் சந்தர்ப்பம் உண்டு. அங்கே உண்மையில் செயற்கை புகுந்திருக்கிறது. புழுதியும் பள்ளமும் மேடும் நிரம்பிய ஓர் இடத்தைச் செப்பனிடுகிறான் ஒருவன். கல், செங்கல், சுண்ணம்பு எல்லாம் போட்டுத் திமிசுக் கட்டையால் இடிக்கிறான். "இப்போது நிலம் வலிதாயிற்று" என்று அவன் சொன்னால், அங்கே அது பொருந்தும். அதற்குமுன் அது வலிதாக இல்லாமல், அவன் செய்த காரியங்களால் அது வலிதாயிற்று. ஆகவே, அது செயற்கையைச் சுட்டுவது.

செயற்கைப் பொருளைச் சொல்லும்போது, 'அது இன்ன காரணத்தால் இப்படி ஆயிற்று' என்று சொல்ல வேண்டுமாம். அதனால் தெளிவு ஏற்படும். இயற்கையன்று, செயற்கை என்பதை மட்டும் புலப்படுத்தினால் கேட்பவனுக்கு, 'எப்படி ஆயிற்று? முன்பு எப்படி இருந்தது?' என்ற சந்தேகங்கள் எழும். ஆகவே, 'எப்போது இது இயற்கை அன்று செயற்கை என்று தெரிவிக்கப் புகுகிறாயோ, அப்போது இன்ன காரணத்தால் இப்படி ஆயிற்று என்று தெளிவித்து விடுதல் நல்லது' என்று சொல்கிறார் தொல்காப்பியர்.

"எருப்போட்டு நீர் பாய்ச்சினதால் பயிர் செழிப்பாயிற்று." "சின்ன எழுத்தைப் படித்துப் படித்துக் கண் மங்கலாயிற்று." "ஊறப் போட்டுத் துவைத்ததனால் வேட்டி வெளுப்பாயிற்று" - இப்படிப் பேசினால் தெளிவு ஏற்படுவதற்கு என்ன தடை?

**செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல்**
**ஆக்கந் தானே காரண முதற்றே**

என்று இரண்டு சூத்திரங்கள் செயற்கையைப்பற்றி வருகின்றன. 'காரணத்தால் தன்மை வேறுபட்ட பொருளை அந்த வேறுபாட்டைப்பற்றிச் சொல்லும்போது ஆயிற்று என்ற சொல்லாகிய ஆக்கம் கொடுத்துச் சொல்ல வேண்டும். அப்படி ஆக்கத்தோடு சொல்லும் போது காரணத்தை முதலிற் சொல்லிப் பின் ஆக்கத்தைக் கூறவேண்டும்' என்பது இவற்றின் பொருள்.

இரண்டாவது சூத்திரத்தின் உரையில் உரையாசிரியர்கள் சில உதாரணங்களைக் காட்டுகின்றனர். அந்த உதாரணங்களில் ஒன்று கவனிப்பதற்கு உரியது. அதைக்கொண்டு பழங்காலத்துக் காட்சி ஒன்றைப் பின்வருமாறு கற்பனை செய்துகொள்ளலாம்:

ஒரு பெண் ஏதோ நோய்வாய்ப்பட்டாள். அவள் கூந்தல் உதிர்ந்துவிட்டது. இருக்கிற கூந்தலும் நிறம் இழந்து குறுகி அழகிழந்து நின்றது. மறுபடியும் பழைய அழகும் பொலிவும் வரவேண்டுமே! எந்த வைத்தியரிடத்தில் போய் மருந்து வாங்கலாம் என்ற கவலை அந்தப் பெண்மணியின் கணவனுக்கு உண்டாகவில்லை. பரம்பரையாக வந்த மருந்து அவனுக்குத் தெரியும். கடுக்காயும் எள்ளும் இருந்தால் நாலே மாசத்தில் பழையபடி கருகருவென்று கூந்தல் வளரச் செய்துவிடலாம். சுத்தமான கடுக்காயாகப் பொறுக்கி எடுத்தான். நல்ல எள்ளை எடுத்து உலர்த்திப் பிறகு நீரில் ஊறப்போட்டான். பின் அதை எடுத்துத் தன் கையில் வைத்துப் பிழிந்தான். எள்ளிலிருந்து எண்ணெய் வந்தது. அவனுக்கு அத்தனை பலம் இருந்தது. கையாலே பிழிந்த அந்த எண்ணெயில் கடுக்காயைப் போட்டுக் காய்ச்சித் தன் காதலிக்கு அளித்தான். அவள் அதைத் தேய்த்து நீராடினாள். தன் காதலன் பலமும் அன்பும் கலந்து ஆக்கிய எண்ணெய் அல்லவா? அதைத் தேய்த்துக்கொண்டதால் அவள் உள்ளமும் உடலும் தலையும் குளிர்ந்தன. இப்போது மீண்டும் அவள் கூந்தல் அழகியாளுள்.

அந்தப் பெண் கூந்தலழகை இழந்தபோது பார்த்த ஒருவர், மறுபடியும் கூந்தல்வளம் பெற்றபோது பார்த்தார். "எப்படி இந்தக் கூந்தல் நல்லதாயிற்று?" என்று

கேட்டார். "கையாலே பிழிந்த எண்ணெயும் கடுக்கா யும் சேர்த்துத் தேய்த்துக்கொண்டதால் இப்படி ஆயிற்று" என்று பெண்மணி சொல்கிருள். அவள் சொன்னதைத் தான் சேனுவரையர் உதாரணமாக எடுத்துக் காட்டுகிருர்.

"கடுக்கலந்த கைபிழி யெண்ணெய் பெற்றமையான் மயிர் நல்ல ஆயின" என்பது அவர் காட்டும் வாக்கியம்.

"இதென்ன கையாலேயாவது எண்ணெய் பிழிவ தாவது!" என்று நாம் ஆச்சரியப்படுகிருேம்.

விஷயம் தெளிவாகத் தெரிவதற்கு யாவருக்கும் தெரிந்த உதாரணங்களைச் சொல்லவேண்டும். உரை யாசிரியர் இந்த உதாரணத்தைக் காட்டுவதைக்கொண்டு அந்தக் காலத்துத் தமிழ்நாட்டில் எள்ளைப் பிழிந்து எண் ணெய் எடுக்கும் பலமுள்ள ஆடவர்கள் இருந்தார்கள் என்று சொல்வது பிழையாகாது. அதோடு அப்படிப் பிழிவது பெரிய ஆச்சரியத்துக்கு உரியதன்று என்பது கூட உண்மை.

# 8

# சந்தேகமும் தெளிவும்

மனிதன் பல சமயங்களில் சந்தேகப்படுகிற பிராணியாக இருக்கிருன். அவனுடைய கண்ணுலும் அறிவாலும் எடுத்தவுடனே உண்மையை அறிந்துகொள்ள முடிவதில்லை. சந்தேகம் உண்டாகிறது. அந்தச் சந்தேகத்தை அவன் வெளிப்படுத்தும்போது தனக்கு இன்ன விஷயத்தில் சந்தேகம் உண்டென்பதைத் தெளிவாகச் சொல்ல வேண்டும்.

சிலர் சந்தேகத்தைப் புலப்படுத்துகையில் தம்முடைய பைத்தியக்காரத்தனத்தையும் வெளிப்படுத்தி விடுவார்கள்.

மலையாளத்து நம்பூதிரிகளைப்பற்றி வழங்கும் கதைகளில் ஒன்று இங்கே நினைவுக்கு வருகிறது. ஒருவன் எதிரே வந்த வேருெருவனைக் கேட்கிருன்: "யாரோ உங்கள் வீட்டில் செத்துப்போனதாகக் கேள்விப்பட்டேன்; நீயா, உன் தமையனு?" என்று அந்தப் புத்திசாலி கேட்டானும்! கேள்வி என்னவோ சந்தேகமாகத்தான் தோன்றுகிறது. ஆனுல் அந்தக் கேள்விக்கு அவசியமே இல்லையே! எதிரிலே சாவாத ஒருவன் போகும்போது, செத்தவன் மற்ருெருவன் என்று தெரிந்துகொள்ள முடியாத முட்டாளின் பேச்சுக்கு விடை ஏது?

"ராமனுடைய தாயை மலடியென்று சொன்ஞர்கள்; அது உண்மையா?" என்று ஒருவர் கேட்கிருர். கேள்வியிலே சந்தேகம் தொனிக்கவில்லை; பைத்தியக்காரத்தனந்தான் தொனிக்கிறது.

குழந்தை தாயைப் பார்த்து, "அம்மா உன்னை என் கல்யாணத்துக்குக் கூப்பிடமாட்டேன்" என்றதாம்.

தாய், "ஏன் அப்பா?" என்று கேட்டாள்.

"நீ உன் கல்யாணத்துக்கு என்னைக் கூப்பிட்டாயோ?" என்று கேட்டது குழந்தை.

கேள்வியைக் கேட்ட தாய் சிரித்து மகிழ்கிறாள். குழந்தைத் தன்மையாகையால் அந்த மகிழ்ச்சி உண்டாகிறது. பெரியவனாகி அதே கேள்வியைக் கேட்டால் சந்தோஷிக்கத் தோன்றுமா?

சந்தேகத்தை வெளிப்படுத்தும் விஷயத்தில் பைத்தியக்காரத்தனத்தை வெளிப்படுத்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்ற கவலை இலக்கணக்காரருக்கு உண்டாகி இருக்கிறது.

ஒருவருக்குக் கண் கொஞ்சம் மங்கல். நெடுந்தூரத்தில் யாரோ வருகிறார். அவர் நடந்து வருகிறது தெரிகிறதே ஒழிய ஆணா பெண்ணா என்று தெரியவில்லை. அருகிலுள்ள பையனைக் கேட்கிறார். எப்படிக் கேட்பார்? எப்படிக் கேட்பது சரி?

"அதோ வருகிறாளே, அவள் ஆணா பெண்ணா?" என்று கேட்டால் பையன் கைகொட்டிச் சிரிப்பான். ஆணென்றும் பெண்ணென்றும் தெரியாதபோது, அவள் என்று எப்படிச் சொல்வது? "அதோ வருகிறவன் ஆணா பெண்ணா?" என்று கேட்டாலும் பைத்தியக்காரக் கேள்வியாகத்தான் முடியும். ஆணென்று முடிவு கட்டின பிறகு கேட்பதுபோல இருக்கிறது கேள்வி.

ஆகவே, ஆணென்றும் பெண்ணென்றும் தெரியாத சந்தேகத்தைச் சந்தேக பாஷையிலே பொதுவாகச் சொல்லவேண்டும். ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாக ஒரு வார்த்தை இருந்தால் சொல்லலாம். அந்த வார்த்தை இன்னதென்று இலக்கணம் சொல்கிறது. வாழ்க்கையிலிருந்து தெரிந்துகொண்டுதான் சொல்கிறது.

"அதோ வருகிறாரே அவர் ஆணா பெண்ணா?" என்று கேட்கவேண்டும். வருகிறார், அவர் என்ற இரண்டும் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாக இருக்கின்றன. "உங்கள் மாமனாருடைய வீட்டிலிருந்து ஒருவர் வந்திருக்

கிருராமே; அவர் மாமியா, மாமனு?'' என்று கேட்பதில் சந்தேகமும் இருக்கிறது; அறிவும் இருக்கிறது.

இங்கே சந்தேகம் ஆணு, பெண்ணு என்பதுதான். ஆண்பாலா, பெண்பாலா என்று பால் சம்பந்தமான ஐயம் இது. ஆகையால் இதற்குப் பால் ஐயம் என்று பெயர் கொடுத்திருக்கிருர்கள்.

சந்தேகம் மனிதனு, மாடா என்று வந்துவிட்டால் உயர்திணை, அஃறிணையென்ற திணைப்பகுதியில் வரும் ஐயம் அது. அதைத் திணை ஐயம் என்பர்.

மாலை வேளையில் உலாவப் போகிருேம். நெடுந் தூரத்தில் சிறிது வெளுப்பாகத் தெரிகிறது. தலையிலே முண்டாசு கட்டி வெள்ளைச் சட்டை போட்டுக்கொண்டு ஒரு மனிதன் நிற்பதுபோலத் தெரிகிறது. ஆனுல் நிச்சய மாகச் சொல்ல முடியவில்லை. வெள்ளை வர்ணம் அடித்த வழிகாட்டிக் கம்பமாகவும் இருக்கலாம். இன்ன தென்று நமக்குத் தெரியாமல் பக்கத்தில் வருபவரைக் கேட்கிருேம். ''அதோ தெரிகிற கம்பம், கம்பமா மனி தனு?'' என்று கேட்கலாமா? ''தெரிகிற கம்பம்'' என்று சொல்வது பிழை. நமக்குத்தான் கம்பமென்றும் மனித னென்றும் நிச்சயமாகத் தெரியாதே! இதே மாதிரி, ''அங்கே நிற்கிறவன் மனிதனு, கம்பமா?'' என்று கேட் பதும் தவருக முடியும்.

இந்த நிலையில் எப்படித்தான் நம் சந்தேகத்தைத் தெரிவிப்பது?

''அதோ தெரிகிறதே, அந்த உருவம் மனிதனு, கம்பமா?'' என்று கேட்கும்படி வழி சொல்லிக்கொடுக் கிருர் இலக்கணக்காரர்.

இவ்வாறு வருகிற சந்தேகப் பேச்சுக்களைப்பற்றி இலக்கணம் ஆராய்கிறது.

'சந்தேகம் தெளிந்த பிறகு எப்படிப் பேசவேண்டும்?' என்பது அடுத்தபடி வருகிறது. சந்தேகத்தோடு ஒருவன் கேள்வி கேட்கிருன். அதற்கு வேருெருவன் விடை சொல் கிருன். அல்லது சந்தேகப்பட்டவனே கொஞ்சம் கூர்ந்து

கவனித்தமையால் தெளிவு பெறுகிறான். சந்தேகத்தினின்று தெளிந்த நிலை வேறு. இயற்கையாகவே தெளிவாக இருக்கும் நிலை வேறு. சந்தேகம் என்பது இதுவோ அதுவோ என்று நிச்சயம் இல்லாமல் இருப்பது. தெளிவு என்பது அந்த இரண்டில் ஒன்று நிச்சயமென்று தெரிந்து கொள்வது.

சந்தேகம் உண்டானபோது நினைத்த இரண்டில் ஒன்றை மறுத்து மற்றொன்றைத் துணிவது தெளிவு. இப்படி மறுப்பதிலும் நிச்சயம் செய்வதிலும் பேச்சளவில் ஒரு சங்கடம் உண்டாகும்.

ஆணோ, பெண்ணோ என்ற சந்தேகம் தீர்ந்துவிட்டது. வருகிற பேர்வழி ஆண் என்று தெரிந்தது. "வருகிறவன் ஆண்" என்று சொல்வதில் சங்கடம் ஒன்றும் இல்லை. ஆனால் பெண்ணாக இருக்கக்கூடும் என்று அதிகமாக நம்பியிருந்தவன், தான் நினைத்த பேர்வழி வரவில்லையென்று மறுத்துச் சொல்வதுதான் இயல்பு. அவன் எப்படிச் சொல்ல வேண்டும்? "பெண் அல்லன், ஆடவன்" என்று சொல்வதுதான் பொருத்தம். இப்படியே தூணோ மனிதனோ என்ற சந்தேகம் தெளிந்து தூண் என்று நிச்சயமாகிவிட்டால், "மனிதன் அன்று, தூண்" என்று சொல்ல வேண்டும். மேற்போக்காகப் பார்த்தால், "மனிதன் அல்லன்" என்று சொல்லத் தோன்றும். இருப்பது தூண் தானே? 'அது மனிதன் அன்று' என்று சொல்வதுதான் வாக்கிய அமைதிக்குச் சரியாக வரும். இப்படியே தூணை மறுத்து மனிதன் இருப்பதைச் சுட்டும்போது, "தூண் அல்லன்" என்ற மாத்திரத்திலே சந்தேகம் தெளிந்த செய்தி தெரிந்துவிடும்.

சந்தேகம் உண்டாகும்படி பேசுவது குழப்பத்தையும் காலக் கழிவையும் உண்டாக்கும். ஒரு சொல் பல பண்டங்களைக் குறிக்க உபயோகப்படுகிறது. ஆனால் ஒருவன் பேசும்போது ஒரு சமயத்தில் ஒரு பண்டத்தைத்தான் குறித்து அந்தச் சொல்லை வழங்குவான். மா என்று ஒரு சொல் இருக்கிறது. மாமரத்துக்கும் மிருகத்துக்கும் தானியத்தைப் பொடி செய்த மாவுக்கும் வேறு சில பண்டங்களுக்கும் இது பெயர். பேச்சில் இது வரும்போது சந்தர்ப்

பத்தை நோக்கி இன்ன பண்டத்தைக் குறிக்கிறது என்று தெரிந்துகொள்கிறோம்.

சொல் ஒன்றாக இருந்தாலும் வேறு வேறு பொருளுக்கு வரும்போது அவற்றின் வேறுபாட்டை மூன்று விதத்தில் உணர்ந்துகொள்ளலாம் என்று தொல்காப்பியர் சொல்கிறார்.

படி என்று ஒரு சொல் இருக்கிறது. அதைச் சொன்னால் பல பண்டங்கள் நினைவுக்கு வருகின்றன. பேசுகிறவன் பேச்சுப் போக்கிலே அதை உபயோகிக்கும்போது அந்த வார்த்தையோடு சேர்த்துப் பேசும் மற்ற வார்த்தைகளைக் கொண்டு அந்தச் சொல்லுக்கு இன்னதுதான் அர்த்தம் என்று தெரிந்துகொள்ளலாம்.

"படி ஏறுவது கஷ்டம்" என்று சொன்னால் அவன் படிக்கட்டைக் குறிக்கிறான் என்று தெளிவாகத் தெரிகிறது. ஏறுவது என்ற காரியத்துக்கு இடமாக இருப்பது அதுதானே? "படியால் அளந்து போடு" என்று சொல்லும்போது அதே மாதிரி, அளப்பது என்னும் தொழிலின் தொடர்பால், படியென்பது அளவு கருவி என்று தெளிகிறோம். இந்தத் தெளிவு, வினையினால் வந்தது. ஒரு சொல்லே ஆனாலும் வெவ்வேறு வினையினால் வெவ்வேறு பண்டங்களைக் குறிக்கின்றது.

"படியும் மரக்காலும் எடுத்து வா", "படிக்கும் கைபிடிச்சுவருக்கும் நூறு ரூபாய் ஆகும்" என்று பேசும்போது மரக்காலோடு சேர்த்துச் சொல்வதை அதைப்போன்ற அளவு கருவியென்றும், கைபிடிச் சுவரோடு சேர்த்துச் சொல்வதைப் படிக்கட்டு என்றும் தெரிந்துகொள்கிறோம். பொருளைச் சேர்த்துச் சொல்வதனால் இந்தத் தெளிவு உண்டாகிறது,

"கொடியும் செடியும் மரமும் வளர்ந்தன", "கொடியும் கம்பமும் அழகாக இருக்கின்றன" என்று சொல்லும் போது முன்னே சொன்னது தாவர வர்க்கத்தைச் சேர்ந்த தென்பதும், பின்னே சொன்னது த்வஜம் என்பதும் அருகிலே இனம் சேர்த்துச் சொல்லும் பொருள்களால் தெளிவாகின்றன. இது இன வேறுபாட்டால் வந்த தெளிவு.

தன்னை அலங்காரம் செய்துகொள்ளும் ஒரு பெண்,

"கொடியைக் கொண்டுவா" என்று சொன்னால் அவன் கையிலே கொண்டுபோய் மூவர்ணக் கொடியைக் கொடுக்க லாமா? அவன் நிற்கிற நிலையும் கோலமும் தங்கக் கொடி யாகிய நகையைத்தான் நினைக்கச் சொல்லும்.

கொடியேற்று விழாவுக்கு ஒரே கூட்டம். ஏற்றுகிறவர் வந்துவிட்டார். சபைத் தலைவர், "கொண்டு வா கொடியை!" என்றால் முற்றத்தில் இருக்கிற மல்லிகைக் கொடியை நறுக்கிக் கொண்டுவந்தா கொடுப்பது? அங்கே சுற்றிலும் சார்ந்துள்ள நிலையைக் கொண்டு மூவர்ணக் கொடியைக் கேட்கிறார் என்று தெரியும். இது சார்பினால் வந்த தெளிவு.

> வினைவேறு படூஉம்
> பலபொருள் ஒருசொல்,
> வேறுபடு வினையினும்
> இனத்தினும் சார்பினும்
> தேறத் தோன்றும்
> பொருள்தெரி நிலையே

என்று தொல்காப்பியர் இந்தத் தெளிவைப்பற்றிச் சூத்திரம் செய்திருக்கிறார். 'வெவ்வேறு தொழிலையுடைய பல பொருள்களைக் குறிக்கும் ஒரு சொல் வேறு வேறாக உள்ள வினையினாலும் இனத்தினாலும் சார்பினாலும் இன்ன பண்டமென்று தெளிந்துகொள்ளும்படியாக நிற்கும் நிலையை உடையது' என்பது இதன் பொருள்.

வித்தியாசம் தெரிந்துகொள்ள முடியாதபடி சொன்னால் மயக்கம் உண்டாகும். "படி உடைந்தது" என்றால், 'படிக்கட்டா? அளக்கும் படியா?' என்ற சந்தேகம் உண்டாகும். கொடி தொங்குகிறது என்று சும்மா சொன்னால் படரும் கொடியா, துவஜமா என்று ஐயம் உண்டாகும். அத்தகைய சந்தர்ப்பங்களில் வெளிப் படையாகத் தெரியும்படி பேசவேண்டும். "படிக்கட்டு உடைந்தது" என்று சொல்ல வேண்டும். "மூவர்ணக் கொடி அசைகிறது" என்று விளக்கமாகப் பேசவேண்டும்.

"பேச்சிலே தெளிவு வேண்டும்; சந்தேகங்களை எழுப் பக்கூடாது" என்றுதான் சொல்லதிகாரத்தில் தெளிவான பேச்சுக்கு இப்படியெல்லாம் இலக்கணம் கூறியிருக்கிறார்.

௭

# மரியாதைப் பேச்சு

இப்போதெல்லாம் அரசியலைப்பற்றிய பேச்சே எங்கும் நிறைந்திருக்கிறது. ஜனநாயக தத்துவத்தை அலசி அலசி ஆராய்கிறோம். குடிமக்களுடைய கருத்தின் படியே ஆட்சி நடைபெற வேண்டும் என்ற கொள்கை உலகம் முழுவதும் வேர் ஊன்றி நிற்கிறது.

குடியரசு எப்படி நிகழ்கிறது? குடி மக்கள் அத்தனை பேரும் நேர்முகமாக அரசாங்க நிர்வாகத்தில் பங்கெடுத்துக்கொள்வதில்லை. அவர்களுடைய கருத்துக்கு இசைந்த பிரதிநிதிகள் நிர்வாகத்தை நடத்துகிறார்கள். சட்டசபையில் அங்கம் வகிக்கும் ஒவ்வொருவரும் பல மக்களுக்குப் பிரதிநிதிகளாக வந்து பேசுகிறார். அவர் பேசினால் அவருடைய பகுதியைச் சேர்ந்தவர் யாவரும் பேசுவதாகவே கருதவேண்டும். அவர் ஒருவரே பலருக்குச் சமானமான மதிப்பை அடைகிறார்.

பல பேருடைய வேலையைக் கவனிக்கும் ஒருவனுக்கு எப்போதும் பெருமை அதிகந்தான். வட்டமேஜை மகாநாடு லண்டனில் நடந்தபோது, காங்கிரஸ் மகாசபை தன் பிரதிநிதிகளை அனுப்பவேண்டுமென்று பிரிட்டிஷார் அழைத்தனர். பெரிய சபையாகிய அது பத்துப் பதினைந்து பிரதிநிதிகளையாவது அனுப்பும் என்று ஆங்கில அரசாங்கம் நினைத்திருக்கும். ஆனால் காங்கிரஸ் மகா சபையோ காந்தியடிகளாகிய ஒரே ஒரு பிரதிநிதியை அனுப்பியது. சோமசுந்தரக் கடவுள் தம்முடைய கல்யாணத்துக்குக் குண்டோதரன் என்ற ஒரே ஒரு விருந்தாளியை அழைத்துக்கொண்டு வந்தாராம்!

இவர்கள் ஒருவரே யானாலும் பலருக்குச் சமானமானவர்கள். மற்ற மனிதர்களைத் தனித்தனியே கவனிக்கும்போது அவர்களுடைய சிறிய ஆற்றலைக் கொண்டு

அளவிடுகிறோம். இனம் சேர்த்துக் கணக்கெண்ணுகிறோம். ஆனால் ஆற்றலால் மிக்கவர்களை அப்படிச் சாமான்யமாக நினைப்பதோ அவர்களோடு வைத்து எண்ணுவதோ சிறப்பன்று.

மனிதர் ஒருவரே ஆனாலும் அவருக்குள்ள மதிப்பு நம்முடைய கருத்தில் பலருக்குச் சமானமான எண்ணத்தை உண்டாக்குகிறது. ஆகவே ஒருமைப் பொருள் மதிப்பு வாய்ந்தமையால் பன்மைப் பொருளாக நினைக்கப் பெறுகிறது. ஒரு மனிதர் பலருடைய இடத்தை நம் நினைப்பிலே பெற்றுவிடுகிறார்.

எது நினைப்போ அதற்குத் தக்கபடி வார்த்தை வரும். 'வணிகன் வந்தான்' என்று சொல்லும்போது நமக்கு ஒரு வணிகனுடைய ஞாபகந்தான் வருகிறது. 'வணிகர் வந்தார்' என்று எழுதியிருக்கிறது. அதை இலக்கணப்படி கவனித்தால் பலபேர் வந்ததாகவே கொள்ள வேண்டும். வாழ்க்கையில் அதே வாக்கியம் ஒருவரைக் குறிக்கவும் உபயோகப்படுவதுண்டு. அப்போது வெறும் வார்த்தையை மட்டும் கொண்டு அர்த்தத்தை நிச்சயம் செய்துவிட முடியாது. சொல்பவனுடைய உள்ளக் குறிப்பை அறிந்து அர்த்தத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். மரியாதைக்கு உரியவரை அப்படிச் சொல்வது தமிழர் வழக்கு.

ஒருவரைப் புலரைப்போல் மதிக்கும்படி அவருடைய ஆற்றல் செய்வதுபோல், பலரைப்போல வைத்துப் பேசும்படியும் அதே ஆற்றல் செய்துவிடுகிறது. 'வந்தார்' என்ற சொல் இலக்கணப்படி பலர்பால். பல மனிதர் செய்த காரியத்தைக் குறிப்பது. ஆனால், "தகப்பனார் வந்தார்" என்றால் அது பலரைக் குறிக்க வரவில்லை. தகப்பனாரிடத்தில் நாம் வைக்கும் மரியாதையை அச் சொல் குறிக்கிறது. அவருடைய உயர்வைக் காட்டுகிறது. இது வழக்கமாகப் பேச்சில் வந்த ஒரு சம்பிரதாயம். இப்போது இதை மரியாதைப் பன்மையென்று சொல்லுவார்கள். 'வழக்கினாகிய உயர்சொற் கிளவி' என்று தொல்காப்பியர் சொல்லுகிறார்.

ஆசிரியர் 'நாம்' என்று எழுதுகிறார். "நாம் அழுத்தமாக இதைக் கண்டிக்கிறோம்", "நேற்று நமக்கு வர வேண்டிய கடிதம் வாராததனால் செய்தி வெளியிட முடியவில்லை" என்று பத்திரிகை ஆசிரியர் எழுதுகிறார். அவர் எழுதியதில் உள்ள "நாம்" என்பதை இலக்கணப் படி பார்த்தால் யாரோ நாலைந்துபேர் சேர்ந்த கூட்டத்தினர் சொல்வதாகவே கொள்ளவேண்டும். உண்மையில் அப்படி இல்லை. அறிவினாலே அவர்கள் தம்மை உயர்த்திக்கொள்கிறார்கள். உலகமும் அதை அநுமதிக்கிறது. இந்தப் பன்மையை, "ஆசிரியத் தன்மைப் பன்மை" (Editorial We) என்று ஆங்கிலத்தில் சொல்லுகிறார்கள்.

இப்படியே அதிகாரம் வகிப்பவர்கள் தம்மைப் பன்மையினால் சுட்டிக்கொள்கிறார்கள். அதனை 'ராஜாங்கத் தன்மைப் பன்மை' (Royal We) என்று கூறுவர். "மந்திரி, நம்முடைய குடிகள் சுபிட்சமாக இருக்கிறார்களா?" என்று நாடகத்திலே கேட்கும் அரசன், மந்திரியையும் சேர்த்துக்கொண்டு 'நாம்' என்று பேசவில்லை. நாடும் குடிமக்களும், அதிகாரமும் வேறு யாருக்கும் இல்லாமல் தனக்கே உரியவை என்ற அகங்காரத்திலேதான் அவன் பேசுகிறான்.

ராஜா முதல் கிராம முன்சீப் வரையில் அதிகாரத்தால் பன்மையை உபயோகிக்கிறார்கள். இப்படியே அருளாட்சி நடத்தும் ஆசிரியர்கள், "நாம் உள்ளம் உவக்கிறோம்" என்பதுபோலப் பன்மையிலே விவகாரம் நடத்துகிறார்கள்.

பன்மையினால் மதிப்பு ஏறுகிறது. ஒரு பொருளைக் குறிக்கும்போது சொல்லில் பன்மை ஏற ஏற அப்பொருளின் மதிப்பும் அதிகமாகிறது. கறுப்பண்ண நாயக்கன் சாமானிய மனிதன். அவன், இவன் என்று ஊரார் அவனைப் பேசுகிறார்கள். அவனுக்குப் பணம் வருகிறது. "கறுப்பண்ண நாயக்கன் ஒரு ரூபா கூலி கேட்கிறான்" என்று சொன்ன ஆசாமியே இப்போது, "கறுப்பண்ண நாயக்கர் கடையில் வெல்லம் வாங்கிவா" என்று சொல்லுகிறான். "கறுப்பண்ண நாயக்கர் வருகிறார், போகிறார்" என்று பேச்சிலே 'ன்' போய் 'ர்' வருகிறது. நாயக்கர்

இப்போது சில்லறைக் கடை வியாபாரத்தை விட்டு விட்டுப் பெரிய கிடங்குகள் வைத்துக்கொண்டு வியாபாரம் செய்கிறார். அவரது மதிப்பு ஏறிவிட்டது. பொருளுக்கு மதிப்பு ஏறினால் சொல்லுக்கும் ஏறவேண்டாமா? இப்போது,"கறுப்பண்ண நாயக்கர்" என்ற பன்மை போதாது. "கறுப்பண்ண நாயக்கர் அவர்கள் வருகிறார்கள்" என்று புதிய பன்மைச் சொற்கள் அவர் மதிப்பைக் கூட்டித் தெரிவிக்க வருகின்றன. ஒரு ர் போதாதென்று, 'அவர்' வேறு, 'கள்' வேறு, இத்தனையும் சேர்ந்து அவருடைய மதிப்பைச் சொல்லுகின்றன. இத்தனை பன்மையும் வந்தாலும் கறுப்பண்ண நாயக்கர் என்னவோ ஒரு மனிதராகவே இருக்கிறார். நாலைந்து பேராக ஆகிவிடவில்லை.

இலக்கணப்படி இது தப்பல்லவா? ஒன்றைப் பல வாகச் சொல்வது பொய் அல்லவா? ஒரு விதத்தில் பார்த்தால் தப்புப்போலத்தான் தோன்றுகிறது. ஆனால் இப்படி வழங்குவதற்குத் தக்க காரணம் இல்லாமல் போகவில்லை. வாழ்க்கையில் மனிதர் மதிப்பில் உயர உயர அதனைக் குறிக்க இத்தகைய அடையாளங்கள் இருப்பது நாகரிகத்தின் சிறப்பைக் காட்டுகிறது. தமிழர் மரியாதை கொடுத்து வாங்குவதில் சிறந்தவர்கள். ஆகவே, வாழ்க்கையில் அவசியமாகிவிட்ட இந்த மரியாதை, பேச்சிலே வருவதும் இன்றியமையாத தாகிவிட்டது. ஒரு சமுதாயம் முழுவதுமே சிறந்ததாகக் கருதும் வழக்கத்தை இலக்கணம் தவறென்று சொல்லலாமா? இலக்கணம் என்பது வாழ்க்கையோடு ஒட்டி வருவது என்பதைப் பல தடவைகளில் பார்த்து வருகிறோமே! ஆகையால் இத்தகைய பன்மைகளை இலக்கணத்திலும் பாட்டிலும் காணவில்லையே என்று நினைக்க வேண்டாம். "வழக்கிலே உயர்வைப் புலப்படுத்த வருவன அவை. தவறு போலத் தோன்றினாலும் தவறு அல்ல, கொள்ளுதற்கு உரியனவே" என்று தொல்காப்பியர் சொல்லுகிறார்.

இப்படியே நமக்குப் பிரியமான அஃறிணைப் பொருளையும் அன்பினால் உயர்த்திக் கூறுவதுண்டு. பசுமாடு மேய்ந்துவிட்டு வருகிறது. அதை ஆவலோடு கட்டிக்கொண்டு, "எங்கள் அம்மா வந்துவிட்டாள்" என்று

கொஞ்சுகிறோம். வார்த்தைகளை மாத்திரம் வைத்துக் கொண்டு பார்த்தால், புடைவை கட்டிக்கொண்ட பெண்பால் ஒருத்தியைத்தான் அங்கே நாம் எதிர் பார்ப்போம். ஆனால் வார்த்தைக்குப் பின்னே உள்ள வாழ்க்கையையும் நினைத்துப் பார்க்கவேண்டும். அப் போது அந்தப் பசுவை நாம் எதிர்பார்க்கிறோம் என்ற உண்மை வெளியாகும்.

பிரியமாக வளர்த்து வரும் நாயை, "பெரியவரே, எங்கே போயிருந்தீர்!" என்று ஒருவர் கேட்கிறார். அவருடைய அன்பும் சுவை உணர்ச்சியும் அந்தப் பேச்சிலே தொனிக்கின்றன. "அஃறிணையை உயர்திணையாகச் சொல்வது முதல் குற்றம். ஒரு பொருளைப் பன்மையிலே சொல்வது இரண்டாவது குற்றம்" என்று ஒன்று இரண்டு மூன்று வாய்பாட்டைக் கொண்டு அந்தப் பேச்சை அளக்கலாமா? பாஷையின் விசித்திரம் கட்டுப்பாட்டிலே அடங்காது. வாழ்க்கை விரிய விரியப் பேச்சு விரிகிறது; விசித்திரங்களும் விரிகின்றன. இலக்கணம் அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏற்றுக்கொள்ள இடம் வைத்திருக்கிறார்கள்.

> ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
> ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
> வழக்கின் ஆகிய உயர்சொற் கிளவி
> இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல

என்று சூத்திரம் செய்திருக்கிறார் தொல்காப்பியர்.

"ஒரு மனிதனையும் ஒரு பெண்மணியையும் பன்மை வாய்பாட்டால் சொல்லும் வார்த்தைகளும், ஒரு பொருளை அப்படிச் சொல்லும் வார்த்தைகளும் உலக வழக்கிலே உயர்வாக மதித்துச் சொல்லும் வார்த்தை கள். இலக்கண முறைப்படி வரும் சொற்பிரயோகம் அல்ல" என்பது இதன் பொருள்.

"இப்படி வருகிறதே, இதற்கு இலக்கணம் எங்கே இருக்கிறதென்று இலக்கணச் சூத்திரங்களைத் துருவி ஆராய்ந்துகொண் டிருக்க வேண்டாம். வாழும் மொழி யில் இத்தகைய வழக்குகள் வாழ்க்கையைக் கொண்டு

தெரிந்துகொள்ள வேண்டியவை'' என்று தொல்காப்பியர் சொல்வதாகவே நாம் கொள்ளவேண்டும்.

இந்தச் சூத்திரத்தின் உரையில் உரையாசிரியர்கள் வழக்கில் வரும் வேறு பலவற்றையும் சொல்லி, 'இந்த இலக்கணத்தைக் கொண்டே இவற்றையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்று சொல்கிறார்கள்.

கன்னி என்ற சொல் பெண்களின் பருவத்தைக் குறிக்கும் வார்த்தை. பயன்படும் பருவம் அடையாத நிலை அது. அந்த வார்த்தையைக் 'கன்னி ஞாழல்' என்று ஒரு மரத்துக்குச் சேர்த்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்வது வழக்கில் இருக்கிறது. இது போன்றவற்றை உயர்த்திக் கூறும் வார்த்தைகள் என்ற வரிசையில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று உரையாசியர்கள் எழுதியிருக்கிறார்கள்.

இலக்கணம் புத்தகத்தில் உள்ள தமிழுக்கு மாத்திரம் அன்று, உயிருள்ள வழக்குத் தமிழுக்கும் உரியது என்பதற்கு இதுவும் ஒரு சாட்சி.

# 10

## சுட்டும் இலக்கியச் சுவையும்

**நாம்** ஒரு நண்பருடன் பேசிக்கொண் டிருக்கிறோம். அப்போது நெடுந்தூரத்திலிருந்து ஒருவன் வருகிறான். நம்முடைய பேச்சு வேறு ஏதோ விஷயமாகப் படர்கிறது. நடுவில் நம் கவனம் அங்கே வருகிற மனிதன்மேல் செல்கிறது. "முருகன் வருகிறான் ; பார்த்தாயா?" என்று பேச்சும் அவனைப்பற்றித் திரும்புகிறது. "முருகன் வருகிறான்" என்று சொன்ன மாத்திரத்தில், நம்மோடு பேசிக்கொண் டிருக்கும் நண்பருக்கு முருகன் என்ற நினைவோடு தொடர்ந்துவரும் உருவம் மனத்தில் பதிந்து விடுகிறது. உடனே நிமிர்ந்து பார்க்கிறார். "அவன் எவ்வளவு உல்லாசமாக வருகிறான் பார்த்தாயா?" என்று சொல்லுகையில் அவன் என்பது குறிப்பிட்ட ஒருவரைக் குறிக்காவிட்டாலும், முன்னாலே சொன்னவனும் அங்கே வருபவனுமாகிய முருகனைத்தான் அப்போது குறிக்கிறது.

முருகன் வந்துகொண்டே இருக்கிறான். நாம் திடீரென்று அவன் பேரைச் சொல்லாமல், "அவன் வருகிற ஒய்யாரத்தைப் பார்" என்று சொல்கிறோம். நண்பர் நிமிர்ந்து பார்த்து, வருகிறவன் முருகன் என்று தெரிந்துகொள்கிறார். அவன் என்பதனால் குறிக்கப்படும் பேர்வழியை நாம் வார்த்தையால் சொல்லாவிட்டாலும், கையினாலே காட்டுகிறோம். அவன் என்பதற்கு அர்த்தம் வார்த்தையாக இல்லை; ஆனால் பொருளாக இருக்கிறது.

ஒருவரும் வரவில்லை. அப்போது, "அவன் வருகிற உல்லாசத்தைப் பார்" என்று சொன்னால், நண்பர் நிமிர்ந்து பார்ப்பார்; சுற்றுமுற்றும் பார்ப்பார்; யாரையும் காணாமல் திகைப்பார். சுட்டப்படுகின்ற பொருள் இல்லாமல் சுட்டி ஏமாற்றிய குற்றத்துக்கு நாம் ஆளாவோம்.

அவன், அவள், அது என்ற வார்த்தைகள் முதல் முதலில் மொழி ஏற்பட்ட காலத்தில், எதிரே கண்ணிலே கண்ட பொருள்களைச் சுட்டும்பொருட்டு உண்டாயின. நாளடைவில் மொழியானது கருத்தினால் சிந்திப்பதையும் குறிக்கும் அளவுக்கு வந்தபோது, அந்தச் சுட்டுப் பெயர்கள் கருத்தினால் உணர்ந்த பொருள்களைச் சுட்ட வந்தன. நேரே பொருள் இல்லாவிட்டாலும் பொருளைப்பற்றிய விவகாரம் வந்தபோதெல்லாம் சுட்டுப் பெயர்கள் உபயோகப்பட்டன.

அந்த நிலையில், இலக்கணக்காரர்கள் வாழ்க்கையிலும் இலக்கியத்திலும் இந்தச் சுட்டும் வார்த்தைகள் எப்படி யெல்லாம் உபயோகப்படுகின்றன என்பதை ஆராய்ந்தார்கள்.

முதலில் ஒருவர் பெயரைச் சொல்லிவிட்டு, அவர் செய்த காரியங்களைச் சொல்லுகிறோம். ஒவ்வொரு தடவையும் அவர் முழுப் பெயரையும் சொல்வது அநாவசியம். "ராமன் தசரதருடைய குமாரன். ராமன் கோசலையினுடைய பிள்ளை. ராமன் விசுவாமித்திரருக்கு உதவி செய்தான். ராமனுக்கு மூன்று பேர் தம்பிமார்" என்று சொல்லி வந்தால் நமக்கு அலுப்புத் தட்டுகிறது. முதலில் மாத்திரம் ராமனை வைத்துக்கொண்டு மற்ற இடங்களிலுள்ள ராமனை 'அவன்' ஆக்கிவிட்டால் அந்த அலுப்புத் தோன்றுவதில்லை. அதோடு வார்த்தையும் சுருங்குகிறது. "ராஜராஜ மகாராஜா தஞ்சையில் இருந்து அரசாண்டார். அவர் ஒரு பெரிய கோயிலைக் கட்டினார்" என்று சொல்லும் போது ராஜராஜ மகாராஜா என்று நீளமாக வரும் பெயரை அவர் என்ற சுட்டுச் சொல் குறித்து நிற்கிறது. முன்னாலே சொன்ன ராஜராஜ மகாராஜா என்பதுதான் அங்கே வரும் அவர் என்ற சுட்டுக்குப் பொருள்.

ஆகவே அவர் என்ற சுட்டானது முன்னாலே சொன்ன ஒருவரைச் சுட்டுகின்றது. மீட்டும் மீட்டும் அவ்வளவு பெரிய பேரைச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லாமல் செய்துவிடுகிறது. அதோடு அந்த ராஜராஜ மகாராஜா வேறு, இவர் வேறு என்ற சந்தேகத்தை

உண்டாக்காமல் இத்தனை காரியங்களையும் செய்தவர் ஒருவரே என்ற உண்மையையும் புலப்படுத்துகிறது.

ராமன் என்ற பெயரோடு நான்கு பேர் இருக்கிறார்கள். நான்கு பேரையும் பற்றிப் பேசுகிறோம். ராமன் என்றாலே மகத்தான காரியங்களைச் சாதித்த வீரம் நினைவுக்கு வருகிறது. "ராமன் ராவண சங்காரம் செய்தான்", "ராமன் இருபத்தொரு க்ஷத்திரிய பரம்பரையைக் கருவறுத்தான்", "ராமன் கிருஷ்ணனுக்குத் தமையனானான்," "இன்று ராமன் ஒளிக்கதிர் ஒன்றைக் கண்டு மக்களுக்கு வழங்கியிருக்கிறான்" என்ற பேச்சிலே வரும் நான்கு ராமர்களும் வெவ்வேறு பேர்வழிகள். அங்கே அவன் என்ற சுட்டுப் பெயர் பயன்படாது.

ஒருவர் செய்த செயல்களையே சொல்லி வரும்போது முதலில் அவர் பெயரைச் சொன்னால் போதும். பிறகு சுட்டுப் பெயரைச் சொல்லலாம். இதுதான் பேச்சு வழக்கு.

திடீரென்று, "அவனுக்கு நாலு பிள்ளைகளாமே!" என்று பேசினால், "எவன்?" என்ற கேள்வியைத்தான் எதிர் நிற்பவர் கேட்பார். இன்னாரென்ற பிரஸ்தாபமே முன்பு செய்யாமல் அவன் முதலிய சுட்டுப் பெயர்களைச் சொல்வது வழக்கம் அல்ல. ஒருவரும் வராதபோது, "அவன் வருகிறதைப் பார்" என்று சொல்லி ஏமாற்றுவதைப் போன்றதுதான் அதுவும். ஆகவே, சுட்டுப்பெயர் வரும் போது அதற்கு முன் இயல்பான பெயர் வந்திருக்க வேண்டும்.

"அவள் ஆற்றங்கரையில் நின்றுகொண்டிருந்தாள். ஆற்றின் சலசலத்த நீரோட்டத்தினிடையே மீன்கள் மிளிர்ந்தன. சிறிய அலைகள் கரையில் வந்து மோதின. அவள் உள்ளத்திலும் சிறிய அலைகள், சிறிய சிறிய எண்ண அலைகள், வந்து மோதின. அவனைப்பற்றிய எண்ண அலைகள் அவை."

இப்படி ஒரு கதை ஆரம்பமாகிறது. இந்த மாதிரி எத்தனையோ சிறு கதைகளும் நாவல்களும் ஆரம்பிப்பதைப் பார்த்திருக்கிறோம். இங்கே அவள், அவன் என்ற சுட்டுப்

பெயர்கள் அந்தரத்தில் நிற்கின்றன. ஆசிரியர் எந்தப் பெண்ணையும் எந்த ஆணையும்பற்றி நமக்குச் சொல்ல வில்லை. ஆனால் முன்பே சொல்லிவிட்டவரைப்போல் திடீரென்று அவள் என்றும் அவன் என்றும் ஆரம்பிக் கிறார்; இது ஏமாற்றம் அல்லவா?

இந்த மாதிரி விஷயங்களைத் தொல்காப்பியம் சிக்கறுத்துச் சொல்கிறது. உலக வழக்கு, செய்யுள் வழக்கு என்ற இரண்டு வகையாலும் தமிழ் மொழி எப்படி நடக்கிறதென்பதைத் தொல்காப்பியர் சொல் கிறார். பெரும்பாலும் இரண்டு வகையும் ஒத்து நடக்கின் றன. சில சில வழிகள் பேச்சு மொழியில் சிறப்பாக அமைந்திருக்கின்றன. சில முறைகளைச் செய்யுளிலேதான் காணலாம். இந்த விசேஷ இலக்கணங்களையும் தொல் காப்பியர் சொல்கிறார்.

செய்யுள் வழக்கு என்று தொல்காப்பியர் சொல்வது கவியுருவத்திலே இருக்கும் நூலுக்கு மாத்திரம் பொருந்து வது என்று கொள்ளக்கூடாது; புலவர்கள் இயற்றும் நூல்கள் யாவுமே செய்யுளும் செய்யுளின் இனமுமே ஆகும். செய்யுளாக அமைந்த காவியமும் வசனமாக அமைந்த நாவலும் பல விஷயங்களில் ஒத்த இலக்கணம் உடையவை. அவ்வாறே செய்யுள் வழக்கு என்று வருவன வற்றைப் பொதுவாக நூல் வழக்கு என்றே கொள்ள வேண்டும்.

சுபாவமான பெயரை முதலிலே சொல்லிய பிறகே சுட்டுப் பெயரைச் சொல்வார்கள் என்ற இலக்கணம் உலக வழக்காகிய பேச்சுக்கு உரிய இலக்கணம். அங்கே பேசுகிறவன் கேட்பவனுக்குத் தெளிவாகப் படும்படி பேச வேண்டுவது முக்கியம். ஆனால் நூல் விஷயத்தில் அந்தத் தெளிவோடு இலக்கியச் சுவையும் அமையவேண்டும். சுருக்கமாகச் சொல்லுகிற ஒன்றை வளர்த்தி வளர்த்தி எழுதுவதற்குக் காரணம் இலக்கியச் சுவை உண்டாக வேண்டும் என்பதுதான். "காசிக்குப் போனான்; காவடி கொண்டு வந்தான்" என்பது பேச்சு வழக்கில் காரிய வாதியின் பேச்சாக இருக்கலாம். ஆனால் நூல் வழக்கில் இலக்கியச் சுவை உண்டாக வேண்டுமானால், அந்த

இரண்டெழுத்துச் சொல்லாக நிற்கும் காசி இரண்டாயிரம் பாடல்களாலே சொல்லப்பட வேண்டும். காசிக்குப் போனவனை, போன முறையை, காவடியை, அதை எடுத்த அழகை, அதைக் கொண்டுவந்த பெருமையை எல்லாம் கதையாக்கி, வருணனையாக்கி, ரசமயமான காவியம் செய்துவிடுவான், இலக்கிய கர்த்தாவாகிய கவிஞன்.

தொல்காப்பியர் உலக வழக்கில் சுட்டுப் பெயர் எப்படி வருமென்பதைச் சொல்லியிருக்கிறார்.

**இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப்பெயர்க் கிளவியும்**
**வினைக்கொருங் கியலும் காலம் தோன்றின்**
**சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்**
**இயற்பெயர் வழிய என்மனார் புலவர்.**

'சுபாவமான பெயரும் சுட்டிச் சொல்லும் பெயரும் காரியங்களைச் செய்ததைக் குறிக்கும் காலத்தில் சுட்டுப் பெயரை முதலில் சொல்லமாட்டார்கள். சுபாவமான பெயரைச் சொல்லிப் பிறகே சொல்லுவார்கள். இப்படிப் புலவர்கள் கூறுவார்கள்.'

இவ்வாறு சொன்ன தொல்காப்பியர் செய்யுள் வழக்கை மறக்கவில்லை.

முற்படக் கிளத்தல் செய்யுளில் உரித்தே

என்று உடனே மற்றொரு சூத்திரத்தைச் சொல்லியிருக்கிறார். 'சுபாவமான பெயரைச் சொல்வதற்கு முன்னே சுட்டுப் பெயரைச் சொல்வது நூல் வழக்கில் உரியது' என்பது இதன் பொருள்.

சிறு கதையும் நாவலும் நூல்கள் அல்லவா? அவனையும் அவளையும் முதலிலே சொல்லுவதற்கு இதுதான் இலக்கணம். அப்படிச் சொல்ல வேண்டிய அவசியம் என்ன? இலக்கியச் சுவைக்காகத்தான். புதிய பொருள் ஒன்றைக் காட்டும்போது ஒரு கணத்தில் முழுமையும் காட்டினால் அவ்வளவு சுவாரசியப்படாது. கொஞ்சம் கொஞ்சமாகக் காட்டினால் அந்தக் காட்சியினால் விளையும் இன்பம் அதிகமாகும். பார்க்கவேண்டும் என்ற ஆவலைத் தூண்டிவிட்டால்தான் காட்சியின்பம் மிகுதியாகும்.

அதிகமாகப் பசித்தவனுக்கு உணவு அதிகமாக ருசிக்கும். அவ்வாறே அதிகமான ஆவலைத் தூண்டிவிடுவதால் மிகுதியான சுவையுணர்ச்சி உண்டாகிறது.

இந்த ஆவலை ஸஸ்பென்ஸ் (Suspense) என்று ஆங்கிலத்தில் கூறுவர். 'ஆவலை' ஆற்றங்கரையில் நிறுத்தி வைத்த ஆசிரியன் வாசகருடைய உள்ளத்தில் அவள் யாரென்று அறிந்துகொள்ளும் ஆவலைத் தூண்டி விடுகிறான். அதனால் மேலே மேலே படிக்க வேண்டு மென்று வேகம் உண்டாகிறது. படித்த பகுதியினால் மேலும் படிக்கும் ஆவலைத் தூண்டுவது ஒரு வகை இலக்கியச் சுவை. இதனைக் கதையாசிரியர்கள் அமைக்கிறார்கள். பழைய செய்யுட்களிலும் இந்த முறை உண்டு.

சுட்டுப் பெயரை முன்னாலே அமைப்பது இந்த உத்தியை உத்தேசித்தே.

"அவன் அணங்கு நோய் செய்தான்" என்று தன் காதலனை எண்ணும் ஒருத்தி பேசுகிறாள். அவளுக்கு ஏதோ தெய்வத்தால் நோய் வந்ததென்று கருதிப் பூசை போடுகிறான் பூசாரி. அதைக் கண்டு, "இந்தத் தெய்வம் என்ன செய்யும்? அவனல்லவா இந்தத் துன்பத்தைத் தரும் காதலாகிய நோயை உண்டாக்கினான்?" என்கிறாள் காதலி. அவன் யார்? பிறகு சொல்கிறாள்; "விறல்மிகு நார்ச் சேந்தன்" என்று தன் காதலன் பெயரைச் சொல்கிறாள்.

அவனணங்கு நோய்செய்தான்
ஆயிழாய் வேலன்
விறல்மிகுநார்ச் சேந்தன்பேர்
வாழ்த்தி

என்று வருகிறது பாட்டு.

# 11

# பட்டப் பெயர்கள்

நம்முடைய சுதந்தர இந்தியாவில் பட்டங்கள் கொடுப்பதில்லை என்று ஒரு தீர்மானம் செய்திருக்கிறார்கள். உண்மை மதிப்புடையவர்களுக்குப் பட்டம் வழங்குவது நியாயம். பிரிட்டிஷ் ஆட்சியில் நியாயமும் சட்டமும் ஒரு வழியிலே இருக்க, நடைமுறை வேறு விதமாக இருந்ததைப் பல துறைகளிலே பார்த்தோம். பட்டங்கூட அப்படித்தான். பணத்தின் பலத்தாலும் செல்வாக்கினாலும் பட்டம் பெற்றவர்களே அதிகமாக இருந்தனர். அதற்காக அவர்கள் செய்த செலவோ மிக அதிகம். இந்த அக்கிரமம் இனி வேண்டாமென்றே சுதந்தர இந்தியா தீர்மானம் செய்துவிட்டது.

பட்டம் வழங்குவது உலகத்தில் பல நாடுகளிலும் பழங்கால முதலே இருந்து வரும் காரியம். மன்னர் வழங்கும் பட்டமும், மக்கள் வழங்கும் பட்டமும் இந்த நாட்டிலும் பழங்கால முதல் இருந்துவருகின்றன. பதவி பெற்றோர் மன்னரால் பட்டம் பெறுவர்; புகழ் பெற்றோர் மக்களாற் பட்டம் பெறுவர்.

தமிழர் சமுதாயம் பண்டைக் காலந் தொடங்கியே நாகரிக மேம்பாட்டை உடையதாக விளங்கியது. மொழிக்கு இலக்கணம் வகுக்கும் தொல்காப்பியம் ஓரளவு தொல்காப்பியர் காலத்துத் தமிழர் வாழ்க்கையை அறியும் கருவியாகவும் உதவியது.

பண்டைத் தமிழகத்தில் மன்னரால் பெறும் வரிசையும் மக்களால் பெறும் வரிசையும் இருந்தன. மன்னரால் வரிசை பெற்றவர்களுக்கு மக்களும் மதிப்பளித்தனர். சிறப்பான பட்டப்பெயரை அரசன் தருவான். அப்படி வழங்கப் பெறும் தமிழ்மகன் உண்மையிலே அந்தப் பட்

டத்துக்கு உரியவனாகவே இருப்பான். மக்கள் இருதய உணர்ச்சியை அறிந்த மன்னவன் அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றும் தனிப்பிரதிநிதியாக இருந்தான்.

இவ்வாறு அரசன் வழங்கிய பட்டங்கள் பல. ஏனாதி, நம்பி, பெருநம்பி, காவிதி, எட்டி என்பன போலப் பல பட்டங்களை அக்காலத்து மன்னர்கள் வழங்கினர். இந்தப் பட்டங்களுக்குரிய அடையாளங்களாகப் பொற்பூ முதலியவற்றையும் அளிப்பது வழக்கமென்று தெரிகின்றது.

ஏனாதி என்ற பட்டம் சேனைபதிகளுக்கு அரசன் வழங்குவது. இந்தப் பட்டம் பெற்ற படைத்தலைவனுக்கு ஒரு மோதிரமும் வழங்கப்பெறும். பழங்காலத்தில் இருந்த நாயன்மார்களில் ஒருவராகிய ஏனாதிநாதர் இந்தப் பட்டம் பெற்றவரே.

காவிதி என்ற பட்டம் பாண்டிய மன்னர்கள் தம்முடைய அமைச்சர்களுக்கும் வேளாளப் பெரியவர்களுக்கும் அளித்து வந்தது. 'மதுரைக் காஞ்சி' என்ற பழைய நூலில் மதுரையில் இருந்த காவிதிப் பட்டம் பெற்ற அமைச்சர்களைப்பற்றிய செய்தி வருகிறது. அவர்கள் தலையிலே தலைப்பாகை கட்டியிருப்பார்கள். அறமும் அன்பும் உடையவர்கள். பழிக்குப் பயப்படுகிறவர்கள். நடுநிலையில் பிறழாதவர்கள். இப்படி அமைச்சர்கள் இருந்தால் நாடு இன்ப வாழ்வு அடைவதற்குத் தடை என்ன? இத்தகைய நேர்மையான நடை உடையவர்களாக இருந்தனர் மதுரைக் காவிதி மாக்கள்.

செம்மை சான்ற காவிதி மாக்களும்

என்று மதுரைக் காஞ்சி கூறுகின்றது. இந்தப் பட்டம் பெற்ற வேளாளர் குடும்பத்தில் முடியுடை வேந்தர்கள் கூடப் பெண் கொள்வார்களாம். இவர்களுக்கு அடையாளமாக ஒரு பூவை அரசன் வழங்குவான். அதற்குக் காவிதிப் பூ என்று பெயர்.

நம்பி என்றும் பெருநம்பி என்றும் இரண்டு பட்டப் பெயர்கள் உண்டு. இவ்விருவர்களுக்கும் அடை

யாளப் பூவும் உண்டு. இவர்களுள் பெருநம்பிப் பட்டம் பெற்றவர் அரசர்களுக்கு அமைச்சராக இருக்கும் தகுதி யுடையவர். அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒரு வராகிய குலச்சிறையார் பெருநம்பி என்ற பட்டம் பெற்றவர். அவர் பாண்டியனுக்கு மந்திரியாக இருந் தார்.

எட்டி என்ற பட்டமும் அரசனால் வழங்கப் பெறுவது; வணிக குலத்தினருக்கு உரியது. இந்தப் பட்டத்துக்கு அடையாளமாக எட்டிப்பூ என்று ஒரு பொற்பூ உண்டு.

மணிமேகலையில் தருமதத்தன் என்ற ஒருவனுடைய கதை வருகிறது. அவன் தான் காதலித்த பெண்ணை மணக்க முடியாமையால் தன் ஊராகிய காவிரிப்பூம் பட்டினத்தை விட்டு மதுரைக்குச் சென்று அங்கே வியாபாரம் செய்து வந்தான். அந்த வியாபாரத்தில் பெரும்பொருள் ஈட்டினான். அதனோடு அரசனுடைய மதிப்பைப் பெற்று எட்டிப் பட்டம் பெற்றான். இதை மணிமேகலை பின்வரும் அடிகளில் வெளியிடுகிறது :

> தருமதத்தனும்
> வாணிக மரபின் வருபொருள் ஈட்டி
> நீள்நிதிச் செல்வனாய் நீணில வேந்தனின்
> எட்டிப்பூப் பெற்று.

இவ்வாறு எட்டி, காவிதி என்ற பட்டம் தாங்கிய மதிப்புடையாளர் மனைவிமாரும் அப்பட்டத்தைத் தாங்கு பவர்களென்று தெரிய வருகிறது. "எட்டி காவிதிப் பட்டந் தாங்கிய, மயிலியல் மகளிர்" என்று உதயணன் கதையில் வரும் பகுதியினால் இப்படி ஊகிக்க இடம் உண்டாகிறது.

மக்கள் அரசரால் பெறும் பட்டங்களைச் சிறப்புப் பெயர் என்பர். அரசராலே பெறும் சிறப்புக்கு மாராயம் என்று பெயர். தொல்காப்பியத்திலிருந்து இது தெரிய வருகிறது. பின்னாலே உள்ள பொருளதிகாரத்தில் நெடு மொழி வஞ்சி என்ற துறை ஒன்று வருகிறது. வேந்த னால் சிறப்பு அடைந்த பெருமையைத் தானாவது பிறரா வது சொன்னால் அப்படிச் சொல்வது இந்தத் துறையைச் சேரும். அவ்விடத்தில் "மாராயம் பெற்ற நெடுமொழி

யாளும்'' என்னும் சூத்திரப் பகுதிக்கு உரைவகுத்த நச்சி ஞர்க்கினியர், ''வேந்தனால் சிறப்பெய்திய அதனால் தானே ஆயினும் பிறரேயாயினும் கூறும் மீக்கூற்றுச் சொல்லும்'' என்று எழுதுகிறார்.

சிறப்பு என்பதைப் பின்னே விளக்கும்போது 'சிறப் பாவன: ஏனாதி காவிதி முதலிய பட்டங்களும் நாடும் ஊரும் முதலியன பெறுதலாம்' என்றார். அங்கே ஓர் உதாரணப் பாட்டுக் காட்டுகிறார்.

படைத்தலைவன் ஒருவனுக்கு, மன்னன் ஏனாதி என்ற பட்டத்தை வழங்க, அதனைப் பெற்றான் அவன். அதற் குரிய மோதிரமும் அணிந்துகொண்டான். அவனுடைய படைவீரர்கள் அவனைப்பற்றிப் பெருமையாகப் பேசிக் கொள்கிறார்கள். ''எங்களுடைய படை என்ன சாமானிய மானதா? யுத்தத்தில் மிக்க அடலோடு வீரத்தை வெளிப் படுத்தும் பல அணிவகுப்புகளை உடையது. புரவித்தேர் பல உள்ள படை. இந்தப் படைப்பரப்பைக் கண்டால் சமுத் திரம் பரந்ததுபோல இருக்கும். இவ்வளவு பெரிய படை யையும் கட்டுக்கு அடங்கும்படி செய்து ஒழுங்குபடுத்தி நடத்தும் கரைபோல இருக்கிறான் எங்கள் தலைவனாகிய இவன். இவனுடைய பெருமையை அரசன் உணர்ந்திருக் கிறான். போர்க்கெல்லாம் முதல்வனாகிய அவ்வரசன் இவனுக்கு ஏனாதி மோதிரம் வழங்கிப் பட்டம் சூட்டி யிருக்கிறான். அத்தகைய பெருமையை யுடையவன் எங் கள் படைத்தலைவன்!'' என்று பேசுகிறார்கள்.

> போர்க்கடல் ஆற்றும் புரவித்தேர்ப் பல்படைக்குச்
> கார்க்கடல் பெற்ற கரையன்றோ—போர்க்கெல்லாம்
> தான்ஆதி யாகிய தார்வேந்தன் மோதிரஞ்சேர்
> ஏனாதிப் பட்டத்து இவன்.

எழுத்ததிகாரத்தில் ஓரிடத்தில் உரையாசிரியர்கள் இந்தப் பட்டப்பெயர்களை நினைவுக்குக் கொண்டுவருகி றார்கள். இகரத்திலே முடியும் உயர்திணைப் பெயர்களைப் பற்றிய இலக்கணம் வரும் இடம் அது. அங்கே உதார ணம் காட்டும்போது, எட்டிப்பூ, எட்டிப்புரவு, காவி திப்பூ, காவிதிப்புரவு, நம்பிப்பூ, நம்பிப்பேறு என்ற தொடர்களை இளம்பூரணர் காட்டுகிறார். புரவு என்

பது அந்தப் பட்டத்தைப் பெற்றவர்களுக்கு வழங்கும் நிலம். எனவே பட்டமும், பூவும், நிலமும் வழங்குவது தமிழ்நாட்டுப் பழைய வழக்கம் என்று தெரியவரு கிறது.

இப்போது நாம் கவனித்து வரும் சொல்லதிகாரத் தில் இந்தச் சிறப்புப்பெயர்களைப்பற்றிய செய்தி வரு கிறது. பெயர்களில் எந்தப் பெயரை முன்பு சொல்ல வேண்டும், எதைப் பின்னாலே சொல்லவேண்டும் என்பது பற்றிய இலக்கணம் வகுக்கும் இடத்தில், சிறப்புப் பெயர், இயற்பெயர் என்ற இரண்டின் இடத்தையும் ஆராய் கிறார் தொல்காப்பியர்.

நல்லுதடன் என்று ஒருவன் இருந்தான். அவன் ஒரு படைக்குத் தலைவனானான். அரசனுடைய நன்மதிப் பைப் பெற்றான். ஏனாதி என்ற பட்டம் அவனுக்குக் கிடைத்தது. அந்தப் பட்டப் பெயரை அவன் சுபாவ மான பெயருக்கு முன்னே சொல்வதா? பின்னே சொல் வதா? "இது என்ன பிரமாதம்? முன்னேதான் சொல்ல வேண்டும். ராவ்சாஹிப், ராவ் பகதூர், ஸர் பட்டமெல் லாம் முன்னாலேதானே வைத்துச் சொல்கிறோம்?" என்று நண்பர்கள் உடனே சொல்லலாம். பழக்கப்பட்டுப் போனதால் நமக்கு இது சுலபமாகத் தோன்றுகிறது.

முதலியார் சபாநாதன், சபாநாத முதலியார்-இந்த இரண்டுக்கும் ஏதாவது வித்தியாசம் உண்டா? முதலி யார் என்பதை முன்னும் பின்னும் சேர்ப்பதில் வித்தியா சம் இருக்கிறது. இலங்கைக்காரர்களுக்கு இதன் வித்தி யாசம் தெரியும். சபாநாத முதலியார் என்பது தமிழ் நாட்டில் இயற்பெயர். முதலியார் என்பது அங்கே ஒரு குடிப்பெயர். அது இயற்பெயரோடு ஒட்டிக்கொண்டு சபாநாத முதலியார் என்று வழங்குகிறது. இலங்கையிலே முதலியார் என்பது அரசாங்கத்தார் வழங்கும் பட்டம். அதை முதலிலே சேர்த்துச் சொல்லவேண்டும். அப்படித் தான் அங்கே சொல்கிறார்கள்.

ஆகவே, சபாநாதமுதலியாரே, முதலியார் சபாநாதன் என்று சொல்ல முடியாது. முதலியார் என்பதை முதலில் வைத்துச் சொல்லும்போது அது பட்டப் பெயர் என்று தெரிந்துகொள்ளவேண்டும்.

பழைய காலத்திலும் பட்டப்பெயர்களை முதலிலே வைத்துச் சொன்னார்கள். அந்த வழக்கே இலக்கணமாகி விட்டது. தொல்காப்பியர் இப்படிச் சொல்ல வேண்டும் என்று கூறாமல், 'இப்படிச் சொல்லமாட்டார்கள்' என்று தவறான முறையை விளக்குகிறார்.

*சிறப்பின் ஆகிய பெயர்நிலைக் கிளவிக்கும்*
*இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்.*

'அரசராற் பெறுஞ் சிறப்பு முதலியவற்றால் வந்த சிறப்புப் பெயர்களுக்கு முன்னால் சுபாவமான பெயர்களைக் குறிக்கும் வார்த்தைகளைத் தமிழர் சொல்லமாட்டார்கள்' என்பது இதன் பொருள்.

இங்கே சிறப்பினால் வந்த வார்த்தைகளுக்கும் என்று உம் சேர்த்தமையால், வேறு வகையான பெயர்களுக்கும் இந்த இலக்கணத்தைப் பொருத்திக்கொள்ள வேண்டும் என்று உரைகாரர்கள் எழுதியிருக்கிறார்கள்.

ஒருவன் பிறந்தபோது தாய் தந்தையர் வைத்து வழங்கும் பெயர் இயற்பெயர். அதன்பின் பலபல காரணங்களால் வெவ்வேறு பெயர்களைச் சேர்த்தோ தனியாகவோ சிலரை அழைப்பது உலகவழக்கமாகிவிட்டது. அந்தக் காரணங்களில் பெரும்பான்மையானவை இன்னவை என்பதை அநுபவத்தால் அறிந்த உரைகாரர்கள் அவற்றை எடுத்துச்சொல்கிறார்கள். "உம்மையால் தவம், கல்வி, குடி, உறுப்பு முதலியனவற்றான் ஆகிய பெயரும் கொள்ளப்படும்" என்று கூறுவர். இவை மக்களால் பெற்ற சிறப்புப் பெயர்கள்.

'முனிவன் அகத்தியன்' என்பதில் முனிவன் என்பது தவத்தினால் வந்த பெயர். 'தெய்வப் புலவன் திருவள்ளுவன்' என்பதில் கல்விச் சிறப்பினால் வந்த பெயரும் சேர்ந்திருக்கிறது. சேரமான் சேரலாதன், சோழன் நெடுங்கிள்ளி, பாண்டியன் நெடுஞ்செழியன் என்பன குடிப் பெயர்களை முன்னே கொண்டவை.

கல்வியையும் தவத்தையும் குடிப்பெருமையையும் பாராட்டும் இயல்பினர் தமிழர் என்பது இதனால் தெரிய வருகிறது.

மற்ருென்று, உறுப்பினுல் பெறும் பெயர். உறுப்புக் குறையினுலோ, வேறுபாட்டாலோ ஒருவனைச் சுட்டுவதை இந்தக் காலத்தில் அநாகரிகமாகக் கருதுவார்கள். ஆனுல் அக்காலத்தில் அப்படிக் கருதவில்லை. ஒருவரைக் குறிக்கும்போது அவருடைய உறுப்பைச் சுட்டிச் சொல்வதனை, எளிதில் அடையாளம் தெரிந்துகொள்ள உபயோகமாகவே கருதினர். உறுப்புக் குறை மனிதனுடைய முயற்சியாலோ குணத்தாலோ வருவதல்ல. அது பற்றி மனிதனுக்குப் பெருமை குறைய நியாயம் இல்லை. உறுப்புக் குறையை ஒரு பெருங் குறையாகக் கருதினுல் தானே அதை வார்த்தைகளால் சுட்டுவதும் அநாகரிகமாகும்? உறுப்புக் குறையினுல் மனிதன் பெருமை குறையாதென்று உணர்ந்த தமிழர்கள், அதனைச் சுட்டுவதைத் தவருகக் கொள்ளவில்லை. சமுதாயத்தில் சிறந்த நிலையில் வாழ்ந்தவர்களைக்கூட உறுப்புப்பற்றிய பெயரால் குறித்தார்கள். வேலைக்காரனையோ ஏழையையோ, மூக்கனென்றும், நொண்டியென்றும் இன்றுகூடச் சொல்லுகிருேம். பாவம்! அவர்கள் அதனை எதிர்க்கும் ஆற்றல் இல்லாதவர்கள். பெரிய மனிதர்களை அப்படி நாம் கூறுவோமா?

பழங்காலத்தில் கூறினுர்கள். காரணம், உறுப்புக் குறை உண்மையான குறைபாடென்ற குறுகிய உணர்ச்சி இல்லாததுதான். முடியுடைவேந்தரில் ஒருவனுகிய கரிகாலனுக்குக் கால் கரிந்ததனுல் அந்தப் பெயர் வந்தது. அந்தப் பெயர் கவிதையில் அமைந்து புகழ்பெறுகிறது. முடத்திருமாறன் என்பவன் ஒரு பெரிய பாண்டிய அரசன். அவன் முடவன் என்பதை அவன் பெயரே காட்டுகிறது.

புலவர்களுள்ளே நெட்டிமையார் என்பவர் நீண்ட இமையை உடையவர். ஏணிச்சேரி முடமோசியார், ஐயூர் முடவனுர் என்னும் இருவரும் முடவர். நெடுங்கழுத்துப் பரணர் ஒட்டகம் போல நீண்ட கழுத்துடையவர். புகழ்பெற்ற புலவர்களை இப்படிக் குறிப்பதில் சிறிதளவாவது இழிவுணர்ச்சி இருக்க முடியுமா?

# 12

# வகை வகையான பொருள்கள்

ஏழைக் குடியானவன், கூலி வேலை செய்து பிழைக்கிறான். நடுப்பகலில் அவனுக்கு உணவாக அவன் மனைவி கூழைக் கலயத்தில் கொணர்ந்து கொடுக்கிறாள். இரண்டு கையாலும் அதை வாங்கி அவன் குடிக்கிறான். அவனுக்கு அந்த வேளை உணவு அதனுடன் முடிந்தது. அவனிடம் போய், "சாப்பிட்டாயிற்றா?" என்று யாரும் கேட்பதில்லை. "சோறு குடித்தாயா?" என்று கேட்கிறார்கள். இன்னும் சிலபேரிடம், "சோறு சாப்பிட்டாயிற்றா?" என்று கேட்கிறார்கள். இரண்டு கேள்வியிலும் நாட்டு நிலை சித்திரமாக நிற்கிறது. ஏழைத் தொழிலாளியின் உணவு, குடிக்கும் அளவில்தான் இருக்கிறது. இலை போட்டுப் பிசைந்து கவளமாகச் சாப்பிடும்படி அவனுடைய நிலை இல்லை. ஆனால் சோறு சாப்பிடுகிறவர்கள், இலை போட்டுக் காயென்றும் கறியென்றும் குழம்பென்றும் ரசமென்றும் வெவ்வேறு வகை உணவுகளை உண்ணுகிறார்கள்.

வளப்பம் மிகுந்த வாழ்வில் உணவு பலவகைப்படும். சோறு, கறி, ரசம், பாயசம், மோர் என்ற பொருள்களைப் போலப் பலவகைச் சுவையும் உருவமும் உடைய பண்டங்கள் உணவாக உதவுகின்றன. ஒவ்வொன்றையும் ஒவ்வொரு மாதிரியாக உண்ணுகிறோம். சோற்றைக் கையால் எடுத்து வாயில் இட்டு விழுங்குகிறோம். கறியைக் கடித்து மென்று தின்கிறோம். பாயசத்தைக் கையால் எடுத்து நக்குகிறோம். சில சமயங்களில் தொன்னையில் விட்டுக் குடிக்கிறோம். ஆகவே சாப்பிடும்போது, உட்கொள்வதில் பல வகையான முறைகள் இருக்கின்றன. ஏழைக்குக் குடிப்பது என்ற ஒரே முறைதான். காரணம், அவனுடைய உணவைக் கடிக்க முடியாது; சோற்றைப்போல விழுங்க முடியாது.

"அவன் சோறு குடித்துவிட்டு வந்திருக்கிறான்" என்று சொன்ன மாத்திரத்தில், அவன் சாப்பிட்ட சோறு எத்தகையது என்று தெரிந்துவிடுகிறது. சோறு என்று சொன்னாலும், அது கஞ்சியோ கூழோ என்று தெரிவிக்க ஒரு வார்த்தை அந்தப் பேச்சில் இருக்கிறது. குடித்து என்ற சொல் அவனுடைய உணவு, குடிக்கும் உருவத்தில் அமைந்ததைப் புலப்படுத்துகிறது. அதன் மூலம் அந்த ஏழையின் வாழ்க்கை நிலையும் தெரியவருகிறது.

இத்தகைய வேறுபாட்டைத் தெரிவிக்கும் சொற்கள் தமிழில் இருக்கின்றன. குடிக்கிற பொருள் வேறு; தின்னுகின்ற பண்டம் வேறு. மோரைக் குடிக்கலாம்; தின்ன முடியாது. இட்டிலியைப் பருகினேன் என்று சொல்லக் கூடாது. உணவிலே உண்பது, தின்பது, பருகுவது, நக்குவது, உறிஞ்சுவது என்று வகைகள் உண்டு. அவற்றுக்கு ஏற்ற வார்த்தைகள் தனித்தனியே இருக்கின்றன; பல காலமாக இருந்துவருகின்றன. காரணம், பல காலமாகப் பலவகையான பண்டங்கள் தமிழர் வாழ்க்கையில் வழங்கி வருவதுதான்.

ஆபரண வகைகளைப் பார்க்கலாம். அவற்றிலும் ஒவ்வொன்றை ஒவ்வொரு விதமாக அணிகிறோம். முடியைக் கவித்துக்கொள்கிறோம். 'முடி கவித்தான்' என்று கூறுவது வழக்கம். இடையிலே மேகலையைக் கட்டிக்கொள்வார்கள். கையிலே வளையைச் செறிப்பார்கள். மார்பிலே பதக்கத்தைப் பூண்பார்கள். கவித்தல், கட்டுதல், செறித்தல், பூணுதல் என்ற சொற்கள் வெவ்வேறு வகையான அணிகளுக்குரியன. ஒவ்வோர் அணியை அணியும் முறைக்கும் பழங்கால முதலே தனித்தனி வார்த்தை உண்டு.

ஒவ்வொரு வகை உணவை உண்ணும் முறைக்கும் வேறு வேறு சொல் இருக்கிறது போன்றதுதான் இதுவும். ஒரு வகையைப்பற்றிச் சொல்லும்போது அதற்குரிய சொல்லாலே சொல்லவேண்டும். தனித் தனிச் சொல்லாலே தமிழர் சொல்லிவந்தார்கள். முடியைச் செறித்தான். தேனைத் தின்றான் என்று சொல்லக் கூடாது. "இட்டிலியைக் குடித்துவிட்டுக் காபியைத்

தின்றுவருகிறேன்'' என்று நாம் பேசினால் பக்கத்தி லுள்ளவர்கள் சிரிப்பார்கள். தமிழர் வாழ்க்கையில் வெவ்வேறு பண்டங்களும், அவற்றுக்குத் தனித்தனியே பெயர்களும், அவை உபயோகப்படும்போது நிகழும் தொழிலுக்குத் தனித்தனிப் பெயர்களும் இருந்தன. அவர்களுடைய பொருள் வளப்பத்தையும், வேறுபாடு களைத் தெளிவாக விளக்கும் சொல் வளப்பத்தையும் இந் தப் பெயர்களும் வினைகளும் தெரிவிக்கின்றன.

உண்ணும் பொருள்களில் ஒன்றற்கே உரிய சொல்லை மற்றொன்றுக்கு உரிய வார்த்தையால் சொல லக்கூடாது. உண்ணும் பொருள்கள் அனைத்துக்கும் பொதுவாகச் சில சொற்கள் உண்டு. உணவு, அடிசில் முதலியன பொதுவாகச் சாப்பாடு என்ற பொருளைத் தருவன. 'உணவு தின்றான்' என்று காய் கறி குழம்பு ரசத்தோடு சாப்பிடுவதைக் குறிக்கலாமா? கூடாது; அந்த உணவில் தின்பதற்குரிய பதார்த்தம் மட்டுமா இருக்கிறது? பருகுவதற்கும், நக்குவதற்குங்கூடப் பல வகை இருக்கின்றன. ஆகவே, உணவு என்று எல்லா வற்றுக்கும் பொதுவான சொல்லைச் சொல்லும்போது அதற்கு ஏற்றபடி உண்டான், அயின்றான் என்று பொதுச்சொல்லால் சொல்லவேண்டும். கறியையும் உணவு என்னலாம்; சோற்றையும் உணவு என்னலாம்; அப்படியே கறியை உண்டான் என்று சொல்லலாம்; சோற்றை உண்டான் என்று சொல்லலாம்.

ஆபரணங்களின் விஷயத்திலும் எல்லா வகை ஆபரணங்களுக்கும் பொதுவான பெயர்கள் இருக்கின்றன. அணி, அணிகலம், நகை முதலிய பெயர்கள் அத்தகையவை. முடி, வளை, பாதசரம், மேகலை, பதக்கம், ஆரம் என்ற பலவகையான பொருள்களையும் இந்தப் பொதுப் பெயர் களால் குறிக்கலாம். அவற்றை உபயோகப்படுத்தும் முறை களைக் குறிக்கும் வினைச்சொற்களிலும் ஒன்றுக்கே உரிய வையும், பலவற்றுக்குப் பொதுவானவையுமாக வார்த்தை கள் இருக்கின்றன. கவித்தல் என்ற தொழில் கிரீடத் துக்கு மாத்திரம் உரியது. கட்டுதல் என்பது சதங்கை முதலியவற்றுக்கு உரியது. இப்படியே செறித்தல்

பூட்டுதல் என்று வேறு வேறு வகைக்கு உரியவை உண்டு. ஓர் ஆபரணத்துக்கு உரியதல்லாத வினைச் சொல்லை அதனோடு சேர்த்துச் சொல்லக்கூடாது. "வளையைக் கவித்தான்" என்றால், "யாரோ பைத்தியம்! கையிலே செறிக்க வேண்டிய வளையைத் தலையிலே வைத்துக்கொண்டது போலும்!" என்றுதான் நினைக்கத் தோன்றும். எல்லா வகை ஆபரணங்களுக்கும் பொது வான பெயரைச் சொல்லும்போது பொதுவான வினைச் சொல்லையே சொல்ல வேண்டும். அணி கவித்தான் என்றால் அது தவறு; அணி அணிந்தான் என்று பொது வகையால் சொல்ல வேண்டும்.

ஆயுத வகைகள் பல. அவற்றின் பிரயோகங்களும் பல. படைக்கலம் என்ற பெயர் எல்லா ஆயுதங்களுக்கும் பொது. அவற்றில் அம்பு எய்வதற்குரியது; வேல் எறிவதற் குரியது. வாள் வெட்டுவதற்குரியது; ஈட்டி குத்துவதற் குரியது; ஈட்டியை எய்தான். வாளால் குத்தினான் என்று சொல்வது பொருத்தமன்று. படைக்கலத்தை எய்தான் என்பதும் தவறு. எய்வது அம்புக்கு மாத்திரம் உரிய தொழில். படைக்கலம் என்று பொதுவான பெயரை உபயோகிக்கும்போது அதற்கு ஏற்ற வினைச் சொல்லை, தொழிலைக் குறிக்கும் சொல்லை, சேர்த்துச் சொல்ல வேண்டும். 'படைக்கலம் வழங்கினான்' என்று சொல்ல வேண்டும்; 'படை தொட்டான்' என்றும் சொல்லலாம்.

இவ்வாறே வாத்திய வகைகள் பல. இசைக் கருவிகள் அனைத்துக்கும் பொதுவாக இயம் என்னும் பெயர் வழங்கும். அவற்றை வாசிக்கும் முறைகளுக்கு வெவ்வேறு பெயர்கள் உண்டு. முரசையும் தண்ணுமையையும் கொட்டுவார்கள்; குழலையும் கொம்பையும் ஊதுவார்கள்; யாழையும் வீணையையும் எழுப்புவார்கள். எல்லாவற்றுக் கும் பொதுவாக, 'இயம் இயம்பினார்; வாசித்தார்' என்று சொல்லலாம்.

தமிழர் வாழ்க்கையில் நுகர் பொருள்களும், கருவி களும் பலவகைப்பட்டன. அவற்றைப் பயன்படுத்தும் தொழில் முறையும் வேறு வேறாக இருந்தன. ஆகவே, பொதுவாகச் சொல்லும்போது பெயரும் தொழிலும்

பொதுவாக இருக்கவேண்டும். தனித் தனியே சொல்லும் போது தனித் தனியே இருக்கவேண்டும். அப்படியே பேசிவந்தார்கள். அது பிறகு இலக்கணமாயிற்று. தொல் காப்பியர் அந்த இலக்கணத்தைச் சொல்கிறார்.

வேறுவினைப் பொதுச்சொல் ஒருவினை கிளவார்.

வெவ்வேறு தொழிலுக்குரிய வினைகளால் குறிக்கப் படும் வெவ்வேறு பொருள்களுக்கும் பொதுவான ஒரு சொல்லோடு, ஒரே வகைப் பொருளுக்குரிய வினைச் சொல்லைச் சேர்த்துப் பேசமாட்டார்கள்.

வெவ்வேறு வகையான உபயோகங்களையுடைய சில பொருள்களைச் சேர்த்துச் சொல்கிறோம். அப்போது எந்தச் சொல்லை உபயோகிப்பது? எல்லாவற்றுக்கும் பொதுவான சொல்லையே சொல்லவேண்டும். கறியும் பாயசமும் தின்றா ரென்று சொல்லக்கூடாது; கறியும் பாயசமும் உண்டார் என்பதுதான் பொருத்தம்.

'யாழும் குழலும் ஊதினார்' என்று சொன்னால் யாழ் கோபித்துக் கொள்ளும். அங்கே யாழும் குழலும் இயம்பி னார் அல்லது வாசித்தார் என்று சொல்லலாம்.

எண்ணுங் காலும் அதுஅதன் மரபே

என்று தொல்காப்பியர் இலக்கணம் வகுக்கிறார். அவ ராக விதிப்பது அன்று; 'அது மரபு, பழைய காலம் முதல் வரும் வழக்கம்' என்று சொல்கிறார். "வேறு வேறு வினைச் சொல்லால் சொல்வதற்குரிய பொருள்களைச் சேர்த்துச் சொல்லும்போதும் அவற்றுள் ஏதாவது ஒன்றுக்கே உரிய வினையைச் சொல்லாமல் முன்னே சொன்னது போலப் பொதுவான வினைச்சொல்லால் சொல்வதுதான் சம்பிரதாயம்'' என்பது சூத்திரப் பொருள்.

''பல்வகைப்படுதல் வாழ்க்கையிற் சுவைதரும்'' என்று ஓர் ஆங்கிலப் பழமொழி உண்டு. தமிழர் தம் வாழ்க்கை யில் பலவகைச் சுவையும் உடையார் என்பதை இந்தப் பொதுவும் வேறுபாடுமாகிய சொற்களின் வரையறையே காட்டும்.

# 13

# பெரும்பான்மையும் சிறுபான்மையும்

ஜனநாயக யுகத்தில் பெரும்பான்மையான வாக்குக்கு மதிப்பு அதிகம். 'மெஜாரிடி, மைனாரிடி' என்ற சொற்கள் இப்போதுதான் அதிகமாக அடிபடுகின்றன. பெரும் பான்மையோர், சிறுபான்மையோர் என்று தமிழிலே சொல்கிறோம். பழைய காலத்தில் இப்படி வகுக்கும் பிரிவு இருந்தது. ஆனால் பெரும்பான்மையோர், சிறுபான்மை யோர் என்று சொல்வதில்லை. 'மெஜாரிடி' என்பதற்குப் பன்மை என்றும், மைனாரிட்டி என்பதற்குச் சின்மை என் றும் பழைய வார்த்தைகள் உண்டு. பலவாக இருக்கும் தன்மை, சிலவாக இருக்கும் தன்மை என்று அந்தச் சொற் களுக்கு அர்த்தம். பெரும்பான்மையோரைப் பல்லோர் என்றும், சிறுபான்மையோரைச் சில்லோர் என்றும் கூற லாம்.

ஒரு பெரிய கூட்டத்தில் பலவகை மக்களும் கூடி யிருக்க அவருள்ளே சிறப்பு அடைபவர்கள் இரண்டு வகைப்படுவார்கள். பல்லோராக இருப்பதனால் சில சமயம் ஒரு சாராருக்கு மதிப்புப் பெருகும். சில்லோராக இருந்தாலும் தகுதிபற்றி மதிப்படைபவரும் இருக்கிறார் கள். பல்லோர் பெறும் சிறப்பு, பன்மையினால் வரும் சிறப்பு. சில்லோர் மதிப்படைதல் தகுதி முதலிய தலைமை யால் வரும் காரியம்.

ஆகவே, சிறப்பைப் பெறுவதற்குப் பன்மை, தலைமை என்னும் இரண்டும் காரணமாக நிற்கும். ஜனநாயகம் என்பது பன்மைக்குப் பெருமை தருவது. தனி நாயகம் என்பது தலைமைக்குப் பெருமை தருவது. சர்வாதிகார ஆட்சி தலைமைக்கு மதிப்புத் தருவது.

ஹைதராபாது சம்ஸ்தானம் இருக்கிறது. அது முஸ்லிம் சம்ஸ்தானம் என்று முன்பு சொல்லிவந்தோம். அங்கே முஸ்லிம் மன்னர் ஆட்சி புரிந்தார். அவரும் அவரைச் சார்ந்தவர்களும் சில்லோர் ஆயினும் அவர்களுக்கே மிக மதிப்பு ஏற்பட்டிருந்தது. இது தலைமையால் வந்த மதிப்பு.

திருவாங்கூர் சம்ஸ்தானம் இருக்கிறது; அது மலையாள ராஜ்யம். ஆனாலும் தமிழர்களும் அங்கே வாழ்கிறார்கள். சிறப்பாக அதை மலையாள ராஜ்யம் என்று சொல்வதற்குக் காரணம் அங்குள்ள பல்லோர் மலையாளிகள். ஆகவே, மதிப்பானது பன்மையினால் வந்தது.

1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ஆம் தேதி வரையில் இந்தியா பிரிட்டிஷ் ராஜ்யமாக இருந்தது. பிரிட்டிஷ் இந்தியா என்று வழங்கி வந்தார்கள். பிரிட்டிஷார் வாழ்கிற நாடு இது அன்று. ஆனாலும் சில பிரிட்டிஷாரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. இந்த மதிப்பும் பெயரும் தலைமைபற்றி வந்தன.

அரசியல் விஷயத்தில் பன்மை சிறந்து நிற்பதால் பல்லோர் ஆட்சி புரிவதும், தலைமை சிறந்து நிற்பதால் சில்லோர் ஆட்சி புரிவதும் காண்கிறோம். பன்மையும் சின்மையும் இப்படியே முறையே பன்மையினாலும் தலைமையினாலும் சிறப்பு அடைவதை வேறு துறைகளிலும் காணலாம்.

தமிழ் நாட்டில் சில ஊர்களின் பெயர்கள் அங்கு வாழும் மக்கள் காரணமாக அமைந்திருந்திருக்கும். ரெட்டியார்பாளையம் என்ற ஊர் ஒன்று உண்டு; அங்கே ரெட்டியார்கள் மிகுதியாக இருந்தமையால் பன்மைபற்றி அந்தப் பெயர் வந்தது. சாலிய மங்கலம் என்ற ஊரின் பெயரும் அங்கே நெசவுத் தொழில் செய்யும் சாலியர் பல்லோராக இருந்ததனால் வந்தது. ரெட்டியார்பாளையம் என்ற மாத்திரத்தில் அங்கே ரெட்டியார்களே வாழ்கிறார்கள் என்று நினைக்கலாமா? அன்று; பிறரும் வாழ்கிறார்கள். ஆனாலும் அதற்கு அப்பெயர் வந்ததற்குப் பன்மையே காரணம். கோவிலூர் என்ற ஊர் ஒன்று இருக்கிறது. அங்கே கோவில் மாத்திரம் இருக்கவில்லை; வீடுகளும் இருக்கின்றன. அதிகமாக இருப்பவை வீடுகள். ஆனாலும்

கோவில் விசேஷமாக இருப்பதனால் அதற்குத் தலைமை பற்றி அப்பெயர் வந்தது.

ஒரு தோப்பு; அதில் அதிகமாகத் தென்ன மரங்கள் இருக்கின்றன. அதற்குத் தென்னந்தோப்பு என்று பெயர் வழங்குகிறது. எங்கேனும் ஓரிடத்தில் மாமரமும், மற்றோரிடத்தில் இரண்டு வேப்ப மரங்களும் இருக்கலாம். ஆனாலும் அது தென்னந்தோப்புத்தான். தென்ன மரம் மிகுதியாக இருப்பதனால் அந்தப் பன்மைபற்றிப் பெயர் வந்தது. பல தென்ன மரங்கள் இருக்கும் ஒரு தோட்டத்தில் சில கமுக மரங்கள் இருக்கின்றன. கமுக மரத்தை மிகவும் கஷ்டப்பட்டுத் தோட்டக்காரன் பயிர் பண்ணியிருக்கிறான். அந்தத் தோட்டத்தை நினைக்கும்போது கமுக மரங்களே அவன் அகக்கண்ணில் தோன்றுகின்றன. ஆகவே, கமுகந்தோட்டமென்றே அதை அழைப்பான். கமுகு சிறுபான்மையாக இருந்தாலும் தலைமையினால் அது மதிப்புப் பெற்றுப் பெயரும் பெற்று விடுகிறது.

மதுரைக்குக் கடம்பவனம் என்று ஒரு பெயர் உண்டு. பழைய காலத்தில் இறைவன் கடம்ப மரத்தடியில் எழுந்தருளி யிருந்தானாம். வேறு பல மரங்கள் அதிகமாக இருந்தாலும் இறைவன் எழுந்தருளிய தலைமையினாலே அந்தப் பெயர் கிடைத்தது.

இப்படிப் பன்மைக்கும் தலைமைக்கும் சிறப்பு உண்டாகும்போது அதற்கு ஏற்றபடி பெயர்கள் அமையும் வழக்கம் இன்று நேற்று வந்ததல்ல. மிகப் பழங்கால முதற்கொண்டே இருந்து வருகிறது. தொல்காப்பியர் காலத்திலும் இருந்தது. ஆகவே, அவர் அந்தச் செய்தியை இலக்கணமாகச் சொல்லியிருக்கிறார்.

ஒருபெயர்ப் பொதுச்சொல்
உள்பொருள் ஒழியத்
தெரிபுவேறு கிளத்தல்
தலைமையும் பன்மையும்
உயர்திணை மருங்கினும்
அஃறிணை மருங்கினும்

என்பது அவர் கூறும் சூத்திரம்.

உயர்திணையிலும் அஃறிணையிலும் பல பொருளுக்கும் பொதுவாகிய ஒரு பெயரைத் தலைமை காரணமாகவும் பன்மை காரணமாகவும் தனியே ஒன்றனோடு சேர்த்துச் சொல்லுக என்பது இதன் பொருள்.

சேரி என்பது தெருவுக்குப் பெயர். பலர் சேர்ந்து வாழ்வதனால் அப்பெயர் வந்தது. "பிறரும் வாழ்வார் உளரேனும் பார்ப்பனச் சேரி என்றல் உயர்திணைக் கண் தலைமைபற்றிய வழக்கு" என்று சேனாவரையர் உதாரணம் காட்டுகிறார். சேரி என்பது யாவரும் வாழும் தெருவுக்குப் பொதுவாக இருந்தாலும் ஒரு சாரார் சிறப்பாக இருத்தலின் அவரோடு சார்த்திய பெயர் வந்தது. "பிற புல்லும் மரனும் உளவேனும் கமுகந்தோட்டம் என்றல் அஃறிணைக்கண் தலைமைபற்றிய வழக்கு" என்று உதாரணம் காட்டுவர்.

"இதை இலக்கணத்தில் சொல்ல வேண்டுமா?" என்ற கேள்வி எழலாம்; "இது அவசியமானதா?" என்றும் கேட்கலாம்.

இலக்கணம் ஒரு சட்டம். சட்ட நூல்களில் சில பகுதிகள் அனாவசியம் போலத் தோன்றும்; மிகையென்று நினைக்கும்படி இருக்கும். ஆனால் சந்தேகங்களும், சங்கடங்களும் எழும்பும்போதுதான் அந்தப் பகுதிகளின் உபயோகம் தெரியவரும்.

'புளிமூட்டை' என்று ஒருவன் சொல்லும்போது அதில் சர்க்கரையும் இருக்கும் என்று எதிர்பார்க்கலாமா? 'கோதுமை மா ஒரு வீசை தா' என்றால் கடைக்காரன் கலப்பு வேலை செய்யாத யோக்கியனாக இருந்தால் தனியாகக் கோதுமை மாவைத்தான் தருவான். வாங்குகிறவனும் வேறு ஒன்றை எதிர்பார்க்க மாட்டான். புளிமூட்டை என்ற வார்த்தையாலும் கோதுமை என்ற வார்த்தையாலும் குறிப்பிடப்பட்ட பொருள்களில் கலப்பு இருக்கக் கூடாது. இது மாதிரியே கமுகந் தோட்டம் என்பதிலும் கலப்பே இருக்கக்கூடாது என்று யாராவது நினைக்கலாமல்லவா? புளிமூட்டையில் வேறு பொருள் கலந்திருப்பது குற்றம்; திருட்டுத்தனம்.

கோதுமை மாவில் வேறு மாக் கலந்திருப்பது பித்த லாட்டம். ஆனால் கமுகந் தோப்பில் பிற மரங்கள் இருப் பது இயற்கை. இரண்டு வழக்கையும் ஒன்றாகக் கொள்ளக் கூடாது. ஆதலால் இந்த இலக்கணம் அவசியமாயிற்று.

"பெயரைக் கொண்டு அந்தப் பொருள்மயமாகவே இருக்குமென்று எண்ண வேண்டாம். வாழ்க்கையில் பெயர் பெறுவதற்கு இரண்டு முக்கியமான காரணங்கள் உண்டு. பன்மைபற்றிச் சிறப்பும் அதனால் பெயரும் பெறுவது ஒரு வகை. சிறுபான்மையாலும் தலைமை பற்றிச் சிறப்பும் பெயரும் பெறுவது ஒரு வகை" என்று இந்தச் சூத்திரத்துக்கு நாம் உரை சொல்வதில் தவறு ஏதாவது உண்டா?

# 14

## 'மயங்காதே!'

"பந்தாடி அங்கம் நொந்தார் பரிந்து" என்று ஒருவர் பாடிக்கொண் டிருந்தார். அதைக் கேட்ட மாணக்கர் ஒருவர் "ஓகோ, அந்தக் காலத்திலேயே பந்தை எங்களைப் போன்ற மாணக்கர்கள் ஆடி வந்தார்கள் என்று தெரி கிறதே!" என்று ஆராய்ச்சி இல்லாமலே ஒரு முடிவு கட்டினர்.

ஆனல் அருகே இருந்த புலவர் ஒருவர் அந்த மாணக்கருடைய மகிழ்ச்சியைக் கெடுத்துவிட்டார். "அப்படிப் பந்து ஆடினவர்கள் பெண்கள்" என்று கனைத் துக்கொண்டே அவர் சொன்னர்.

"பெண்களா? சுத்தத் தப்பு; பெண்களும் இருக்க லாம். ஆனல் ஆண்கள் அல்ல என்று சொல்ல என்ன சாட்சி அதில் இருக்கிறது?" என்று ஆத்திரத்தோடு கேட்டார் இளைஞர்.

அவர் கேட்ட கேள்வி என்னவோ நியாயமாகத்தான் படுகிறது. "பந்து ஆடி அங்கம் நொந்தார் பரிந்து" என்ற வாக்கியத்தில் பெண்கள் என்று குறிப்பிடுவதற்கோ, ஆண்கள் அல்ல என்று விலக்குவதற்கோ வேண்டிய வார்த்தை ஒன்றும் இல்லை. ஆடுதல், அங்கம் நோதல் ஆகிய இரண்டு காரியங்களும் ஆண்களிடத்திலும் இருக்கலாம்.

மாணக்கர் இந்த யோசனைகளின்மேல்தான் தம் முடைய வினை அம்பை எடுத்துவிட்டார். புலவருக்கோ பழைய நூல்களாகிய கவசம் கையில் இருந்தது. ஆகவே, அவர் அந்தக் கவசத்தை எடுத்து முன்னே நீட்டலா னர்.

"கவிச் சக்கரவர்த்தி கம்பர் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா?" என்று நிமிர்ந்து உட்கார்ந்து கேட்டார் புலவர்.

"தெரிந்துகொள்ளும்படிதான் சொல்லுங்களேன்" என்றார் மாணுக்கர்.

"பந்தினை இளையவர் பயிலிடம் என்று பாடுகிறார்: இளம் பெண்கள் பந்தாடிக்கொண்டிருக்கும் இடம் இன்னதென்று சொல்ல வருகிறார்" என்று புலவர் கூறினார்.

இளைஞர் பின்னும் ஊக்கத்தோடு பேசத் தொடங்கினார்: "உங்கள் கம்பரும் விளக்கமாகச் சொல்லவில்லையே! கிழவர்கள் பந்தாடவில்லை. இளம் பெண்களும் இளைய மைந்தர்களும் ஆடுகிறார்களென்றுதானே சொல்கிறார்? இளையவர் என்ற பதத்துக்குப் புடைவை கட்டிக்கொண்டவர்களென்று எப்படி ஐயா பொருள் சொல்லலாம்?"

மறுபடியும் புலவர் மாட்டிக்கொண்டார். ஆனாலும் அவருக்குக் கம்பர் கை கொடுத்தார். "பந்தினை இளையவர் பயிலிடம் என்று மாத்திரம் சொல்லியிருந்தால் உங்கள் கொள்கையை நிலைநிறுத்தலாம். நாட்டில் மகளிரும் மைந்தரும் பொழுது போக்கும் முறையைக் கம்பர் சொல்ல வருகிறார். முதலில் பெண்களைச் சொல்லிவிட்டுப் பிறகு மைந்தர்களைச் சொல்கிறார். பந்தினை இளையவர் பயிலிடம் என்றவர், அடுத்தபடி, 'மயிலூர் கந்தனை அனையவர் கலைதெரி கழகம்' என்று சொல்கிறார். மயிலில் ஏறி வரும் கந்த வேளைப் போல அழகும் பலமும் உடையவர்கள் கலை ஆராய்ச்சி செய்கின்ற கழகங்கள் நந்தவனங்களிடையே அமைந்திருந்தன என்று சொல்கிறார். கந்தனை அனையவர் என்பது ஆடவர்களைத்தானே? பின்னாலே ஆடவர்களைத் தனியே பிரித்துச் சொல்லும் போது முதலில் சொன்னது பெண்களை என்று தெரிந்துகொள்ளவேண்டும். அந்தக் காலத்தில் பெண்களே பந்தாடுவது வழக்கம். பந்தார் விரலி, பந்தணை விரலாள், பந்தாடழகி என்று பெண்களை வருணிப்பார்

கள். பல சிவஸ்தலங்களில் அம்பிகைக்கு அத்தகைய திருநாமங்கள் அமைந்திருக்கின்றன'' என்று புலவர் ஒரு சிறிய பிரசங்கம் செய்துவிட்டார்.

இந்தச் சங்கடம் வந்ததற்குக் காரணம் இரண்டு. பந்தாடி அங்கம் நொந்தார் பெண்கள் என்பதற்கு அந்த வாக்கியத்தில் சிறப்பான அடையாளம் இல்லை. இது முதல் காரணம். இரண்டாவது காரணம் பழங்காலத்தில் மகளிரே பந்தாடினர்கள் என்ற செய்தியை மாணுக்கர் அறியாதது. பெண்கள் பந்தாடினர் என்று சொல்லாதது குற்றம் அல்ல; அந்தக் காலத்து வழக்கத்தைத் தெரிந்து கொள்ளாமல் அர்த்தம் பண்ணப் புகுந்ததுதான் தவறு.

“சொல்கிற வாக்கியத்தைத் தெளிவாகச் சொல்ல வேண்டாமோ? மயக்கம் உண்டாகும்படி சொல்வது குற்றம் அல்லவா? இலக்கணம் தெளிவைத்தானே வற்புறுத்துகிறது?'' என்ற கேள்விகளை யாராவது கேட்கலாம்.

உண்மை; தெளிவுதான் மொழியின் சிறப்பை உயர்த்தும். 'எது தெளிவானது? எது தெளிவற்றது?' என்ற விஷயம் காலத்தாலும் இடத்தாலும் நிர்ணயம் செய்ய வேண்டியதாக இருக்கிறது. சில நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்து பாடிய தமிழ்க் கவிஞர், இருபதாவது நூற்றாண்டில் வாழப்போகும் வாழ்க்கையைக் கவனித்து அதற்கு ஏற்றபடி பாடுவதென்பது சாத்தியம் அன்று. இருபதாவது நூற்றாண்டில் வாழும் நாமே அந்தக் காலத்து வாழ்க்கைத் திறத்தைத் தெரிந்துகொண்டு பாட்டுக்கு அர்த்தம் செய்யவேண்டும்.

மாதவி கட்டுரை வகைமையிலே வல்லவளாக இருந்தாளென்று சிலப்பதிகாரம் சொல்லுகிறது. தினந்தோறும் பத்திரிகைகளையும் அவற்றில் வரும் கட்டுரைகளையும் பார்த்துப் பழகிய நமக்கு மாதவிக்கும் கட்டுரை எழுதத் தெரியும் என்ற நினைவு உண்டாகலாம். ஆனல் கட்டுரை என்பது அந்தக் காலத்தில் வாக்கு வன்மையைக் குறிப்பது. மாதவி நன்றாக ஒரு விஷயத்தை எடுத்துப் பேசுவாளென்றுதான் பொருள் பண்ண வேண்டும்.

வாழ்க்கையோடு ஒட்டிவரும் இலக்கியங்களில் சில விஷயங்கள் வார்த்தைக்குப் புறம்பே, வாழ்க்கையை உணர்ந்தவர்களுக்குப் புலப்படும் குறிப்புக்களை உடையனவாய் இருக்கும். "பந்தை ஆடுபவர்கள் பெண்கள் என்று வெளிப்படையாகச் சொல்லவில்லையே! இங்கே இரண்டு பாலாரையுமே கொள்ளவேண்டும்" என்று நினைக்கும் நினைப்பை மாற்ற இலக்கணம் உண்டு. அத்தகைய இடங்களில் காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்ப அமைந்த உலக வழக்காகிய சம்பிரதாயத்தை உணர்ந்து பொருள் செய்ய வேண்டும். பந்தாடும் தொழில் அக் காலத்தில் பெண்களுக்கே உரியதாக இருந்தமையால், 'பந்தாடி அங்கம் நொந்தார்' என்ற வாக்கியத்தில் உள்ள வார்த்தைகளில் பெண்பாலைக் குறிக்கும் சொல் இல்லாவிட்டாலும், அங்கே பெண்ணை நினைக்கும்படி செய்கிறது, அந்தத் தொழில். ஆகவே, அப்படிப் பொதுப்படையாகச் சொன்னாலுங்கூடக் குறிப்பிட்டு ஒரு பாலைச் சுட்டியதாகவே எடுத்துக்கொள்ள வேண்டும்.

இந்த விஷயத்தைத் தொல்காப்பியர் சொல்கிறார்: 'உயர் திணையிலும் அஃறிணையிலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாக அமைந்த சொற்களாக இருந்தாலும் அதில் அமைந்த தொழிலோ பெயரோ குறிப்பிட்ட ஒரு சாராருக்கே உரியதாக இருக்கலாம். அது அந்தப் பொதுமையை நீக்கி ஒன்றையே கொள்ளுவதற்குக் கருவியாக இருக்கும்' என்ற கருத்தோடு ஒரு சூத்திரம் சொல்லியிருக்கிறார்.

*பெயரினும் தொழிலினும் பிரிபவை எல்லாம்*
*மயங்கல் கூடா வழக்குவழிப் பட்டன.*

'பொதுவாகத் தோன்றினாலும் பெயரிலும் தொழிலிலும் அந்தப் பொதுமையினின்று பிரிந்து ஒரு பாலையே குறித்து நிற்பவை யாவும், மயங்குதற்குரியனவென்று சொல்லக்கூடியன அல்ல; சம்பிரதாயத்தைப் பின்பற்றியவை. ஆகையால் தெளிவானவையாகவே கருதுவதற்குரியன' என்பது இதன் பொருள்.

இந்தச் சூத்திரத்தின் உரையில் உதாரணங்கள் பல உரையாசிரியர்களால் காட்டப்பட்டுள்ளன.

"பெருந்தேவி பொறை உயிர்த்த கட்டிற்கீழ் நால்வர் மக்கள் உளர்" என்பது ஓர் உதாரணம். அரசனுடைய பட்ட மகிஷிக்குப் பிரசவம் ஆயிற்று. அந்தப் பிரசவ அறையிலே அவள் படுத்திருக்கும் கட்டிற்குக் கீழே நான்கு பேர் இருக்கிறார்கள். இந்தக் காலத்து வாழ்க்கையை மாத்திரம் அறிந்தவர்களுக்கு 'மக்கள்' என்ற பெயர்ச் சொல் ஆண், பெண் இருவரையும் இங்கே குறிப்பதாகத்தான் தோன்றும். 'ஒரு டாக்டர், ஒரு பணிப் பெண், இன்னும் இரண்டு பேர் இருக்கலாம். டாக்டர் ஆடவராக இருக்கலாமே' என்று அதற்குக் காரணங் கூடச் சொல்லலாம். ஆனால் அந்தக் காலத்து வாழ்க்கையில் அங்கே ஆடவர் புகுவதில்லை. ஆகவே, அது பொறையுயிர்த்த கட்டிலாகையால் அதன்கீழ் இருந்த மக்கள் பெண்களே என்று நிச்சயம் செய்துகொள்ளலாம். மக்கள் என்ற சொல் ஆணையும் பெண்ணையும் குறிக்கும் பொதுச் சொல்லாக இருந்தாலும், இங்கே அந்தப் பொதுமையிலிருந்து பிரிந்து பெண்களையே குறித்து நின்றது.

"அரசர் ஆயிர மக்களோடு தாவடி போயினர்" என்பது ஓர் உதாரணம். போர் செய்யப் புகுந்த அரசர் ஆயிரம் பேர்களோடு சென்றார் என்பது இதன் பொருள். தாவடி போதல் என்பது முறையாக அடியிட்டுத் தாவிச் செல்லுதல் (Marching). இங்கே ஆயிர மக்கள் என்பது பொதுவாகத் தோன்றினாலும் தாவடிபோகும் தொழில் ஆண்களுக்கே அக்காலத்தில் உரியதாக இருந்தமையின் ஆடவர்களையே சுட்டியதாகக் கொள்ளவேண்டும்.

"அந்தக் கோனாருக்கு நூறு எருமை இருக்கின்றன" என்றால், அவை பால் கறக்கும் பெண் எருமைகள் என்று கொள்வதுதான் சிறப்பு. நூறு எருமைக் கடாக்களை ஒருவர் சேர்த்து வைத்துக்கொள்ளுவதும், அப்படி வைத்திருந்தாலும் அதைச் சிறப்பாக எடுத்துச் சொல்வதும் வழக்கம் அல்ல.

"அரசனுடைய படையில் ஆயிரம் யானைகள் இருக்கின்றன" என்று சொன்னால் அங்கே யானைகள் என்பதற்கு ஆண் யானைகள் என்றுதான் பொருள் செய்ய

வேண்டும். பெண் யானைகளைப் போரிலே ஈடுபடுத்துவது வழக்கம் அன்று.

இப்படி வழக்கு வழிப்பட்ட செய்திகளைத் தெரிந்து கொண்டு இலக்கியத்தை ஆராய்கிறபோதுதான் உண்மை விளங்கும்; இல்லையானால் மயங்குவதற்கு இடம் உண்டு.

நம்முடைய அறியாமையினால் உண்டாகும் மயக்கத்தை, நூலின்மேல் ஏற்றிச் சொல்லக்கூடாது என்பதற்காகவே தொல்காப்பியர், "மயங்கல் கூடா; வழக்கு வழிப்பட்டன" என்று வற்புறுத்திச் சொல்கிறார்.

"இலக்கணம் வாழ்க்கையைத் தெரிந்துகொண்டவர்கள் இயற்றுவது" என்பதைத் தொல்காப்பியர் பல பல இடங்களில் இப்படி ஞாபகப்படுத்திக் கொண்டே போகிறார்.

## 15

# ஆண்மையும் பெண்மையும்

உலகில் பெரும்பாலான ஜீவராசிகளில் ஆண் பெண் பிரிவு இருக்கிறது. உடம்பின் அமைதியால் இந்தப் பிரிவு அமைந்தாலும், குணங்களிலும் இந்த அமைதி இருக்கிறது. தமிழர் ஆணின் தன்மையை ஆண்மையென்றும், பெண்ணின் தன்மையைப் பெண்மையென்றும் கூறினாலும், அவ்விரண்டும் வெவ்வேறு குணங்களைக் குறிக்க வழங்குவதும் உண்டு. ஆடவனாகிய ஆணை ஆண்பாலாகவும், மகளாகிய பெண்ணைப் பெண்பாலாகவும் இலக்கணம் வகுக்கிறது. ஆனால் ஆணின் தன்மை என்று கருதும் ஆண்மையையும், பெண்ணின் தன்மையாகிய பெண்மையையும் அவ்வாறு வகுக்கவில்லை. "இரண்டு பாலுக்கும் பொதுவாக நிற்கும்; அஃறிணை போல வாக்கியத்தில் சொல்லப்படும்" என்று சில வார்த்தைகளைத் தொல்காப்பியர் எடுத்துச் சொல்கிறார். அப்படிச் சொல்லும் பதினெட்டுச் சொற்களில் ஆண்மை, பெண்மை என்னும் இரண்டும் வருகின்றன.

இந்த இலக்கணத்தை விளக்க வந்த உரையாசிரியர்கள் ஆண்மை என்பது ஆடவரிடத்திலும் பெண்களிடத்திலும் இருப்பதும், அப்படியே பெண்மை இருபாலாரிடத்திலும் இருப்பதும் இயல்பாதலின் இவ்விரண்டும் இருபாலாருக்கும் பொதுவென்று எழுதியிருக்கிறார்கள்.

ஆண்மை என்பது குணத்தைக் கருதும்போது ஆளும் தன்மையைக் குறிக்கும். இது ஆண், பெண் இருவரிடத்திலும் இருப்பதை ஓர் உதாரணத்தால் தெரிந்துகொள்ளலாம்.

காதலன் ஏதோ காரியமாக வெளியூருக்குப் போய்ச் சில காலம் இருந்துவர ஏற்பாடு செய்துகொண்டிருந்தான். அதனை அறியாத காதலி, "இவர் எங்கோ போகட்

போகிறார்" என்று நினைத்தாள். சிறிது சந்தேகம் வந்தது. 'போகக்கூடாது என்று சொல்லலாமா?' என்று தோன்றியது. 'நம்மேல் இத்தனை அன்பு வைப்பவர் நம்மைப் பிரிந்து போவாரா? போகமாட்டார். நாம் வீணாகக் கவலைப்படுவானேன்?' என்று அசட்டையாக இருந்து விட்டாள். "இவருடைய அன்பை நாம் முற்றும் உணராமல் இருப்பதாக இவர் எண்ணும்படி நாம் ஒன்றும் சொல்லக்கூடாது" என்று அவள் தன் கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ள முயன்றாள்.

அவனுக்கோ அவசியம் போகவேண்டி இருந்தது. 'இவளிடம் சொன்னால் மிகவும் வருந்துவாளே; போக வேண்டாம் என்று தடுப்பாளே; என்செய்வது!' என்று அவன் எண்ணினான்.

அவள் ஒரு விதத்தில் சங்கட நிலையில் இருந்தாள். இவன் ஒரு விதத்தில் சிக்கல் நிலையில் இருந்தான். "போகமாட்டார்" என்று எண்ணி அவள் பேசாமல் இருந்துவிட்டாள். "சம்மதிக்கமாட்டாள்" என்று அவனும் சொல்லாமல் போய்விட்டான். இரண்டு பேருடைய மனத்தின் நிலையும் ஒன்றனோடு ஒன்று மாறுபட்டது. அதன் விளைவு பிரிவு. இப்போது காதலனைப் பிரிந்து அவள் துயரடைகிறாள். நெஞ்சு அலைமோதுகிறது. பாம்பு கடித்தாற் போன்ற வருத்தத்துக்கு ஆளாகிறாள்.

இந்த நிலையை அவளே சொல்கிறாள்;

> செல்வார் அல்லர் என்று, யான்இகழ்ந் தனனே;
> ஒல்வாள் அல்லள் என்று, அவர்இகழ்ந் தனரே;
> ஆயிடை, இருபே ராண்மைசெய்த பூசல்,
> நல்லராக் கதுவி யாங்கென்
> அல்லல் நெஞ்சம், அலமலக் குறுமே.

—குறுந்தொகை.

'போகமாட்டார் என்றெண்ணி நான் அசட்டையாக இருந்தேன். இவள் உடன்படமாட்டாள் என்று அவர் சொல்லாமல் அசட்டை செய்தார். இதன் இடையே இரண்டு ஆண்மைகளால் உண்டான சண்டை காரணமாக என் நெஞ்சம் பாம்பின் வாயிற்பட்டாற் போன்ற கலக்கத்தை அடைகின்றது.'

இங்கே காதலி தன் மனத்தில் அப்போது இருந்த நிலையையும் காதலன் மனநிலையையும் இருபோராண்மை என்று குறிக்கிறாள். அவளுக்கும் ஆண்மை உண்டென்பதை அது தெளிவிக்கின்றது.

தொல்காப்பியரே பின்னால் ஓரிடத்தில் காதலன் காதலியினுடைய தகுதியைப்பற்றிச் சொல்லும்போது இருவரும் ஆண்மையில் ஒத்திருக்க வேண்டும் என்று சொல்கிறார்.

இந்த இடங்களிலெல்லாம் ஆண்மை என்பது ஆளுந் தன்மையாகிய மனவலியைக் குறித்து நிற்கிறது. அதனையே இக்காலத்தில் வீரம் என்று சொல்லுகிறோம். வீரர்களுக்கு ஆள் என்ற பெயர் வழங்குவதும் இங்கே நினைவுக்கு வருகிறது.

பெண்மை என்பது பெண்பாலின் தன்மையைக் குறிப்பதானாலும், இரு பாலிலும் காணப்படும் ஒரு குணத்தையும் குறிக்க வரும். 'பெண்மையாவது கட்புலன் ஆயதோர் அமைதித் தன்மை' என்று நச்சினார்க்கினியர் எழுதுகிறார். கண்ணால் காணும்போது சாந்தமான தோற்றத்தைத் தரும் ஓர் இயல்பைப் பெண்மை என்று குறித்தனர். அந்த அமைதியே மனத்தில் விருப்பத்தை உண்டாக்குவது. திரு என்ற சொல்லுக்கு, 'கண்டோரால் விரும்பப்படும் தன்மை' என்று உரை எழுதுவர் பேராசிரியர். பெண்மை என்பதும் அத்தகையதே. பெண் என்பதன் அடியாகப் பிறந்த பெட்பு என்ற சொல் விருப்பம் என்னும் அர்த்தத்தில் வழங்குகிறது. ஆதலால் பெண்மை என்பதும் விரும்பும் தன்மை என்று கொள்வதற்குரியதே. பெண்களுக்குப் பெயராக வழங்கும் மாதர் என்ற சொல்லுக்குக்கூட விரும்பும் தன்மை என்ற பொருள் உண்டு. 'மாதர் காதல்' என்று தொல்காப்பியரே சூத்திரம் செய்திருக்கிறார். இப்படியே பெண்ணைக் குறித்து நிற்கும் பிணா என்ற சொல்லும் விருப்பத்தைக் குறிக்குமென்று சொல்கிறார்.

ஆளுந்தன்மை ஆண்மை. அமைதி பெற்று விருப்பத்தை உண்டாக்கும் தன்மை பெண்மை. ஆண்மையை வீரமென்றும் சொல்லலாம். ஆற்றலுடையான் ஆண்மை

யுடையான்; அழகும் அமைதியும் உடையவள் காதலுக்குரியாள். உலகம் முழுதும் ஆணும் பெண்ணுமாக இருப்பது. பல பொருளை ஆற்றலாலே பெற்றுக் கூட்டிக் கொணர்பவன் ஆண்மகன்; அவற்றைத் தொகுத்து அமைத்து நுகர்ச்சிக்கு உரியதாகச் செய்பவள் பெண்மகள். முயற்சியைச் செய்பவன் ஆடவன்; நுகர்ச்சியைத் தருபவள் பெண்மணி. முயற்சியிலே வீரம் பயன்படுகிறது; நுகர்ச்சியிலே காதல் பயன்படுகிறது.

முயற்சி புறத்திலே நிகழ்கிறது; நுகர்ச்சி அகத்திலே நிகழ்கிறது. வீரத்தின் விளைவு நாடு முழுவதையும் நிலைக்களமாகக் கொள்கிறது; காதலின் விளைவு வீட்டை இடமாகக் கொள்கிறது.

ஆண்மை என்ற மாத்திரத்தில் தோன்றும் வீரம், ஆளுந்தன்மை, முயற்சி என்பவற்றைப் பற்றிய செய்திகளைத் தமிழர் புறப்பொருள் என்ற பகுதியிலே சொன்னார்கள். பெண்மை என்பதனால் குறிக்கப்பெறும் காதலையும் நுகர்ச்சியையும்பற்றி அகப்பொருள் என்ற பகுதியிலே சொன்னார்கள்.

பெரும்பாலும் மனவலி பெற்றுத் தாளாண்மையுடன் தொழில் புரிபவன் ஆடவன். ஆகையால் ஆண்மை அவனுக்கு உரியதாயிற்று; என்றாலும் பெண் மணிகளுக்கு மனவலி இல்லையா? உண்டு. ஆகவே ஆண்மை அவர்களிடத்தும் காணப்படும்.

அப்படியே அமைதி பெற்றுக் கண்டோர் விரும்பும் தன்மை பெரும்பாலும் மகளிரிடத்தே காணப்படும். அந்த அமைதி ஆடவனிடத்திலும் இருப்பதுண்டு. அதுதான் பெண்மை.

இந்த உண்மைகளை உணர்ந்தே ஆண்மை, பெண்மை என்ற இரண்டும் ஆடவர் பெண்டிர் என்னும் இரு பாலாரிடத்தும் இருக்கும் இயல்புகள் என்று தொல்காப்பியர் நினைத்தார்.

அவர் எவ்வளவு நுணுக்கமாக மன இயல்பை ஆராய்ந்திருக்கிறார் என்பது இதனால் தெரியவரும். பெண்ணிலே ஆணையும், ஆணிலே பெண்ணையும் நாமும் இந்தக் காலத்தில் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம்.

# 16

# உயர்ந்த பொருள்கள்

மனித சாதியை உயர்திணை என்று பகுத்தனர் தமிழர். இந்தப் பிரிவு தமிழுக்கே உரிய சிறப்பு. அறிவு பற்றி அவர்களைப் பிரித்திருக்கிறார்கள். அவர்களைப் பற்றிச் சொல்லும்போதெல்லாம் உயர்திணையாகவே சொல்லவேண்டும். ஆனால் சில சமயங்களில் வார்த்தைகளில் அஃறிணையாக வழங்குவதும் உண்டு. பொருள் உயர்திணையாக இருக்கும்போது சொல் அஃறிணையாக இருக்கக் கூடாதல்லவா? இலக்கணப்படி மாறுபாடாக இருந்தாலும், வழக்கத்தில் இந்த வித்தியாசம் சில சமயங்களில் இருக்கிறது. அந்த வழக்கத்துக்கு ஏற்ப இலக்கணம் செய்யவேண்டுமே ஒழிய, இலக்கணத்தை உத்தேசித்து அடிப்பட்டுவந்த வழக்கை மாற்ற முடியாது. குல்லாய்க்கு ஏற்றபடி தலையைச் சரிபண்ணுவதுபோல முடியும் அந்தக் காரியம்.

அடிமை என்று நாம் இப்போது ஒரு சொல் வழங்குகிறோம். அதை அடிமைத்தனம் என்ற பொருளில் முன் காலத்தில் வழங்கி வந்தார்கள். சில சமயங்களில் அடிமைப்பட்டவனுக்கும் அந்தச் சொல் உபயோகப் பட்டது. 'அடிமை வந்தது' என்று சொன்னால் அடிமைப் பட்டவன் வந்தான் என்று பொருள் சொல்ல வேண்டும்.

இரண்டு பரதேசிகள் பேசிக்கொள்கிறார்கள்.

ஒருவர்: சாமி எப்போது இங்கே வந்தது?

மற்றவர்: இந்தச் சரீரம் நேற்றுத்தான் வந்தது; அங்குத்தி எப்போது வந்ததோ?

முன்னவர்: அடிமை வந்து ஒரு மாதம் ஆயிற்று.

மற்றவர்: இந்தச் சரீரம் இன்னும் ஒரு மாசம் இருக்கலாமென்று உத்தேசம்.

மன்னவர்: அடிமையும் இன்னும் நாலு வாரம் இருக்கத் தீர்மானித்திருக்கிறது.

இந்த இருவர் பேச்சிலும் அடிமை என்றும், சரீரம் என்றும், வந்தது என்றும், தீர்மானித்திருக்கிறது என்றும் வரும் வார்த்தைகள் உயிருள்ள மனிதர்களைச் சுட்டுவனவாக இலக்கணம் சொல்லவில்லை. ஆனாலும் பேச்சு வார்த்தையில் உயிருள்ள மனிதர்களாகிய உயர் திணையையே அவை சுட்டுகின்றன.

"அடேயப்பா! அவன் தலைகீழாக அல்லவா நடக்கிறான்? மட்டு மரியாதை, இதம் அகிதம் தெரிகின்றனவா? ஒன்றும் இல்லை" என்று ஓர் இளைஞனைப்பற்றி ஒருவர் குறை கூறுகிறார்:

"இளவெட்டு ஐயா, இளவெட்டு. அது அப்படித்தான் இருக்கும்" என்று பதில் வருகிறது.

இந்தப் பதிலில் ஏதோ இளங்காளையைச் சொல்வது போல அமைந்திருக்கின்றன வார்த்தைகள். ஆனாலும் அந்த இளவெட்டு என்ற சொல் மனிதனைத்தான் குறிக்கிறது.

"கிழடு உளறுகிறது. நீயும் கேட்கிறாயே!" என்ற பேச்சிலே வரும் கிழடு என்பதும் முதலில் ஏதோ பிராணியைக் குறிப்பதுபோலத் தோன்றினாலும் உயர்திணையைக் குறிக்கும் வார்த்தைதான்.

"எங்கள் வீட்டுக்கு விருந்து வந்திருக்கிறது; அரிசிக்கு ஏற்பாடு செய்யவேண்டும்" என்ற பேச்சிலே விருந்து என்பது விருந்தினர்களைக் குறிக்கிறது.

"அது ஒரு குருடு; அதைப் போய் வேலை செய்யச் சொன்னாயே!" என்பதில் வரும் குருடு என்று உறுப்புக் குறையைக் குறிக்கும் வார்த்தையும் அத்தகையது தான்.

"அரசு அறிந்த வாழ்வு வாழ்வா?" என்பதில் அரசு என்பது அரசனைக் குறிக்கிறது.

இவ்வாறு வரும் வார்த்தைகள் அஃறிணை உருவத்திலே இருந்தாலும் உயர்திணைப் பொருளையே சுட்டுகின்றன. பேச்சிலே தெளிவு வேண்டும் என்பதை வற்புறுத்தும் தொல்காப்பியர் ஒரு சூத்திரத்தில் இத்தகைய வார்த்தைகளைப் பற்றிச் சொல்கிறார்.

"இவை உயர்திணையைக் குறிப்பன ஆனாலும், அஃறிணையாக வார்த்தைகளில் வழங்கப் பெறும்" என்று இலக்கணம் வகுக்கிறார். தமிழ் நாட்டிலே வாழ்பவர்களுக்கு இவை குறிப்பினாலே பொருளை உணர்த்துவன என்று தெரியும். ஆகையால் இந்தச் சொற்களை "முன்னத்தின் உணரும் கிளவி" என்று சொல்கிறார் தொல்காப்பியர். சொல்பவனுக்கும், கேட்பவனுக்கும் இந்தச் சொல் இன்னாரைக் குறிக்கும் என்று குறிப்பாகத் தெரிந்துவிடும். யாருக்கு விஷயம் தெரிய வேண்டுமோ, அவருக்குத் தெளிவாகத் தெரியுமானால் நடுவிலே நாம் புகுந்து, "எனக்கு விளங்கவில்லை; அது தவறு" என்று சொல்லலாமா? அப்படிக் குறிப்பாகச் சொல்வது நியாயமே என்ற இலக்கணம் நமக்குத் தெரிய வேண்டுமென்று தொல்காப்பியர் எண்ணி ஒரு சூத்திரம் இயற்றினார். அந்தச் சூத்திரத்தில் அவர் எடுத்துச் சொல்லும் வார்த்தைகள் வருமாறு: குடிமை, ஆண்மை, இளமை, மூப்பு, அடிமை, வன்மை, விருந்து, குழு, பெண்மை, அரசு, மகவு, குழவி என்ற சொற்கள்; அலி முதலிய தன்மை மாறியவற்றைச் சுட்டும் பெயர்கள்; உறுப்புப்பற்றி வந்த குருடு, முடம் முதலிய சொற்கள்; ஆர்வத்தால் குழந்தையை யானை, சிங்கமென்று வழங்கும் சொற்கள்; சிறப்பாலும் கோபத்தாலும் கூறும் வார்த்தைகள்.

இவற்றைச் சொல்லிவிட்டுக் கடைசியில்,

அன்ன பிறவும் அவற்றொடு சிவணி
முன்னத்தின் உணரும் கிளவி எல்லாம்
உயர்திணை மருங்கின் நிலையின ஆயினும்
அஃறிணை மருங்கிற் கிளந்தாங்கு இயலும்

என்று கூறி முடிக்கிறார். அவைகளைப்போன்ற பிற வார்த்தைகளும், அவற்றோடு பொருந்திக் குறிப்பினால்

உணர்வதற்குரிய வார்த்தைகளுமாகிய யாவும் உயர் திணையின்பால் நிலைபெற்றன ஆனாலும், அஃறிணையின் சார்பிலே சொல்லப்பெற்று நடக்கும் என்பது இதன் பொருள்.

குடிமை, ஆண்மை போன்ற சொற்கள் குணத்தைக் குறிக்க வந்தவை. அந்தக் குணங்களாலேயே குணம் உடையவர்களைக் குறிக்கும் வழக்கம் உண்டென்பதை முதலில் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். வேறு வார்த்தைகளில் சிறப்பு, இழிவு என்ற இரண்டு வகையி லும் மனிதர்களை அஃறிணைச் சொல்லால் வழங்கும் வழக் கம் உண்டென்பதை உணர்கிறோம். இக்காலத்தும் இது வழக்கத்தில் இருக்கிறது. மனிதன் தனியாக இருந் தால் அவன், இவன் என்று சொல்கிறோம். பல மனிதர்கள் கூடிய கூட்டத்தை அது, இது என்று சொல்கி றோம். 'ஒரு மனிதனுக்கே உயர்வு இருக்கும்போது பல மனிதர்களுக்குப் பின்னும் சிறப்பு இருப்பதுதானே நியாயம்? அப்படியிருக்க, பல மனிதர் குழுவை அஃறிணை வாய்பாட்டாலே சொல்வது தவறு அல்லவா? இலக்கணப் படி தவறு என்பது இருக்கட்டும்; பிராணிகளைச் சொல் வதுபோல அது, இது என்று சொல்லலாமா?' இப்படி யெல்லாம் சந்தேகம் வந்தால் மாற்றுவதற்குத்தான் தொல்காப்பியர் சூத்திரம் செய்தார். "அஃறிணை வார்த்தையால் சொன்னது மரியாதைக் குறைவன்று; அதுவும் ஒரு மரபு" என்று சொல்கிறார், தொல்காப்பியர்.

'அன்ன பிறவும்' என்று தொல்காப்பியர் ஒரு பொடி வைத்திருக்கிறார். 'இந்த வரிசையில் சேர்வதற்கு ஏற்ற மற்ற வார்த்தைகளும்' என்று அதற்கு அர்த்தம் செய்ய வேண்டும். 'காலத்தின் போக்கிலே எத்தனையோ புதிய புதிய வார்த்தைகள் வரும். புதிய புதிய மரியாதை மரபு கள் ஏற்படும். அவற்றுக்கெல்லாம் சேர்த்து இலக்கணம் சொல்ல வேண்டும்' என்ற நினைவோடுதான் இந்தப் பொடி வைத்திருக்கிறார். இலக்கண நூல்களில் இப்படிச் சொல்வது வழக்கம். வளர்ந்துவரும் மொழிக்கு இலக் கணம் இப்படித்தான் அமைய வேண்டும். பின்னாலே ஏற் படும் புதிய வழக்கங்களுக்கும் இடம் கொடுத்திருக்க வேண்டும்.

"இடு தூங்குகிறது" என்ற வாக்கியத்தை இந்தச் சூத்திரத்துக்கு உதாரணம் காட்ட வந்தால் "சூத்திரத்தில் மூப்பு என்றுதானே இருக்கிறது?" என்று யாராவது கேட்கலாம். "அன்ன பிறவும்" என்று தொல்காப்பியர் சொல்லியிருப்பது அதற்காகத்தான். மூப்பு என்ற வார்த்தையை அவர் எடுத்துச் சொன்னாலும் அதே பொருளில் வருகிற வார்த்தையையும் சேர்த்துக்கொள்ளலாம்.

மற்றொரு வகையான வார்த்தைகளைப்பற்றி வேறொரு சூத்திரம் வருகிறது. தெய்வத்தைப்போல் மதிப்பதற்குரிய சில பொருள்கள் இருக்கின்றன. அவற்றை உயர்வுடைய பொருளாகவே தமிழர் கருதினர். அவற்றைப் பேச்சிலே வழங்கும்போது அஃறிணையாகவே சொல்கிறோம். சொல் அஃறிணையிலே இருப்பதைக் கொண்டு, பொருளுக்குத் தக்க மதிப்பு இல்லை என்று எண்ணக்கூடாது. உயர்ந்த பொருளானாலும், அஃறிணை வாய்பாட்டால் சொல்வது தமிழர் வழக்கம்.

இந்த வகையில், காலம், உலகம், உயிர், உடம்பு, விதியை வகுக்கின்ற தெய்வம், விதி, ஐம்பூதம், சூரியன், சந்திரன், சொல் என்னும் பத்தும் அவற்றைப் போன்ற பிறவும் அஃறிணை வார்த்தைகளால் சொல்லப்படுமானாலும், உயர்ந்த திணையைச் சார்ந்தனவே. காலத்தின் பெருமையைத் தமிழர் முன்பே உணர்ந்திருந்தனர். அது தெய்வத்தன்மை உடையது என்று கொண்டனர். உலகம் என்று சொன்னது மக்கள் கூடிய தொகுதியை. பல மக்கள் கூடிய தொகுதி சிறப்புடையது என்பது அவர்கள் கொள்கை. மனித உடம்புகூட உயிரோடு இருக்கும் போது உயர்வுடையது.

தெய்வத்தை, "பால்வரை தெய்வம்" என்று தொல்காப்பியர் சொல்கிறார். 'இன்ன உயிர் இன்னவாறு இன்ப துன்பங்களை அடைய வேண்டும் என்று ஊழ்வினைக்கு ஏற்பப் பகுத்து வரையறுக்கும் தெய்வம்' என்று இதற்குப் பொருள் செய்யவேண்டும். கடவுளுக்கு வேறு பல தொழில் இருந்தாலும், அவரவர்கள் தகுதி அறிந்து அநுபவத்தைச் சார்த்தும் தொழிலையே சிறப்பாகத்

தமிழர் கருதியிருக்க வேண்டும். வேலை செய்தவனுக்குத் தக்கபடி கூலி தரும் செல்வனைப்போல இறைவன் இருக்கிறான். அவன் பட்சபாதம் இன்றி அவரவர் வினையின் அளவுக்கு ஏற்பப் படி அளக்கிறான். இந்தக் கொள்கை தொல்காப்பியர் நாளிலே தமிழர் நெஞ்சில் ஊன்றியிருந்தது. மனிதன் அடையும் நன்மை தீமைகளுக் குக் காரணம் ஊழ் என்பதும், அந்த ஊழின்படி உயிர்களை இயக்கும் ஆணையுடையவன் இறைவனென்றும் தமிழர் கொண்டனர். தொல்காப்பியர் பின்னே, காதலனும் காதலியும் ஒன்றுபடுவது நல்ல ஊழின் வசத்தால் என்றும் சொல்லியிருக்கிறார்.

பால்வரை தெய்வம் வினைக்கணக்கைப் பார்த்து அதற்கேற்ப விளைவு அளிக்கிறது. ஆகவே, அந்த வினையாகிய விதியும் வலிமையுடையதே. அதையும் இந்த வரிசையிலே சேர்க்கிறார் தொல்காப்பியர்.

ஐம்பெரும் பூதங்களால் உலகு அமைகிறது என்ற உண்மையைத் தமிழர் உணர்ந்தவர். பூதக் கிளவி என்று எழுத்ததிகாரத்திலே பூதங்களைச் சுட்டிச் சொல்கிறார் தொல்காப்பியர். பின்னல் பொருளதிகாரத்திலும் பூதங் களைப்பற்றிச் சொல்லுகிறார். அவற்றின் வலிமை பெரிது. ஆகவே, தெய்வம், வினை என்பவற்றோடு பூதத்தையும் சேர்த்தார்.

ஞாயிறும் திங்களும் ஆகிய சுடர்களும் மதிப்புக்குரி யன; அவற்றையும் சொன்னார். கடைசியில் சொல் என்று சொல்லியிருக்கிறார். மனித சாதிக்கு மேன்மை தருவது சொல். அதனைத் தெய்வமாக மதித்துப் போற்றுவது நம்மவர் வழக்கம். 'சொல்லென்பது நாமகளாகிய தெய்வம்' என்று சேனாவரையர் இங்கே உரை எழுதி யிருக்கிறார். சொல்லின் வகைகளை உணர்ந்து இலக்கணம் வகுத்த தொல்காப்பியருக்கு அதன் பெருமை மிகுதியாகத் தெரியும். ஆகவே, காலம் முதலியவற்றைச் சொன்னவர் கடைசியிலே சொல்லைச் சொல்லி அதற்குத் தனிச் சிறப்புக் கொடுத்தார்.

மனிதர் வாழ்வுக்குப் பயன்பட்டாலும் அவர் களுடைய ஆற்றலுக்குப் புறம்பே பெருமை படைத்து

நிலவும் இவற்றை உயர்வுடைய பொருளாகவே கருதினர். ஆனாலும், 'காலம் போயிற்று', 'தெய்வம் அளந்தது', 'சொல் தூயது' என்று அஃறிணையாகப் பேசுவதைக் கண்டு, "தமிழருக்கு இவற்றின் அருமை தெரியாது" என்று யாரும் நினைக்கக் கூடாது என்ற நோக்கங் கொண்டே, "இவை உயர்திணையே; ஆனாலும் அஃறிணை யாகப்பேச்சிலே வழங்கும்" என்று தொல்காப்பியர் சூத்தி ரம் இயற்றினர்.

# 17

# எட்டுவித வேறுபாடுகள்

மனிதன் சும்மா இருந்தால் அவனை உயிருடைய வனென்று யாரும் சொல்லமாட்டார்கள். இயற்கையி லேயே அவனுக்கு உடம்பு, உள்ளம், உரை என்ற மூன்று கரணங்களும் பிற பொருளைக் காட்டிலும் சிறப்பாக அமைந்திருக்கின்றன. ஆகவே, அவன் செய்யும் காரியங் களும் பலபல வகையில் விரிவடைகின்றன.

மனிதன் இயங்குகிறான்; அவனுடைய இயக்கம் தொழிலாகிறது. தொழில் விரிய விரிய இடமும் பிற பொருள்களும் விரிகின்றன. முருகன் எழுதுகிறான்; அதாவது முருகன் என்ற மனிதன் எழுதல் என்னும் காரியத்தைச் செய்கிறான். முருகன் மரத்தை வெட்டினான். வெட்டு தல் என்னும் தொழில் நடக்க முருகன் மாத்திரம் இருந் தால் போதாது. மரமும் வேண்டும். வெட்டினான் என்ற மாத்திரத்தில் யார் என்ற கேள்வி முதலிலும் எதை என்ற கேள்வி அடுத்தபடியும் எழும். ஆகவே, இப்போது முருகன் என்ற மனிதனும் வெட்டுதலாகிய தொழிலும் மரமாகிய மற்றொரு பொருளும் வருகின் றன. அந்தத் தொழிலைச் செய்ய முருகனும் மரமும் அவசியம். முருகனைக் காரியத்தை நடத்தும் தலைவன் என்று சொல்லலாம். இதை இலக்கணக்காரர் வினை முதல் என்று சொல்வார்கள். வினை முதலைக் குறிக்கும் சொல்லை எழுவாய் என்பது வழக்கம்.

வினையென்பது காரியம்; அதனைச் செய்பவன் வினை முதல். மரம் என்பது செயப்படு பொருள். வெட்டுதல் என்னும் செய்கைக்கு உள்ளாகும் பொருள் அது.

மரத்தை முருகன் வெட்டுவதற்கு ஆயுதம் வேண்டு மல்லவா? வாளால் வெட்டுகிறான் என்று வைத்துக் கொள்வோம். முருகன் அளவிலே நின்ற நம் கவனம்

அவன் செய்யும் காரியத்திலும் பிறகு அந்தக் காரியத்தால் பாதிக்கப்படும் பொருளிலும் சென்றது. இப்போது அந்தச் செயலைச் செய்யும் மனிதனுக்குக் கருவி ஒன்று உண்டு என்ற ஞாபகம் வருகிறது. முருகன் வாளால் மரத்தை வெட்டினான் என்றால், வாள் அங்கே கருவியாக நிற்கிறது.

முருகன் எதற்கு மரத்தை வெட்டுகிறான்? விறகுக்காகத்தான். இது அடுத்த விஷயம். விறகு என்ற பயன் இப்போது வருகிறது. முருகன், அவன் செய்யும் காரியம், மரம், வாள், விறகு என்று இத்தனை செய்திகளோடு ஒரு செயல் தொடர்புடையதாகி விரிந்துவிட்டது.

அதோ அங்கே வேறொருவன் மரத்தை வெட்டிக் கொண்டிருக்கிறான். அவன் வெட்டுவதையும் முருகன் வெட்டுவதையும் ஒப்பு நோக்குகிறோம். அவன் பெயர் வேலன். முருகன் வேலனைக் காட்டிலும் வேகமாக வெட்டுகிறான். இந்த ஒப்புமையைப்பற்றிய பேச்சு வருகிறது. வேலனைத் தனியே பார்ப்பதைவிட அவனையும் முருகனையும் சேர்த்துப் பார்க்கும்போதுதான் நம் பார்வை விரிகிறது. முருகன் வேலனினும் விரைவாக விறகுக்கு மரத்தை வெட்டுகிறான் என்று தெரிகிறது.

இப்போது இரண்டு மனிதர்கள் முனைத்த பிற்பாடு ஒவ்வொருவருக்கும் தனித்தனியே வேலைகள் இருப்பதைக் காண்கிறோம். அவற்றை ஒப்பு நோக்குகிறோம். இந்த விறகு முருகனுடையது. அது வேலனது என்ற உரிமை வருகிறது. முருகனது மரம், வேலனது மரம் என்ற வேறுபாடு தெரிகிறது. காரியம், அதைச் செய்யும் மனிதன், அவன் உபயோகிக்கும் கருவி, அதன் பயன், ஒப்பு நோக்குதல், உரிமை என்று விரிந்த இந்த நாடகம் குறிப்பிட்ட இடத்திலும் காலத்திலும் நிகழ்கின்றது.

இந்த விஷயங்களைக் கண்ணினாலும் கருத்தினாலும் உணர்ந்துகொள்ளும் நாம், வார்த்தைகளால் வெளியிடுகிறோம். அந்த வார்த்தைகளுக்கு இலக்கணத்தில் வெவ்வேறு பெயர் கொடுத்திருக்கிறார்கள்.

காரியத்துக்கு வினை என்று இலக்கணத்திலே பெயர். வினைச்சொல் என்பது தொழிலைக் குறிக்கும் சொல்.

பொருளைக் குறிக்கும் சொல்லுக்குப் பெயர்ச் சொல் என்று பெயர். பெயர்ச் சொல்லாலே குறிக்கப் பெறும் பொருளானது, ஒரு காரியத்தைச் செய்யும்போது மேலே சொன்ன பிற பொருள்களையும் பயன்படுத்திக்கொள்கிறது.

முருகன் ஒரு பொருள்; மரமும் ஒரு பொருள்தான். ஆனாலும் இரண்டும் வெவ்வேறு நிலையில் இருக்கின்றன. வெட்டுகிறவன் முருகன்: வெட்டும் காரியத்துக்கு உட்படுவது மரம். இலக்கணத்தாருடைய பாஷையிலே சொன்னால் முருகன் வினைமுதல்; மரம் செயப்படு பொருள். இந்த வேறுபாட்டைச் செய்யும் காரியத்திலே காண்கிறோம். அதைக் குறிக்கும் சொல்லிலும் காண்கிறோம். முருகன் என்ற சொல் இயல்பாக நிற்கிறது. மரத்தை என்ற சொல் அந்த இயல்பினின்றும் வேற்றுமை அடைந்து நிற்கிறது. மரம் என்பது இயல்பான சொல். இப்படி இயல்பாக இருப்பதினின்றும் தொழில் காரணமாக வேறுபடுவதை வேற்றுமை என்று இலக்கணக்காரர் சொல்கிறார்கள். செயப்படுபொருளாக வேறுபடலாம்; கருவியாக நிற்கலாம்; பயனாக நிற்கலாம்; ஒப்பு நோக்கும் பொருளாக இருக்கலாம்; உரிமையுடைய பொருள் ஆகலாம்; இடத்தையோ காலத்தையோ குறிக்கலாம். இந்த வேறுபாடுகளுக்குத் தக்கபடி, வார்த்தையிலும் மாறுபாடுகள் அமைகின்றன.

'மரம் வளர்கிறது' என்னும்போது அது பிறருடைய தொழிலுக்கு உள்ளாகாமல் இயல்பாக ஒரு செயலைச் செய்கிறது. அப்போது அதுவே வினைமுதல் ஆக நிற்கிறது. அந்த இயல்பை எல்லாவற்றுக்கும் ஆதாரமாகக் கொள்ள வேண்டும். அதை முதல் வேற்றுமை என்று சொன்னார்கள். பெயர்ச்சொல்லானது ஒரு வேற்றுமையையும் அடையாமல் நின்றபடியே நிற்பதுதான் முதல் வேற்றுமை. முருகன் மரத்தை வெட்டினான் என்பதில் முருகன் என்பது முதல் வேற்றுமை.

செயப்படு பொருளாக ஒரு பொருள் மாறும்போது அதைக் குறிக்கும் சொல்லும் உரு மாறும். அப்போது அது இரண்டாம் வேற்றுமை நிலையை, இரண்டாவது

வகையான வேறுபாட்டை, அடைகிறது. மரத்தை வெட்டினான் என்னும்போது மரம் என்ற பொருள் வெட்டப்படும் பொருளாக ஆகிறது. மரம் என்ற சொல்லும் மரத்தை என்று ஆகிவிடுகிறது. முருகனை அடித்தான் என்னும்போது முருகன் அடிக்கப்படும் பொருளாகிறான். அங்கே முருகன் என்ற சொல் முருகனை என்ற இரண்டாவது படியை அடைகிறது. இதற்கு இரண்டாம் வேற்றுமை என்று பெயர். செயப்படு பொருளைக் குறிக்கும் சொல் இரண்டாம் வேற்றுமையாக நிற்கும்.

வாளால் வெட்டினான் என்னும்போது கருவி வருகிறது. வாள் கருவியாக உபயோகமாவதை, வாளால் என்ற வேறுபட்ட சொல்லுருவம் காட்டுகிறது. இது மூன்றாம் வேற்றுமை.

இதற்காக அல்லது இதன் பொருட்டு என்ற அர்த்தத்தில் வரும் வேற்றுமை நான்காவது. விறகுக்கு மரத்தை வெட்டினான் என்பதில் விறகு மரத்தை வெட்டுவதனால் ஆகும் பிரயோசனம்.

ஒன்றனோடு ஒன்றை ஒப்பு நோக்கும்போது புதிதாக வந்த பொருளைக் குறிக்கும் சொல்லில் வேறுபாடு இருக்கும். முருகன் வேலனினும் வேகமாக வெட்டுகிறான் என்னும்போது வேலன் புதிதாக வந்தவன். ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவன் வருகிறான். ஒப்பிடத்தக்க பொருளாகிய அவனைச் சொல்லும்போது வேலன் என்று இயல்பாகச் சொல்லாமல், வேலனினும் என்று வார்த்தையில் வேறுபாட்டோடு சொல்லுகிறோம். வேலனின் என்று சொன்னாலே போதும். இக்காலத்தில் வேலனைக் காட்டிலும் என்று விவரித்துப் பேசுகிறோம். இந்த ஐந்தாவது படியில் நிற்கும் வேறுபாட்டை ஐந்தாம் வேற்றுமை என்று சொல்வார்கள்.

உரிமையைக் குறிக்கும்போது ஆறாவது படியில் சொல் வேறுபடுகிறது. விறகு முருகனுடைய பொருள் என்று சொல்லும்போது முருகனது விறகு என்கிறோம். ஒரு பொருளுக்கு உடையவன் என்ற நிலையில் அவனைக் குறிக்கும் சொல் வேறு உருவத்தை அடைகிறது; முருகனது என்ற உருவோடு நிற்கிறது. இது ஆறாம் வேற்றுமை.

இவ்வளவும் நிகழும் இடத்தையும் காலத்தையும் குறிக்கும்போது வரும் சொல் வேறுபாடு ஏழாவது படி. காட்டில் முருகன் மரத்தை வெட்டுகிறான், பகலில் வெட்டுகிறான் என்னும்போது காட்டில், பகலில் என்ற இரண்டும் ஒரேமாதிரி உருவத்தை எடுக்கின்றன; இது ஏழாம் வேற்றுமை.

பொருளைக் குறிக்க வரும் பெயர்கள் இப்படி அந்தப் பொருளின் நிலைக்கு ஏற்றபடி வேற்றுமையை அடைகின்றன. முருகனை நாம் அழைக்கிறோம். முருகா என்று கூப்பிடுகிறோம். அவன் அழைக்கப்படும் பொருளாக இருக்கிறான். சொல்லும் அதற்கு ஏற்ப மாறுகிறது. இது எட்டாம் வேற்றுமை. ஒருவன் ஒரு தொழிலைச் செய்வதைக் குறிக்கும்போது முதல் ஏழு வேற்றுமைச் சொற்களுக்கும் வேலை உண்டு. முதல் வேற்றுமை தொழில் செய்பவனையும், இரண்டாவது தொழிலுக்கு உட்படும் செயப்படுபொருளையும், மூன்றாவது கருவியையும், நான்காவது பயனையும், ஐந்தாவது ஒப்பிடும் பொருளையும், ஆறாவது உரிமை பெறும் பொருளையும், ஏழாவது இடத்தையும் காலத்தையும் குறிக்கின்றன. ஆகவே, இந்த ஏழும் ஒன்றனோடு ஒன்று தொடர்புடையவை. விளிக்கும் போது பெயர் தன் இயல்பினின்றும் வேறுபடுவதால் அதையும் ஒரு வேற்றுமையாகக் கொண்டார்கள். வடமொழியிலும் வேறு சில மொழிகளிலும் ஒருவனை அழைக்கும்போது அதற்குரிய அடையாளம் தனியே இருக்கும். "ஹே ராம" என்றும் "ஓ, ராமன்" என்றும் வரும். ஆகையால் அவற்றை முதல் வேற்றுமையிலே அடக்கியிருக்கிறார்கள்.

தமிழிலே விளிக்கும்போது சொல் வேற்றுமை அடைவதால் அதனையும் தனியே ஒரு வேற்றுமையென்று சொன்னார்கள். ஆனாலும் மற்ற ஏழும் ஒருவகை; இது தனிவகை என்பதை மறக்கவில்லை.

தொல்காப்பியர் சொல் அதிகாரத்தில் வேற்றுமைகளைப்பற்றிய செய்திகளை மூன்று இயல்களில் சொல்லியிருக்கிறார்; அவற்றுள் விளியைப்பற்றித் தனியே ஓரியல் வருகிறது.

வேற்றுமையைக் குறித்துச் சொல்லப் புகும்போதே, எட்டாகச் சொல்லாமல், ஏழென்றும், விளியென்றும் தனியாகப் பிரித்துச் சொல்கிறார்.

வேற்றுமை தாமே ஏழென மொழிப
விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே.

'மொழிப' என்று சொல்கிறார் தொல்காப்பியர். "புலவர்கள் சொல்வார்கள்" என்பது அதன் பொருள். இந்த அமைப்பெல்லாம் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே வழங்கி வந்தன என்பதையும், தமிழ்மொழி மிகப் பழங்காலத் தொட்டே இலக்கண இலக்கிய வளம் பெற்றது என்பதையும் அந்த வார்த்தை குறிக்கிறது.

# 18

# தொழில்களின் வகை

தமிழ் நாட்டில் முன் காலத்தில் மூன்று அரசர்கள் தலைமை பெற்றிருந்தார்கள். அவர்கள் முடி அணிந்து கொடிபிடித்து நாட்டை ஆண்டனர். 'முடியுடை மூவேந்தர்' என்று அவர்களைப் புலவர்கள் குறிப்பார்கள். முடியில்லாத குறுநில மன்னர்கள் பலர் இருந்தாலும், அவர்களெல்லாம் ஒவ்வொரு முடி வேந்தரைச் சார்ந்தே நிற்பார்கள். போர் நிகழும் காலத்தில் இந்த நிலை நன்றாக வெளிப்படும்.

அரசன் உலகத்து மக்களைக் காப்பாற்றும் தொழில் உடையவன். ஆகையால் காவலன் என்ற பெயர் அவனுக்கு வழங்கும். தம் குடிமக்களைக் காத்தல் ஒன்றையே இரவும் பகலும் எண்ணியிருப்பது மூவேந்தர் இயல்பு. புரவலன் என்ற பெயரும் காத்தல் தொழில் பற்றியே வந்தது.

ஓரரசன் நாட்டைக் காக்கும் தொழிலுடையான். கீழ் உள்ள அதிகாரிகள் அவனுடைய ஆணை தாங்கி அவ்வப் பகுதியைக் காப்பாற்றும் கடமையை உடையவர்கள். ஒவ்வொரு வீட்டுத் தலைவனும் தன் வீட்டில் உள்ளாரைக் காப்பாற்றும் தொழில் உடையவன். உலகத்தை யெல்லாம் தன் அருளால் காப்பாற்றுவது கடவுள் தொழில்.

உலகில் உள்ள மக்கள் வாழ்வதும் பொருள்கள் செவ்வி பெற அமைவதும் நன்றாகக் காப்பாற்றும் திறத்தினால் அமைகின்றன. தக்கவர்களின் பாதுகாப்பில் நலம் பெறுவிட்டால் உலகமே சீரழியும்.

ஆக்க வேலை, அழிவு வேலை என்று இப்போது சொல்கிறோம். ஆக்க வேலையைக் கடவுளே முதலில் செய்து

விடுகிறார். அவர் ஆக்கிய உயிர்களையும் உடல்களையும் உலகத்துப் பொருள்களையும் தக்கவண்ணம் காத்தலே ஆற்றலுடையவருடைய கடமை.

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்

என்று திருக்குறள் சொல்கிறது.

மனிதன் தன் வாழ்க்கையில் இயற்றும் தொழில்கள் அனைத்திலும் 'காப்பாற்றுதல்' என்பது மிகச் சிறந்தது. மிக இழிந்தது அழித்தல். உயிரையும் உடம்பையும் இணைந்திருக்கச் செய்து பசியும் நோயும் பகையும் வராமல் காப்பது உத்தமமான காரியம். கொலை செய்தல் மிகவும் இழிந்த செயல். ஒரு நாட்டை வளப்படுத்தி இன்பம் உண்டாகும்படி பாதுகாத்தல் சிறந்த செயல்; பயிரை அழித்துப் பண்டத்தைச் சிதைத்தல் இழிந்த செயல்.

மனிதனுடைய செய்கைக்கு உட்படும் பொருளைப் பற்றிச் சொல்லும்போது ஐ என்ற இரண்டாம் வேற்றுமை உருபைக் கூட்டிச் சொல்வது தமிழ் மரபு. அதைப்பற்றிச் சொல்லும் இடத்தில் தொல்காப்பியர், பொருளானது எந்த எந்தத் தொழிலுக்கு உட்படுமென்பதைச் சிறிது சொல்கிறார். மனிதன் செய்யும் தொழில் அனைத்தையும் சொல்லி முடிக்க முடியுமா? ஆனாலும் அவர் மிக முக்கியமானவை என்று கருதிய 28 தொழில்களைச் சொல்லிவிட்டு, "இவை போன்ற பிறவற்றையும் சேர்த்துக் கொள்க" என்று குறிப்பிக்கிறார்.

அவர் அப்படி எடுத்துக்காட்டும் தொழில் வரிசையில் முதலில் நிற்பது காப்பு; அதுதான் காத்தல் தொழில். எல்லாத் தொழில்களிலும் சிறந்த காத்தல் தொழிலைப் பூண்டமையால் கடவுள் மக்களால் வணங்கப் பெறுகிறார். அரசன் காவலனாக இருப்பதனால் பெருமை அடைகிறான்.

காப்புக்குப் பின் பல தொழில்களைச் சொல்லும்

தொல்காப்பியர் கடைசியில் சிதைப்பு என்ற தொழிலைச் சொல்கிறார். அழித்தல் என்பது அதன் பொருள்.

காக்கும் தொழிலை அளித்தல் என்றும் சொல்வதுண்டு. புதிதாக ஒரு பொருளைக் கொடுப்பதிலும், இருக்கிற பொருளைக் காப்பாற்றுவதே பெரிது என்ற கருத்தை அச் சொல் தருகிறது.

காத்தலும் சிதைத்தலுமாகிய இரண்டு தொழில்களையும் நினைக்கும்போது அரசனுடைய ஞாபகந்தான் தமிழருக்கு வருகின்றது. இவ்விரண்டுக்கும் உதாரணம் சொல்ல வந்த உரையாசிரியர்கள், "ஊரைக் காக்கும்", "நாட்டை அழிக்கும்" என்றே காட்டுகிறார்கள். 'அரசனது முதல் கடமை தன் நாட்டைப் பாதுகாத்தல். அவசியமாக இருக்குமானால் பலவாறு யோசித்து முடிவுகட்டிய பிறகே, வேறு வழியின்றி இறுதியாக வைத்துப் பகைவன் நாட்டை அழித்தல் அவன் செயல்' என்ற கருத்து இவற்றிலிருந்து தோன்றுகிறது.

ஊரையும் நாட்டையும் காப்பாற்றுகிற அரசனைக் குடிமக்கள் போற்றுவார்கள், புகழ்வார்கள். 'இவன் கடவுளை ஒப்பான்' என்றும் 'அன்பினால் தாயை ஒப்பான்' என்றும் 'நன்மை பயப்பதனால் தவத்தை ஒப்பான்' என்றும் உபமானம் சொல்வார்கள். கம்பர் தசரதனைப்பற்றிச் சொல்லும்போது இப்படிப் பல உவமைகளைக் கூறுகின்றார்:

தாய்ஒக்கும் அன்பில்
தவம்ஒக்கும் நலம்பயப்பில்
சேய்ஒக்கும் முன்னின்றொரு
செல்கூதி உய்க்கும்நீரால்
நோய்ஒக்கும் என்னில்
மருந்தொக்கும், நுணங்கு கேள்வி
ஆயப் புகுங்கால் அறிவொக்கும்

என்று வருகிறது இராமாயணப் பாட்டு.

காப்புத் தொழிலைப் புரியும் அரசன் தன் இயல்பினால் பல பொருளை ஒப்புக் கூறும்படி விளங்குகின்றான். அந்த ஒத்தல் தொழிலைக் காப்புக்கு அடுத்தபடி தொல்காப்பியர் சொல்லுகிறார். அரசன் தேரூர்ந்து

செல்கிறான். மதில் முதலியவற்றை இழைக்கிறான். பகைவரை ஓட்டுகிறான். நல்லது செய்தால் மக்கள் அவனைப் புகழ்கிறார்கள். சிறந்த முறையில் அரசியலை நடத்தினால் பல பொருளை அவன் பெறுகிறான்; இல்லாவிட்டால் இழக்கிறான். நல்லவர்களைக் காதலிக்கிறான். அதனால் அவர்களை உவக்கிறான். தீயவர்களை வெகுள்கிறான். அதனால் அவர்களைச் செறுகிறான். பல நீதி முறைகளைக் கற்கிறான்.

இந்தத் தொழில்களெல்லாம் தொல்காப்பியருக்கு நினைவுக்கு வருகின்றன. இவை அனைத்தும் அரசன் மாத்திரம் செய்யும் தொழில்கள் அல்ல. பிறரும் செய்கிறார்கள். குடும்பத்தைக் காக்கும் தொழிலை வீட்டுத் தலைவன் செய்கிறான். அவன் காளைமாட்டைப்போல உழைக்கிறான். வீட்டை இழைக்கிறான். மகளிர் கிளியை ஒப்புகிறார்கள்.

இவ்வாறு தொல்காப்பியர் சொல்லும் தொழில் வரிசையில் சில இரட்டைகள் உள்ளன. நேர் எதிராக உள்ளவை சில. புகழ்தல் பழித்தல் என்ற இரண்டையும் அடுத்தடுத்துச் சொல்கிறார். அவை ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டவை. பெறுதல் - இழத்தல், காதல் - வெகுளி, செறல் - உவத்தல், தொகுத்தல் - பிரித்தல் என்ற இரட்டைகள் அந்த வகையைச் சேர்ந்தவை. காதல் என்பது உணர்ச்சி; அதன் விளைவாகிய செயல் உவத்தல். வெகுளி என்பது உணர்ச்சி; அதன் விளைவு செறுதல்.

அறுத்தல், குறைத்தல் என்ற இரண்டு தொழில்களைச் சொல்கின்றார். சில சமயங்களில் இந்த இரண்டு சொற்களும் ஒரே பொருளில் வழங்கினாலும், இரண்டிற்கும் வேறுபாடு உண்டு. 'அறுத்தல் என்பது துண்டித்தல்; சிறிது இழவாமல் வேறுபடுத்தல்' என்று விளக்குகிறார் நச்சினார்க்கினியர். குறைத்தல் என்பது 'சிறிது இழக்க வேறுபடுத்தலும் பெருமையைச் சுருக்குதலும்'' என்று அவர் கூறுவர்.

நிறுத்தல், அளவு, எண்ணுதல் என்ற மூன்றையும் வரிசையாகச் சொல்லியிருக்கிறார் தொல்காப்பியர்.

அவை அளவை வகை. ஆக்கல், சார்தல், செலவு, கன்றல், நோக்கல், அஞ்சல் என்பன வேறு வேறு தொழில்கள். கன்றல் என்பது ஒரு துறையில் நன்ருகப் பயிற்சி பெறுதல். 'சூதினைக் கன்றும்' என்று உதாரணம் கூறுவர் உரையாசிரியர். 'சூதாடுவதை அதிகமாகப் பழகி ஈடுபடுபவர்' என்பது அதன் பொருள்.

இவ்வாறு வரும் தொழில்களை மூன்று பெரும் பிரிவாகச் சேனவரையர் என்ற உரைகாரர் பிரிக்கிருர். இயற்றப்படுவது, வேறு படுக்கப்படுவது, எய்தப்படுவது என்ற மூன்று பகுதிகளில் எல்லாத் தொழில்களும் அடங்கும் என்று சொல்கிருர்.

ஒவ்வொரு வேற்றுமையைப்பற்றியும், இன்ன இன்ன வகையில் இந்த வேற்றுமை வழங்கும் என்று தனித்தனியே சூத்திரம் செய்திருக்கிருர் தொல்காப்பியர். அந்தச் சூத்திரங்களால் உலகத்தில் நிகழும் நிகழ்ச்சிகளை அவர் கூர்ந்து அறிந்திருக்கிருர் என்பது தெரியவரும்.

'குயவனுல் செய்யப்பட்ட குடம்; மண்ணுல் செய்யப்பட்ட குடம்' என்ற இரண்டிலும் மூன்ரும் வேற்றுமைச் சொற்கள் வருகின்றன. குயவனுல், மண்ணுல் என்பன அவை. சொல் அளவிலே குயவனுக்கும் மண்ணுக்கும் ஆல் என்ற ஒரே உருபுதான் இணைக்கப்படுகிறது. ஆனுல் பொருளிலோ இரண்டுக்கும் ஒரு வகையில் ஒற்றுமையும், மற்ருெரு வகையில் வேற்றுமையும், இருக்கின்றன. குடம் உண்டாவதற்குக் குயவனும் வேண்டும், மண்ணும் வேண்டும்; இது ஒற்றுமை. ஆனுல் குயவன் காரியத்தைச் செய்பவன்; மண் உபயோகப் படும் பொருள். முன்னதை வினைமுதல் என்றும், பின்னதைக் கருவி என்றும் சொல்லுவார்கள்.

ஒடு என்பது மூன்ரும் வேற்றுமையைக் குறிக்கும் அடையாளம். அது வரும் இடங்களில் இரண்டு பேர் வழிகளுக்கிடையே நடக்கும் ஒரு தொழிலைக் காணலாம். "ராமனேடு சீதை கானகம் சென்ருள்" என்று சொல்லுகிரும். செல்லுதல் என்பது தொழில். அதை ராமனும் சீதையும் செய்கிருர்கள். இருவருடைய தொழிலும்

ஒருங்கு நிகழ்வதால் அதற்கு 'உடன் நிகழ்ச்சி' என்ற பெயரை இலக்கணக்காரர் வழங்குவார்கள். இந்த வாக்கியத்தில் ஒரே காரியத்தை இருவர் சேர்ந்து செய்வதைச் சுட்ட, ஒடு என்ற அடையாளம் நிற்கிறது. இப்படிச் சொல்வதை ஒருவினைக்கிளவி என்று சொல்லுவார்கள்.

இதில் மற்றொரு விசேஷம்: ராமனும் சீதையும் போகிறார்கள். ராமனோடு சீதை போனாள்; சீதையோடு ராமன் போனான் என்று இரண்டு வகையாகவும் அதே கருத்தைச் சொல்லலாம். ஆனால் இந்த மூன்று வாக்கியங்களுக்கும் சொல்லிலே மாத்திரம் அல்ல, பொருளிலும் வேறுபாடு இருக்கிறது. ராமனும் சீதையும் போனார்கள் என்றால், இருவரும் சமான மான நிலையிலே சென்றார்கள் என்று பொருள் கொள்ளலாம். ஆனால் ராமனோடு சீதை போனாள் என்றால் ராமன் முன்னே செல்லச் சீதை பின்னே சென்றாள் என்ற அர்த்தம் தொனிக்கிறது. ஆசிரியனும் மாணாக்கனும் வண்டியிலே செல்கிறார்கள். அதில் முன்னால் மாணாக்கன் உட்கார்ந்திருக்கலாம். ஆனாலும், "ஆசிரியனோடு மாணாக்கன் போகிறான்" என்று சொல்வதுதான் முறையாகும். யாருக்கு உயர்வு இருக்கிறதோ அவருக்கு "ஒடு" என்ற அடையாளம் கொடுக்கவேண்டும் என்று தொல்காப்பியர் சொல்கிறார்.

ஒடு வரும் இடங்களில் எல்லாம் இரண்டு பேரும் சமமாக ஒரு தொழிலைச் செய்கிறார்களா? இல்லை. அதில் வித்தியாசம் இருக்கிறது. "சுவரோடு உராய்ந்த எருமை" என்றால் எருமைதான் உராய்கிறதே ஒழியச் சுவர் உராயுந் தொழிலைச் செய்யவில்லை; அது நின்றபடியே இருக்கிறது. இது 'வேறு வினைக் கிளவி' என்ற பெயர் பெறும்.

'கல்லோடு கலந்த அரிசி' என்பது போல வருபவை மற்றொரு வகை. இதை அதனோடு மயங்கல் என்று குறிப்பர்.

இந்த நுணுகிய வித்தியாசங்களைக் கவனிப்பதே அருமை; கவனித்து வகைப்படுத்தி இலக்கணமாகச் சொல்வது அதனினும் அருமை. இந்த அருமைப்பாட்

டைத் தொல்காப்பியத்திலே காண்கிறோம். அதற்கு முற்பட்ட நூல்களிலும் ஓரளவு இந்த ஆராய்ச்சி இருந்திருக்க வேண்டும் என்றே தெரிகிறது. 'இப்படிப் புலவர் சொல்வார்கள்' என்ற குறிப்போடு வரும் தொல்காப்பியச் சூத்திரங்களை நோக்கும்போது அவ்வாறு நினைக்கத் தோன்றுகிறது.

# 19

# பார்க்காத பார்வை

"கண்ணிற் சிறந்த உறுப்பில்லை" என்று பழம் புலவர் ஒருவர் சொன்னதற்கு வியாக்கியானமே வேண்டியதில்லை. உலகம் முழுவதும் கண் உடையவர்களாலே பெருவளம் பெறுகிறது. நமக்கு அருமையான மனிதர்களைக் கண் என்றும், கண்மணி என்றும் பாராட்டிப் பேசுகிறோம். உயிர் மிகவும் அருமையானது; அதற்கு அடுத்த படியாக அரிய பொருளாக நிற்பது கண்.

அவ்வளவு உயர்வாகக் கருதுவதற்குரிய கண்ணைக்கூட மட்டமாக்கிவிடும் ஒன்று மனிதனிடம் இருக்கிறது. இந்தக் கண்ணை அகக்கண் என்று கூறுவது வழக்கம். புறக்கண்ணாலே மாத்திரம் பார்க்கும் பார்வை விலங்குகளுக்கும் இருக்கிறது. மனிதன் உயர்திணை ஆயிற்றே; அவன் அகக்கண்ணைக் கொண்டு பார்க்கத் தெரிந்தவனாதலால் அவனுக்கு அந்தப் பெருமை வந்தது. முகத்திலே உள்ள கண்கள் உருவம் உள்ள பொருளைத்தான் பார்க்கும். நிறமும் வடிவும் எப்படி உள்ளன என்று தெரிந்து கொள்ளும். அதற்கு மேலே பார்வை செல்லாது. புறவாயிலிலே நின்றுவிடும் பார்வை முகக்கண்ணால் பார்க்கும் பார்வை. புறத்தைக் கடந்து அகத்துள்ளே சென்று பார்க்கும் பார்வை ஒன்று உண்டு; அதையே அகக்கண் என்றும் அறிவு என்றும் சொல்வார்கள்.

> எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு.
>
> எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு.

என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார். புலன்களால் உலகில் உள்ள பொருள்களின் தன்மையை உணர்கிறோம். புலனுக்குத் தட்டுப்படும் அந்தத் தன்மையை மாத்திரம்

கொண்டு அதன் இயல்பை மெய்யென்று நினைத்துவிடக் கூடாது.

பாம்பு படம் எடுக்கிறது. அந்தப் படம் கண்ணாடியைப்போல் பளபளவென்று அழகாக இருக்கிறது. கண்ணினாலே பார்க்கின்ற பார்வைக்கு அழகாகத் தோன்றுவதனால் அந்தப் படம் நல்லது என்று சொல்லலாமா? புறக்கண்ணாலே கண்ட அளவிலே நின்று விட்டால் அழகான கண்ணாடியைச் சட்டென்று கையிலே எடுப்பதுபோல், அந்தப் பாம்புப் படத்தையும் பற்றத் தான் தோன்றும்; குழந்தை அப்படித்தானே செய்யும்? ஆனால் நாம், "ஐயோ பாம்பு!" என்று அலறுகிறோம். ஏன்? புறக்கண்ணாலே பார்க்கும் பார்வைக்குப் பிறகும் மற்றொரு பார்வை நமக்குப் பயன்படுகிறது. அந்த அழகிய படத்தில் உயிரைக் கொல்லும் விஷமும் இருக்கிறது என்பதை அந்தப் பார்வை சொல்கிறது. "நாகப் பாம்பு அழகிய படம் உடையதாக இருந்தாலும் கொல்லும் விஷத்தையுடைய பிராணி" என்று நம்முடைய அகக் கண்ணாகிய அறிவு விளக்குகிறது. ஆகையால் கண்ணாலே கண்ட பொருள் பளபளப்பாகத் தோன்றினாலும், அது உயிரைப் போக்கும் தன்மையுடையது என்ற உண்மையை உணரச் செய்வது அறிவு. "எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்ற வள்ளுவர் வாக்குக்கு இப்போது ஒருவாறு பொருள் தெரிந்துவிட்டது. கண்ணாலே கண்டதோடு நில்லாமல் கருத்தாலும் ஆராய்ந்து தெரிந்தால் அவன் அறிவாளி என்று சொல்லலாம். இந்த அறிவு மிகமிக நுணுகிச் சென்றால் அவனைச் சிறந்த அறிவாளி என்று சொல்ல வேண்டும். இந்தப் பார்வை புறக்கண்ணால் பாராத பார்வை. இதனால் பார்ப்பது மிகவும் இன்பத்தைத் தருவதென்று திருமூலர் சொல்லுகிறார். உண்மையை உணர்ந்தவனுக்கு உண்மை இன்பம் பிறக்கும்.

**முகத்தில் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்!**
**அகத்தில் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்.**

சீதாபிராட்டியைத் தேடிக்கொண்டு அநுமன் இலங்கைக்குப் போனான். அந்த ஊரெல்லாம் தேடப் புகுந்

தான். இரவு நேரத்தில் புகை புகா வாயிலெல்லாம் புகுந்து தேடினான். சீதாதேவியைக் கண்டான் இல்லை. ராவணனுடைய அந்தப்புரத்திலே நுழைந்தான். அங்கே ராவணனிடம் காதல்கொண்டு வாடிய பல மடந்தையரைக் கண்டான். பிறகு மயன்மகளும் ராவணன் மனைவியு மாகிய மண்டோதரி உறங்கிக்கொண்டிருந்த மாடத்துக் குச் சென்றான்.

அங்கே மண்டோதரியைக் கண்டான். அவளுடைய பேரழகையும் அமைதியையும் கண்டபோது அவனுக்குச் சந்தேகம் வந்துவிட்டது. இவள்தான் சீதையோ என்று சற்று நேரம் திகைத்துப் போனான். மணி விளக்குக ளெல்லாம் மழுங்கும்படியாகத் தன் மேனி ஒளி தழைப் புற்று விளங்கத் துயில்புரிகின்ற மண்டோதரியை அநுமன் கண்டு இவள் ஜானகியோ என்று ஐயுற்று உயிரிலே அக்கினி பற்றினாற்போல் வருத்தத்தை அடைந்தான் என்று கம்பர் சொல்கிறார்.

இன்ன தன்மையின் எரிமணி விளக்கங்கள்
  எழில்கெடப் பொலிகின்ற
தன்ன தின்னொளி தழைப்புறத் துயில்வுறு
  தையலைத் தகைவில்லான்
அன்ன ளாகிய சானகி இவளென
  அயிர்த்தகத் தெழுவெந்தீத்
துன்னும் ஆருயிர் உடலொடு சுடுவதோர்
  துயருழந் திவைசொன்னான்.

அநுமன் அதற்குமுன்னாலே சீதையைப் பார்த்ததில்லை. ராமனிடம் விடை பெற்றுக்கொண்டபோது அவன் கூறிய சீதையின் அங்க அடையாளங்களைக் கேட்டுக் கொண்டு வந்தான். அத்தனை மகளிர் கூட்டத்திலும் மண்டோதரி அழகியாகவும் உயர்வுடையவளாகவும் தோன்றினாள். கண்ணினால் பார்த்த அளவிலே அந்தப் பார்வை சீதையோ என்ற ஐயத்தை உண்டாக்கிவிட்டது. அதனால் அளவற்ற துக்கத்தையும் அடைந்தான். "நான் இந்த உலகத்திலே பிறந்த பிறவி வீணாய்விட்டது!" என்று மனமுடைந்து அழுங்கினான். "இவள் சீதையாக இருந்தால் ராமன் புகழ் தொலைந்தது; அவன் பெருமை தொலைந்தது; நானும் தொலைந்தேன். இந்த இலங்கையும் தொலைந்தது,

ராட்சசர்களும் அடியோடு தொலைந்தார்கள்'' என்று நைந்து சாம்பினன்.

அநுமன் முகக்கண் மாத்திரம் கொண்டு பார்க்கிறவனுக இருந்தால் இந்தத் துயரக்கடலிலே அமிழ்ந்திருப்பான். ஆனல் அவன் அகக் கண்ணலே பார்க்கும் பார்வையைப் பெற்றவன். நோக்காமல் நோக்குபவன். கண்ணை நம்பி ஆராய்வதோடு நில்லாமல் கருத்தையும் கலந்து ஆராய்பவன். இதைக் கம்பர் சொல்கிருர்.

கண்டு கண்ணொடு கருத்தொடு கடாவினன்.

கண்ணொடு கடாவியபோது அவன் ஐயத்திலும் துயரத்திலும் ஆழ்ந்தான். மேலே கருத்தொடு கடாவினன்; அப்போதுதான் உண்மை புலனயிற்று.

''சீதை மனிதத் திருமேனி படைத்தவள். இவள் வேறு இயல்பு கொண்டவள்: யக்ஷஜாதியோ ராட்சச ஜாதியோ தெரியவில்லை. தவிர ராமபிரான் மேல் உள்ளம் சென்ற காதலையுடைய பெண்டிருக்கு, மன்மதனுக இருந்தாலும் அவ்வுள்ளம் பிறன்பால் செல்லுமோ?'' என்று பார்க்காத பார்வை உதயமாயிற்று. மேலே இன்னும் சில காரணங்களை ஆராய்ந்து உண்மையை உணர்ந்துகொண்டான்.

அவன் பார்த்த பார்வையைக் காட்டிலும் பாராத பார்வையே உண்மையைத் தெளிவுறுத்தியது.

இப்படி ஒரு பார்வை உண்டு என்பதை இலக்கியப் புலவர்கள் உணர்ந்து பல இடங்களிலே சொல்லியிருக்கிருர்கள். அந்தப் பார்வை கண்ணலே பார்ப்பதன்று என்பதையும் குறிப்பாகத் தெரிவித்திருக்கிருர்கள். இலக்கணப்புலவராகிய தொல்காப்பியரும் இந்தப் பார்வையைப் பற்றிச் சொல்கிருர். ''நோக்கல் நோக்கம்'' என்று அவர் இதனைக் குறிக்கிருர். 'நோக்கு அல்லாத நோக்கம்' என்று அதை விரிக்கவேண்டும்; ''பார்வை அல்லாத பார்வை'' என்பது பொருள். 'நோக்கப் பொருண்மை நோக்கிய நோக்கமும், நோக்கல் நோக்கமும் என இரண்டு வகைப்படும். நோக்கிய நோக்கம் கண்ணல் நோக்குதல்; நோக்கல் நோக்கம் மனத்தால் ஒன்றனை நோக்குதல்' என்று சேனவரையர் இதை விளக்குகிருர்.

பார்த்தல் என்ற மாத்திரத்தில் கண்ணாலே பார்ப்பதுதான் ஞாபகத்துக்கு வரும். நோக்குதல் அல்லாத நோக்கம் ஒன்று உண்டு என்பதை இந்தத் தொடர் நினைவுறுத்துகிறது. இலக்கியங்களில் நோக்குதல் என்ற சொல் வரும் இடங்களிலெல்லாம் கண்ணாலே பார்த்தல் என்று பொருள்கொண்டு, அங்கே கண் எங்கே என்று தேடக்கூடாது. கருத்தினாலே கருதுவதையும் நோக்கு என்று சொல்வதுண்டு. அந்த நோக்கு, நோக்கு அல்லாத நோக்கு; பார்க்காத பார்வை.

**வான்நோக்கி வாழும் உயிர்எல்லாம் மன்னவன்**
**கோல்நோக்கி வாழும் குடி**

என்ற குறளை, இந்தப் பார்க்காத பார்வைக்கு உதாரணமாகக் காட்டியிருக்கிறார்கள் உரைகாரர்கள்.

"உயிர்களெல்லாம் வானத்தைக் கண்களால் அண்ணாந்து பார்த்துக்கொண்டு வாழும்" என்று அர்த்தம் செய்யலாமா? "வானினால் உண்டாகும் மழையாகிய பயனைக் கருதி, அது கிடைக்கும் என்று நம்பி உயிர்கள் உலகத்தில் வாழும்" என்று பொருள் கொள்வதுவே முறை. இங்கே நோக்கும் என்ற சொல் இருந்தாலும் அது கண்ணாலே பார்க்கும் பார்வையைக் குறிப்பது அன்று; நோக்கல் நோக்கமாகிய, பார்க்காத பார்வையையே குறிக்கும்.

# 20

# அகராதிக்கும் அப்பால்

அயல் நாட்டிலிருந்து வந்த ஒருவருக்குக் கொஞ்சம் கொஞ்சம் தமிழ் தெரியும் என்று அவரைத் தெரிந்தவர்கள் சொல்வார்கள். அவருக்குச் சில தமிழ் வார்த்தைகள் தெரியும். கையிலே ஒரு தமிழ் அகராதி வைத்துக் கொண்டிருப்பார்; தெரியாத வார்த்தைக்கு உடனே அதைப் புரட்டிப் பார்த்து அர்த்தம் தெரிந்துகொள்வார்.

ஒரு நண்பருடைய வீட்டுக்கு அவர் வந்தார். நண்பர் தமிழர். இருவருக்கும் தெரிந்த மொழி ஆங்கிலம். "உங்களுக்குத் தமிழ்கூடத் தெரியுமாமே!" என்று தமிழர் அயல் நாட்டாரைக் கேட்டார். "ஏதோ பேசத் தெரியும்; பேசுவதை ஒருவாறு தெரிந்துகொள்வேன்" என்று சொன்னார்.

அந்த இருவரும் பேசிக்கொண்டிருக்கையில் தமிழருடைய வேலைக்காரன் அங்கே வந்தான். "வேலைக்காரர்கள் வேலையை முடித்துவிட்டார்கள். என்ன கூலி கொடுக்கட்டும்?" என்று கேட்டான். "தலைக்கு எட்டணாக் கொடுத்துப் போகச் சொல், அப்பா" என்றார் தமிழ்க் கனவான்.

வெளிநாட்டு நண்பர் அந்தச் சம்பாஷணையைக் கவனித்தார். வேலை, கூலி, தலை, எட்டணா என்ற வார்த்தைகளுக்கு அவர் அர்த்தம் தெரிந்துகொண்டவர். 'வேலைக்குக் கூலி எட்டணாக் கொடுக்கச் சொன்னார். ஆனால் இங்கே தலைக்கு என்ன வேலை?' என்று அவர் யோசித்தார்.

"அவர்கள் என்ன வேலை செய்தார்கள்?" என்று தமிழ்க் கனவானைக் கேட்டார்.

"புழைக்கடையில் ஒரு கிணறு வெட்டினார்கள்" என்று பதில் வந்தது. அவ்விருவரும் ஆங்கிலத்தில்தான் பேசிக் கொண்டார்கள்.

மறுபடியும் வெளிநாட்டாருக்குச் சந்தேகம் வந்து விட்டது. 'தலைக்கு எட்டணா என்றாரே; தலைக்கு எதற்கு எட்டணா?' - ஒன்றும் விளங்கவே இல்லை. அவரையே கேட்டார், "வேலைக்கும் தலைக்கும் என்ன சம்பந்தம்?" என்று. தமிழரோ அவர் கேள்வியையே புரிந்துகொள்ள வில்லை. "எந்தத் தலை?" என்று கேட்டார்.

"நீங்கள் உங்கள் வேலைக்காரரிடம் பேசும்போது சொன்னீர்களே, அந்தத் தலை."

சிறிது யோசித்த பிறகுதான் அந்த நண்பர் எதைச் சுட்டுகிறார் என்று தெரியவந்தது. இடிஇடி யென்று சிரித்தார். "தலைக்கும் வேலைக்கும் ஒன்றும் சம்பந்தம் இல்லை. தலை என்றால் இங்கே ஆள் என்று அர்த்தம். ஆளுக்கு எட்டணாக் கூலி கொடு என்று சொன்னேன். தலைக்கு எட்டணா என்றது அதனைத்தான்" என்று அவருக்கு விஷயத்தை விளக்கினார்.

வெளிநாட்டுக் கனவான் அதோடு விடவில்லை. தம்மிடமிருந்த தமிழகராதியை எடுத்தார்; பார்த்தார். தலை என்பதற்கு ஆள் என்ற அர்த்தம் அதில் காண வில்லை. "நீங்கள் சொன்ன பொருள் இதில் இல்லையே!" என்று கேட்டார்.

தமிழ் நண்பர் என்ன சொல்வார்? "அகராதியில் இல்லையென்பது உண்மைதான். ஆனால் இது அகரா திக்குப் புறம்பான வழக்கம்; வாழ்க்கையோடு ஒட்டி உணர வேண்டியது" என்று சொல்லியிருக்கலாம். தமிழ் இலக்கணம் படித்திருந்தால், "இயற்கையான பொருளை யுடைய பெயராக இருந்தால் தலைக்குத் தலையென்றே அர்த்தம் பண்ண வேண்டும். இது குறிப்பாகப் பொரு ளைச் சொல்லும் வகைகளில் ஒன்று. தலை என்ற பெயர் அதையுடைய மனிதனுக்கு ஆகி வந்தது. இதற்கு ஆகு பெயர் என்று இலக்கணத்தில் பேர் கொடுத்திருக்கிறார் கள்" என்றும் சொல்லலாம்.

"ஏ துடைப்பம், ஏ துடைப்பம்!" என்று வாசலில் பலமாக யாரோ கூப்பிட்டார்கள். 'யாரையப்பா இப்படி வெளிப்படையாக வைகிறார்கள்?' என்று பார்க்க வெளியில் வந்தேன். வீதியிலே சென்றுகொண்டிருந்த ஒருவனை என் பக்கத்து வீட்டு நண்பர் அழைத்துக்கொண்டிருந்தார். 'இவருக்கு அவன்மேல் ஏன் அத்தனை கோபம்? இப்படி இரைந்து கத்துகிறாரே! அவனுக்குக் கோபம் வந்து ஏதாவது செய்தால் என்ன ஆவது?' என்றெல்லாம் என் சிந்தனை ஓட இடமுண்டு. ஆனால் என் கண் அதற்கு இடம் கொடுக்கவில்லை. வீதியிலே சென்றுகொண்டிருந்தவன் துடைப்பம் விற்கிறவன். அவனைத் துடைப்பம் என்று கூப்பிடுவது தமிழ் மரபு. அவன் பேரைச் சொல்லிக் கூப்பிடலாம். அது நமக்குத் தெரியாது. அவனை நாம் அழைக்கும்படியாகச் செய்வது அந்தத் துடைப்பந்தான். "ஏ துடைப்பக்காரா!" என்று அழைக்கலாம். சுருக்கு வழி ஒன்று இருக்கும்போது நீண்ட வழியிலே போக மனிதனுடைய சோம்பற் குணம் இடம் கொடுப்பதில்லை. 'துடைப்பம்' என்று கூப்பிட்டாலே போதுமானதாக இருக்கும்போது மேலே நீட்டி முழக்குவானேன்?

துடைப்பம் என்று கூப்பிடுபவன் கோபத்தால் அழைக்கவில்லை. துடைப்பம் விற்பவனும் அந்த அழைப்பைக் கேட்டுக் கோபம் கொள்ளவில்லை. 'நமக்கு இங்கே வியாபாரம் நடக்கும்' என்ற எண்ணத்தால் அந்த அழைப்பை அவன் சந்தோஷமாகவே ஏற்றுக்கொள்கிறான். யாரையாவது வையும்போது கோபத்தையும் எரிச்சலையும் உண்டாக்கும் அதே சொல், இங்கே சந்தோஷத்தையும் லாபத்தையும் உண்டாக்குகிறது.

அகராதியைப் பார்த்தால் துடைப்பம் என்பதற்கு விளக்குமாறு என்றுதான் பொருள் எழுதியிருக்கும். துடைப்பம் விற்பவன் என்று இராது. ஆனாலும் சந்தர்ப்ப விசேஷத்தால் அந்தச் சொல் குறிப்பாக அந்த அர்த்தத்தைத் தரும் என்பதைத் தமிழன் உணர்வான்.

துடைப்பம் என்ற பெயர் அதை வைத்துக் கொண்டு விற்பவனுக்கு ஆகும் பெயர். ஆகையால்

இது இலக்கணக்காரருடைய ஆகுபெயர் வரிசையில் சேரும்.

ஒரு பெயருக்கு இயற்கையான பொருள் எதுவோ அதைச் சுட்டும்போது அது இயற்கைப் பெயராக நிற்கிறது. அகராதியிலே அதற்கு என்ன பொருள் என்று பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். ஆனால் அதற்குப் புறம்பாக வேறு ஒரு பொருளுக்கு ஆகும் பெயர்களை வழக்கத்தால்தான் தெரிந்துகொள்ள வேண்டும். அவற்றை அகராதி கொண்டு தெரிந்துகொள்ள முடியாது; வாழ்க்கையைக் கொண்டுதான் தெரிந்துகொள்ள வேண்டும்.

இந்த ஆகு பெயர்களைத் தொல்காப்பியர் ஒன்பது வகையாகப் பிரித்து, இவற்றைப்போல் வேறு வகையாகவும் வரும் என்று சொன்னார். உரைகாரர்கள் அந்த வேறு வகைகளையும் ஒருவாறு தொகுத்துச் சொன்னார்கள். பின்னாலே நூல் இயற்றிய நன்னூல் ஆசிரியர் எல்லாவற்றையும் ஆராய்ந்து பன்னிரண்டு வகையாக்கி அவற்றிலும் வேறு பிரிவுகளைக் கொள்ளும்படியாக இலக்கணம் செய்தார்.

"இன்றைக்கு என்ன காய்கறி, விருந்துக்கு?" என்று கேட்கிறார் சுவை அறியும் நண்பர்.

"வாழை, சேனை, பாகல், பூசணி" என்று அடுக்குகிறார் சாப்பாடு போடுபவர்.

வாழைக்காயும் சேனைக்கிழங்கும் பாகற்காயும் பூசணிக்காயும் அந்த விருந்துக்கு உபயோகமாகின்றன என்பதைத்தான் அவர் சொல்கிறார். ஆனால் வாழை, சேனை, பாகல், பூசணி என்று சொல்லுகிறார். இயற்கையாக அந்தப் பெயர்கள் வாழைமரத்தையும், சேனைச் செடியையும், பாகற் கொடியையும், பூசணிக் கொடியையுந்தான் உணர்த்தும். அவற்றிலுள்ள காயையும் கிழங்கையும் இங்கே ஆகு பெயர்களாகி உணர்த்தின. கொடி செடிகள் காய்களை உடையவை. கொடிக்குக் காய் ஓர் உறுப்பு; சினை என்றும் சொல்வர். காய்க்குக் கொடியும் செடியும் ஆதாரம்; அவற்றை முதற்பொருள்கள் என்று இலக்கணக்காரர் கூறுவர். வாழை என்னும்

முதற் பொருளின் பெயர் அதில் உள்ள வாழைக்காயாகிய சினைப் பொருளுக்கு ஆகு பெயராய் வந்தது. இதை 'முதலிற் கூறும் சினை அறி கிளவி' என்று கூறுவர் தொல்காப்பியர். கூறப்படுவது முதற்பொருளுக்கு உரிய பெயர்; ஆனால் அறியப்படுவதோ சினைப் பொருள். அதனால் இப்பெயர் வந்தது. நன்னூலார் இந்தப் பெயரைச் சுருக்கி 'முதலாகு பெயர்' என்று வழங்கும்படியாகக் குறிப்பித்தார்.

இந்த முறைக்கு நேர் விரோதம் முதலிலே நாம் சொன்ன தலை சமாசாரம். அங்கே ஆள் முதற்பொருள். தலை சினைப்பொருள். சினையின் பெயராகிய தலை என்பது சினையை உடைய முதலின் பெயராகிய ஆளுக்கு வந்தது. இது 'சினையிற் கூறும் முதலறி கிளவி' என்றும் சினையாகு பெயர் என்றும் கூறப்படும்.

“தீபாவளிக்குத் துகிலி நாலு ஜோடி வாங்கப் போகிறேன்” என்று மாமனார் சொல்கிறார். துகிலி என்பது ஓர் ஊர். “பனாரஸ் இரண்டு ஜோடி கிடைக்குமா?” என்று சம்பந்தி கேட்கிறார். பனாரஸ் என்பது காசி. இவர்கள் பேச்சிலே துகிலி, காசி இரண்டையும் ஊரென்றா நினைப்பது? துகிலி அங்கவஸ்திரத்தையும் காசிப்பட்டையும் அப்படிக் குறிப்பாகச் சொல்கிறார்கள். இயற்கையாக இடத்துக்கு உரிய பெயர் அங்கே உண்டான பொருளுக்கு ஆகு பெயர் ஆயிற்று. இதைப் 'பிறந்தவழிக் கூறல்' என்றும் இடவாகு பெயர் என்றும் கூறுவர்.

இதற்கு எதிரானது துடைப்பக் கதை. துடைப்பம் என்பது இடத்திலே உள்ள பொருளின் பெயர்; அதைத் தாங்குபவனுக்கு அது ஆகிறது. அதைத் தானி ஆகுபெயர் என்று இலக்கணம் கூறும்.

இத்தகைய விசித்திரமான பல குறிப்புகள் பேச்சினிடையே வருகின்றன. இடையனும் ஏழையும் பிச்சைக்காரனும் பேதையும் இந்த ஆகு பெயர்களைப் பேச்சிலே வழங்குகிறார்கள். ஆனால் ஆகு பெயர்கள் என்ற இலக்கணம் அவர்களுக்குத் தெரியாது. 'இந்தப் பேச்

சிலே குறிப்பு இருக்கிறது; அதில் விசித்திரம் இருக்கிறது. அதில் இத்தனே வகை உண்டு' என்று ஆராய்ந்து தெரிந்துகொண்டவற்றை இலக்கணம் என்ற பெயரால் புலவர்கள் சொல்லியிருக்கிருர்கள்.

தமிழர் வாழ்வை நன்ருகத் தெரிந்துகொள்ளாவிட்டால் இப்படியெல்லாம் ஆராயவும் வகுக்கவும் முடியுமா? ஆகவே, இலக்கணம் வாழ்க்கைக்குப் புறம்பானது அல்ல என்பதை வற்புறுத்த ஆகு பெயர் இலக்கணமும் ஒரு சான்று என்று சொல்வதில் என்ன பிழை?

## 21

# அழைப்பின் சரித்திரம்

ஒரு செட்டியார் இரவில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தார். ஏதோ சத்தம் கேட்டு விழித்துக்கொண்டார். படுத்தபடியே கவனித்தபோது தம் வீட்டில் திருடன் வந்திருப்பது குறிப்பாகத் தெரிந்தது. உடனே எழுந்திருந்து ஏதாவது செய்தால் திருடன் தம்மை எதிர்த்து அடித்துவிட்டால் என்ன செய்வது என்று பயந்தார். மெல்ல அருகில் இருந்த தம் மனைவியைச் சத்தம் போடாமல் நிமிண்டி எழுப்பிப் பேச ஆரம்பித்தார்.

"ஆண்டவன் அருளால் நமக்கு ஒரு குழந்தை பிறக்கப்போகிறது. அதற்கு என்ன பெயர் வைப்பது?" என்று செட்டியார் கேட்டார்.

"எங்கள் தகப்பனர் பெயரை வைக்கலாம்" என்ருள் அவள்.

"அதெல்லாம் கூடாது. நான் ராமன் என்ற பெயரைத்தான் வைக்கப்போகிறேன். பல நாளாக அப்படித்தான் மனசில் நினைத்துக்கொண்டிருக்கிறேன். நீயும் நல்லபடியாகப் பிள்ளை பெற்றுக் குழந்தை கடவுள் அருளால் நன்ருக இருந்தால் அவனை அலங்காரஞ் செய்து கொஞ்சுவேன். ராமா ராமா என்று வாயார அழைப்பேன்" என்ருர்.

"நான் வேறு பெயர்தான் வைப்பேன்" என்ருள் அவர் மனைவி.

"முடியவே முடியாது, நான் ராமன் என்றுதான் பெயர் வைப்பேன். ராமா, ராமா என்றுதான் கூப்பிடுவேன். நீ என்ன எனக்குச் சொல்வது?" என்று பேசிக்கொண்டே; "ராமா அ அ! ராமா அ அ!" என்று பலமாக அழைத்துக் கூவத் தொடங்கிவிட்டார்.

பக்கத்து வீட்டு ராமன் செட்டியார் இந்தக் குரலைக் கேட்டுத் தம்மைச் செட்டியார் அழைக்கிறாரென்று எண்ணி, 'ஏதோ அபாயம் போலும்!' என்ற நினைவினால் அவசரமாக எழுந்து வந்து கதவைத் தட்டினார். இந்தச் செட்டியார் எழுந்துபோய்க் கதவை திறந்து அவரை அழைத்து வந்தார்.

"என்னை ஏன் அழைத்தீர்கள்?" என்று வந்தவர் உள்ளே கேட்டார்.

"பாதி ராத்திரியில் உங்களை நான் எதற்காக அழைக்கிறேன்? எனக்குப் பிள்ளை பிறந்தால் என்ன பெயர் வைப்பது என்பதுபற்றி எனக்கும் இவளுக்கும் விவாதம் ஏற்பட்டது. நான் ராமன் என்றுதான் பெயர் வைத்து அழைப்பேன் என்றேன். இவள் வேறு பெயர்தான் வைக்கவேண்டும் என்றாள். நான் ஒரே பிடிவாதமாக ராமா என்றுதான் கூப்பிடுவேன் என்று இவளுக்குக் கூப்பிட்டுக் காட்டினேன். நான் சொல்வதில் நம்பிக்கை இல்லாவிட்டால் அதோ இருக்கிறாரே, அவரைக் கேட்டுப் பாருங்கள்" என்று சொல்லி மேல்பரணைக் காட்டினார்.

செட்டியார் விழித்துக்கொண்டது முதல் ஒன்றும் செய்யத் தோன்றாமல் திருடன் அங்கே ஒளிந்து கொண்டிருந்தான். செட்டியார் சுட்டிக் காட்டிய பிறகு தான் ராமன் செட்டியாருக்கு நண்பருடைய தந்திரம் தெரிந்தது. திருடனை இரண்டுபேரும் சேர்ந்து பிடித்துச் செய்யவேண்டியதைச் செய்தார்களாம்.

இப்படி ஒரு கதை வெகு காலமாகத் தமிழ்நாட்டில் வழங்குகிறது. செட்டியார் குழந்தையை அழைப்பதாக இருந்தால் அவ்வளவு சத்தம் போட்டிருக்க வேண்டாம்; "ராமா அ அ அ" என்று நீட்டியிருக்கவும் வேண்டாம். அவர் அயல் வீட்டு ராமனை அழைக்கவே அப்படிச் செய்தார்; அவன் தூங்குவான் என்று எண்ணியே அதிகமாக நீட்டினார்.

அயலில் இருப்பவரை அழைப்பது ஒரு விதம்; தூரத்தில் இருப்பவரை அழைப்பது வேறு விதம். அழைப்பதை விளித்தல் என்றும் சொல்வதுண்டு.

இப்போது மலையாளத்தில் அந்தச் சொல் சாதாரண வழக்கில் இருக்கிறது. ஒருவனை முன்னிட்டு அழைப்பதை விளி என்று சொல்வார்கள். அப்படி அழைக்கும்போது அவனுடைய பெயரின் உருவம் வேறுபடுகிறது. ராமன் என்பவனை விளிக்கும்போது அந்தச் சொல், 'ராமா' என்று ஆகிறது. பெண்ணை விளிக்கும்போது, 'பெண்ணே' என்று சொல்கிறோம். இந்த வேறுபாடு, பெயர்ச் சொல் லுக்கு உரிய, வேற்றுமை என்னும் பகுதியில் வருகிறது. விளி வேற்றுமை அல்லது எட்டாவது வேற்றுமை என்று இதைச் சொல்வார்கள்.

முதல் ஏழு வேற்றுமைகளையும்பற்றி வேற்றுமை இயல், வேற்றுமை மயங்கியல் என்று இரண்டு பகுதி களில் தொல்காப்பியர் இலக்கணம் சொல்லியிருக்கிறார். விளி வேற்றுமையைப்பற்றி விளி மரபு என்ற பகுதி சொல்கிறது.

அந்தப் பகுதியில் எந்த எந்தப் பெயர்கள் அழைப் பதற்கு வரும், எவை வருவதில்லை என்று சொல்கிறார். வார்த்தையானது விளிக்கும்போது எப்படி எப்படி மாறுபடுகின்றது என்பதை விரிவாக வகுக்கிறார்.

தம்பி என்ற பெயர் அழைக்கும்போது தம்பீ என்று வருகிறது. கடைசி எழுத்து மாறுபடுகிறது. இது ஒரு விதம்.

அடிகள் என்பது அடிகாள் என்று வரும். இங்கே கடைசி எழுத்துக்கு முந்தின எழுத்து நீண்டது.

முட்டாள் என்பது முட்டாளே என்று வரும்போது கடைசியில் ஏ என்ற எழுத்து வந்து அடைகிறது.

'தம்பி வா' என்று ஒரு வேறுபாடும் இன்றி உள்ள படியே வைத்து அழைப்பதும் உண்டு.

இந்த நான்கில் தனித் தனியே ஒவ்வொன்று வரு வதும், இரண்டு மூன்று சேர்ந்து வருவதும் உண்டு.

பக்கத்தில் உள்ளவன் பெயரை உள்ளபடியே வைத்து அழைப்பார்கள். நீட்டாமல் ராம, குமர என் பதுபோல அழைப்பார்கள். தூரம் அதிகமானால் நீட்டுவதும் அதிகமாகும்.

எல்லா வார்த்தைகளும் அழைக்க உபயோகப்படும் என்றுதான் நமக்குத் தோற்றுகிறது. மனிதனே, பெண்ணே, காடே, மாடே, தீயே, மரமே என்று சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால் இப்படி அழைக்க வராத வார்த்தைகளும் உண்டு; அவை சட்டென்று நமக்கு நினைவுக்கு வரா.

ராமன் என்று ஒருவனுக்குப் பெயர். அவனை ராமன் என்று சில சமயங்களிலும், பிறகு அவன் என்று பல தடவையும் சுட்டிப் பேசுகிறோம். அழைக்க வேண்டுமானால் ராமா என்று அழைக்கிறோம். ராமனையே சுட்டிய அவன் என்ற பெயராலே அவனை அழைக்கலாமா? 'அவனே' என்று அழைக்கிறோமா? இல்லை; ராமன் என்ற பெயர் விளியை ஏற்கும்: அவன் என்ற பெயர் ஏலாது. தான், யான், அவன், இவன், யாவன், அவள், இவள், யாவள், அவர், இவர், யாவர், நீ, நீர் என்பவை அழைக்க முடியாத பெயர்கள்.

நாளடைவில் மொழியில் பல புதிய முறைகள் வந்து அமைகின்றன. கூடாது என்று விலக்கிய ஒன்று பிறகு வந்து இலக்கண மாகிவிடுகிறது. தொல்காப்பியத்தில் சில முறைகளைச் சொல்லி, இப்படியெல்லாம் வருவதில்லை என்று தொல்காப்பியர் எடுத்துச்சொல்கிறார். அவர் காலத்துக்கு முன்பும், அவர் காலத்திலும் அத்தகைய வழக்குகள் இல்லாமல் இருந்திருக்கும். ஆனால் நாளடைவில் அவர் கூறிய இலக்கணத்துக்கு நேர்மாறாக வழக்கு மாறிவிடுவதும் உண்டு. பின் வந்த இலக்கணக்காரர்கள் அதற்கு ஏற்றபடி இலக்கணம் வகுப்பார்கள்.

இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் இயற்றப் பெற்ற கடைச்சங்க நூல்களில் தொல்காப்பியர் விலக்கிய சில முறைகள் வந்திருக்கின்றன. ஓர் இலக்கணக்காரர், 'இது நாட்டில் இல்லை' என்று சொன்ன பிறகு அந்த இலக்கணத்தைப் போற்றுபவர்கள் அதையே சட்டமாகக் கொண்டு வழங்குவார்கள். அதற்கு மாறுபாடாக வரவேண்டுமானால் பல காலம் ஆக வேண்டும். உடனே விரோதமான வழக்கு ஏற்படுவது அரிது. சங்க நூல் வழக்குக்களிற் சில, தொல்காப்பிய விதிகளுக்கு

மாறுபட்டிருப்பதற்குக் காரணம், தொல்காப்பியத்துக்கும் அந்த நூல்களுக்கும் இடையே பல காலம் சென்றதுதான். இந்த மாறுபட்ட வழக்கே தொல்காப்பியத்தின் பழமையை நிரூபிக்கும் என்று ஆராய்ச்சிக்காரர் சொல்வதுண்டு.

இப்படி வந்த மாறுபாடுகளுள் ஒன்று விளி வேற்றுமையிலும் இருக்கிறது. தம்மைச் சேர்ந்தவனைத் தமன் என்றும், நம்மைச் சேர்ந்தவனை நமன் என்றும், நும்மைச் சேர்ந்தவன் என்ற அர்த்தத்தில் நுமன் என்றும், எம்மைச் சேர்ந்தவனென்று குறிக்க எமன் என்றும் சொல்வது தமிழ் மரபு. இந்த வரிசையில் தமர், தமள், நமர், நமள், நுமர், நுமள், எமர், எமள் என்ற வார்த்தைகள் வேறு இருக்கின்றன. இன்னும் தம்மான், நம்மான், நும்மான், எம்மான் முதலியனவும் உள்ளன. 'த ந நு எ என்று ஆரம்பம், ன், ர், ள் என்ற இறுதியும் உடைய இந்தச் சொற்கள் விளிவேற்றுமையைக் கொள்ளாதவை' என்று தொல்காப்பியர் ஒரு சூத்திரம் செய்திருக்கிறார். அவர் காலத்தில் அந்த வார்த்தைகள் விளி வேற்றுமையை ஏற்பதில்லை என்று அதனால் தெரிகிறது.

ஆனால் நாளடைவில் வழக்கம் மாறியது. "எம்மானே தோன்றினாய்" என்று கவிஞர் பாடினர். எம்மான் என்பது தொல்காப்பியர் காலத்தில் விளி பெறாது. சீவகசிந்தாமணியில் விளி பெற்றுவிட்டது. நமர் என்பது தொல்காப்பியருக்கு விளி பெறாப் பெயர். பிற்காலத்திலோ, "நமர்காள்", "நமரங்காள்" என்று விளி பெற்றுவிட்டது. இப்படியே தமர்காள், எமர்காள் என்றெல்லாம் வந்துவிட்டன. தொல்காப்பியர் விலக்கின வார்த்தைகளில் நுவில் ஆரம்பிப்பவை அல்லாத மற்ற எல்லாம் இப்படி மாறவே, காலத்துக்கு ஏற்றபடி இலக்கணம் செய்ய வேண்டியது அவசியம் ஆயிற்று. பிற்காலத்தில் வந்த நன்னூலார் இதைக் கவனித்தார். 'தொல்காப்பியர் இதை உணர்ந்துகொள்ளவில்லை' என்று அவர் முன்புள்ளோரைக் குறை கூறவில்லை. 'இலக்கணத்துக்கு விரோதம் இது; தவறு' என்று பின்வந்தவர்களை வெருட்டவும் இல்லை. உயிருள்ள மொழியில் இப்படி

உண்டாகும் மாறுபாடுகள் அதன் வளர்ச்சியைக் குறிக்கும் அடையாளங்கள் என்று அவர் அறிந்தவர். ஆகவே, மற்றவற்றை விட்டுவிட்டு, "ஞ என்ற எழுத்தை முதலாகவும் ன், ள், ர் என்பவற்றை இறுதியாகவும் உடைய சொற்கள் விளியை ஏலா" என்று மாத்திரம் இலக்கணம் செய்தார்.

இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் செய்வது தான் முறை. இலக்கணம் இருப்பதனால் இலக்கியமும் இருந்தது என்று தெரிந்துகொண்டு, சரித்திரம் கூறுவதற்கு இந்த முறையே பேருதவியாக நிற்கிறது. அமைக்கும் வழக்கத்துக்கும் சரித்திரம் இருப்பதைத் தொல்காப்பியமும் நன்னூலும் சேர்ந்து தெரிவிக்கின்றன.

# 22

# சொல்லும் பொருளும்

ஒரு மனிதன் நோயினால் மிக்க வேதனைக்கு உள்ளாகிறான். நோய் தாங்காமல் வாய்விட்டு அலறுகிறான்; ஐயோ என்று கத்துகிறான்; முனகுகிறான். இவ்வளவும் அவனுடைய வேதனைக்கு அறிகுறியாக வரும் ஒலிகள். ஆனால் இந்த ஒலிகளிலே ஒன்றுக்கொன்று வேறுபாடு உண்டு.

'பொறுக்க முடியவில்லையே!' என்று அலறும்போது அவன் தன் உணர்ச்சியை வார்த்தைகளால் வெளியிடுகிறான். 'ஐயோ!' என்னும்போது பல வார்த்தைகளால் வெளியிட முடியாமல் ஒரே வார்த்தையில் வெளியிடுகிறான். அதுவும் இயலாதபோது முனகுகிறான். அதற்கும் சக்தியில்லாமற் போனால் அவன் முகத்திலும் அங்கங்களிலும் வேதனையின் விகாரங்கள் தோன்றுகின்றன.

அவனுக்கு வேதனை இருப்பதை இப்படி நான்கு வகையாக உணர்த்தும் முறைகள் உள்ளன. முகத்தினாலும் அங்க அசைவாலும் தெரிவிப்பது மெய்ப்பாடு என்று பெயர் பெறும். அங்கே ஒலி இல்லை. ஒலியின் எல்லைக்குள் அந்த வெளிப்பாடு வரும்போது மூன்றுவிதமான உருவத்தை அடைகிறது. வெறும் ஒலியாக முனகுகிறான்; அல்லது ஐயோ என்று அலறுகிறான். சக்தியிருந்தால், 'இன்னது செய்கிறது' என்று தெளிவாகச் சொல்லுகிறான். இந்த மூன்றிலுங்கூடப் பின் இரண்டும் சொல் என்ற உருவத்தைப் பெறுகின்றன. முனகல் சொல் அல்ல; மெய்ப்பாட்டுக்கு அடுத்த நிலையில் ஒலியாக வருகிறதே அன்றிச் சொல் ஆவதில்லை.

மேலே சொன்ன மூன்று வகையான ஒலிக்கும் அர்த்தம் உண்டு. ஆனால், அந்த அர்த்தம் மூன்று வகையாகப் புலப்படுகிறது. அர்த்தம் உடையவை எல்லாம் சொற்கள் என்று சொல்ல முடியாது. ஆனால் சொற்களெல்லாம்

அர்த்தம் உடையன என்று சொல்லலாம். இந்த இரண்டுக்கும் வேறுபாடு என்ன? முனகலில் சொல் என்ற உருவம் இல்லை. மற்றவற்றில் அது உண்டு.

தொல்காப்பியர் சொல்லின் இலக்கணத்தை வகுக்கும் போது மிகவும் ஜாக்கிரதையாகச் சொல்கிறார். முதலில்,

எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே

என்று சொன்னார். உடனே பொருள் குறிக்கும் வேறு விதமான ஒலிக்கும், சொல்லுக்கும் வித்தியாசம் இருப்பதைச் சொல்லுகிறார். ஒரு வார்த்தைக்குச் சப்தமாத்திரத்தில் ஓர் உருவம் உண்டு. அது அறிவோடு சம்பந்தப்பட்டு ஒரு பொருளைக் குறிக்கின்றது. இந்தச் சொல்லும் பொருளும் சக்தியும் சிவமும்போல இணைந்து நிற்பவை. சக்தியையும் சிவத்தையும் வியவகாரத்துக்காகப் பிரித்துப் பேசுவது போலச் சொல்லையும் பொருளையும் சில காரணங்களுக்காகப் பிரித்துச் சுட்டும் சந்தர்ப்பம் உண்டு. மலரில் நிறத்தையும் உருவத்தையும் தனித்தனியே சுட்டிக் காட்டுகிறோம். அப்போது நிறத்தையோ உருவத்தையோ வேறாகப் பிரித்து, 'இதோ பார்' என்று காட்டுவதில்லை. சொல்லை நோக்கும்போது அதன் உருவமும் அதன் பொருளும் இணைந்து நிற்பதைக் காண்கிறோம். அதற்கு இந்த இரண்டு தன்மைகள் இருப்பதையும் உணர்கிறோம். நீர் என்று சொல்லும்போது அந்தத் தமிழ்ச் சொல்லுக்குத் தனியே ஓர் உருவம் இருக்கிறது. எழுத்துக்களால் ஆன உருவம் அது. அந்தச் சொல்லால் குறிக்கப்படும் பொருள் ஒன்று தனியே இருக்கிறது. தமிழ் அறியாத ஒருவன் காதில், 'நீர்' என்ற சப்தம் பட்டால் அவனுக்கு அந்தச் சொல் மாத்திரம் தெரிய வருகிறது. அது வெறும் சப்த மாத்திரமாக நிற்கிறது. தமிழ் தெரிந்தவனுக்கு அந்தச் சொல்லுணர்வோடு அதன் பொருளும் உணரக் கிடக்கிறது. 'ஐயோ' என்பதும் பாஷை தெரிந்தவனுக்கு மாத்திரம் பொருளை உணர்த்துகிறது. அது தனியான சொல்லுருவத்தைப் பெற்றிருப்பதுதான் காரணம். முனகல் அத்தகையதன்று. எந்த மொழி பேசுபவனாக இருந்தாலும் முனகலின் பொருளை உணர்ந்துகொள்வான். அது மொழியின் எல்லையைக் கடந்து, சொல் உருவம் அற்று நிற்கிறது.

சொல் என்றால் அதற்கென்று ஓர் உருவமும், அதனால் குறிக்கப் பெறும் பொருளும் இருக்கவேண்டும். பொருள் இருந்தும் சொல் உருவம் பெறுதவை, எல்லா மொழிகளுக்கும் பொதுவான முனகல், தும்மல் முதலிய ஒலிகள்.

'பொருளின் தன்மையை உணர்தலும் அதற்குக் கருவியாகிய சொல்லின் தன்மையை உணர்தலும் சொல்லி ஞல் உண்டாகும் காரியங்கள்' என்பதைத் தொல்காப் பியர் சொல்கிறார். 'இப்படி நான் சொல்லவில்லை. மரபு தெரிந்த புலவர்கள் சொல்வார்கள்' என்று முந்தையோர் நெறியையும் சுட்டிக்காட்டுகிறார்.

**பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லின் ஆகும் என்மனார் புலவர்.**

[பொருண்மை - பொருளின் தன்மை; சொன்மை - சொல்லின் தன்மை; சொல்லின் ஆகும் - சொல்லால் ஏற்படும்; என்மனார் - என்று சொல்லுவர்.]

சொல், உருவம் பெற்றுப் பொருளை உணர்த்தும் முறையிலேகூட இரண்டு வகை இருக்கின்றன. 'பொறுக்க முடியவில்லையே!' என்று சொல்வதும், 'ஐயோ!' என்று சொல்வதும் ஒரே வேதனையைச் சுட்டுவதாக இருந்தாலும், முதலிலே உள்ளது தெளிவாக அதை வெளியிடுகிறது; பின்னாலே உள்ளதோ, கேட்பவர்கள் யோசித்துத் தெரிந்துகொள்ளும்படி இருக்கிறது. 'ஐயோ' என்ற வார்த்தைக்கு நேரான பொருள் இன்னதுதான் என்று வரையறையாகச் சொல்ல முடியாது. சந்தர்ப்பத்தைக் கொண்டும் சொல்பவன் நிலையைக் கொண்டும் அதற்குப் பொருள் செய்யவேண்டும். அந்த வார்த்தை கேட்பவருக் குக் கொஞ்சம் வேலை கொடுக்கிறது; அதாவது தெளிவாக விஷயத்தைத் தெரிவிக்காமல் குறிப்பாகத் தெரிவிக்கிறது.

இந்த விஷயத்தை அடுத்தபடியாகத் தொல்காப்பியர் தெரிவிக்கிறார்.

'சொல்லாலே நேரே வெளிப்படையாகப் பொருளை உணர்த்தும் நிலை ஒன்று; சொல்லின் பொருளுக்குப்

புறம்பே அதனோடு தொடர்ந்த குறிப்பினால் பொருளை உணர்த்தும் நிலை ஒன்று. ஆக இந்த இரண்டு வகையான நிலைகளில் பொருளின் தன்மை நிற்கும்' என்று ஒரு சூத்திரம் சொல்கிறார்.

> தெரிபுவேறு நிலையலும்
> குறிப்பின் தோன்றலும்
> இருபாற் றென்ப
> பொருண்மை நிலையே.

குறிப்பினாலே பொருள் உணர்த்துதல், சந்தர்ப்ப பேதங்களால் பலவகைப்படும். 'ஒருவர் வந்தார்' என்று சொல்லும்போது வார்த்தைகளைக் கொண்டே பொருளைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியாது. அந்த ஒருவர் ஆணா பெண்ணா என்ற சந்தேகம் உண்டாவதற்கு இடம் உண்டு. விஷயம் தெரிந்தவர்களுக்கு ஒருவர் இன்னாரென்பது புலப்படும்.

சாப்பிடுகிறவன், "இருக்கிற உப்பெல்லாம் செலவாகியிருக்கும்போல் இருக்கிறதே!" என்று சொல்கிறான். அவன் சொல்லவந்த விஷயம் உப்பு வீணாயிற்று என்பதைக் குறிக்க வந்ததல்ல. ரசத்திலோ, கறியிலோ உப்பு அதிகமாகிவிட்டதென்பதை அவன் அப்படிச் சொல்கிறான். நேர்முகமாக அவன் அதைச் சொல்லவில்லை. 'ரசத்தில் உப்பு அதிகம்' என்று தெளிவாகச் சொன்னால் அதை வெளிப்படை என்று சொல்வார்கள். அப்படியில்லாமல் மாற்றிக் குறிப்பாகச் சொல்கிறான். இது ஒரு வகையான குறிப்பு.

குறிப்பைப் பேச்சு வழக்கிலே பார்க்கலாம்; செய்யுளிலும் பார்க்கலாம். செய்யுளில் குறிப்பு வரும்போது அதற்கு அலங்காரம் என்றும் இசை எச்சம் என்றும் இடத்துக்கு ஏற்றபடி பெயரிடுவார்கள்.

இத்தகைய குறிப்பையெல்லாம் தொகுத்துப் பிற்காலத்தில் இலக்கணம் இயற்றிய நன்னூலார் ஒரு சூத்திரத்தில் சொல்லியிருக்கிறார். காதுகொண்டு தெரிந்துகொள்வது வெளிப்படை; காதோடு நில்லாமல் கருத்தையும் செலுத்தித் தெரிந்துகொள்வது குறிப்பு.

சொல் அல்லாத ஒலி, சொல் ஆகும் ஒலி என்று ஒலியில் இரண்டு வகையும், வெளிப்படைச் சொல், குறிப்புச்சொல் என்று சொல்லில் இரண்டு வகையும் உண்டு என்பதைத் தொல்காப்பியர் பெயர் இயல் என்ற பகுதியின் ஆரம்பத்தில் சொல்லிவிட்டுப் பிறகு பெயர்ச் சொல்லின் இலக்கணத்தைத் தொடங்குகிறார்.

# 23

# சமுதாயப் பிரிவுகள்

மனித சமுதாயம் அனைத்தும் ஒன்று என்பது அடிப்பட்ட உண்மை. பல நிறங்களில் மனித இனம் ஒரே மாதிரி உணர்ந்து பேசி நடந்து வருகிறது. ஆனாலும் பல வேறு காரணங்களால் அந்த இனத்திலே வெவ்வேறு வகையான பிரிவுகள் தாமே அமைகின்றன. அத்தகைய பிரிவுகள் தொழில், உணர்ச்சி, இடம் முதலிய தொடர்புபற்றி ஏற்படுகின்றன. இயற்கையிலே மனித சாதியில் ஆண் என்றும், பெண் என்றும் ஒரு வகையான பிரிவு அமைந்திருக்கிறது. அந்தப் பிரிவு காரணமாக வேற்றுமை வளரவில்லை. இயற்கையின் விசித்திர அமைப்பினால் அவ்விரு பிரிவினரும் தங்களுள் ஒன்றி வாழும்படியாக இருக்கிறார்கள்.

செயற்கைப் பிரிவும் இப்படித்தான் அமைய வேண்டும். ஒரு சாரார் குறையை அல்லது தேவையை மற்றொரு சாரார் நிரப்பவேண்டும். அப்போதுதான் வேற்றுமையினிடையே ஒற்றுமை நிலவும். ஒரு பெரிய இசைக் கச்சேரியில் பாடும் புலவனும் இயங்களை எழுப்பும் புலவர்களும் வெவ்வேறு வகையில் தொழில் புரிகிறார்கள். மிருதங்கக்காரன் கைகளால் வாத்தியத்தைக் கொட்டி வாசிக்கிறான். வீணை வித்துவான் விரல்களால் நரம்புகளைத் தெறித்து வாசிக்கிறான். இப்படி வேறுபாடுகள் பல அமைந்தாலும் அவற்றினூடே ஓர் இசைவு இருக்கிறது; அதனால்தான் சங்கீதம் சிறப்பாக அமைகிறது.

தமிழர் வாழ்க்கையில் இந்த ஒற்றுமை இருந்தது. வேறுபட்ட பிரிவுகள் இருந்தாலும், அவை ஒன்றனோடு ஒன்று ஒட்டி வாழும் பண்பில் சிறந்து நின்றன. அந்தப் பிரிவுகளுக்குக் காரணமாக இருந்த தகுதிகள் இப்போதும் இருக்கின்றன.

மக்களுக்குள் அமைந்த பிரிவுகளை அவர்களுடைய பெயர்களே விளக்குகின்றன. தொழில் முதலியவற்றால் வேறுபட்டவர்கள் என்பதை அப்பெயர்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம். பெயர்களின் இலக்கணத்தைச் சொல்லவந்த தொல்காப்பியர் உயர்திணையாகிய மக்களுக்கு அமையும் பெயர்களைப்பற்றியும் சொல்கிறார். அங்கே உள்ள செய்திகளைக்கொண்டு தமிழருடைய பண்டை வாழ்க்கை நிலையில் அமைந்த சில பகுப்புக்களை உணரலாம்.

தேர்தல் காலங்களிலும், உத்தியோகம் வழங்கும் சமயங்களிலும் இப்போது வகுப்புக்களாக மக்கள் தொகுதியை வகுக்கிறார்கள். இந்த வகுப்புப் பிரிவினை நன்மையையும் செய்கிறது; தீமையையும் செய்கிறது. ஒரு வகுப்பார் பிறர் நலத்தையும் கருத்திலே கொண்டு காரியங்களைச் செய்தால் மனித சமுதாயத்தில் நன்மை விளைகிறது. தம் நலத்தையே எண்ணி மற்றவற்றை நினையாமல் செயலாற்றினால் தீமை உண்டாகிறது.

தொல்காப்பியர் எந்த எந்த வகுப்பைச் சொல்கிறார்? மரபியல் என்ற பகுதியிலும் வேறு சில இடங்களிலும் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற பிரிவைச் சொல்கிறார். அவை குடிப்பெயர்கள். பெயரின் இலக்கணத்தைப்பற்றிச் சொல்லும் பகுதியில் முதலில் பிறந்த நிலத்தைக் குறிக்கும் பெயரைத்தான் வைக்கிறார். இன்ன நாட்டினர் என்று வகுத்துக் கூறுவதுதான் தலைமை பெறுகிறது. சோழ நாட்டார், அருவாளர், கொங்கர் என்று கூறும் பெயர்களை நிலப் பெயர் என்று கூறுவர். மனிதனுக்கு அபிமானம் எந்த முறையில் நிற்கும் என்பதைத் தொல்காப்பியர் கூறும் வரிசையிலிருந்து தெரிந்துகொள்ளலாம். தம்முடைய நாட்டின்பால் பற்றுடையவர்கள் தமிழர். அதனால்தான் ஒரு காரணம்பற்றி வகைப்படுத்தும் பெயர்களில் முதலாவதாகத் தொல்காப்பியர் நிலப்பெயர் என்பதை வைத்திருக்கிறார். இன்ன நாட்டினர் என்று வழங்கும் வழக்கம் தமிழரிடையே இருந்தது என்பதோடு, அத்தகைய வழக்கம் சிறப்பை உண்டாக்கியது என்பதும் இதனால் அறியக் கிடக்கிறது.

அடுத்தபடி வருவது குடிப் பெயர்: சேரமான், மலையமான், பார்ப்பார், அரசர், வணிகர், வேளாளர் என்பவை குடிப்பெயர்களுக்கு உதாரணம். தத்தம் குடிச் சிறப்பை நன்கு உணர்ந்து வாழ்ந்தவர் தமிழர். அக் குடிக்குப் புகழ் நாட்டி இகழ்ச்சி வாராமற் காப்பதைக் கடமையாகக் கொண்டிருந்தனர். திருக்குறள் முதலிய பழைய நூல்கள் குடிப்பெருமையைப்பற்றி வற்புறுத்திச் சொல்கின்றன.

இவ்விரண்டும் இடத்தாலும் குலத்தாலும் அமைந்த பிரிவுகள். இனிச் செய்கையால் அமைந்த பிரிவுகள் வருகின்றன. அரசாட்சி செய்தல், ஊர் காவல், அறச் செயல் புரிதல் முதலிய மக்கட் சமுதாயத்துக்கே பொதுவான காரியங்களைத் தனித்தனி மனிதன் செய்ய முடியாது. பலர் சேர்ந்த தொகுதி வேண்டும். அந்தத் தொகுதிகளும் வெவ்வேறு பொறுப்புக்கு ஏற்ற வேறுபாட்டை உடையனவாக வேண்டும். இப்போது அரசியலில் ஒவ்வொரு வகையான வேலைக்கும் தனித்தனிப் பகுதி இருக்கிறது. இவ்வாறு அமையும் தொகுதியை 'இலாகா' என்று இப்போது வழங்குகிறார்கள். சில சமயங்களில் சிறப்பாகச் சில காரியங்களைச் செய்வதற்கு அப்போதைக்குச் சில அறிஞரைக் கூட்டி ஒரு 'கமிட்டி' நியமிப்பார்கள்.

பழங்காலத்தில் அரசியலிலும் பிற நிர்வாக காரியங்களிலும் இவ்வாறு குழுக்களை அமைத்து அவற்றின் மூலம் காரியங்களை நடத்திவந்தார்கள். அரசனுக்கு உறுதுணையாக ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்ற குழுவினர் இருந்தனர். அவனுக்கு நீதித் துறையில் துணை செய்ய அறங்கூரவையத்தார் என்ற குழுவினர் இருந்தனர்.

அங்கங்கே நாடு காவலுக்கும் ஆக்க வேலைகளுக்கும் உரிய குழுக்கள் இருந்தன. வாரியம் என்ற பெயருடைய குழுக்கள் இருந்தன. ஏரி வேலையைக் கவனிக்கும் குழுவுக்கு ஏரி வாரியம் என்று பெயர்.

இப்படியாக வேலைகளைப் பங்கிட்டுக்கொண்டு நடத்தும் குழுவைப் பழந்தமிழ் நாட்டிலே கண்டார், தொல்காப்பியர். வணிகர் தம்முள் ஒன்றுகூடிச் செயல்புரி

வதைப் பார்த்தார்; நிலத்தால் வரும் பெயரையும், குடியால் வரும் பெயரையும் சொல்லிய பிறகு குழுவின் பெயர் என்பதை அமைக்கிறார். வெவ்வேறு நிலத்தினராக இருந்தாலும், வெவ்வேறு குடியிலே பிறந்தாலும் ஒரே குழுவாக இருந்து கடமை புரிந்தனர்.

தாம் செய்யும் தொழிலாலே பெயர் பெறுவதும் உண்டு. தச்சர், கொல்லர், தட்டார் என்பன தொழிலால் வந்த பெயர். பழங்காலப் புலவர்களுள் தங்கள் பெயரால் இன்ன தொழிலைச் செய்தவர்கள் என்று தெரிய வருபவர் பலர். தங்கால் முடக்கொல்லனார் என்பவர் ஒரு புலவர். அவர் தொழிலைக் கொல்லனார் என்ற பெயர் காட்டுகிறது.

இன்னதை உடையவன் என்பதைக் குறிக்கும் பெயர்கள் சில உண்டு. அவற்றை உடைப்பெயர் என்பர். அம்பர் கிழான், பேரூர் கிழான், மலை கிழவோன் என்பவை அந்த வகையைச் சேர்ந்தவை. உடைமை பற்றிய மதிப்பை இந்த வகுப்புத் தெரிவிக்கின்றது.

கரியவன், நெடியவன் முதலிய பண்பைச் சுட்டும் பெயர்களும், தந்தை தாய் மாமன் என்ற உறவின் முறைப் பெயர்களும், பெருந்தோளன் நெட்டிமையார் என்ற உறுப்பைப்பற்றி வரும் பெயர்களும், குறிஞ்சி முதலிய திணைகளில் வாழ்பவரைக் குறிக்கும் குறவர் முதலிய பெயர்களும் இந்த வரிசையிலே வருகின்றன.

சிறுவரும் சிறுமியரும் விளையாடும்போது கட்சி சேர்த்துக்கொண்டு ஆடுவார்கள். இதனை இன்றும் பார்க்கலாம். சாரணர் கூட்டத்தில் இந்தக் கட்சிகளுக்குத் தனித்தனியே பெயர்கள் அமைந்திருக்கின்றன. பழங்காலத்திலும் விளையாடும்போது சிறுவர்கள் கட்சி பிரிந்து விளையாடுவதுண்டு. அந்தக் கட்சிகளுக்குத் தனித்தனியே பெயர்கள் உண்டு. அந்தப் பெயர்களை, "கூடி வரு வழக்கின் ஆடியற் பெயர்" என்று தொல்காப்பியர் குறிக்கிறார். "இளந் துணை மகார் தம்மிற் கூடி விளையாடல் குறித்த பொழுதைக்குத் தாமே படைத்து இட்டுக்கொண்ட பெயர்கள்" என்று நச்சினார்க்கினியர் உரை கூறுகிறார். பட்டி புத்திரர், கங்கை மாத்திரர் என்ற இரண்டு உதாரணங்களையும் காட்டுகிறார்.

குறிப்பிட்ட எண்ணிக்கையால் பெயர் பெறுவதும் ஒரு மரபு. எண்ணாயிரத்தார், மூவாயிரத்தார், அறுபத்து மூவர், நால்வர் என்ற வழக்கு, குறிப்பிட்ட சில கூட்டத்தினரையே குறிக்கும். இத்தகைய வழக்குத் தொல்காப்பியர் காலத்திலும் இருந்தது.

இலக்கணத்திலே சொல்லும்படியாக அமைய வேண்டுமானால் இந்தப் பெயர்கள் வழக்கில் அடிக்கடி வழங்கியிருக்கவேண்டும். பிறந்த நாட்டைக் குறிக்கும் பெயர்களைத் தமிழர் பெருமிதத்தோடு வழங்கினர். குடிப் பெயரைச் சிறப்பித்தனர். குழுவினால் வந்த பெயரைக் குறித்தனர். தொழிலால் வரும் பெயரையும் கூறினர். உடைமையாலும் பெயர் அமைந்தது. பண்பினையும் உறுப்பையும் சுட்டிக் கூறுவதை இழுக்காக எண்ணவில்லை. திணைப்பெயரும், விளையாட்டுக் கட்சிப் பெயரும், எண்ணிக்கை காரணமாக வந்த பெயரும் வழக்கில் இருந்தன.

இவை இனம்பற்றிப் பிரிந்த பெயர்கள். ஆனாலும் இந்த வேற்றுமை மனித சமுதாயத்தின் ஒற்றுமைக்கு இடையூறாக நிற்கவில்லை. அந்த ஒற்றுமையைப் பின்னும் உறுதிப்படுத்தவே உதவின.

# 24

# வழக்கு விசித்திரங்கள்

சின்னஞ்சிறு குழந்தைகளுக்கென்று எல்லாத் தேசத்திலும் கதைகள் வழங்குகின்றன. ஈசாப்புக் கதைகள், பஞ்சதந்திரக் கதைகள் முதலியவை இலக்கியங் கண்ட கதைகள். இவற்றை யல்லாமல் பாட்டிமார் குழந்தைகளுக்குச் சொல்லும் கதைகள் அளவிறந்தன நாடோடியாக வழங்கி வருகின்றன.

இந்தக் கதைகள் பெரும்பாலும் விலங்குகளையும் பறவைகளையும் பற்றியனவாகவே இருக்கும். பெயர் மறந்த ஈயின் கதையும் வால் இழந்த குரங்கின் கதையும் போன்ற பல கதைகள் நாடோடிக் கதைக்களஞ்சியத்தில் இருக்கின்றன.

கதாபாத்திரங்களாக வரும் விலங்குகள் உலகத்தில் உள்ள விலங்குகளைப் போன்றவை அல்ல. அவை பேசும்; அறிவுள்ள மனிதரை விடச் சாமர்த்தியசாலிகளாகப் பேசும். நம்முடைய ராமாயணத்தில் கூடக் குரங்கும் கரடியும் கழுகும் பேசவில்லையா?

ஒரு குரங்கு மற்றொரு குரங்கைப் பார்த்துப் பேசினால் நம்மைப்போலத்தான் பேசும். தன்னைக் குறிக்கும்போது, 'நான்' என்றும், முன்னாலே நின்று கேட்கும் குரங்கைக் குறிக்கும்போது, 'நீ' என்றும் பேசும்.

பேசுகிறவன் தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் குறிக்கும்போது நான் என்றும் நாங்கள் என்றும் பேசுவான். முன்னாலே நிற்பவனை நீ என்றும், அவனைச் சேர்ந்தவர்களை நீங்கள் என்றும் சொல்வான். இந்த இரண்டு பேரும் அல்லாத மூன்றாவது மனிதனை, 'அவன்' என்று சொல்வான். இப்படி வரும் மூன்று பேரும் மூன்று நிலையில் நிற்கிறார்கள்; பேசுகிறவன், அதைக் கேட்கிறவன், இருவருக்கும் புறம்பானவன் என்ற மூன்று வேறு

வழியிலே நிற்கிறார்கள். தன்னைப்பற்றி, 'நான்' என்று பேசும் அவனை முதல் மனிதன் என்று வைத்துக்கொள்ளலாம்; எதிரே நிற்பவன் இரண்டாவது மனிதன்; புறம்பான நிலையில் இருப்பவன் மூன்றாவது மனிதன். "மூன்றாவது மனிதன் விஷயத்தில் நான் தலையிடுவதே இல்லை", "நமக்குள் இந்த விஷயத்தைத் தீர்த்துக்கொள்வதை விட்டு மூன்றாம் மனிதனை அழைப்பது கௌரவம் அன்று" என்றெல்லாம் நம்முடைய பேச்சில் அடிக்கடி அந்த மூன்றாவது மனிதன் வருகிறான். மூன்றாவது மனிதன் என்ற ஒரு நிலை இருக்கும்போது, முதல் இரண்டு மனிதர்கள் என்ற நிலையும் இருக்கத்தானே வேண்டும்? இந்த நிலைகளைத் தமிழ் இலக்கணக்காரர், 'இடம்' என்று சொல்வார்கள். முதல் நிலைக்குத் தன்மை இடம் என்று பெயர். முன்னாலே நிற்பவனைச் சுட்டும் இடத்துக்கு முன்னிலை என்று பெயர். இந்த இரண்டுக்கும் மேலே மூன்றாவதாகப் படர்வதனால் மூன்றாவது மனிதனைச் சுட்டும் இடத்துக்குப் படர்க்கை என்று பெயர். ஆங்கிலத்தில் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது என்றே பெயர் வைத்திருக்கிறார்கள்.

மொழி என்பது மனிதர்களுக்கு வாய்த்த கருவி. பேசுவதென்பது மனிதன் மாத்திரம் செய்யக்கூடிய காரியம். பேசும் பொருள் உலகில் மனிதனைத் தவிர வேறு இல்லை. ஆகவே, பேச்சு எழும் முதல் இடமாகிய தன்மை மனிதனுக்கு அப்பாலே போக நியாயம் இல்லை. பேச்சைக் கேட்கும் முன்னிலையிலே மனிதனும் நிற்கலாம். அன்பு மிகுதியால் தாம் வளர்க்கும் நாய் முதலியவற்றோடு கொஞ்சிப் பேசுபவர்கள் இல்லையா? ஆகவே, இரண்டாவது இடமாகிய முன்னிலையில் உயர்திணைப் பொருளாகிய மனிதனும், அஃறிணைப் பொருளாகிய விலங்கு முதலியவையும் இருப்பது இயல்பே. பந்து விளையாட்டிலே பைத்தியம் பிடித்தவன் தன் கையிலுள்ள மட்டையைப் பார்த்து, "உன்னாலே அல்லவா எனக்கு இவ்வளவு கௌரவம்!" என்று வியக்கலாம். அங்கே உயிரில்லாத பொருள்கூட முன்னிலையிலே வருகிறது; மனிதன் பார்த்துப் பேசும் பொருளாக நிற்கிறது.

படர்க்கையும் அத்தகையதுதான். எல்லாப் பொருளைப்பற்றியும் மனிதன் பேசுகிறான். உயர்திணை, அஃறிணை என்ற இரு பெரும் பிரிவும் படர்க்கை இடத்திலே வழங்கும் தகுதி உடையனவே.

பேச்சு மனிதனுக்கே உரிய ஆற்றல் என்ற இயற்கை நியதியை எண்ணி, முதல் இடமாகிய தன்மை உயர்திணையாகிய மனிதனுக்கே உரியதென்று தொல்காப்பியர் இலக்கணம் செய்தார். வாழ்க்கையை ஒட்டி மொழி இயங்குகிறது. அந்த மொழியை ஒட்டித் தொல்காப்பியர் இலக்கணம் செய்தார். "நான் ஓடினேன். அப்போது அவன் அடித்தான்" என்று உலக வாழ்க்கையினிடையே பேச்சு வருகிறது. பேசுகிறவன் தன்னைச் சுட்டிச் சொல்வதனால், 'நான்' என்ற முதல் இடம் அங்கே மனிதனைத்தான் குறிக்கிறது. ஆனால் ஒரு கதை படிக்கிறோம். அதனிடையே அப்படி ஒரு வாக்கியம் வந்தால், சந்தர்ப்பம் இன்னதென்று தெரியாதபோது, நிச்சயம் சொல்ல முடியாது. அது ஒரு குதிரையின் வார்த்தையாகவும் இருக்கலாம். மனிதனுடைய வார்த்தையாகவும் இருக்கலாம். முன்னே சொன்ன சிறுவர் கதைகளில் குரங்கும் பூனையும் கரடியும் நாயும், நான் என்றும் நாம் என்றும் பேசிக்கொள்கின்றன. அங்கே அஃறிணையில் தன்மை வருகிறது.

தொல்காப்பியர் உயர்திணைக்குத்தான் தன்மை உரியது என்று சொன்னார். ஆனால் கதைகளில் நாயும் நரியும், 'நான்' என்றும், 'நாம்' என்றும் பேசுகின்றனவே! தொல்காப்பியர் இலக்கணம் தவறா? அவர் காலத்தில் இத்தகைய கதைகள் இல்லையா?

கவனித்துப் பார்த்தால் உண்மையில் பேசுகிறவன் மனிதன்தான். குரங்கு பேசியதாக அவன் கற்பனை செய்து எழுதி வைத்தான்.

அந்தக் குரங்கு குரங்குதானே? அது நான் என்று பேசுகிறதே! ஆகையால் நான் என்பது அஃறிணையிலும் வரும் என்று சொல்வதுதானே நியாயம்? - இப்படியெல்லாம் கேள்விகள் எழலாம். இங்கே ராமாயணத்தில் ஒரு பகுதி நினைவுக்கு வருகிறது.

ராமன் வாலியை மறைந்து நின்று அடித்தான். கீழே வீழ்ந்த வாலி ராமனைப் பார்த்து, "நீ இப்படிச் செய்தது தவறு" என்று வாதிக்கிறான். ராமனோ, "நீ மற்றொருவன் மனைவியைக் கைப்பற்றியது தவறு" என்று சொல்கிறான். "இது எங்கள் சாதி வழக்கம். மனித சாதியின் வழக்கத்தை வானர சாதிக்குப் பொருத்திப் பார்க்கக் கூடாது" என்று வாலி சமாதானம் சொல்கிறான். அப்போது ராமன், "நீ வானரந்தான்; ஆனால் மிருகம் அல்ல. இவ்வளவு பேசுகிறாய்; நான் செய்தது தவறு என்று வாதிக்கிறாய்; இவ்வளவு அறிவு உள்ள உன்னை மிருகமென்று சொல்லக்கூடாது. அறிவுள்ள மனிதனுக்குச் சமானமாகவே கொள்ள வேண்டும். ஆகவே, மிருக உணர்ச்சியுள்ள குரங்குக்கு உரிய மிருகச் சட்டம் உனக்கு ஒவ்வாது" என்று சொல்லிக் காரணம் காட்டினனும்.

குரங்கு பேசுகிறது என்பதை வைத்துக்கொண்டு, தன்மையை அஃறிணைக்கும் உரியதென்று சொல்வதைக் காட்டிலும், அப்படிப் பேசுகிற குரங்கையே உயர்திணை ஆக்கிவிடலாமே!

இவ்வாறெல்லாம் சங்கடங்கள் நேராமல் இருக்கப் பின்னாலே வந்த இலக்கணக்காரர்கள் மற்ற இரண்டு இடங்களைப் போலத் தன்மையிலும் உயர்திணை, அஃறிணை இரண்டும் உண்டு என்று இலக்கணம் செய்தார்கள். இலக்கிய அளவில் அந்த இலக்கணம் பொருத்தந்தான். ஆனால் வாழ்க்கை அளவில் தொல்காப்பியர் சொன்னதுதான் பொருத்தம். பேசுகிற பொருள் மனித சாதி ஒன்றுதான் என்ற நியதி இருக்கும் வரையில் அந்தப் பொருத்தம் மாறுவதற்கில்லை.

ஆனால் சில விஷயங்களில் வாழ்க்கையிலும், மக்கள் வழங்கும் பேச்சு மாறிக்கொண்டே வருகிறது. தொல்காப்பியர், 'நான்' என்ற வார்த்தை ஒன்று இருப்பதாகவே சொல்லவில்லை. 'யான்' என்பதுதான் அவருக்குத் தெரியும் போலும்! பிற்காலத்தில் 'நான்' என்பது வந்துவிட்டது. அப்படியே, 'நீர்' என்று இப்போது நாம் சொல்லும் சொல் தொல்காப்பியர் காலத்தில், 'நீயிர்' என்று வழங்கி வந்தது. 'நீங்கள்' என்ற சொல்லும் அவருக்குத் தெரி

யாததே. பழைய இலக்கியங்களில் நான், நீர், நீங்கள் என்பவை அருமையாகவே வந்துள்ளன.

'பெண் மகன்' என்ற வார்த்தை ஒன்று தொல்காப்பியர் காலத்துத் தமிழர் பேச்சில் வழங்கியது. அந்த வார்த்தையில் உள்ள பெண் என்பது பெண்பாலையும், மகன் என்பது ஆணையும் சுட்டும் பகுதிகள். இருப்பினும் அது பெண்களைக் குறிக்கவந்த பெயராம். நாணம் என்ற உணர்ச்சி ஏற்படாமல் வெளியே தாராளமாகப் போய் விளையாடும் பருவத்திலுள்ள குழந்தைப் பெண்ணை அவ்வாறு குறிப்பார்களாம். 'நாணுவரை இறந்து புறத்து விளையாடும் பருவத்தால் பால்திரிந்த பெண் மகன் என்னும் பெயர்ச் சொல்' என்று எழுதுகிறார் நச்சினார்க்கினியர். பிள்ளையென்ற சொல் தனியே வழங்கும் போது இக் காலத்தில் ஆணைக் குறிக்கிறது. 'பெண்ணா, பிள்ளையா?' என்று கேட்கிறோம். அப் பெயர் பெண் என்பதனோடும் சேர்ந்து, 'பெண் பிள்ளை' என்று வழங்குகிறது. இதுபோல் அக் காலத்தில், 'பெண் மகன்' என்பது வழக்கத்தில் இருந்திருக்க வேண்டும். சென்னையில், 'பயல்கள்' என்ற சொல்லின் மரூஉவாகிய 'பசங்கள்' என்பது இப்படி ஒரு விசித்திரமான முறையில் வழங்கப்படுகிறது. தமிழ் நாட்டின் மற்றப் பகுதிகளில் பயல், பயல்கள் என்பவை ஆண்களையே குறிக்கும். இங்கே, 'பொம்பளைப் பசங்க' என்று பெண்பாலோடும் சேர்த்து வழங்குகிறார்கள். இது மற்றவர்களுக்கு விசித்திரமாகத் தோன்றும். இத்தகைய வழக்குகளில் ஒன்றே, 'பெண் மகன்' என்பது. ஆனால் அது தமிழ்நாடு முழுவதும் பெரு வழக்காக இருந்தமையால் தொல்காப்பியர் தம் இலக்கணத்தில் அதைக் கொண்டுவந்திருக்கிறார்.

ஆணைக் குறிக்கும் ஆடூஉ என்னும் சொல்லும் பெண்ணைக் குறிக்கும் மகடூஉ என்னும் சொல்லும் தொல்காப்பியர் காலத்துக்குப் பின்னும் இலக்கிய வழக்கில் இருக்கின்றன. பேச்சு வழக்கில் அவை மறைந்தே போய் விட்டன. அவன், இவன் என்பவற்றைப்போல அக் காலத்தில் அவ்வாளன், இவ்வாளன், அம்மாட்டான், இம்மாட்டான் என்று சில சொற்கள் வழங்கினவாம்.

அப்படியே அவள், இவள் என்பவற்றைப் போல் அப்பெண்டு, இப்பெண்டு என்ற வார்த்தைகள் வழக்கில் இருந்தனவாம். தொல்காப்பியத்துக்கு உரை வகுத்தவர்கள் இந்த உதாரணங்களை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

'விசித்திரமான உலகம்!' என்று உலகத்தின் இயல்புகளைப் பார்த்து நாம் வியக்கிறோம். அதனோடு சேர்ந்தாற் போல், 'விசித்திரமான மொழி' என்றும் வியக்கத் தோன்றுகிறதல்லவா?

## 25

# தவறு அல்ல

குழந்தைகளின் மழலைச் சொல்லைக் குழலினும் யாழினும் இனிது என்று திருவள்ளுவர் சொல்கிறார். அவர்களுடைய பேச்சு, உருவம் நிரம்பாத குறை ஒலிகளை உடையது. பேசும் வார்த்தைகளின் அளவிலே அவர்களின் கருத்து நிற்பதில்லை; அதாவது சொல்லவேண்டிய முறைப்படி சொற்களை அமைத்து முறை பிறழாமல் சொல்வதில்லை. ஆனாலும் அந்தப் பேச்சு நமக்கு இன்பம் பயக்கிறது.

"உங்கள் அப்பா எப்போது ஊரிலிருந்து வந்தார்?" என்று குழந்தையைக் கேட்கிறோம்.

"நாளைக்கு வந்தார்" என்று குழந்தை சொல்வதைக் கேட்டு நாம் சிரிக்கிறோம்; உவகை பூக்கிறோம்.

"நீ எப்போது பள்ளிக்கூடம் போகப்போகிறாய்?" என்ற கேள்விக்குக் குழந்தை, "முந்தாநாள் போகப் போகிறேன்" என்று சொல்லும்போதும் நாம் அப்படியே சந்தோஷம் அடைகிறோம். நேற்று, நாளை என்ற வார்த்தைகளுக்கு உரிய பொருள் அந்தக் குழந்தைக்கு இன்னும் தெரியவில்லை.

இலக்கணப்படி குழந்தையின் வாக்கியத்தைப் பார்க்கப்போனால் தவறாகத் தோன்றும். நாம் அந்தமாதிரி பேசினால் கேட்பவர் நம்மைப் பாராட்டமாட்டார்; பைத்தியம் என்றுதான் சொல்வார்.

காலத்தின் இலக்கணத்துக்கு இது விரோதம். காலம் நேற்று, இன்று, நாளை என்று மூன்றாக இருக்கிறது. இலக்கண பாஷையிலே இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று காலத்தை மூன்றாகப் பிரித்துச் சொல்கிறார்கள். பெயர்ச் சொல்லிலே காலம் தெரி

யாது. வினைச் சொல்லிலேதான் தெரியும். ஒரு தொழிலை ஒருவன் எப்போது செய்தான் என்பதை வினைச்சொல் காட்டிவிடும். அப்படிக் காட்டுவதற்குரிய அடையாளங்கள் அதில் உண்டு. 'வந்தார்' என்று சொன்னால் ஒரு மனிதர் வரும் தொழிலை முன்பே செய்த செய்தியை அச் சொல் குறிக்கிறது. தொழில் அல்லது வினை இறந்த காலத்தில் நிகழ்ந்ததாகத் தெரியவருகிறது.

ஆனால் வாழ்க்கையினிடையே இந்த இலக்கணத்துக்கு விரோதமாகச் சில சந்தர்ப்பங்களில் பேச்சு நிகழ்வதுண்டு. குழந்தை பேசிற்றே, அதுபோல ஏறக்குறைய அந்தப் பேச்சு இருக்கும்.

ராமனும் கிருஷ்ணனும் ரெயிலுக்குப் போக வேண்டியிருந்தது. ராமன் சாப்பிட்டுவிட்டுத் தயாராக வந்தான். அப்போதுதான் கிருஷ்ணன் நீராடிவிட்டு நெற்றிக்கு இட்டுக்கொண்டிருந்தான்.

அவனைப் பார்த்ததும் ராமனுக்குக் கோபம் வந்து விட்டது. "என்னடா மடையா, இன்னும் சாப்பிட வில்லையா?" என்று கேட்கிறான். கிருஷ்ணன், "இதோ சாப்பிட்டாயிற்று" என்று சொல்லிக்கொண்டு சமையல் அறைக்குள் நுழைகிறான்.

"சாப்பிட்டாயிற்று" என்று அவன் சொல்கிறானே, அது சரியா? அவன் இனிமேல்தானே சாப்பிடப்போகிறான்? சாப்பிடுதல் ஆகிய தொழில் எதிர் காலத்தில் நிகழப் போகிறது. அப்படியிருக்கச் சாப்பிட்டுவிட்டதாக, இறந்த காலத்திற்குரிய பாஷையில் பேசுகிறானே, இது சரியா?

கால இலக்கணத்தைப் பார்த்தால் தவறு என்றுதான் தோன்றுகிறது. ஆனால் அப்படி அவன் சொல்வதில், அவனுடைய வேகம் புலப்படுகிறது. "வேகமாகச் சாப்பிடுவேன்" என்ற குறிப்பையே அந்த வார்த்தை தெரிவிக்கிறது. எதிர் காலத்துக்குரிய சொல்லால் சொல்வதை இறந்த காலத்துக்குரிய சொல்லால் சொல்வது வேகத்தைத் தெரிவிப்பதற்காக.

இப்படியே நிகழ் காலத்துக்குப் பதிலாக இறந்த காலச் சொல் வருவதும் உண்டு. நடந்துகொண்டு வருகிற ஒருவனை, "சீக்கிரம் வா, அப்பா" என்றால், "இதோ வந்து விட்டேன்" என்று சொல்கிறான். அவன் வருகிறானே ஒழிய வந்துவிடவில்லை. ஆனாலும் அப்படிச் சொல்வதிலே அவனுடைய வேகம் தெளிவாகிறது.

இப்படி வரும் பேச்சு, தொல்காப்பியர் காதிலே பட்டது. இது வேகத்தைக் குறிப்பதனால் சரிதான் என்று அவருக்கு முன்னே இலக்கணம் செய்த ஆசிரியர்களும் சொல்லியிருந்தார்கள். ஆகவே, அவரும் தம் இலக்கண நூலிலே இதைச் சொன்னார். வேறு சந்தர்ப்பத்தில் உள்ள இலக்கணப்படி வழுவாகத் தோன்றுவது, இத் தகைய விசேஷ சந்தர்ப்பத்தில் தவறாகாது. இப்படி வழு வாகத் தோன்றினாலும், பொருத்தமாக இருப்பதை வழு வமைதி என்று இலக்கணக்காரர் சொல்வார்கள். நிகழ் காலத்தையும் எதிர்காலத்தையும் இறந்தகாலச் சொல் லாலே சொல்லுவதைக் கால வழுவமைதி என்று குறிப் பார்கள்.

இயல்பான செய்தியையும், தெளிவான செய்தியையும் புலப்படுத்தும்போது இந்தக் கால வழுவமைதி வருவதை ஒரு சூத்திரத்தில் தொல்காப்பியர் எடுத்துச் சொல்கிறார்.

"அந்த ஊருக்குப் போனால், சோறில்லாமல் செத் தான்" என்று சில சமயங்களில் கூறுவதுண்டு. "இப் போது ஹரித்துவாரத்துக்குப் போனால் தீர்ந்துபோனான்" என்று சொல்வதில்லையா? இனிமேல் யாராவது போனால் அவன் சாவான் என்று சொல்வது சரியான முறை. ஆனால் இங்கே, போகப்போகிறவன் செத்துப்போய்விட் டான் என்று சொல்வது விரோதமாகத் தோன்றுகிறது. ஆனால் அந்த அந்தப் பிரதேசங்களின் இயற்கையைச் சொல்லவந்தமையால் இது சரியென்றே கொள்ளவேண் டும்.

"மண்ணைத் தின்கிறதா, குழந்தை? சரிதான்; கட்டி வந்துவிட்டது."

"கொடிகாலில் மின்னினால் மழை பெய்தாயிற்று."

"ரூபாய் கையில் இல்லையா? பிச்சைக்காரன் ஆகி விட்டாய்."

இத்தகைய வாக்கியங்களிலே முடிவான செய்தி இறந்தகாலச் சொல்லிலே வருகிறது. நிச்சயம் இது நடைபெறும் என்ற தெளிவை அது அழுத்தமாகத் தெரிவிக்கிறது. இப்படி நடக்கும் என்று எதிர்காலத்திலே சொன்னால் அதற்கு அத்தனை சுவாரசியம் இராது. இதெல்லாம் முரண்பாட்டிலே தோற்றுகிற ரசத்தையுடைய பேச்சு வகை.

வேகம், இயற்கை, தெளிவு என்பது போல இன்ன காரணம் என்று வரையறுக்க முடியாமலே காலத்தைக் குறிக்கும் சொற்கள் இப்படி மாறுவதுண்டு. உலக வழக்கிலேதான் இத்தகைய விநோதங்களைக் காணலாம். அந்தப் பேச்சை அப்படி அப்படியே கேட்டுப் பொருள் செய்து சுவைக்க வேண்டும். தனித்தனியே பிரித்துப் பார்த்து, 'இது இறந்தகாலம், இது எதிர்காலம். இரண்டும் ஒன்றுபடா' என்று ஆராய்ச்சி செய்வதாக இருந்தால் அங்கே மொழியின் ஜீவன் தட்டுப்படாது. அவை தவறல்ல; உலகத்தில் உயிர் பெற்று நிலவும் வழக்கு. ஆகவே, அத்தகையவற்றை வேறு இடங்களிலே பார்க்சொல்லியுள்ள இலக்கண நாடாவினால் அளந்துக்கூடாது. அப்படிச் சொல்வது இலக்கணத்துக்குச் சம்மதமே என்று தொல்காப்பியர் சொல்கிறார்.

ஒருவர் தம்முடைய இளமைக் காலத்திலே பழகிய ஊருக்குப் போகிறார். உடன் ஒரு நண்பரையும் அழைத்துச் செல்கிறார். அவருக்குப் பழைய கால இளமை நிகழ்ச்சிகள் நினைவுக்கு வருகின்றன. ஒவ்வோர் இடத்தையும் பார்க்கும்போது உவகை பொங்குகிறது. "இங்கே பாருங்கள். பழைய காலத்தில் இங்கேதான் நான் பந்து ஆடுவேன்" என்று பேசுகிறார். பழைய காலம் என்பது இறந்த காலத்தைச் சுட்டுவது. 'ஆடுவேன்' என்பது எதிர்காலம் அல்லவா? குழந்தை, "நேற்றைக்கு வருவேன்" என்று சொன்னதற்கும் இதற்கும் என்ன வித்தியாசம்? சொல்லுக்குச் சொல் வைத்துப் பார்த்தால் வித்தியாசம்

இல்லை. ஆனாலும் அவர் பேசுவது வாழ்க்கையில் உள்ள பேச்சு; ஆகவே அது தவறு அன்று.

“பத்து வருஷங்களுக்குமுன் இதே இடத்தில் நானும் என் தம்பியும் விளையாடிக்கொண் டிருக்கிறோம்; அப்போது என்ன நடந்தது தெரியுமா?”

இறந்த காலக் கூட்டத்திலே சேர்ந்தது, ‘பத்து வருஷங்களுக்கு முன்’ என்ற பேச்சு. ‘விளையாடிக்கொண் டிருக்கிறோம்’ என்பதோ நிகழ்காலத்தைக் குறிப்பது. சாதாரணமாக இரண்டும் ஒட்டுவதில்லை. ஆனால் அவர் பேச்சிலே ஒட்டிவருகின்றன. அது தவறு அன்று.

“இப்போது இப்படிக் கல்யாணத்துக்கே பதினாயிரம் செலவழித்துவிட்டாயே; நாளைக்குக் கார்த்திகை வந்தது; அப்போது என்ன செய்யப் போகிறாய்? பொங்கல் வருகிறது; அப்போது பணத்துக்கு எங்கே போகிறது?”

காலத்தின் இலக்கணத்தைச் சொல்லிக் கொடுக்கும் வாத்தியார் அயர்ந்து மறந்த சமயத்திலே, “நாளைக்குக் கார்த்திகை வந்தது; பொங்கல் வருகிறது” என்று பையன் சொல்லிவிட்டால் அவர் பிரம்புக்கு வேலை வைக்கும்படி ஆகிவிடும். ஆனால் மேலே சொன்ன பேச்சு நித்தியப் படி வாழ்க்கையிலே வருவது. அது கால இலக்கணத்துக்கு விரோதமாகத் தோன்றினாலும் பாஷையின் இலக்கணத்தோடு ஒட்டியதுதான்; அது கால வழுவமைதி.

“இப்படியெல்லாம் செய்கிறாயே; நாளைக்கு அவன் வழக்குத் தொடுத்தான்; நீ என்ன செய்வாய்?”—இப்படி உள்ள பேச்சை நாம் எத்தனை எத்தனையோ கேட்கிறோமே! தொல்காப்பியர் காலத்திலே இப்படியெல்லாம் பேசினார்கள் என்பதை அவர் வகுத்த இலக்கணத்தினால் ஊகித்துக்கொள்கிறோம். அவர் இயற்றிய சூத்திரத்துக்கு உரை வகுத்த உரையாசிரியர்கள் தங்களுக்குத் தெரிந்த, தங்கள் காலத்தில் காதிலே விழும் உதாரணங்களைக் காட்டுகிறார்கள். அவற்றில் சிலவற்றைப் பாருங்கள்.

“இவர் பண்டு பொழிலிடத்து விளையாடுவர்.”

"நாளை அவன் வாளொடு வெகுண்டு வந்தான்; பின் நீ என் செய்குவை?"

வேகத்தைக் குறிக்கும்போது இறந்த காலத்தைக் குறிக்கும் சொல் வருமென்பதற்கு நச்சினார்க்கினியர் உதாரணம் காட்டி விளக்குவதைப் பாருங்கள்.

"சோறு பாணித்த வழி, உண்ணாதிருந்தானைப் போதல் வேண்டும் குறையுடையான் ஒருவன், 'இன்னும் உண்டிலையோ?' என்ற வழி, 'உண்டேன், போந்தேன்' என்னும். உண்ணாநின்றானும், 'உண்டேன்; போந்தேன் என்னும்."

அவர் தம் காலத்து ஆசிரியர் எழுதும் பாஷையிலே சொல்கிறார், நாம் நம்முடைய காலத்து மொழியிலே பொருத்திப் பார்த்துக்கொள்ளலாமே!

## 26

# பேச்சிலே பொடி

அவன் எப்போதுமே கொஞ்சம், 'பிகு' பண்ணுகிற பேர்வழி. நேருக்கு நேர், வெட்டொன்று துண்டிரண்டாகப் பேசமாட்டான். சமயோசிதம் போல் அர்த்தம் ஆகும்படி பேசுவான். "இன்று எங்கள் வீட்டில் சாப்பிடலாம்" என்று சொன்னேன். அவன், "ஆகட்டும்" என்று சொல்லவில்லை; "பார்க்கிறேன்" என்று சொன்னான். "உனக்காகக் காத்துக்கொண்டிருப்பேன். ஏமாற்றி விடாதே" என்றேன். நண்பன் எப்போதுமே பிடிகொடுத்துப் பேசுவதுதான் இல்லையே! "காத்திருக்க வேண்டாம்; வந்தாலும் வருவேன்" என்று சொன்னான். அவன், "வருகிறேன்" என்று சொல்லியிருந்தால் நிச்சயமாக வருவான் என்று நம்பியிருக்கலாம். "வந்தாலும் வருவேன்" என்று சொல்லிப் போய்விட்டான்.

"என்ன, உங்கள் சிநேகிதர் சாப்பிட வருகிறாரா? சொல்லிவிடுங்கள். பிறகு அவர் வந்து நிற்கும்போது அது பண்ணவில்லை, இது பண்ணவில்லை என்று இரையாதீர்கள்" என்று என் மனைவி கேட்டாள்.

நான் அதற்கு என்ன பதில் சொல்வது?

"வந்தாலும் வருவேனென்று சொல்லிவிட்டுப் போயிருக்கிறான். ஆகையால்..."

"ஆகையால் கீகையால் என்ன? மரியாதைக்கு அவர் ஈரொட்டாகப் பதில் சொல்லிப் போயிருக்கிறார். அவர் எங்கே வரப்போகிறார்?"

"அவன் வரமாட்டானென்று எப்படிச் சொல்லலாம்? உன் வேலை சுலபமாகும் என்ற எண்ணத்தினால் அப்படிச் சொல்லுகிறாய்" என்று சிறிது கோபத்தொனியோடு பேசினேன்.

“பின்னே அவர் அப்படி ஏன் சொன்னார்? அவர் பேச்சிலே பொடிவைத்துப் பேசினது உங்களுக்குத் தெரிய வில்லையா? வந்தாலும் வருவேன் என்று சொல்லுகிற போதே அது தெரிந்திருக்க வேண்டுமே! வராமல் இருந் தாலும் இருப்பேன் என்று தெரிவிக்கவே, அப்படிப் பொடிவைத்துச் சொல்லியிருக்கிறார்” என்று ஒரு போடு போட்டாள் என் மனைவி.

அப்போது நான் அந்தப் பொடிப்பேச்சைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்துவிட்டேன். ‘ஆம், அவள் சொல்வது நியாயந்தானே? வந்தாலும் வருவேன் என்று அவன் சொன்ன வார்த்தைகளிலே பொடி இருக்கத்தானே இருக்கிறது?’ என்று யோசித்தேன்.

அடுத்த சிந்தனை அலை உலக நிகழ்ச்சிகளிலிருந்து தமிழ்மொழியை மோதிற்று. ‘அந்தப் பொடி எங்கே இருக் கிறது? வருவேன் என்பதில் இல்லை. வந்தாலும் என்பதில் தான் இருக்கிறது. அதிலும் முன் பகுதியில் இல்லை வந்தா- லும், வந்தால்-உம், லும், உம் .... ஆம் இந்த ‘உம்’ என் பதுதான் அந்தப் பொடி!’ என்று தெரிந்துகொண்டேன். அது ‘வராமலும் இருப்பேன்’ என்ற சமாசாரத்தை உள்ளடக்கி நிற்கிறது என்பதும் தெரியவந்தது.

* * *

ஊரிலே சினிமாக்கொட்டகை புதிதாகப் போட் டிருந்தார்கள். ஒரே கூட்டம். சிறு பையன்களெல்லாம் வீட் டிலே காசைத் திருடிக்கொண்டு ஒருவருக்கும் தெரியாமல் போய்ச் சினிமாப் பார்த்து வந்தார்கள். செட்டியார் தம் முடைய குமாரன் சினிமாவுக்குப் போனால் கெட்டுப் போய் விடுவானென்று பயந்தார். கிராமந்தானே? ஆனாலும் நேரிலே சொல்லவோ கண்டிக்கவோ முடியாமல் இருந்தது. கைப்பிடியாகப் பிடிக்க வழியில்லை. அவருடைய பையனுக்கு நெருங்கிய நண்பன் ஒருவன் உண்டு. அவ்விருவரும் இணை பிரியாதவர்கள். அவனைக் கூப்பிட்டு நயமாக விசாரித்தால் உண்மை விளங்கும் என்று நினைத்த செட்டியார், அந்தப் பையனைக் கண்டு பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தார்.

"என்ன தம்பி, ஊரிலே சினிமா வந்திருக்கிறதே! நல்ல படந்தானே? ஊரார் என்ன சொல்கிறார்கள்?" என்று பேச்சை ஆரம்பித்தார்.

"அழகான படம்; நானும் போயிருந்தேன்" என்று அவன் சொன்னான்.

"நீயுமா போனாய்? நீயும் என்றால் இன்னும் யார் யார் போனார்கள்?" என்று அடுத்த கேள்வியைக் கேட்டார். 'நான் போனேன்' என்று சொல்லியிருந்தால், ஒருகால் செட்டியார் அந்தக் கேள்வியைக் கேட்கமாட்டார். நானும் என்று பொடிவைத்துச் சொன்னான் அவன். "நானும் என்றால் இன்னும் யாராவது போயிருக்கவேண்டும்" என்ற ஊகம் செட்டியாருக்கு உண்டாயிற்று.

"உங்கள் பிள்ளை போனானே; தெரியாதா?" என்று கேட்டான் அவன்.

செட்டியார் உண்மையை உணர்ந்தார். அவர் அதை உணர்வதற்குமுன் துப்புத் துலக்கிய வார்த்தை, 'நானும்' என்பது. அதிலும் அந்த, 'உம்' என்ற பொடிதான் முக்கிய மானது.

* * *

வேலைக்காரிக்கு வீட்டுக்கார அம்மாள் அன்று சோறும் குழம்பும் அளித்தாள். கொடுப்பதை முதல் நாளே கொடுத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். மறு நாள் காலையில் ஆறி அவலான சோறும், ஊசிப்போன குழம்பும் வேலைக்காரிக்குக் கிடைத்தன. வீட்டுக்கார அம் மாளுக்கு எப்போதும் கை கருணைக்கிழங்குதான். மனசார ஒருவருக்கு ஒன்றைத் தரமாட்டாள்.

சோற்றையும் குழம்பையும் பார்த்தாள் வேலைக்காரி. அடிக்கடி சோறு, குழம்பு தந்துகொண்டிருந்தால் அந்த ஞாபகத்தினால், 'இன்று இதுதான் இருக்கிறது போலும்!' என்று வாங்கிக்கொண்டு போயிருப்பாள். ஒரு நாளும் கொடுக்கிறதே இல்லை, தப்பித் தவறி ஒருநாள் கொடுக்கிற தானால் இப்படி வாயில் வைக்க முடியாத பண்டத்தைத் தருவாள். வேலைக்காரிக்குக் கோபம் வருமா, வராதா?

அவள் வீட்டுக்கார அம்மாளைத் திட்ட முடியுமா? அவள் கொடுத்த சோறு குழம்பைத்தான் உபயோகம் இல்லாதவை என்று சொல்ல முடியும். அவள் என்ன சொன்னாள் தெரியுமா?

"என்ன அம்மா, இதைக் கொண்டு வந்து வைக்கிறாய்? இதை நாயும் தொடாதே" என்று சொன்னாள். அவளுக்கு உண்டான வெறுப்பை, "நாய் தொடாதே" என்று சொல்லியிருந்தால்கூடத் தெரிந்துகொள்ள முடியாது. "நாயும் தொடாதே!" என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்னதனால்தான் அது விளங்கியது. "நாயும்" என்பதிலேதான் விசை, பொடி இருக்கிறது. சோற்றினது இழிவைப் பேச்சிலே உள்ள 'உம்' என்ற பொடி அழுத்தமாகச் சொல்லுகிறது.

* * *

சபை கூடப்போகிறது. சின்ன ஊர்; ஆகையால் வந்த பிரசங்கிக்கு உற்சாகம் உண்டாக்க வேண்டுமென்று, கூட்டம் அதிகமாக இருக்கும்படி ஏற்பாடு செய்தார்கள் சங்கத்தினர். வேண்டிய நண்பர்களையெல்லாம் வரச் சொல்லியிருந்தார்கள். நேரிலே மறுபடியும் ஆள் அனுப்பினார்கள். பள்ளிக்கூடத்து வாத்தியார்களையும் அழைத்திருந்தார்கள்.

சங்கத்தின் தலைவர் காரியதரிசியிடம், "அவரை அழைத்தாயா, இவரை அழைத்தாயா?" என்று விசாரித்தார். "பள்ளிக்கூடத்து வாத்தியார்கள் எல்லாரும் வந்து விட்டார்களா?" என்று கேட்டார்.

"நாலு பேரும் வந்திருக்கிறார்கள்" என்று காரியதரிசி சொன்னார். அதற்குமேல் வாத்தியார்களைப்பற்றிக் கேட்க வேண்டிய அவசியம் இல்லாமல் போயிற்று. பிரசங்கிக்கு அந்த ஊர்ப் பள்ளிக்கூடத்தில் நாலு வாத்தியார்களே இருக்கிறார்கள் என்ற கணக்கும் தெரிந்துவிட்டது. காரியதரிசி, "நாலு வாத்தியார்கள் வந்திருக்கிறார்கள்" என்று சொல்லியிருந்தால், "இன்னும் சில வாத்தியார்கள் இருக்கிறார்களோ?" என்ற சந்தேகம் வந்திருக்கும். "நாலு பேரும்" என்றதனால்தான் வாத்தியார்கள் நாலு பேர்

என்றும், அவர்கள் எல்லோரும் வந்துவிட்டார்கள் என்றும் தெரிந்துகொள்ள முடிந்தது. அப்படித் தெரிந்து கொள்ளும்படி செய்ததற்கு அந்தப் பேச்சில் "உம்" என்ற பொடி இருப்பதுதான் காரணம்.

* * *

என்னுடைய நண்பர் சொன்ன, 'வந்தாலும் வருவேன்' என்ற வார்த்தையிலே இருந்த உம் என்ற பொடி 'வராமலும் இருப்பேன்' என்ற மறுப்பை விளக்கியது. அந்த மறுப்பை எதிர்மறை என்றும் சொல்லலாம்.

செட்டியார் செய்த விசாரணையிலே, "நானும் போனேன்" என்று கிடைத்த பதிலிலிருந்து முன்னாலே போனவர் சிலர் உண்டு என்ற விஷயம் தெரிய வந்தது. அந்த 'உம்' முன் நடந்த இறந்தகாலச் செய்தியைத் தழுவி நிற்கிறது.

வேலைக்காரியின், "நாயும் தொடாது" என்ற பேச்சிலே இழிவைப் புலப்படுத்தும் பொடியாக 'உம்' இருக்கிறது.

"நாலு பேரும்" என்ற பேச்சிலே அதற்குமேல் இல்லை. அதுதான் முழுத் தொகை என்பதை 'உம்' தெரிவிக்கிறது.

'உம்' என்ற பொடியை இலக்கணக்காரர்கள் உம்மை என்று சொல்வது வழக்கம். நண்பன் வார்த்தையில் வராமல் இருப்பானென்ற கருத்தைத் தெரிவித்த உம்மையை எதிர்மறை உம்மை என்று சொல்வார்கள். செட்டியார் துப்பறிய உதவி செய்த உம்மையை இறந்தது தழீஇய எச்ச உம்மை என்று சொல்வார்கள். வேலைக்காரி வாக்கில் வந்ததோ இழிவு சிறப்பும்மை என்ற பெயரைப் பெறும். வாத்தியார் அனைவரும் வந்ததைக் குறிப்பித்த உம்மை முற்றும்மை எனப்படும்.

உம்மை இந்த அளவோடு நிற்கவில்லை. "உங்கள் முப்பாட்டனாலும் முடியாது, அதைச் செய்ய" என்ற வாக்கியத்தில் அந்தக் காரியத்தின் உயர்வைக் காட்ட உம்மை வருகிறது. இது உயர்வு சிறப்பும்மை. இப்படி எட்டுக்கு மேற்பட்ட அர்த்தங்களைத் தெரிவிக்க இந்தப் பொடிச் சொல் உபயோகப்படும்.

உம்மை மாத்திரமன்றி வேறு பொடிகளும் உண்டு. "அவனோ, நீயோ யாராவது போங்கள்" என்பதில் திட்டமாகச் சொல்லாமல் ஐயமாக வைக்கிறது ஓ என்ற பொடி. "இவனே அவ்வளவையும் தின்றுவிட்டான்" என்பதில் மற்றவர்களை விலக்கி ஒருவனையே சுட்டுகிறது ஏ என்ற பொடி. என, என்று, மன், கொல், தில் என்று பல பொடிகள் உண்டு.

இவை மற்றச் சொற்களோடு சேர்ந்து பொருள்களை விளக்குகின்றன. இவற்றை இடைச்சொல் என்று இலக்கணம் சொல்லுகிறது. சொல்லுக்கு இடையிலேயும் இறுதியிலேயும் முதலிலேயும் நின்று காலம், பால், இடம் முதலியவற்றைக் குறிக்கும் சொற்கள்கூட இடைச் சொல் வரிசையில் சேர்ந்தனவே. முதலி என்று சொல்வதைக் காட்டிலும் முதலியார் என்று சொல்வது மரியாதையைக் குறிக்கிறது. அங்கே 'ஆர்' என்ற இடைச் சொல் அந்த மரியாதையைப் புலப்படுத்த வருகிறது.

சின்னஞ் சிறிய சொற் பகுதியாக இருந்தாலும் தேரைத் திருப்புகிற முட்டுக்கட்டை போல வாக்கியத்தின் பொருளையே மாற்றிவிடுகிறது இடைச்சொல். வந்தான் என்பதற்கும், வந்தாள் என்பதற்கும் சொல்லளவில் ஓர் எழுத்தே வித்தியாசம்! ஆனால் பொருளில் எத்தனை வித்தியாசம்! இதைச் செய்வது சொல்லிலே பாலை உணர்த்தும் விகுதியாகிய இடைச் சொல். சென்றேன், செல்வேன் என்ற இரண்டிலும் தொழில் மாறவில்லை. ஆளும் மாறவில்லை. ஆனால் காலம் மாறுகிறது; அதைத் தெரிவிப்பவை இடையில் உள்ள இடைநிலையாகிய இடைச்சொற்கள்.

இந்த இடைச்சொற்களைப்பற்றிய இலக்கணங்களை விரிவாகத் தொல்காப்பியர் 'இடையியல்' என்ற பகுதியில் சொல்லியிருக்கிறார்.

# 27

# சிந்தனை உலகத்து வார்த்தைகள்

உலகத்தில் உள்ள பொருள்களில் கண்ணாலும் மற்றப் புலன்களாலும் உணர்ந்துகொள்ளும் பொருள்கள் ஒரு விதம்; அவற்றைக் கொண்டு ஊகித்துக் கருத்தால் தெரிந்துகொள்ளும் பொருள்கள் ஒருவிதம். ஒரு மொழி உண்டானபோது முதல் முதல் கண்ணினாலும் காதினாலும் உணர்ந்த பொருளுக்குப் பெயர்கள் ஏற்பட்டிருக்க வேண்டும். வரவரப் பிற புலன்களால் உணர்வதற்குரிய பொருள்களுக்குப் பெயர்கள் வழக்கில் வரும். மனித வாழ்க்கை பண்படப் பண்பட மக்களுக்குச் சிந்தனைசக்தி அதிகமாகும். தினந்தோறும் பழகும் உலகத்துக்கு அப்பாலே உள்ளம் செல்லும். அப்போது அந்தச் சிந்தனை விரிவுக்கு ஏற்றபடி மொழிவளர்ச்சியும் அமையும்.

குழந்தை வரவர எப்படிப் பேச்சைப் பழகிக்கொள்கிறது என்பதைக் கவனித்தால் அதைக் கொண்டு மொழி வளர்ந்த விதத்தையும் ஒருவாறு தெரிந்து கொள்ளலாம். குழந்தை முதல் முதலில் கண்ணுக்குப் புலப்படும் பொருள்களைத் தெரிந்துகொள்கிறது. அம்மா, அப்பா, அண்ணா முதலிய சொற்களே குழந்தைப் பாஷையின் முதற் சொற்கள். பாலும் சோறும் பொம்மையும் ஆகிய பொருள்களைத் தெரிந்துகொள்ளும்போது அவற்றின் பெயர்களையும் தெரிந்துகொள்கிறது. பிறகுதான், நடக்கிறான், சிரிக்கிறான் என்பனபோன்ற வினைச்சொற்களை அது பழகிக்கொள்கிறது. சின்னஞ்சிறு குழந்தையிடம் 'கோபம்' என்று சொல்லிப் பாருங்கள். அது தின்பண்டமோ, பொம்மையோ என்றுதான் நினைக்கும். கோபம் என்பது சுட்டிக்காட்டுவதற்குரிய பொருள் அல்ல.

குழந்தையின் தந்தை கோபித்துக்கொள்கிருர். குழந்தைக்கு அப்போது கோபத்தின் மெய்ப்பாடுகள் தெரிகின்றன. அவருடைய அங்க அசைவு, படபடப்பு, இரைச்சல் இத்தனையும் சேர்ந்து கோபம் என்ற குணத்தின் விளைவுகளாக இருக்கின்றன. ஆகவே, கோபம் என்று அதற்குத் தெரியும்போது, அந்தச் சொல்லின் பொருளை, இந்த விளைவுகளை நினைத்துக்கொண்டே அது உணர்ந்துகொள்கிறது. கைகால்களை அசைத்து ஆட்டுவதில் கோபம் இருக்கிறது; ஆனுல் அதுவே கோபம் அன்று. இரைந்து பேசுவதில் கோபம் உண்டு; ஆனுல் அதையே கோபம் என்று சொல்லக்கூடாது. கோபத்துக்கு அறிகுறியான செயல்களில் அவையும் சேர்ந்தவை.

கண்ணுலும் காதாலும் உணர்ந்த மெய்ப்பாடுகளைக் கொண்டு, கோபம் என்ற குணத்தைக் கருத்தால் உணர்கிருேம். அது கருத்துப் பொருள் (Abstract) என்று சொல்லப்படும்.

கருத்துப் பொருளாகிய கோபம், அன்பு, பொருமை, சோம்பல் முதலிய குணங்கள் மனிதனிடத்திலே காணப்படுவன. அவற்றைக் குழந்தை நாளடைவில்தான் தெரிந்துகொள்கிறது. வளர வளர அதன் அறிவும் வளர்கிறது. அதனுல் கருத்துப் பொருள்களையும் அவற்றிற்குரிய சொற்களையும் அதிகமாகத் தெரிந்துகொள்கிறது. கருத்துப் பொருள்களில் மிகமிக நுணுகிய பல உண்டு. உணர்ச்சி என்பதை மிக நுணுகிய கருத்துப் பொருள் என்று சொல்ல வேண்டும். அதன் உருவத்தை இன்னதுதான் என்று சொல்லிவிட முடியாது. இன்பம், துன்பம் என்றவையும் அத்தகையனவே.

இத்தகைய பொருளையும் சொல்லையும் இளங் குழந்தை முதலில் அறிந்துகொள்வதில்லை. மனித சமுதாயத்திலும் ஒரு மொழியின் ஆரம்பகாலத்தில் இத்தகைய கருத்துப் பொருளைக் குறிக்கும் சொற்கள் மிகவும் சிலவே இருக்கும்.

வரவர மொழியில் வளப்பம் உண்டாகும்போது சிந்தனு சக்திக்கு விஷயமான பொருளைக் குறிக்கும் வார்த்தைகள் பல சேரும். ஒரே மாதிரி தோன்றினுலும் ஒன்

றுக்கொன்று நுணுகிய வேற்றுமையுடைய சொற்கள் பிறக்கும்.

தமிழில் சொற்களை நான்கு வகையாகப் பிரித்திருக்கிறார்கள். பொருளின் பெயரைச் சொல்லும் பெயர்ச்சொல், அதன் தொழிலைச் சொல்லும் வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்ற நான்கும் தமிழ்ச் சொற்களிலே உள்ள பிரிவு. புலனாலே நுகர்வதற்குரிய பொருள் இருக்கவேண்டும்; அப்போது அதைச் சுட்டுவதற்குப் பெயர் ஏற்படும். அப்படியே வினைச் சொல்லால் குறிக்கப்படும் வினை அல்லது தொழில் புலனுக்கு விஷயமாக இருக்கும். போகிறான் என்றால் போகும் தொழிலைக் கண்ணாலே காண்கிறோம். பேசுகிறான் என்று சொல்லாலே குறித்தால் அது சுட்டுகின்ற பேசுந் தொழிலை நம் காது உணர்கிறது. மணக்கிறது என்ற வினைச்சொல்லை மூக்கினால் உணர்ந்தபின்பே பேசுகிறோம்.

ஆனால் இடைச்சொல்லுக்கு இப்படிப் புலனாலே உணர்வதற்கு உரிய பொருள் இல்லை. அது மொழிக்கு மாத்திரம் உபயோகமாகும் துணைக்கு. பெயரோடும் வினையோடும் சேர்ந்தே வரும். மரம் என்ற சொல் பெயர். அதைச் சொல்லும்போது மரம் என்ற ஒரு பொருள் இருப்பதை உணர்கிறோம். மரங்கள் என்றால் பல மரங்களாகிய பொருள் நினைவுக்கு வருகிறது. மரங்கள் என்ற சொல்லிலே மரம் என்ற ஒரு சொல்லும், கள் என்ற இடைச்சொல்லும் சேர்ந்துள்ளன. மரம் என்பதைத் தனியே பிரித்துச் சொன்னாலும் அதனாலே குறிக்கப்படும் பொருளைக் காணலாம். கள் என்பது அத்தகையதன்று. "ஒரு மரமன்று, பல மரம்" என்ற பொருளைக் காட்ட அது வருகிறது; ஆனால் "கள்" என்றாலே பல மரம் என்ற அர்த்தம் வராது. கள் என்பதற்கு அர்த்தம் உண்டு; ஆயினும் அதனால் சுட்டப்படும் தனி வஸ்து ஒன்று இல்லை.

ஒரு மங்கை தன் கழுத்தில் தாலி கட்டிக்கொண்டிருக்கிறாள். அவள் கழுத்தில் தாலி ஏறுவதற்குமுன் அவள் கன்னிப் பெண்ணாக இருந்தாள். தாலி ஏறின

பிறகு அவள் மனைவி என்ற நிலைக்கு வந்தாள். கன்னி மனைவியாகி விட்டாள் என்பதை நாம் தாலியினாலே அறிகிறோம். கணவனை உடையவள் என்ற செய்தி அவளைக் கண்டவுடனே தெரியவருகிறது. அவள் கழுத்தில் மீண்டும் தாலி இல்லாமல் போய்விடுகிறது. தாலி இல்லாமையால் கணவனும் இல்லையென்று தெரிந்துகொள்கிறோம். தாலி இருக்கும்போது கணவன் இருப்பதும், தாலி இல்லாதபோது கணவன் இல்லாததும் புலனாவதை வைத்துக்கொண்டு தாலியையே கணவனாக நினைத்து விடலாமா? இடைச்சொல் அந்த நிலையில்தான் இருக்கிறது. போ என்ற வினைச்சொல் இடைச்சொற்களோடு சேர்ந்து 'போனான்' என்று ஆகிறது. போ என்பதற்கும் போனான் என்பதற்கும் எவ்வளவோ வித்தியாசம் உண்டு. முதல் சொல்லில் தொழில் மாத்திரம் இருக்கிறது. போனான் என்பதிலோ போகிற ஆடவன், அந்தத் தொழில் நடந்த காலம் இரண்டும் அதிகமாகச் சேர்ந்திருக்கின்றன. அந்த இரண்டையும் தெரிவிக்க இரண்டு இடைச் சொற்கள் வந்திருக்கின்றன. போதல் என்னும் தொழிலைச் செய்தவன் ஓர் ஆண்மகன் என்பதை, "ஆன்" என்ற இடைச் சொல் தெரிவிக்கிறது; சொல்லின் உறுப்பாகிய அதற்கு விகுதி என்று பெயர். தொழில் நிகழ்ந்த காலத்தை, போ என்பதற்கும் ஆன் என்பதற்கும் இடையிலே நிற்கும் "ன்" என்ற இடைச் சொல் காட்டுகிறது. அந்த உறுப்புக்கு இடைநிலை என்று பெயர். ஆன் என்பது ஆடவனைக் குறிக்க வந்த அடையாளமே தவிர, அதுவே ஆடவன் என்ற வஸ்துவுக்கு உரிய பெயர் ஆகாது. அதனால்தான் இடைச் சொல்லுக்கு அர்த்தம் உண்டே ஒழிய அதனால் நேர் முகமாகத் தெரியவரும் வஸ்து இல்லையென்று முன்பு சொன்னேன்.

நாலாவதாக வருவது உரிச்சொல். இடைச்சொல் பெயரோடும் வினையோடும் சம்பந்தப்பட்டு வரும். உரிச்சொல் அவ்வாறு சம்பந்தப்பட்டு வருவதோடு, அதுவே பெயராகவும் வினையாகவும் நிற்பது உண்டு. முன்னாலே சொன்ன கருத்துப் பொருளைக் குறிக்கும் சொற்களே பெரும்பாலும் உரிச்சொல் என்ற பாகுபாட்டில் அடங்கும்.

ஒரு பாஷையின் வளப்பத்தையும் அதனைப் பேசுவோரது சிந்தனை சக்தியையும் உரிச்சொற்களைக் கொண்டு தெரிந்துகொள்ளலாம். ஆரம்ப காலத்தில் உரிச் சொற்கள் மற்றவற்றை நோக்கச் சிலவாகத்தான் இருக்கும். ஆகையால் பழைய காலத்தில் அவற்றை அறிஞர்கள் தொகுத்து வைத்தார்கள். சிந்தனுலோகத்திலே நடமாடுபவர்கள் அவர்கள். இலக்கண ஆசிரியர்கள் அந்த ஆரம்ப காலத்தில் மற்றச் சொற்களுக்கு இலக்கணம் சொன்னார்கள். மொழியில் வரும் கருவிகளாகிய இடைச் சொல்லைத் தொகுத்து உரைத்தார்கள். அப்படியே கருத்துப் பொருளைக் குறிக்கும் சொற்களைத் தனியே தொகுத்துச் சொன்னார்கள். வரவர அப்படிச் சொல்வது சம்பிரதாயமாகிவிட்டது. உரியியல் என்ற பகுதியில் உரிச்சொல்லின் இலக்கணத்தைச் சொல்வதோடு நில்லாமல் உரிச்சொற்களைத் தொகுத்துக் காட்டுவதும் இலக்கண ஆசிரியர்களுக்கு வழக்கமாயிற்று. தொல்காப்பியரும் அந்தச் சம்பிரதாயத்தைப் பின்பற்றி உரியியலில் உரிச்சொற்களை எடுத்துச் சொல்கிறார்.

கருத்துப் பொருளுக்கு உரிய சொல் உரிச்சொல் என்று இருந்தது. வரவர அதனோடு தொடர்புடையவற்றைக் குறிக்கும் சொற்களும் உரிச்சொற்கள் ஆயின. பிறகு வஸ்துவை நினைக்காமல் சொல்லை மாத்திரம் நினைக்கும் போது எல்லாமே உரிச்சொல் என்ற நிலை வந்தது. வாக்கியங்களில் வரும் சொற்களில் வேறுபாடு உண்டு; அப்படி இல்லாமல் அகராதியிலே உள்ள சொற்கள் யாவும் உரிச்சொல் என்று கொள்ளும் வழக்கம் ஏற்பட்டது. ஒரு நிகண்டுக்கே, 'உரிச்சொல் நிகண்டு' என்று பெயர் உண்டு.

தொல்காப்பியர் கூறும் உரிச் சொற்கள் இசை, குறிப்பு, பண்பு என்ற மூன்று வகையிலே அடங்கும், அவர் காட்டும் சொற்கள் பல, இக்காலத்திலே வழங்கவில்லை. சிந்தனு லோகத்துச் சொற்களாக நின்ற உரிச் சொல்லோடு புலவர் உலகத்திலே மாத்திரம் வழங்கும் திரி சொற்களையும் உரிச் சொல்லாகப் பிற்காலத்தார் இலக்கணம் கூறினர்.

நிலையில்லாமல் சில காலத்துக்கு வழங்கும் ஒன்றைக் குறிக்கத் தனித் தமிழ்ச் சொல்லாக ஒன்றும் இன்றை

வழக்கில் இல்லை. தாற்காலிகம் என்ற வட சொல்லையும், டெம்பரரி (Temporary) என்ற ஆங்கிலச் சொல்லையும் பேச்சில் வழங்குகிறோம். 'வம்பு' என்ற சொல்லுக்கு அந்தப் பொருள் உண்டு. "வம்பு நிலையின்மை" என்பது தொல்காப்பியம்.

மாதர் என்ற சொல் பெண்களைக் குறிக்க இப்போது வழங்குகிறது. இயற்கையாக அதற்குக் காதல் என்ற பொருள் இருந்தது. அதிலிருந்து காதலை உண்டாக்கும் பெண்டிருக்கு ஆயிற்று.

வெம்மை என்ற சொல்லுக்கு இப்போது வெப்பம் என்ற பொருள்தான் வழக்கில் உண்டு. பழங்காலத்தில் அதற்கு விருப்பம் என்ற பொருளும் இருந்தது.

நன்று என்பதற்கு நல்லது என்ற பொருள் நமக்குத் தெரியும். அதற்குப் பெரிது என்ற பொருள் உண்டென்று தொல்காப்பியர் சொல்கிறார்.

விழுமம் என்ற சொல்லுக்குச் சீர்மை, சிறப்பு என்ற பொருளோடு துன்பம் என்ற பொருளும் உண்டு. குழந்தையைப் பெற்ற நிலைக்கு, 'புனிறு' என்று ஒரு பெயர் உண்டு. இப்போதுதான் கன்றுபோட்ட பசுவை, "புனிற்று" என்று சொல்வார்கள்.

அழகைக் குறிக்கும் யாண் என்ற சொல்லும், புதியது உண்டாதலைக் குறிக்கும் யாணர் என்ற சொல்லும் இப்போது மறந்தே போய்விட்டன. கடி என்ற ஒரு சொல்லுக்கே நீக்குதல், கூர்மை, காப்பு, புதுமை, விரைவு, விளக்கம், மிகுதி, சிறப்பு, அச்சம், தெய்வம், ஐயம், கரிப்பு என்ற பல பொருள்கள் உண்டென்று தொல்காப்பியர் கூறுகிறார்.

இப்படிச் சில சொற்களை எடுத்துக் காட்டி அவற்றிற்குரிய பொருளையும் கூறி, "எல்லாவற்றுக்கும் பொருள் இங்கே சொல்லிக்கொண்டிருப்பது முடியாத காரியம். சொல் வந்திருக்கும் சந்தர்ப்பத்தைப் பார்த்து, முன்னும் பின்னும் வந்த வார்த்தைகளையும் கவனித்து எந்தச் சொல்லால் சொல்லலாமென்று அந்தச் சொல்லாலே ஆசிரியர் மாணக்கருக்குப் பொருளை உணர்த்த வேண்டும்"

என்று சொல்கிறார். அவர் காலத்தில் தனியே அகராதி இல்லாததால் இப்படிச் சொன்னார்.

"இதுவரைக்கும் நான் சொன்ன வார்த்தைகளுக்கு நான் சொன்ன அர்த்தங்களுக்கு மேலும் பொருள் இருக்கலாம். அவற்றைச் சந்தர்ப்பம் நோக்கித் தெரிந்துகொள்ள வேண்டும்" என்று ஒரு சூத்திரம் சொல்லியிருக்கிறார். அவ்வளவு படித்து, உலக வாழ்க்கையையும் ஆராய்ந்த அவருக்கே அப்படியானால், நாம் எப்படி மொழிக்கு எல்லை கட்டிவிட முடியும்?

உபாத்தியாயர் பாடம் சொல்கிறார். "சாயல் என்பது மென்மை என்று பொருள்" என்கிறார். மாணாக்கன், "மென்மை என்றால் என்ன?" என்று கேட்டால் எப்படி விளக்க முடியும்? "மெல்லியதாக இருக்கும்" என்று சொன்னால் விளங்காது. ஆகவே, அப்படிப் பொருளுக்குப் பொருள் சொல்லிக்கொண்டு போனால் அதற்கு முடிவே இராது. இதையும் தொல்காப்பியர் சொல்கிறார்.

பொருட்குப்பொருள் தெரியின்
அதுவரம்பு இன்றே.

தமிழ், வாழ்க்கையோடு ஒட்டிய மொழி. அதில் பொருள் தோன்றியபோது சொல் தோன்றியது. வரவரப் புதிய சொற்கள் சில காரணத்தால் தோன்றியிருக்கும். காரணம் இல்லாமலே பல சொற்கள் இருப்பது இயற்கை. காரணம் இருந்தாலும் அடிப்பட்டு நெடுங்காலமாகிவிட்ட பிறகு என்ன காரணம் என்று ஆராய்ந்து தெரிந்து கொள்வது மிகவும் அருமை. சொல் எல்லாவற்றுக்கும் காரணம் தேடிக் கண்டுபிடிப்பது இயலாத காரியம். இதையும் தொல்காப்பியர் சொல்கிறார்.

மொழிப்பொருட் காரணம்
விழிப்பத் தோன்றா!

"நால்வகைச் சொல்லுக்கும் பொருளை அறிவித்து நிற்கின்றதோர் காரணம் உண்டாம் தன்மை நுண்ணுணர்வு இல்லாதோர்க்கு மரபு என்று கொள்வதல்லது விளங்கத்தோன்றா" என்று நச்சினார்க்கினியர் உரை கூறுகிறார்.

## 28

# சொல் வளம்

ஒரு மொழி, மனிதர்களுடைய வாழ்க்கையில் பயன் பட்டு வருமானால் அது வர வர வளர்ந்துகொண்டே போகும். வளர்ச்சி என்பது பலபல நூல்கள் உண்டா வது மாத்திரம் அல்ல. மொழியின் முதற்பயன் கருத்தைப் புலப்படுத்தும் கருவியாக இருப்பது; அதன் பிறகுதான் இலக்கிய இன்பத்தைத் தரும் சிறப்பு வருகிறது. நூல்கள் பெருகுவது மொழி வளர்ச்சிக்கு அறிகுறிதான்; ஆனாலும் இலக்கியப் பகுதியின் வளர்ச்சியென்றே அதைச் சொல்ல வேண்டும். வழக்கு மொழியிலும் வளர்ச்சியிருக்க வேண்டும்.

வழக்கு மொழியில் வளர்ச்சி எவ்வாறு உண்டாகும்? மனிதன் அந்த மொழியைப் பெருக வழங்க வேண்டும்; உலகமெங்கும் பரந்த காட்சிப் பொருள்களைக் குறிக்கும் சொற்கள் அதில் வரவர அதிகமாக வேண்டும். இது வழக்கு மொழியின் புற வளர்ச்சி. உள்ளத்துள்ளே தோன்றும் உணர்ச்சிகளைக் குறிக்க வார்த்தைகள் இருக்க வேண்டும். இது வழக்கு மொழியின் அகவளர்ச்சி. இலக்கிய வளர்ச்சி மாத்திரம் அமையும் மொழிகள் இன்றும் உலகில் உள்ளன. வடமொழி அத்தகையதே. வழக்கு மொழியில் உள்ள அத்தனையும் இலக்கிய மொழியில் உண்டு என்று சொல்ல இயலாது. மனித னுடைய உணர்ச்சிகளில் பெரும்பாலும் நல்லவற்றையே இலக்கியத்தில் காணலாம். சொற்களிலேகூட அவையல் கிளவியாகிய இடக்கர்ச் சொற்களை இலக்கியத்திலே காண முடியாது.

வாழ்க்கையின் அழகுப் பகுதியையே பெரும்பாலும் இலக்கியம் காட்டுகிறது. அழுக்குப் பகுதி எங்கோ சிறிதளவே இலக்கியத்திலே வருகிறது. நாம் கிராமிய

மாகப் பேச்சு வழக்கிலே வகைகளாக உபயோகப்படுத்து கிறோமே, அவற்றை இலக்கியத்திலே காண முடியுமா? தமிழைப் புத்தகவாயிலாகத் தெரிந்துகொண்ட ஒருவனுக்குத் தமிழ் நாட்டில் கால் வைத்தவுடனே எல்லோருடைய பேச்சும் விளங்கும் என்று சொல்லலாமா? புத்தக உலகத்தில் வாழ்ந்தவனுக்கு இலக்கியங்களில் தடையின்றிச் செல்லும் தகுதி இருக்கலாம். ஆனால் உலக வழக்கு மொழியில் பல இடங்களில் அவனுக்குப் பொருள் தெரியாமல் விழிக்கும் சங்கடம் நேரும்.

தமிழ்மொழி வழக்கிலும் இலக்கியத்திலும் வளர்ந்து கொண்டுவரும் மொழி. வாழ்விலே புதியனவாக வரும் பொருள்களையும் கருத்துக்களையும் குறிக்கப் புதிய புதிய சொற்கள் வழக்கு மொழியிலே சேர்ந்துகொண்டே வருகின்றன.

தமிழின் சொல்வளத்துக்குத் தலைமையான காரணம் அது நெடுங்காலமாக இருப்பது. அதனோடு, வாழ்க்கையின் விரிவுக்கு ஏற்பப் பாஷையிலும் விரிவு தானே அமைவது மற்றொரு காரணம். வாழ்க்கையின் விரிவு என்பது வாழ்க்கைமுறை பல நாகரிகப் பொருள்களை வரவர அதிகமாகப் பயன்படுத்திக்கொள்ளும்படி விரிவது; அவற்றைப்பற்றிப் பேசவும் சிந்திக்கவும் மொழி பயன் பட்டு விரிவை அடைகிறது. நமக்கு அருகில் உள்ள நாட்டிலிருந்தும் தூரத்திலுள்ள நாட்டிலிருந்தும் பொருள் களை வருவித்துப் பயன்படுத்துகிறோம். நம்முடைய வீட்டில் பண்டங்கள் பெருகுகின்றன. அந்தப் பண்டங் களிலே பிற நாட்டுப் பொருளே இல்லாமல் வாழ்க்கையை நடத்துபவர்கள் பெரும்பாலும் இல்லை. வாழ முடியாதா என்பது வேறு விஷயம். பிற நாட்டுப் பொருளை உபயோ கிக்காமல் வாழ்தல் என்பது விரதம். விரதம் நமக்கு நித்தியப்படியாக அமைய முடியாது. ஏதோ ஒரு நாள் இருக்கலாம்; துறவிகள் என்றும் விரதம் இருக்கலாம்.

பாஷையும் இப்படித்தான் விரிவை அடைகிறது. பிற நாட்டிலிருந்து வந்த சொற்களிலே சிலவற்றை ஏற்றுக்கொள்கிறது; அதனால் அதன் அழகு கெடுவதில்லை. தமிழ் மொழியில் இன்று அவ்வாறு வந்து கலந்த

வார்த்தைகள் பல உண்டு. "தனித் தமிழில் பேச முடியாதா? எழுத முடியாதா?" என்று சிலர் கேட்கலாம். முடியும். ஆனால் அது அவசியமா? மனிதன் காய் கறி இல்லாமல் சாப்பிட முடியும். சில பஞ்சகாலங்களில் சாப்பிடும் அவசியமும் நேர்ந்து விடுகிறது. அதனால், எப்போதுமே காய்கறி இல்லாமல் சாப்பிடலாமே என்று சொல்லலாமா? உண்பவனுடைய வறுமை நிலையை அல்லவா அது புலப்படுத்தும்?

தமிழ் மொழியின் வளர்ச்சி, பிற மொழிச் சொற்களை யும் ஓரளவு ஏற்றுக்கொண்டமையால் தடைப்படவில்லை. அப்படிச் சேர்த்துக்கொண்டமையால் அதன் வளர்ச்சி பின்னும் வளப்பமுற்றது.

எந்த மொழியும் முதல் முதலில் வழக்கு மொழியாக இருந்து பிறகே இலக்கிய மொழி ஆகும். வழக்கு மொழி யில் வரும் சொற்களை மாத்திரம் கொண்டு இலக்கிய சிருஷ்டி நடைபெற்றால் அதற்கு எல்லை உண்டாகிவிடும். எல்லையின்றி இலக்கியம் வளர வேண்டுமானால் இலக்கிய மரபு ஒன்று அமைந்து அது விரிய வேண்டும். வழக்கும் இலக்கியமும் வளர வளர இரண்டு வகையிலும் சொற் களும் மரபும் விருத்தியாகும்.

வழக்கிலே வழங்கும் சொற்களோடு, இலக்கியத்திலே வழங்கும் சொற்களும் தோன்றும்; சில சொற்களுக்கு இலக்கியத்திலே புதிய பொருள்களும் அமையும். நீர் என்ற சொல் வழக்கில் வழங்கும்போது ஜலத்தைக் குறிக்கிறது; அது இலக்கியத்தில் அதைக் குறிப்பதோடு, இயல்பு என்ற மற்றொரு பொருளையும் குறிக்கிறது.

இயல்பாக வழக்கிலே வந்த சொற்களை இயற்சொல் என்று தமிழில் சொல்வார்கள். இலக்கிய உலகத்தில் புலவர்கள் வழங்கும் சொற்களைத் திரிசொல் என்று சொல்வார்கள். இலக்கியத்தில் இயற் சொல்லும், திரி சொல்லும் ஆகிய இரண்டும் பயன்படும். வழக்கிலோ இயற்சொல்லே பயன்படும்.

தமிழ் மொழி என்பது வழக்கு மொழி மாத்திரம் அன்று; இலக்கிய மொழி அதன் பகுதியே. ஆதலின்

இயற்சொல், திரிசொல் என்ற இரண்டு வகைச் சொற்களும் தமிழ்ச் சொற்களே.

இயற்கையாகத் தமிழ் நிலத்தில் வழங்கும் சொல் இயற்சொல் என்று சொல்லும்போது, ஒரு சங்கடம் வந்து விடுகிறது. திருநெல்வேலிச் சீமையில் வழங்கும் சில வார்த்தைகளின் பொருள் சென்னையில் இருப்பவர்களுக்கு விளங்காது. அப்படியே தமிழ் நாட்டின் ஒவ்வொரு பகுதியில் சில சொற்கள் பெருக வழங்கும்; ஆனால் அவற்றை மற்றப் பகுதியினர் எளிதில் தெரிந்துகொள்ள மாட்டார்கள். அவற்றைத் திசைச்சொல் என்று தனியே பிரித்துச் சொன்னார்கள். தமிழ்ச் சொற் கூட்டத்திலே அவைகளும் சேர்ந்தவையே. ஆனாலும் இயற்சொற்கள் ஆகா.

தமிழ் நாட்டின் நடுவாக உள்ள மதுரையை உள்ளிட்ட பகுதிக்குச் செந்தமிழ் நிலம் என்று பெயர். அந்த நாட்டு வழக்கிலே பயின்றுவரும் சொல்லையே இயற்சொல்லாக வைத்துக்கொண்டார்கள்.

'இயற்சொல் என்பவை செந்தமிழ் நிலத்து வழக்காக அமைந்து நம் பொருளைச் சரியானபடி உணர்த்தும் சொற்கள்' என்று தொல்காப்பியர் இலக்கணம் சொல்கிறார்.

இலக்கிய உலகத்துக்கே உரிய சொற்களாகிய திரிசொல்லின் இலக்கணத்தையும் அவர் சொல்கிறார். 'ஒரே பொருளைக் குறித்து வரும் பல சொல்லும், பல பொருளைக் குறித்துவரும் ஒரு சொல்லும் என்று இருவகைப்படும் திரிசொல்' என்பது அவர் சொல்லும் இலக்கணம்.

மலை என்பது இயற் சொல். தமிழ்நாட்டு வழக்கில் இருப்பது. ஆனால் மலையைக் குறிக்க வேறு பல சொற்கள் இலக்கியத்தில் வழங்குகின்றன. வெற்பு, விலங்கல், விண்டு என்பவை மலையைக் குறிக்க வழங்கும் திரி சொற்கள். எகினம் என்ற ஒரே சொல்லே அன்னம், கவரிமா, புளி, நாய் என்பவற்றைக் குறிக்கும். அதுவும் திரி சொல்லே. இயற் சொல்லைத் தமிழன் இயல்பாகவே தெரிந்துகொள்வான். திரிசொற்களை இலக்கியப் பயிற்சியால் தெரிந்துகொள்வான்.

செந்தமிழ் நாட்டை அடுத்துள்ள உள்நாட்டுப் பிரிவுகள் பன்னிரண்டு என்று அக்காலத்தில் வகுத்திருந்தார்கள். இன்றுள்ள ஆந்திர மண்டலத்தின் தென் பகுதி, அருவா வட தலை நாடாகிய தமிழ் மண்டலப் பகுதியாக இருந்தது. மலையாள நிலம் மலை நாடு என்ற பெயர் பெற்ற தமிழ் நாட்டுப் பகுதி. அங்கே மாத்திரம் வழங்கிய சில சொற்கள் தமிழ் நூல்களிலும் வழக்கிலும் வழங்குவதுண்டு. அவற்றையே திசைச் சொற்கள் என்று கூறினர் இலக்கணக்காரர். சொல் என்ற பொருளில், 'செப்பு' என்று சொல்வது திசைச்சொல். கொள்ளைக் காணம் என்று சொல்வது தென் பாண்டி நாட்டுச் சொல்; அதுவும் திசைச் சொல்.

பொங்கர் நாடு, ஒளி நாடு, தென்பாண்டி நாடு, குட்ட நாடு, பன்றி நாடு, கற்கா நாடு, சீத நாடு, வேணாடு, பூழி நாடு, மலை நாடு, அருவா நாடு, அருவா வடதலை நாடு என்ற பன்னிரண்டும் தமிழ் மண்டலப் பகுதிகள். இவற்றைக் 'கொடுந்தமிழ் நாடுகள்' என்று பிற்காலத்தார் வழங்குவர். இந்த நாடுகளின் எல்லைபற்றியும், பெயர் பற்றியும் பல வேறுபாடான கொள்கைகள் அவ்வப்போது உண்டாகி யிருக்கின்றன.

தமிழ் மண்டலத்தின் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த சொற்களையும் சேர்த்துக்கொண்ட தமிழர்கள், இந்தியா முழுவதும் இலக்கிய அளவில் பெருவளம் பெற்ற வட மொழிச் சொற்களையும் அளவறிந்து தமிழ் ஆக்கிக்கொண்டார்கள். ஆரிய மொழியிலிருந்து தமிழிலே புகுந்த சொற்களை, 'வடசொல்' என்று தனியே குறித்தனர்.

ஆகவே, இயல்பான வழக்கில் வழங்கும் இயற்சொற்களும், அதன் பின் இலக்கிய உலகில் வழங்கும் திரிசொற்களும், தமிழ் நிலப் பகுதிகளில் வழங்கும் திசைச் சொற்களும், ஆரிய மொழியிலிருந்து வந்த வட சொற்களும் இலக்கியத்திலே ஏறித் தமிழாகவே ஆகிவிட்டன. 'இந்த நான்கும் செய்யுளுக்குரிய சொற்கள்' என்று தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே மரபு ஏற்பட்டது. தொல்காப்பியரும் செய்யுளை அமைப்பதற்குப் பயன்படும் சொற்களில் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்ற நால்வகை உண்டு என்று சொல்கிறார்.

# 29

# தமிழில் வடசொல்

தமிழில் சொல்வளம் மேலும் மேலும் வளர்ச்சி பெற்றதற்குரிய காரணங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். தமிழர் வாழ்வில் புறவாழ்க்கைக்குரிய பொருள்களும் சிந்தனைக்குரிய கருத்துக்களும் நாளடைவிலே பெருகிவந்தது ஒரு காரணம். புலவர்கள் இலக்கியங்களைச் சிருஷ்டி செய்யும்போது பல திரிசொற்களை ஆக்கிக்கொண்டது மற்றொரு காரணம். வேற்று நாட்டுப் பொருளும் கருத்தும் இலக்கியமும் தமிழர் வாழ்க்கையிலே கலந்தது மூன்றாவது காரணம்.

வாழ்க்கை விரிய விரிய, மனிதன் உலவும் இடம் விரிகிறது. அவனுடைய நோக்கம் விரிகிறது. அவனுக்குப் பழக்கமான மக்கள் விரிகின்றனர். ஆகவே, அவனுடைய பேச்சும் இவற்றுக்கு ஏற்றபடி விரிகிறது. தமிழ் மொழியிலே சொல்வளம் நிரம்பியிருப்பதற்குக் காரணம் தமிழர்களுடைய பரந்த நோக்கமே ஆகும். இந்தியாவில் வழங்கும் மொழிகளுக்குள் தமிழே சொல்வளத்தில் தலைசிறந்து நிற்கிறது.

மொழியைப்பற்றி ஆராயும் புலவர்கள் சில சில மொழிகளை இனம் பிரித்திருக்கிறார்கள். இந்தியாவில் முக்கியமாக இரண்டு இனங்களைக் காணலாம். வடநாட்டிலே வழங்கும் மொழிகளிலே பெரும்பான்மை ஓரினத்தைச் சேர்ந்தவை. அவற்றை உடன்பிறந்தார் என்று வைத்துக்கொள்ளலாம். ஆங்கிலம் அந்த இனத்துக்குத் தாயாதியாகும். நெடுங்காலத்துக்கு முன் ஒரு குடும்பமாக இருந்து பிறகு பிரிந்துபோன மொழி அது. இந்த மொழியினத்தை இந்திய ஐரோப்பிய மொழிக் கூட்டம் (Indo-European group of languages) என்று மொழி வரலாற்றை ஆராய்ச்சி செய்கிறவர்கள் குறிப்பார்கள்.

தென்னாட்டில் உள்ள தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு என்பவற்றைத் திராவிட மொழிக் கூட்டம் என்று குறிக்கிறார்கள்.

பழங்காலத்தில் இந்த முறையிலே வகைப்படுத்தவில்லை. ஆனால் இலக்கண அமைதியில் வடநாட்டு மொழிகளுக்கும் தென்னாட்டு மொழிகளுக்கும் பெரிய வேறுபாடுகள் இருப்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்கள். எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று வகையிலும் தமிழுக்கென்று சிறப்பான அமைதி ஒன்று இருப்பதை அவர்கள் கவனித்தார்கள்.

ஒரு மொழி இன்ன இனத்தைச் சேர்ந்தது என்று தெரிந்துகொள்வதற்கு அதன் வாக்கிய அமைப்பே சரியான உதாரணமாக இருக்கும். வெறும் சொற்களை மாத்திரம் வைத்துக்கொண்டு இந்த மொழி இன்ன குடும்பத்தைச் சேர்ந்தது என்று சொல்ல முடியாது.

வடமொழியும் தமிழும் தனித்தனியே சிறையினாற் பிரிக்கப்பட்டு வழங்கி வந்தன என்று சொல்லும் காலம் மிகமிகப் பழைய காலம். 'நாத தத்துவத்திலிருந்து படிப்படியாக மற்றத் தத்துவங்கள் உண்டாயின', 'சூரிய மண்டலமாகிய பெரிய அக்கினி உருண்டையிலிருந்து பூமி முதலிய உருண்டைகள் சிதறுண்டு பிறந்தன' என்ற செய்திகள் சமய நூலிலும் விஞ்ஞான நூலிலும் கண்ட உண்மைகள். அவற்றை நாம் தெரிந்து வைத்துக்கொள்கிறோம். நம்முடைய வாழ்க்கை முறையும் அந்தப் பழைய நிலையும் ஒன்றுக்கொன்று பயன்படும் என்று சொல்வதற்கில்லை. அப்படித்தான் வடமொழியும், தென்மொழியும் ஒன்றன் முகத்தை மற்றொன்று நோக்காமல் இயற்கையான பிரிவுக்கு உட்பட்டு வழங்கின என்று சொல்லும் நிலையும் சரித்திரத்துக்குப் பயன்படும்; நமக்குப் பயன்படாது.

சரித்திர காலத்துக்கு முந்தியே தமிழ் இலக்கிய காலம் தொடங்கிவிட்டது. சரித்திரத்துக்கு எட்டாத காலத்தில் இயற்றப் பெற்றது தொல்காப்பியம். அதாவது, அதன் காலத்தை ஆராய்வதற்குரிய சாதனங்கள் சரித்திர ஆராய்ச்சிக்காரர்களுக்கு இன்னும் கிட்டவில்லை.

அத்தகைய தொல்காப்பியத்திலேயே வடமொழித் தொடர்பு தமிழ் நாட்டில் எவ்வளவு வேரூன்றி இருக்கிறதென்பது புலப்படுகிறது. வட நாட்டிலிருந்து தென்னாட்டுக்கும் தென்னாட்டிலிருந்து வட நாட்டுக்கும் மக்கள் சென்று தங்கி வாழ்ந்தார்கள். இந்த வாழ்க்கைக்கு இயற்கையிலும் செயற்கையிலும் தடையொன்றும் இருக்கவில்லை. மக்கள் தம்முள்ளே கலந்து வாழ்ந்தால் கருத்துக் கலப்பும் மொழிக்கலப்பும் அமைவது இயற்கையே.

ஆனால் தமிழ்மொழி தன் மரபை மாற்றிக்கொள்ளவில்லை. வட மொழியிலிருந்து நாளடைவில் அது எவ்வளவோ விஷயங்களைப் பெற்றுக்கொண்டது. இன்று நாம் ஆங்கிலத்திலிருந்து சொல்லும் பொருளும் பெறவில்லையா? எந்த நாட்டிலும் எந்த மொழியிலும் இத்தகைய கலப்பைக் காணலாம். கலப்பு இல்லாத நிலை வாழ்க்கையின் அறிகுறி அல்ல; விரிவு உண்டாவது கலப்பினால்தான்; ஒடுக்கம் ஏற்படுவது பிரிந்து தனித்து நிற்பதனால்.

தமிழ் தன் வாக்கிய மரபை இழக்கவில்லை. அதனோடு சார்ந்த தெலுங்கு முதலியவைகளும் வாக்கிய மரபில் இன்றும் தமிழைப் பின்பற்றியே நடக்கின்றன. எழுத்திலும் சொல்லிலும் வடமொழியிலிருந்து அதிகமாக அவை கடன் வாங்கிக்கொண்டன. தமிழ் அந்த அளவுக்கு வாங்கிக்கொள்ளவில்லை. இயற்கையான செல்வம் படைத்தவர்கள் கடன் வாங்க யோசிப்பார்களல்லவா?

ஆனால் அடியோடு கதவைச் சாத்தி மூடி உள்ளே வராதே என்று சொல்லவில்லை. ஏனெனில் வடமொழி எங்கிருந்தோ வரவில்லை. இமயம் முதல் குமரி வரையில் மொழிகள் வேறாக இருந்தாலும் உள்ளம் ஒன்றாகத்தான் இருந்தது. அறம், பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப்பொருள்களைப்பற்றி இந்திய நாடாகிய நாவலந்தீவு முழுவதும் ஒரே மாதிரியாக எண்ணியது. இலக்கியத்திலே வெவ்வேறாக இருந்தாலும் சாத்திரங்களிலே இந்தியா ஒருமைப்பாட்டைக் காட்டியது.

பழங்காலத்தில் சமய நூல், பிற சாத்திரங்கள் யாவும் பெரும்பாலும் வடமொழியில்தான் இருந்தன. காரணம் என்ன? அது அறிவைப் பொதுவாக்கும் கருவியாக உதவியது. இமயம் முதல் குமரி வரை வடமொழி வல்லார் பலர் இருந்தனர். தமிழ் நாட்டிலும் பலர் இருந்தனர். தொல்காப்பியரே சிறந்த வடமொழிப் புலவர். சமய சாத்திரங்களும், பிற கலைகளும் மனித சாதிக்கே பொதுவானவை. இந்தியா அனைத்தும் ஒன்று என்ற நினைவிலே இந்த நாட்டுக்கு ஒரு தனிச் சால்பு அமைந்திருந்தது. அதை வற்புறுத்தும் சாத்திரங்கள் இந்தியர் அனைவருக்கும் பயன்பட வேண்டுமானால், பொது மொழி ஒன்றில்தானே இருக்க வேண்டும்? ஆதலின் சமய நூல்களும் பிறவும் வடமொழியில் எழுந்தன. அந்த நூல்களில் மொழி பிரதானம் அன்று; கருத்தே பிரதானம்.

தமிழ் முதலிய மண்டல மொழிகளிலும் சாத்திரங்கள் எழுந்தன. ஆனால் அவை நிலை கொள்ளவில்லை. காரணம், வட மொழியிலுள்ள சாத்திரங்கள் இருக்கும்போது மறுபடியும் அதற்குப் பிரதி எதற்காக என்ற எண்ணந்தான். புலமையுள்ளவர்கள் படித்து அறிந்தார்கள்; பிறருக்கும் தெரிவித்தார்கள். ஆகவே மண்டல மொழிகளில் இலக்கிய வளம் மாத்திரம் தடையின்றி வளர்ந்து வந்தது.

இப்படி அமைந்த வாழ்வில் தமிழுக்கென்று ஒரு தனி இடம், வடமொழிக்கென்று ஒரு தனி இடம் அமையவில்லை. இரண்டும் அடுத்தடுத்தே வளர்ந்தன. இரண்டு மொழிகளிலும் வல்லார் பலர் இருந்தனர். ஆகவே, மொழிக்கலப்பு இயற்கையாகவே அமைந்தது. வடமொழியிலிருந்து பல சொற்கள் மண்டல மொழிகளில் கலந்தன; தமிழிலும் கலந்தன. சமயம், இந்தியா அனைத்துக்கும் பொதுவான கலைகள் ஆகிய இத் துறைகளிலே பல சொற்கள் வந்து கலந்தன; பலவகையிலும் கலந்தன. வடமொழி இந்தியாவின் சாத்திர மொழி. தமிழ்நாடு நாவலந்தீவைச் சேர்ந்தது தானே? ஆகவே, அதன் தொடர்பு தமிழுக்கு முரணாக இருக்கவில்லை.

ஆனால், தமிழ் தன் மரபு கெடாமல் சொற்களை மாத்திரம் வடமொழியிலிருந்து பெற்றது. பல சொற்களைத் தன்னுடைய இயற்கைக்குப் பொருந்த மாற்றிக்கொண்டது. பல சொற்கள் தமிழா வடமொழியா என்று தெரிந்து கொள்ள முடியாதபடி மாற்றம் அடைந்தன. வடமொழிக்கும் தமிழ்ச் சொற்கள் சென்றன. அம்மொழியைத் தனியே பேசும் கூட்டத்தினர் இல்லாமையால் அதில் அதிகக் கலப்பு ஏற்படவில்லை. இயற்கையாக இணைந்து பழகும் வாழ்க்கையிலேதான் கலப்பு நிகழும்; பேச்சு மொழியிலும் கலப்பு ஏற்படும். நூலளவில் நின்ற மொழியில் அவ்வளவு கலப்பு நிகழாது.

'வடசொற்களைத் தமிழில் சேர்த்துக்கொண்டது எப்போது?' என்று காலக் கணக்கைக் குறிப்பது எளிதன்று. பழங்காலத்தில் நூலளவில் வடமொழிக் கலப்புக் குறைந்தும் பேச்சில் மிகுந்தும் இருந்திருக்க வேண்டும். இன்றும் பேச்சில் அதிகமாகவே இருக்கிறது. வரவர இலக்கிய மொழிக்கும் பேச்சு மொழிக்கும் இடையிலுள்ள வெளி சுருங்க வேண்டுமென்ற கொள்கை பலப்பட்டு வருகிறது. தமிழ் நூல் வழக்கில் உரை நடைக்கு அதிகமான இடம் அமைந்தது. ஆகவே பேச்சிலே காணும் அளவுக்கு நூல் வழக்கிலும் வடமொழி வந்திருக்கிறது.

வெறும் நூல் வழக்கிலே உள்ள வடசொற்களை மாத்திரம் பார்த்தால், ஏதோ திடீரென்று வட சொற்கள் தமிழில் படையெடுத்து வந்தது போலத்தான் தோன்றும். நூல் வழக்கைக் காட்டிலும் பேச்சு வழக்கில் வட சொற்கள் மிகுதியாக வழங்கியதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். இதற்குச் சிறந்த சான்றாக இருப்பவை சாசனங்கள். ஒரு குறிப்பிட்ட காலத்தில் உண்டான நூலை எடுத்து அதில் உள்ள வட சொற்களைக் கணக்கிட்டுப் பாருங்கள்; அதே காலத்தில் எழுந்த கல் வெட்டுக்களில் உள்ள வட சொற்களைப் பாருங்கள். கல்வெட்டுக்களில் அவை மிகுதியாகவே இருப்பது தெரியவரும்.

சொற்கள் வாழ்க்கையோடு ஒட்டிப் பிற மொழியிலிருந்து வந்து புகுவது பேச்சு வழக்கில் அதிகமாக இருக்கும்; நூல் வழக்கில் ஓரளவு இருக்கும். வட சொல் தமிழில்

புகுந்தது இயற்கையான நெறி. அதனைத் தொல்காப்பியர் அறிந்து இலக்கணம் வகுத்திருக்கிறார். செய்யுளிலே வழங்கும் நால்வகைச் சொற்களில் வடசொல்லும் ஒன்று என்று சொல்லியிருக்கிறார்.

"வடமொழிக்கே உரிய எழுத்துக்களை விட்டுத் தமிழுக்கும் வடமொழிக்கும் பொதுவான எழுத்துக்களால் அமைந்த வட சொற்கள் தமிழிலே செய்யுளிலே வரும்" என்றும், "தமிழில் இல்லாத ஒலியாக இருந்தாலும் வேறு விதமானாலும் தமிழின் இயல்புக்கு ஏற்றபடி சிதைந்து வழங்கலாம்; அது புலவர்களுக்கு உடம்பாடே" என்றும் அவர் சொல்கிறார். கிருஷ்ணனைக் கண்ணன் என்றும், சிவ: என்பதைச் சிவன் என்றும், ஆக்ஞை என்பதை ஆணை என்றும் திரித்துக்கொண்டது இந்த இலக்கணத்திலே அமையும்.

இந்த இரண்டு வகையையும் முறையே தற்சமம் என்றும் தற்பவம் என்றும் பிற்காலத்து இலக்கணக்காரர்கள் குறிப்பார்கள்.

தென் மொழி, வட மொழியிலிருந்து சொற்களை ஏற்றுக்கொண்டது இன்று நேற்றல்ல; தொல்காப்பியர் காலத்துக்கு முன்பிருந்தே அது நிகழ்ந்து வருகிறதென்பதற்குத் தொல்காப்பியம் சாட்சியாக நிற்கிறது.

30

# குறிப்பின் அழகு

பேச்சு வழக்கிலேகூட நாம் சில சமயங்களிலே கவிதைச் சுவையை இணைத்துப் பேசுகிறோம். சொல்லுக்குச் சொல் அமைத்துப் பொருள் செய்தால் அத்தகைய சந்தர்ப்பங்களிலே கருத்தை உணர்ந்துகொள்ள முடியாது. சொல்லுக்கு ஏற்பட்ட பொருளுக்கும் அப்பால் அந்தச் சொற்களின் அமைப்பும் சொல்பவனுடைய நிலையும் சந்தர்ப்பமும் ஒரு குறிப்பைப் புலப்படுத்தும். சொல்லினால் உணரும் அர்த்தத்தைச் சொற்பொருள் என்றும், அதற்கு மேல் குறிப்பினால் உணரும் அர்த்தத்தைக் குறிப்புப் பொருள் என்றும் சொல்வார்கள்.

இப்படிக் குறிப்பாகப் பொருளைப் புலப்படுத்தும் இடங்களில் சுவை அதிகமாகத் தோன்றும். கவிதையில் இந்தக் குறிப்பை இடத்துக்கும் வகைக்கும் ஏற்றபடி வெவ்வேறு பெயர்கொடுத்துச் சொல்லுகிறார்கள். சொல் இலக்கணத்தில் குறிப்பெச்சம் என்று சொல்வார்கள். பொதுவாக மூன்னம் என்று கூறுவதுண்டு. இசையெச்சம் என்பதும் ஒருவகைக் குறிப்புக்குப் பெயர். ஒட்டு என்று கூறும் அலங்காரம் ஒன்று உண்டு; அதுவும் குறிப்பினால் பொருளைத் தெரிவிக்கும் முறை இறைச்சி என்றும், உள்ளுறை உவமம் என்றும் கூறும் அகப்பொருள் இலக்கணப் பகுதிகளும் குறிப்பைச் சார்ந்தனவே. வடமொழியில் தொனி என்பதும் ஒருவகைக் குறிப்பே.

கவிதையில் மாத்திரம் இந்தக் குறிப்பு அமைவது என்று நினைக்கக்கூடாது. பேச்சு வழக்கிலும் குறிப்பு இருக்கிறது. கவிதையில் அதிகமாக இருப்பதால் அதைத் தனியே சுவைக்க முடிகிறது. ஆனாலும் அப்படி ஒரு சுவை இருப்பதை மக்கள் பேச்சு வழக்கிலிருந்துதான் உணர்ந்து கொண்டிருக்க வேண்டும்.

உலகத்தில் அழகெல்லாம் ஓரிடத்திலே திரண்டு இருப்பது அரிது. கலைஞனே அந்த அழகைத் தனித்தனியே கண்டு இன்புற்றுத் தன் படைப்பிலே அழகை எல்லாம் ஒன்று சேர்த்துக் கலைப்பொருளை ஆக்குகிறான். சித்திர வல்லுநன் அங்கங்கே கண்ட அழகை யெல்லாம் திரட்டி ஓர் அழகியைத் தீட்டுகிறான். கவிஞனே அங்கங்கே கண்ட நல்லியல்புகளை ஒன்று சேர்த்துப் பாத்திரங்களை அமைக்கிறான். சுவையுள்ள பொருள்கள் இயற்கையில் சிதறுண்டு கிடக்கின்றன. அவற்றைத் திரட்டி உருக் கொடுத்து அமைப்பது கலைஞன் வேலை.

இயல்பான பேச்சு வழக்கில் குறிப்பினாலே சுவை உண்டாவதைத் தொல்காப்பியர் கண்டிருக்கிறார். ஆகவே, வழக்குக்கும் செய்யுளுக்கும் பொதுவாக அவர் இலக்கணம் அமைத்திருக்கிறார்.

**முன்னத்தின் உணரும் கிளவியும் உளவே**
**இன்ன என்னும் சொல்முறை ஆன**

என்று அவர் சொல்கிறார். "இந்தப் பொருள் இத் தகையவை என்று சொல்லும் முறையிலே, சொல்லுக்குச் சொல் வைத்துப் பொருள் உணர்வதற்குப் புறம்பே, சொல்பவனுடைய குறிப்பினால் பொருள் உணர்த்தும் பேச்சும் உண்டு" என்பது இதன் பொருள்.

"அவனா! அவன் உப்பில்லாமலே கலக்கஞ்சி குடிப்பவனாயிற்றே!" என்று ஒருவனைப்பற்றிச் சொல்கி றோம். சொல்லுக்குச் சொல் வைத்துப் பொருள் பண்ணிப் பார்த்தால், அவனுடைய வயிற்றின் அளவுதான் நமக்குத் தெரியவரும். ஆனால் அப்படிச் சொல்வதற்குப் பொருள் என்ன? அவன் கஞ்சி குடிப்பவன் என்று சொல்ல வந்தது அல்ல அது; கலக்கஞ்சி குடிப்பவன் என்று அளவு காட்ட வும் வந்தது அல்ல. சிறிதளவு கஞ்சி குடித்தாலும் மனிதனுக்கு உப்பு வேண்டியிருக்கிறது. அப்படி இருக்கக் கலக்கஞ்சியை எப்படி உப்பில்லாமல் குடிப்பது? கலக் கஞ்சி என்ற அளவே மனிதன் ஆற்றலுக்கு மேற்பட்டது. 'மற்ற மனிதர்கள் செய்யும் அளவுக்கு மேலே தக்க கருவி இல்லாவிட்டாலும் செய்யும் ஆற்றல் படைத்தவன்

அவன்' என்ற பொருளைத்தான் முன்னே சொன்ன வாக்கியம் புலப்படுத்துகிறது. இந்தப் பொருளைத் தரும்படி, 'இவன் மற்றவர்களால் செய்ய முடியாததைச் செய்து விடுவான்' என்று சொன்னால் உள்ளது உள்ளபடியே சொன்னதாக இருக்கும். ஆனால் இது சப்பென்றிருக்கிறது, உப்பில்லாத கஞ்சிபோல்; 'உப்பில்லாமல் கலக்கஞ்சி குடிப்பான்' என்று இதே கருத்தை வேறு வகையிலே சொல்லும்போது, பொருளைத் தெரிந்துகொள்வதோடு அந்தப் பேச்சிலே தனி இன்பத்தையும் காண முடிகிறது. பொருளை உணர்த்தும் முறையிலே இன்பம் காண வைப்பது கவிதையின் இயல்பு. அந்த இயல்பு பேச்சு வழக்கிலும் அங்கங்கே காணப்படுவதுதான். பேச்சு வழக்கிலே அதைச் சுவைத்த மனிதன் ருசிகண்ட பூனை மாதிரி அந்தச் சுவையைப் பெருக்கி வைத்த கவிதையை நாடுகிறான். இருப்பைப் பூவிலே இனிப்பைச் சுவைத்தவன், பிறகு கரும்பையும், அப்பால் வெல்லக் கட்டியையும் உண்ண ஆசைப்படுகிறான் அல்லவா?

"உப்பில்லாமல் கலக்கஞ்சி குடிப்பான்" என்ற வாக்கியத்தில் உள்ள முறையைக் கவிதையிலே நன்றாக அமைத்துச் சுவை உண்டாக்குகின்றனர் புலவர்கள்.

> *இளைதாக முள்மரம் கொல்க; களையுநர்*
> *கைகொல்லும் காழ்த்த இடத்து*

என்பது ஒரு குறள். சொல்லுக்குச் சொல் வைத்து அர்த்தம் பண்ணிப் பார்க்கலாம். "முள் மரத்தை அது இளஞ்செடியாக இருக்கும்போதே வேரோடு பிடுங்கி எறிய வேண்டும்; அப்படிச் செய்யாமல் அது வளர்ந்து மரமாகி முற்றிவிட்டால், அதை வெட்டுபவருடைய கையைத் தொலைத்து விடும்" என்று இதற்குப் பொருள் ஏற்படுகிறது. திருவள்ளுவர் இந்தக் குறளை அரசன் இன்னபடி யெல்லாம் ஆட்சி புரியவேண்டும் என்று சொல்லும் பகுதியிலே அமைத்திருக்கிறார். பகைவர்களைப் பற்றி நன்றாகத் தெரிந்துகொண்டு, அவர்களை அழிக்கும் உபாயமும் தெரிய வேண்டும் என்பதைச் சொல்லும், "பகைத்திறந் தெரிதல்" என்ற அதிகாரத்தில் இந்தக் குறள் வருகிறது.

அரசன் பகைவர்களை அழிக்கும் முறைகளைச் சொல்லி வந்த இடத்தில் முள் மரத்தைப்பற்றிச் சொல்லக் காரணம் இல்லை. நெல் விளையும் பூமியிலே நடுவில் ஒரு கருவேலஞ்செடி முளைக்கிறது. அதைப் பார்த்த பெரியவர் ஒருவர் நிலக்காரனைப் பார்த்து, "அப்பா, அதை வளர விடாதே; இப்போதே வெட்டி எறிந்துவிடு. பெரியதாகப் போனால் கோடாலிபோட்டுப் பிளக்க வேண்டியிருக்கும்" என்று சொன்னார். இப்படி ஒரு கதையோ, காட்சியோ வந்தால் இந்தப் பாட்டை அங்கே வைக்கலாம்; பொருத்த மாக இருக்கும். அரசனைப்பற்றிய செய்திகளைச் சொல்வ தற்கிடையே இதற்கு என்ன வேலை?

சொல்லுக்குச் சொல் வைத்து அர்த்தம் பண்ணினால் இந்தக் கேள்விகளெல்லாம் எழும். ஆனால் இங்கே அப்படிச் செய்யக்கூடாது. உப்பில்லாமல் கலக்கஞ்சி குடிப்பவனை இங்கே ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். பகைவன் பலமில்லாதவனாக இருக்கும் காலத்தில், அதைத் தெரிந்து கொண்டு அவனை ஒடுக்க வேண்டும். அது தெரிந்தும் அலட்சியமாக விட்டுவிட்டால் பிறகு அவன் பலமடைந்து விட்டானானால் எளிதிலே அவனுடைய பலத்தை மாற்ற முடியாது; பேராபத்தாக முடியும் என்ற அரசியற் சாத்திரச் செய்தியைத்தான் திருவள்ளுவர் இங்கே சொல் கிறார். இந்தக் கருத்துச் சொற்பொருளால் விளங்கவில்லை; குறிப்புப் பொருளால் விளங்குகிறது. அதோடு இப்படி மறைத்துக் குறிப்பாகச் சொன்னவருடைய சாதுரியமும் புலப்படுகிறது; அப்போது நமக்கு உண்டாகிற இன்பந் தான் கவி இன்பம். கவி இன்பத்தில் அது ஒரு வகை.

அந்தக் காலத்துப் பேச்சு வழக்கிலிருந்து சில உதா ரணங்களை உரைகாரர்கள் காட்டுகிறார்கள். "செஞ் செவியர்" என்று குறித்தால், 'மணியும் பொன்னும் காதில் அணிந்த பணக்காரர்கள்' என்ற பொருளைத் தருமாம். "வெள்ளொக்கலர்" என்றால் நன்றாகச் சலவை செய்யப் பட்ட ஆடையை உடுத்த பணக்காரர் என்ற குறிப்புப் பொருள் தோன்றுமாம்.

"எச்சில் கையினால் காக்கை ஓட்டாதவன்" என்றும், "அறுந்த கைக்குச் சுண்ணாம்பு தராதவன்" என்றும் இக்

காலத்தில் சொல்வதுண்டு. காக்கை, சுண்ணும்பு என்ற பொருள்களையே நினைத்துப் பேசுபவை அல்ல அவை. மிகவும் லோபியாக இருப்பவனைப் பார்த்து, "இவன் மகா லோபி" என்று சொல்வதற்குப் பதிலாக அப்படிச் சொல்கிறோம். அப்படிச் சொல்வதனால் அவனுடைய லோபித்தனம் விளக்கமாகத் தெரிவதோடு அந்த மாதிரி யான பேச்சிலே தனி இன்பமும் ஏற்படுகிறது.

இந்த வகையிலே சேர்ந்த மற்றொரு வழக்கைத் தொல்காப்பியர் எடுத்துச் சொல்கிறார்.

"இந்த வழி எங்கே போகிறது?"

"இது புதுக்கோட்டை வரையில் போகிறது?" என்ற பேச்சு நம் காதில் விழுந்ததுதான். அந்தப் பேச்சின் சொற்களிலே சிறிது புகுந்து பார்ப்போம். கேள்வியிலும் விடையிலும், குறிப்பிட்ட வழி கால் பெற்று நடப்பது போலவும், போகிறது போலவும் சொற்கள் அமைந்திருக்கின்றன. கேட்கிறவனுக்கோ சொல்பவனுக்கோ வழி தானே நடக்கும் போகும் என்ற கருத்தே இல்லை. ஆனாலும் பேச்சு, அப்படி அர்த்தமாகும்படி அமைந்திருக்கிறது. இந்தப் பேச்சிலே ஒரு சுவை இருக்கிறது.

"கடல் அலைகள் ஒன்றோடு ஒன்று மோதிப் புரண்டு கொந்தளிக்கின்றன. அந்த அலைகளைக் காணுந்தோறும் அவன் நெஞ்சும் கொந்தளித்தது. ஒவ்வோர் அலையும் ஒவ்வொரு ரகசியத்தைக் கூறியது" என்று எழுத்தாளர் எழுதுகிறார். 'ஒவ்வோர் அலையும் ரகசியத்தைக் கூறுவதற்கு வாயா இருக்கிறது?" என்று கேட்கலாமா? அப்படி எழுதுவது ஓர் அழகு. "இவன் வயிறே சொல்கிறதே, நாலு நாள் சாப்பிடவில்லை யென்று" என்று பேசுகிற பேச்சிலே உள்ள அழகே, எழுத்தாளர் எழுத்திலே வேறு உருவத்தில் தோன்றுகிறது. அதனைச் செய்யுளிலும் காணலாம்.

"பகைமையும் கேண்மையும் கண் உரைக்கும்" என்பது குறள். 'கண் எப்படி உரைக்கும்? வாய் அல்லவா உரைக்கும்?' என்று கேட்பவர் சுவை அறியாதவர்.

மாய்தலும் பிறத்தலும்
வளர்ந்து வீங்கலும்
தேய்தலும் உடைமையைத்
திங்கள் செப்புமால்

என்று புலவர் பாடுகிறார். 'மனிதன் செத்துப் போவதையும், பிறகு பிறவி எடுப்பதையும், அப்படி எடுத்த பிறவியில் வளம்பெற்று வளர்வதையும் வளம் சுருங்கி மங்குவதையும் சந்திரன் சொல்லுகிறது' என்று சொல்லுகிறார் புலவர். சந்திரன் வாய்திறந்தா சொல்கிறான்? அவனுடைய தேய்வும், வளர்ச்சியும், மறைவும், உதயமும் இந்த உண்மைகளை நினைவுக்குக் கொண்டுவருகின்றன. அதையே புலவர் அழகாகச் சொல்கிறார்.

இப்படிச் சொல்லும் அழகையெல்லாம் பேச்சு வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் கண்ட தொல்காப்பியர், இப்படிச் சொல்வது குறிப்பு வகையைச் சேரும் என்று சூத்திரம் அமைக்கிறார்.

**வாரா மரபின வரக்கூ றுதலும்**
**என்னா மரபின எனக்கூ றுதலும்**
**அன்னவை எல்லாம் அவற்றவற் றியல்பான்**
**இன்ன என்னும் குறிப்புரை ஆகும்.**

'வருவதற்குரிய பொருள்கள் அல்லாதனவற்றை வருவனவாகச் சொல்வதும், பேச முடியாதவற்றைப் பேசுவனவாகச் சொல்வதும், அப்படி வரும் எல்லா வகையான பேச்சும் அந்த அந்தப் பொருளின் இயல்புகளைச் சொல்ல வந்த குறிப்பு வார்த்தையாகும்' என்பது இதன் பொருள்.

இந்தக் குறிப்பு, பேச்சு வழக்கிலே முளையிட்டு வசன நடையிலே கொடியோடிச் செய்யுளிலே பூத்துக் கனிந்து நிற்கிறது.

# 31

# பழமையும் புதுமையும்

மனித சாதி மேன்மேலும் வளர்ந்துகொண்டே வருகிறது. வளர்ச்சிக்கு அறிகுறி புதிய புதிய பொருள்களைச் சேமிப்பதும் மேன்மேலும் செய்கையில் ஊன்றி நின்று இயங்குவதும். அப்படி வளர்ந்து வருகையில் பல பழக்கங்கள் மாறும்; பல புதியனவாக உண்டாகும். ஆடையிலும் ஆபரணத்திலும், உணவிலும் உறையுளிலும் இந்த மாற்றத்தைக் காணலாம். பழைய பொருள்களில் பல மறைந்துபோயின. புதிய பொருள்கள் பல வந்து வழங்குகின்றன.

மனிதனுடைய மொழியும் இந்த மாற்றத்துக்கு உட்படுவதுதான். நெடுங்காலமாக வாழ்ந்து உரம் பெற்ற மொழியில் தலைகீழான மாற்றங்கள் உண்டாவதில்லை. புதிய மொழிகளில்தான் வளர்ச்சியும் மாற்றமும் திடீர் திடீரென்று அமையும். மனிதன் சிறு பருவத்தில் விறு விறுவென்று வளர்கிறான். நாற்பது வயசுக்குமேல் அந்த வேகம் இராது. காலங்கண்ட மொழியில் மாற்றம் நிதானமாகத்தான் ஏற்படும்.

தமிழில் மாற்றம் மெல்ல மெல்ல உண்டாவதுதான் அதன் கன்னித் தன்மைக்கு இயல்பு. வளருகின்ற பாஷையாதலால் மாற்றம் இல்லாமலே இருக்க வகையில்லை. பல பழைய மரபுகள் முற்றும் மாறின; பலவற்றின் பகுதிகள் மாறின; பல புதிய அமைதிகள் புகுந்தன.

தமிழ் மொழிக்கு இலக்கணம் வகுத்த பெரியார்கள் இந்த இயல்பை நன்கு தேர்ந்திருந்தனர். வளர்ச்சி பெறாத பாஷையில் இப்படித்தான் வரும் என்று வரையறை செய்துவிடலாம். செத்துப்போன பிணத்தைச் சமாதி,

செய்வது போன்ற காரியம் அது. வளரும் மனிதனுக்கு வீடு கட்டலாம். உண்ண உறங்க அறை கட்டிக் கொடுக்கலாம். சில வேளைகளில் குறிப்பிட்ட இடத்தில் அமர்ந்திருக்கும் நியதியை உண்டாக்கலாம். வீடுகளில் அறைகளில் மனிதன் வாழ்கிறான்; பாதைகளில் நடக்கிறான். இந்த இடங்களில் எல்லாம் வரையறை இருக்கின்றது. வீட்டுக்கு எல்லையும், அறைக்குச் சுவர்களும், பாதைக்கு இருபுறமும் ஒழுங்கு செய்யப்பெற்றிருக்கின்றன. இந்த ஒழுங்கு இருப்பதனால் மனிதன் இன்பம் பெறுகிறானே அன்றித் துன்பம் அடைவதில்லை. இலக்கணம் என்பது ஒழுங்குபடுத்திய பகுதி; இலக்கியம் வாழ வகைசெய்த பகுதி. வீடு போதாவிட்டால் சில பகுதிகளை இடித்தோ கூட்டியோ பெரிது ஆக்குவது போல இலக்கணத்திலும் செய்யலாம். அப்படிச் செய்து வந்திருக்கின்றனர் பெரியோர். அவ்வாறு செய்வது தவறாக இருந்தால் இன்று அகத்தியமோ அதற்கு முன்பு இருந்த இலக்கணமோதான் வழக்கில் இருக்க வேண்டும். தொல்காப்பியத்துக்குத் தேவையே இராது. அதன் பின் ஒவ்வொரு பகுதியிலும் தோன்றிய இலக்கண நூல்களுக்கும் இடமே இல்லை. புதிய வழக்கம் இலக்கணத்தை நோக்கி உண்டாகவில்லை. வழக்கத்தை நோக்கித்தான் இலக்கணம் உண்டாகிறது. இதனை அறிந்தே அந்த அந்தக் காலத்துக்கு ஏற்றபடி புதிய புதிய இலக்கணங்கள் எழுந்தன.

பழைய இலக்கண நூல்களில், புதுமைக்கு வரவேற்புக் கூறியிருக்கிறார்கள். பழமைக்குப் பிரிவுரிமையும் கூறியுள்ளனர். தொல்காப்பியருக்கு முன் வழங்கிய மரபுகளிற் சில அவர் காலத்தில் மறைந்திருக்கலாம். அவற்றை அவர் கூறவில்லை. அப்படியே தொல்காப்பியர் காலத்து வழக்குகள் பல பிற்காலத்தில் மறைந்து போயின. சிலவற்றைப் பார்க்கலாம்.

நாம் பேசும்போது சில வார்த்தைகள் தக்கை போலப் பொருளின்றி அடிக்கடி வரும். அந்த வார்த்தைக்குத் தனியே ஒரு பொருள் இருக்கும். ஆனாலும் நம்முடைய பேச்சில் வெறும் சொல்லாகப் பேசும்போது

நாக்குக்கு அணைபோல உதவும் ஒலியாக நிற்கும். சிலருக்குச் சில சொல் இப்படித் தக்கை போலப் பயன்படும். 'இருக்க' என்பதை அடிக்கொருதரம் பேச்சினிடையே பொருள் இல்லாமல் சொல்பவர்களை நாம் பார்த்திருக்கிறோம்.

ஒரு சோதிடர் இருந்தார். அவருக்கு ஒரு சொல் தக்கையாக உதவும். எது பேசினாலும் அந்தப் பேச்சினிடையே 'போகட்டும்' என்ற சொல், பொருளின்றியே வரும்.

"என்ன ஜோஸ்யரே, எனக்கு இந்த மாதம் சம்பளம் அதிகமாயிற்று. உங்கள் வாக்குப் பலித்தது" என்று சொன்னால், "அப்படியா! போகட்டும். இன்னும் மேலும் மேலும் இப்படியே உயரட்டும்" என்று சொல்வார்.

நெடுநாட்களாகக் குழந்தை இல்லா ஒரு செல்வருக்குக் குழந்தை பிறந்தது. சோதிடரிடம் வந்தார். "ஜோஸ்யரே, ஆண்டவன் கிருபையால் ஒரு குழந்தை பிறந்திருக்கிறது. ஜாதகம் கணிக்க வேண்டும்" என்று சொன்னார். சோதிடர், "அப்படியா, போகட்டும்; சந்தோஷம். நிமிஷத்தில் எழுதித் தருகிறேன்" என்றார். குழந்தை பிறந்தது என்று சொன்னால் அது வாழ்க என்று வாழ்த்தாமல், போகட்டும் என்று சோதிடர் சொன்னதற்கு அர்த்தம் இருந்தால், பணக்காரர் சோதிடரைச் சரியான படி பார்த்திருப்பார். ஆனால் அந்த வார்த்தைக்கு அர்த்தம் இல்லையென்பது சோதிடரோடு பழகுகிறவர்கள் யாவருக்கும் தெரியும்.

இவ்வாறு தனி மனிதருடைய பேச்சை, அடிக்கடி பொருளற்றும் சில சமயங்களில் பொருளுடனும் வரும் சொற்களை, 'மேனரிஸம்' என்று ஆங்கிலத்தில் வழங்குவார்கள்.

பொருளில்லாமல் வழங்கும் சொற்களுக்குத் தமிழ் இலக்கணத்தில் 'அசை நிலை' என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். நாடு முழுவதும் வழங்கும் சொற்களை இலக்கணத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். "அடே அப்பா!" என்று ஆச்சரியப்படுகிறோம். அங்கே

'அப்பா' என்ற சொல்லுக்கு உரிய 'தந்தையே' என்ற பொருள் இல்லை. அது வியப்பைத் தெரிவிக்க வந்த ஒரு வகை அசைச்சொல்.

பழங்காலத்தில் கண்டீர், கேட்டீர், சென்றது, போயிற்று என்ற வார்த்தைகள் கேள்வியோடு சேர்ந்து தக்கைகளாக வழங்கி வந்தனவாம். இந்த நான்கு அசைச் சொற்களையும் தொல்காப்பியர் ஒரு சூத்திரத்தில் எடுத்துச் சொல்லுகிறார். மற்றொரு சூத்திரத்தில் கேட்டை, நின்றை, காத்தை, கண்டை என்ற நான்கு அசைச் சொற்களை எடுத்துரைக்கிறார்.

ஒருவன் ஏதாவது சொன்னால் அதை மறுப்பதற்குக் கண்டீர் கேட்டீர் என்ற சொற்கள் வருமாம்.

"நேற்று நீ இங்கே வந்தும் என்னைப் பார்க்கவில்லை" என்று ஒருவன் சொல்கிறான்.

"கண்டீரே, கண்டீரே! கேட்டீரே, கேட்டீரே" என்று அவன் பதில் சொல்கிறான். பழங்காலத்தில் இப்படிச் சொன்னால், "நான் வரவில்லை" என்று பொருள் கொள்ள வேண்டும்.

இந்தச் சொற்கள் யாவும் தொல்காப்பியர் காலத்துக்குப் பின்பு மறைந்து போயின.

ஒருவனிடம் ஒருவன் ஒரு பொருளைக் கேட்கும்போது மூன்று விதமாகக் கேட்கலாம். 'ஈ, தா, கொடு' என்ற மூன்று சொற்களும் ஒரே பொருளை உடையன. ஆனாலும் அந்த மூன்றுக்கும் வேறுபாடு உண்டு.

உயர்ந்தவனிடத்தில் இழிந்தவன் கேட்பதானால் ஈ யென்று கேட்பானாம். ஈ என்ற சொல்லைச் சொல்லும் போது பல்லை இளிக்கவேண்டியிருக்கிறது. ஆகவே, அந்தச் சொல்லின் உச்சரிப்பே, "பல்லெல்லாம் தெரியக் காட்டும்" இழிந்தவனை நினைப்பு மூட்டுகிறது. தனக்குச் சமானமானவனிடத்தில் கேட்கும்போது, 'தா' என்று கேட்பது மரபாம். உயர்ந்தவன் தாழ்ந்தவனிடத்தில், "கொடு" என்று கேட்பானும். இந்த வரையறை நன்னூலார் காலம் வரையில் இலக்கணத்தில் இருந்தது. இலக்

கியத்திலும் பேச்சிலும் இந்தப் பழைய சம்பிரதாயம் நெடுங்காலத்துக்கு முன்பே மறைந்து போயிற்று.

இலக்கணம் வகுத்தவர்கள் தம்முடைய இலக்கணத்துக்குள்ளே எல்லாவற்றையும் சொல்லிவிட்டோம் என்று முடிவு கட்டுவதே இல்லை. விதியென்று இருந்தால் அதற்கு விலக்கும் உண்டு என்று அறிந்து அத்தகைய விலக்குகளைப்பற்றி இடந்தோறும் சொல்லியிருக்கிறார்கள்.

தொல்காப்பியர் சொல்லதிகாரத்தின் இறுதிப் பகுதியில் இத்தகைய விலக்குகளைச் சொல்கிறார். ஒரு பெயரைச் சொன்னால் அந்தப் பெயரைப் பிரித்துப் பார்த்து அதற்குரிய பொருள் கொள்வதற்கு இலக்கணம் உதவுகின்றது. அப்படிப் பிரித்துப் பார்க்காமல் வெறும் பெயரளவிலே கொள்வதற்குரிய சில பெயர்களும் உண்டு. அங்கே இலக்கணவிதி பயன்படாது. எண்ணெய் என்ற சொல் எள்ளிலிருந்து எடுக்கும் நல்லெண்ணெய்க்குப் பெயராக ஏற்பட்டது. நாளடைவில் பலவற்றுக்குப் பொதுவாக வழங்கத் தொடங்கியது. மண்ணெண்ணெய் என்று சொல்கிறோம். அங்கே எண்ணெய் என்பதைப்பிரித்து எள் நெய் என்று ஆக்கிப் பொருள் கொண்டால் பைத்தியக்காரத்தனமாக முடியும். எண்ணெய் என்பதை முழுவதும் ஒரு பெயராகக் கொள்ளவேண்டும். திசைச் சொற்களிலும் இலக்கணத்துக்குப் புறம்பான வழக்குகள் உண்டு. பழைய மரபிலே பல உண்டு. ஒருமைக்குப் பன்மையும் பன்மைக்கு ஒருமையுமாக அடிப்பட்டு வழங்கும் சில வழக்கு உண்டு. மந்திர சம்பந்தமான பகுதிகளில் இலக்கணத்துக்கு வேலையே இராது. இவற்றையெல்லாம் எடுத்துச்சொல்லி, "இவைகளை யெல்லாம் வழங்கியவாறே கொள்ளவேண்டும்; இலக்கணத்தோடு பொருத்திப் பார்க்க வேண்டுமென்றால் முடியாத காரியம்" என்று வகுக்கிறார் தொல்காப்பியர்.

புதியன புகுவதற்கும் வழி கோலுகிறார். "கடிசொல் இல்லை காலத்துப் படினே" என்பது ஒரு சூத்திரம். 'அவ்வக்காலத்துத் தோன்றி நன் மக்கள் வழக்கினுள்

ளும் செய்யுளுள்ளும் வழங்கப்பட்டு வருமாயின் இவை தொன்றுதொட்டு வந்தன அல்ல. ஒதுக்குவதற்குரிய சொற்கள் அல்ல'' என்பது இதன் பொருள்.

மக்களுடைய வாழ்வில் கருத்தை உணர்த்தும் கருவியாகவும் இலக்கியமாகிய வைப்புக்குப் பயன்படும் கருவியாகவும் உதவும் மொழியில், பழையன கழிதலும் புதியன புகுதலும் தவறு அல்ல; அதுதான் இயற்கை; வளர்ச்சிக்கு அறிகுறி.

# உள்ளுறை

தொல்காப்பியத்தில் உள்ள சொல்லதிகாரத்தில் ஒன்பது இயல்கள் இருக்கின்றன. 463 சூத்திரங்களை உடையது இவ்வதிகாரம். பெயர், வினை, இடை, உரி என்ற நான்குவகைச் சொற்களைப்பற்றிய இலக்கணத்தைக் கூறுவது இப்பகுதி. முதல் இயலாகிய கிளவியாக்கமும், இறுதி இயலாகிய எச்ச இயலும் நால்வகைச் சொற்களுக்கும் பொதுவான செய்திகளைத் தெரிவிப்பன. பெயரைப்பற்றியும், அதனோடு சேர்ந்த வேற்றுமைகளைப்பற்றியும் நான்கு இயல்கள் சொல்லுகின்றன. மற்ற மூன்றும் வினை, இடை, உரி என்பவற்றைப்பற்றித் தனித்தனியே சொல்கின்றன.

கிளவி ஆக்கம் என்பது சொற்கள் எவ்வாறு பொருளைக் குறிக்கப் பயன்படுகின்றன என்பதைப் பொதுவகையில் சொல்வது. இதில் உள்ள சூத்திரங்கள் 61. இப்பகுதியில் வரும் இலக்கணச் செய்திகளிற் சில: மக்கள் உயர்திணையைச் சார்ந்தோர்; பிற பொருள்கள் அஃறிணை. உயர்திணை மூன்று பாலாகவும் அஃறிணை இரண்டு பாலாகவும் பிரிக்கப்பெறும். அலிகளைக் குறிக்க வரும் பெயர்களும் தெய்வப் பெயர்களும் தமக்கென்று வரையறையாக ஒரு பாலைப் பெறுவிட்டாலும், உயர் திணையில் தமக்கு ஏற்ற பாலைக் குறிக்கும் உருவில் வழங்கப்பெறும். இனத்தைச் சுட்டும் அடைமொழி வழக்கிலும், இனத்தைச் சுட்டாத அடைமொழி செய்யுளிலும் வரும். இயற்கைப் பொருள், செயற்கைப் பொருள் என்ற வேறுபாடு தெரியச் செயற்கைக்கு ஆக்கச் சொல்லைச் சேர்த்துச் சொல்வர். ஐயம் உண்டானாலும் ஐயம் தெளிந்தாலும் அவற்றை வெளியிடும் ஒழுங்கு உண்டு. ஒருவரைப் பலராகச் சொல்வதும் ஒன்றைப்

பலராகச் சொல்வதும் வழக்கில் உயர்த்திச் சொல்ல வந்தவை.

தருதல், வருதல் என்னும் இரண்டு சொற்களும் தன்மை முன்னிலைகளோடு சார்ந்து வரும். கொடுத்தல், செல்லுதல் என்பன படர்க்கையைச் சார்ந்து வரும். யாது, எவன் என்ற இரண்டும் பொதுவகையினால் அறியப் பட்டுச் சிறப்பு வகையால் அறியப்படாத பொருளைப் பற்றி வினவத் தோன்றும். இயற்பெயர், சுட்டுப்பெயர் என்பவற்றில் வழக்கில் சுட்டுப் பெயரை முன்னால் சொல்ல மாட்டார்கள். செய்யுளில் அப்படிச் சொல்ல லாம். சிறப்புப் பெயரை இயற்பெயருக்கு முன்னே சொல்வர். குடிமை முதலிய பதினெட்டுச் சொற்களும் பிறவும் உயர்திணையாகிய மதிப்புடையன; ஆனாலும் சொல்வகையில் அஃறிணையாகவே வழங்கும். அப்படியே காலம் முதலிய பத்தும் உயர்திணையானாலும் அஃறிணைச் சொல்லால் சொல்லப் பெறும்.

இரண்டாவதாகிய வேற்றுமையியலில் பெயருக்குரிய வேற்றுமைகளின் இலக்கணம் சொல்லப் பெறுகிறது. இதில் உள்ள சூத்திரங்கள் 22.

வேற்றுமை ஏழு; விளி வேற்றுமையோடு எட்டு ஆகும் என்பதை முதலிற் சொல்லி, அவற்றின் உருபு களைச் சொல்கிறார் தொல்காப்பியர். அப்பால், எழுவாய் வேற்றுமையின் இயல்பு இன்னதென்று கூறுகிறார். அதற் குரிய பயனிலை இத்தனை வகைப்படும் என்பதைப் பின் விளக்குகிறார். பொருளின் தன்மையைச் சொல்லுதல், வியங்கோளாக வருதல், தொழிலைச் சொல்லுதல், வினா வாக முடிதல், குணத்தைக் கூறுதல், வேறொரு பெய ரோடு முடிதல் முதலியன அவை.

இரண்டாம் வேற்றுமையின் உருபு ஐ. அதனை முடிக்கவரும் பயனிலையினால் குறிக்கப் பெறும் தொழில் களை வரிசையாகச் சொல்கிறார். அவையாவன: காத்தல், ஓத்தல், ஊர்தல், இழைத்தல், ஒப்புதல், புகழ்தல்,

பழித்தல், பெறுதல், இழத்தல், காதலித்தல், வெகுளுதல், செறுதல், உவத்தல், கற்றல், அறுத்தல், குறைத்தல், தொகுத்தல், பிரித்தல், நிறுத்தல், அரித்தல், எண்ணுதல், ஆக்குதல், சார்தல், செல்லுதல், கன்றுதல், நோக்குதல், அஞ்சுதல், கிடைத்தல்.

மூன்றும் வேற்றுமையின் உருபு ஓடு. அது கருவியைக் குறிக்க வரும். அதனின் இயறல் முதலியவற்றைப் பயனிலையாகவுடையது அது.

நான்காம் வேற்றுமை உருபு கு. ஒன்றை ஏற்று நிற்கும் பொருளைக் குறிப்பது அது. இன்னதற்கு இது பயன்படும் என்பது போலப் பலவகையில் இது வழங்கும்.

ஐந்தாம் வேற்றுமை இன் என்னும் உருபால் குறிப்பிக்கப் பெறுவது. ஒப்பு நோக்குங்கால் வருவது. ஒப்பு நோக்கப்படுவன இன்னவை என்பதை ஒரு சூத்திரத்தில் ஆசிரியர் சொல்கிறார். வண்ணம், வடிவு, அளவு, சுவை, தண்மை, வெம்மை, அச்சம், நன்மை, தீமை, சிறுமை, பெருமை, வன்மை, மென்மை, கடுமை, முதுமை, இளமை, சிறத்தல், இழித்தல், புதுமை, பழமை, ஆக்கம், இன்மை, உடைமை, நாற்றம், தீர்தல், பன்மை, சின்மை, பற்றுவிடுதல் என்பன அவை.

ஆறும் வேற்றுமை அது என்பதை உருபாக உடையது. உரிமையைக் குறிக்க வருவது. உரிமை பாராட்டும் பொருள்கள் இன்னவையென்று விரித்துக் கூறுகிறார். இயற்கை, உடைமை, முறைமை, கிழமை, செயற்கை, முதுமை, வினை, கருவி, துணை, கலம், முதல், உறுப்பு, குழு, தெரிந்து மொழிச் செய்தி, நிலை, வாழ்ச்சி என்பன அவை.

ஏழாம் வேற்றுமை உருபு கண் என்பது. இன்ன நிகழும்போது என்றும், இன்ன இடத்தில் என்றும், இன்ன காலத்தில் என்றும் குறிக்க இது வரும். கண்

என்பதைப்போல, கால், புறம், அகம், உள், உழை, கீழ், மேல், பின், சார், அயல், புடை, வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு, முன், இடை, கடை, தலை, வலம், இடம் முதலியன வரும். இச்சொற்கள் யாவும் ஒரு பொருளைச் சார்ந்த இடத்தின் வகைகளாக இருப்பதை உணர்க.

மூன்றுவதாகிய வேற்றுமை மயங்கியல் என்பது ஒரே நிலையை வெவ்வேறு வேற்றுமைகளாகச் சொல்வதையும், ஒரு வேற்றுமை உருபுக்கு வேறொரு வேற்றுமை உருபு வருதலையும், வேற்றுமை சம்பந்தமான பிற செய்திகளையும் சொல்கிறது. இதில் உள்ள சூத்திரங்கள் 34.

இரண்டாம் வேற்றுமை வரும் இடங்கள் சிலவற்றில் ஏழாம் வேற்றுமையும் வரும். உ-ம். அரசரைச் சார்ந்தான், அரசர்கட் சார்ந்தான்; கோட்டைக் குறைத்தான், கோட்டின்கட் குறைத்தான்.

உடன் நிகழ்ச்சிப் பொருளில் வரும் ஒடு என்ற உருபு உயர்ந்த பொருளோடு வரும். உ-ம். ஆசிரியனொடு மாணுக்கர் வந்தார்.

புலி கொல் யானை என்பதைப் புலியைக் கொன்ற யானை, புலியாற் கொல்லப்பட்ட யானை என்று இரண்டு வகையாக விரித்துப் பொருள் கொள்ளலாம். இதனைத் தடுமாறு தொழிலென்று கூறுவர். இத்தகைய தடுமாறு தொழில் வரும்போது பின்னே வரும் பெயரோடு சேர்த்துச் சொல்லும் சொல்லினுல் தடுமாற்றம் நீங்கித் தெளிவு பிறக்கும். (உ-ம்.) 'புலி கொல் யானை ஓடுகின்றது.' ஓடுகின்றது என்ற சொல் புலியைக் கொன்ற யானை என்ற விளக்கத்தைத் தருகின்றது. 'புலி கொல் யானைக் கொம்பை விற்கிறுன்' என்றுல் புலியாற் கொல்லப்பட்ட யானை என்பது தெளிவாகிறது.

ஆகுபெயர்கள் இத்தனை வகையென்பதும் இவ்வாறு வரும் என்பதும் இவ்வியலிற் சொல்லப்படுகின்றன.

விளி மரபு என்ற நான்காவது இயல் விளிவேற்றுமையின் இலக்கணத்தைச் சொல்வது. இதில் உள்ள சூத்திரம் 37.

இதில் விளியின் இயல்பு, விளியை ஏற்றுக்கொள்ளும் பெயர்கள், அதனை ஏலாப் பெயர்கள், விளியை ஏற்கும் பெயர்கள் எப்படி எப்படி வேறுபடும் முதலியன உள்ளன. இதில் வரும் சில செய்திகள் வருமாறு:

அன்னை என்பது விளிக்கும்போது அன்னாய் எனவும் வரும். தான், அவன், இவன், யான், யாவன், அவள், இவள், உவள், யாவள், தமன், தமர், தமள், நமன், நமர், நமள், நுமள், நுமன், நுமர், எமன், எமர், எமள், தம்மான், தம்மார், தம்மாள், நம்மான், நம்மார், நம்மாள், நும்மான், நும்மார், நும்மாள், எம்மான், எம்மார், எம்மாள் முதலியன விளியைப் பெறா.

பெயரியல் என்பது சொல்லின் பொது இலக்கணத்தையும் பெயர்ச் சொல்லின் இலக்கணத்தையும் 43 சூத்திரங்களால் சொல்வது. இதில் வரும் செய்திகளிற் சில வருமாறு:

பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச் சொற்களும் பொருளைக் குறிப்பன. ஒரு சொல்லாலே அதன் பொருளும், சொல்லுருவமும் வெளிப்படும். வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பொருள் வெளிப்படும். ஆண்மகன், பெண்மகள், பெண்டாட்டி, நம்பி, நங்கை, மகன், மகள், மாந்தர், மக்கள், ஆடூஉ, மகடூஉ, அவ்வாளன், இவ்வாளன், உவ்வாளன், அம்மாட்டான், இம்மாட்டான், உம்மாட்டான், அப்பெண்டு, இப்பெண்டு, உப்பெண்டு, அன்னன், அன்னள் என்பன சில உயர்திணைப் பெயர்கள். பெண் மகன் என்பது உயர்திணையில் வருவது. சோழியன் என்பது போன்ற நிலப் பெயர், மலையமான் முதலிய குடிப் பெயர், அத்தி கோசத்தார் என்பது போன்ற குழுவின் பெயர், வருவார் என்பது போன்ற வினைப்பெயர், கரியான் என்பது போன்ற பண்பு கொள்

பெயர், தந்தையர் தாயர் முதலிய முறைப் பெயர், பெருந்தோளர் முதலிய சினை நிலைப் பெயர், பார்ப்பார் அரசர் முதலிய திணை நிலைப் பெயர், பட்டி புத்திரர் என்பது போன்ற விளையாட்டுப் பெயர், ஒருவர் இருவர் முதலிய எண்ணியற் பெயர் ஆகியவை உயர்திணையைச் சார்ந்தவை. தாம் என்பது பன்மைக்கும், தான் என்பது ஒருமைக்கும் வரும். பெண் மகன் என்பது சிறு பெண்ணைக் குறிக்க வரும் சொல்.

வினையியல் என்பது வினைச் சொல்லின் இலக்கணத்தை 51 சூத்திரங்களால் உணர்த்துகின்றது. இதில் வரும் செய்திகளிற் சில வருமாறு :

வினைச்சொல் வேற்றுமையை ஏலாமல் காலத்தோடு வரும். வினைச் சொற்களில் உள்ள ஈற்றெழுத்துக்கள் பாலைக் குறித்து நிற்கும். செய்கு என்பது செய்வேன் என்னும் பொருளுடையது. காலத்தைக் குறிப்பாகத் தெரிவிக்கும் வினைச் சொற்கள் உண்டு. இன்று, இல, உடைய என்பன போன்றவை வினைக் குறிப்புச் சொற்கள். உயர் திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவான வினைச் சொற்கள் உண்டு. வியங்கோள் முன்னிலை, தன்மை என்னும் இரண்டிடங்களிலும் வாராது. செய்து, செய்யூ, செய்பு, செய்தென, செய்யியர், செய்யிய, செயின், செய, செயற்கு என்ற வாய்பாட்டில் வினையெச்சம் வரும். மூன்று காலத்துக்கும் பொதுவான நிகழ்ச்சியைச் செய்யும் என்னும் வாய்பாட்டுச் சொல்லால் சொல்ல வேண்டும். எதிர்காலத்து நிகழ்ச்சியையும், நிகழ்காலச் செயலையும் விரைவைப் புலப்படுத்தும்போது இறந்த கால வாய்பாட்டால் சொல்வதுண்டு.

இடையியல் இடைச் சொற்களின் இலக்கணத்தையும், பயனையும் கூறிச் சில இடைச் சொற்களின் பொருளை உணர்த்துகிறது. இதில் உள்ள சூத்திரங்கள் 48. இடைச் சொல் பெயரையும் வினையையும் சார்ந்து

நடக்குமே யன்றித் தாமே தனித்து நடக்கும் இயல்புடையன அல்ல. இரண்டு சொற்கள் சேரும்பொழுது இடையிலே வருவன, வினைச் சொல்லில் காலத்தைக் குறிக்க வருவன, வேற்றுமை உருபுகள், அசை நிலைகள், இசை நிறை, குறிப்பால் பொருள் தருவன, உவம உருபு என ஏழுவகை இடைச் சொற்கள் உண்டு.

அந்தில், அந்தோ, அம்ம, அரோ, அன்றே, அன்னோ, ஆக ஆக, ஆகல் ஆகல், ஆங்க, ஆர், இக, இகும், உம், எல், எற்று, என்று, என்றா, என, எனா, ஏ, ஓ, ஔ, ஔஉ, ஔஔ, கா, குரை, கொல், கொன், சின், தஞ்சம், தில், நன்றே, பிற, பிறக்கு, போ, போலும், மதி, மற்று, மற்றையது, மன், மன்ற, மா, மாது, மியா, மோ, யா என்னும் இடைச் சொற்களின் பொருள் இவ்வியலிற் சொல்லப் பெறுகின்றன.

உரியியல் உரிச் சொல்லின் இலக்கணத்தையும் பல உரிச் சொற்களின் பொருளையும் கூறுவது. இதில் உள்ள சூத்திரங்கள் 100. இதில் பொருள் கூறப்பெறும் சொற்கள்: அதிர்வு, அமர்தல், அரி, அலமரல், அழுங்கல்; ஆய்தல்; இசைப்பு, இயம்பல், இயைபு, இரங்கல், இலம்பாடு; உகப்பு, உசா, உயா, உரு, உரும், உவப்பு, உறப்பு, உறு; எய்யாமை, எறுழ்; ஏ, ஏற்றம்; ஒழுகல், ஒற்கம்; ஓய்தல்; கடி, கதழ்வு, கம்பலை, கம, கய, கருவி, கலி, கவர்வு, கவவு, கழிவு, கழும், கறுப்பு, குரு. குழவு, கூர்ப்பு, கெடவரல், கெழு; சாஅய், சாயல், சிலைத்தல், சிவப்பு, சிறுமை, சீர்த்தி, சும்மை, செல்லல், செழுமை, சேர்; ஞெமிர்தல்; தட, தவ, தா, தீர்த்தல், தீர்தல், துயவு, துவன்று, துவைத்தல், துனைவு, தெருமரல், தெவ்வு, தெவி; நம்பு, நளி, நன்று, நனை, நனி, நாம், நிழத்தல், நுணங்கு, நுழைவு, நொசிவு; பசப்பு, படர், பண்ணை, பணை, பயப்பு, பரவு, பழிச்சு, பழுது, பாய்தல், பிணை, புரை, புலம்பு, புனிறு, பேண், பேம், பையுள், பொற்பு, போகல்; மத, மல்லல், மழவு, மாதர், மாலை,

முரஞ்சல், முழுது, முனைவு; யாணர், யாணு; வம்பு, வய, வயா, வறிது, வார்தல், வாள், விதிர்ப்பு, வியல், விழுமம், விறப்பு, வெம்மை, வெறுப்பு, வை.

எச்சவியல் முன்னே உள்ள இயல்களில் எடுத்துச் சொல்லாத சொல் இலக்கணங்களையெல்லாம் தொகுத்துச் சொல்கின்றது. எஞ்சியவற்றைச் சொல்வதால் எச்சவியல் என்னும் பெயர் பெற்றது. இதில் உள்ள சூத்திரங்கள் 67. இதில் உள்ள செய்திகளில் முக்கியமானவை வருமாறு:

செய்யுளுக்குரிய சொற்கள் இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் என்று நான்கு வகைப்படும். அந்த நான்கில் செந்தமிழ் நிலத்தில் வழங்கும் வழக்கோடு பொருந்தியிருக்கும் சொற்கள் இயற்சொற்களாம். ஒரே பொருளைத் தரும் பலசொற்களும், பல பொருளையுடைய ஒரு சொல்லும் என்று திரிசொற்கள் இரண்டு வகைப்படும். செந்தமிழ் நிலத்தைச் சார்ந்த பன்னிரண்டு கொடுந்தமிழ் நிலங்களில் சிறப்பாக வழங்குவன திசைச் சொற்கள். ஆரிய மொழிக்கே உரிய சிறப்பெழுத்துக்கள் இன்றி, தமிழுக்கும் வடமொழிக்கும் பொதுவான எழுத்தால் அமைந்த ஆரிய மொழிகள் தமிழில் வழங்குவன வடசொல்லாகும்.

ஒரே வார்த்தை ஓசையின்பத்தின்பொருட்டு நான்கு தடவை அடுக்கி வரும். விரைவைச் சுட்டும் பொருட்டு மூன்று முறை வரலாம். அவையிலே பேசத்தகாதவற்றை மறைத்து, வேறு தக்க சொற்களால் சொல்லவேண்டும். ஒருவனிடம் ஒரு பொருளை இரக்கும்போது அவனிலும் தாழ்ந்தவன் ஈயென்பதும், ஒப்பானவன் தா என்பதும், உயர்ந்தவன் கொடு என்பதும் மரபு. பேசும் வார்த்தைகளாலல்லாமல் பேசுபவனுடைய குறிப்பை அறிந்து பொருளைத் தெரிந்துகொள்ளும் சொற்களும் உண்டு.